

# எங்கு செல்கிறது இந்தியா?

# எங்கு செல்கிறது இந்தியா?

1995 டிசம்பர் 23–24ல் புதுடில்லியில் நடைபெற்ற மூன்றாவது ஆலோசனை மாநாட்டில், இந்திய கம்யூனிஸ்ட்டு கெதர் கட்சியின் மத்தியக் குழுவின் சார்பில் பொதுச் செயலாளர் தோழர் லால்சிங் அவர்களால், சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை

மார்ச் 1996ல் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்ட முதல்
பதிப்பின் தமிழாக்கம்
வெளியீடு மே 1997

விலை ரூ. **40.00**

இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சிக்காக இந்த அறிக்கையை
வெளியிட்டு, விநியோகிப்பவர்:
**லோக் அவாஜ் பப்ளிஷர்ஸ் மற்றும் டிஸ்டிரிபியூட்டர்ஸ்**
8/251, D.D.A. பிளாட்ஸ், கல்காஜி, புதுடில்லி — 110 019.
**8/251, DDA Flats, Kalkaji, New Delhi — 110 019**

# பதிப்பாளர் குறிப்பு

"*எங்கு செல்கிறது இந்தியா*" என்ற அறிக்கை இந்திய கம்யூனிஸ்ட்டு கெதர் கட்சியின் மத்திய குழுவின் சார்பாக பொதுச் செயலாளர் தோழர் லால்சிங் அவர்களால் டிசம்பர் 23–24 1995ல் டில்லியில் நடைபெற்ற சி.ஜி.பி.ஐ. யின் மூன்றாவது ஆலோசனை மாநாட்டின் தீர்மானத்தின்படி இந்த அறிக்கை விவாதத்திற்காக வெளியிடப்படுகிறது.

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

எங்கு செல்கிறது இந்தியா? என்ற அறிக்கை பெறுவதற்கு
கீழ்கண்ட முகவரியில் தொடர்பு கொள்ளவும்:

இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சி அலுவலகம்
7/76-B, சர்ச் ரோடு, கடையாலுமூடு
களியல் P.O. கன்னியாகுமரி மாவட்டம்
Pin - 629 101. தமிழ்நாடு.

# பொருளடக்கம்

முன்னுரை 7

**பாகம் 1**

இ.க.கெ. கட்சியும் புரட்சியின் இந்தப் பின்னடைவு கால கட்டமும் 14

**பாகம் 2**

சமூக ஜனநாயகத்துடன் சமரசம் செய்வோரை எதிர்த்த போராட்டத்தை இறுதிவரை கொண்டு செல்வது 28

**பாகம் 3**

இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சியும் கருத்தியல் மற்றும் விவாதப்போராட்டமும் 41

**பாகம் 4**

இந்திய கோட்பாட்டின் தேவை 56

**பாகம் 5**

இந்திய கம்யூனிஸ்ட்களின் ஒற்றுமையை மீண்டும் உருவாக்குவது பற்றி 72

**பாகம் 6**

அரசியல் ஒற்றுமையைப் பற்றி 87

**பாகம் 7**

ஜனநாயகத்தை புதுப்பித்தல் பற்றியும் காலனியாதிக்கத்தை எதிர்த்த புரட்சியை இறுதிவரை கொண்டுசெல்வதைக் குறித்து 102

**பாகம் 8**

புரட்சியின் கட்டம் 117

**பாகம் 9**

இந்திய கம்யூனிஸ்ட்டு கெதர் கட்சியின் யுத்த தந்திரமும், செயல்திட்டமும் 123

# முன்னுரை

இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சி(சி.ஜி.பி.ஐ.)ஸ்தாபிக்கப் பட்ட 15—ம் ஆண்டு விழாவின் முகப்பில் நாம் இன்றுள்ளோம். செப்டம்பர் 1977-ல் இந்துஸ்தானி கெதர்கட்சியின் (வெளிநாடு களிலுள்ள இந்திய மார்க்சிஸ்ட்—லெனினிஸ்டுகளின் அமைப்பு) மாநாடு நடைபெற்ற நாட்களிலிருந்து, 1980, டிசம்பர் 25ல் இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சியின் ஸ்தாபனம் வரை வந்து, இன்று இந்த முக்கியத்துவம் வாய்ந்த மூன்றாம் கலந்தாலோசனை மாநாடு வரை, வெகுதூரம் வந்துள்ளோம். தொழிலாளி வர்க்கத்தின் தனிப்பட்ட கொடிப்படை கட்சியை நிறுவுவதற்கான தயாரிப்புகளும், அனைத்து சமுதாயத்தின் மீதும், தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப்பங்கை, வளர்ப்பதற்கு மான ஒரு முழுமையான காலகட்டம் இப்பொழுது முடிவு பெற்று, ஒரு புதிய காலகட்டத்திற்கு வழிவகுத்துள்ளது.

உலகின் இருதுருவப் பிளவுகள் ஏற்படுத்திய அழுத்தங்க ளினால் அனைத்து கம்யூனிஸ்ட்டு இயக்கங்களும் சிதைந்து வருகிறது என்பதை 1977—ல் நாம் உணர்ந்தோம். பாராளுமன்ற ஜனநாயகத்தை பின்பற்றிக் கொண்டு, அரசுடன் இணைந்து கொண்டு, இன்றைய நிலைமைக்கு எந்தவிதமான எதிர்ப்புக் களையும் தவிர்ப்பதில் பல விதமான நவீனதிருத்தல்வாதங்கள், தங்களுடைய எதிர்ப்புரட்சிகர, பிளவுவாத வேலைகளை நடத்திக் கொண்டிருந்தன. நிலப்பிரபுத்துவம், காலனிய ஆதிக்கம் ஆகிய வற்றின் எஞ்சியமிச்சங்களையும் அதிகரித்துவரும் ஏகாதிபத்திய ஊடுருவலையும் மக்களுக்கு எதிராக பயன்படுத்தி முதலாளித் துவம் வளர்ச்சி பெற்றுவந்தது. இப்படி வளர்ச்சி பெற்றுவந்த முதலாளித்துவம் தன்பங்கிற்கு இந்த நிலப்பிரபுத்துவ மிச்சங்க ளையும் காலனிய ஆதிக்கத்தையும், ஏகாதிபத்திய ஊடுருவலை யும் பாதுகாத்து வந்தது. இதுதான் வெகுஜன மக்களின் மோசமடைந்து வரும் நிலைமைகளுக்கு காரணமாக இருந்தது. இப்படிப்பட்ட முதலாளித்துவ வளர்ச்சியையும், விரிவையும் "முதலாளித்துவமற்ற வளர்ச்சி" பாதை என்று ஒரு வகையான திருத்தல்வாதம் வருணித்தது. இவ்வகையான திருத்தல்வாதம் இந்தியாவில் காங்கிரஸ் கட்சியுடனும், சர்வதேசீய ரீதியில் சோவியத் சமூக ஏகாதிபத்தியத்துடனும் பகிரங்கமான சமரசம் செய்து கொண்டது. அப்படிப்பட்ட நிலைமைகளில் இந்திய

கம்யூனிஸ்ட்டுகள் அனைவரும் ஒன்றிணைந்து இயங்கக்கூடிய, இந்திய தொழிலாளிவர்க்கத்தின் ஒரு கொடிப்படைக் கட்சியை நிறுவ முடிவு செய்தோம். இப்படிப்பட்ட கட்சி தொழிலாளி வர்க்கத்தின் மத்தியிலும், பரந்துபட்ட வெகுஜன மக்களின் மத்தியிலும், அரசியல் ஒற்றுமையைக் கட்டியமைத்து சமுதாய முன்னேற்றத்திற்கு வழிகோலும். இப்படிப்பட்ட கட்சி அனைத்து விதமான திருத்தல்வாதத்திற்கும், சந்தர்ப்பவாதத்திற்கும் எதிராக, மார்க்சீய—லெனினிய தத்துவத்தின் அடிப்படையில் இயங்கும்.

இந்தப் பணியை செய்து முடிப்பது மிகவும் கடினம் என்பது நாம் அன்றே அறிந்ததே. அதே நேரத்தில் அது முடியாத காரியமல்ல என்பதும் எங்களுக்குத் தெரியும். இன்றும் இதுதான் நிலைமை, புரட்சியின் வளைவு, நெளிவுகளை – இன்று அது பின்வாங்கியுள்ளதையும் சேர்த்து – சமாளித்துக் கொண்டு, இந்திய கம்யூனிஸ்ட்டுகள் செயல்படும் தொழிலாளிவர்க்கத்தின் ஒரே கொடிப்படைக் கட்சியை நிறுவும் திட்டத்திலிருந்து நாங்கள் திசை மாறவில்லை.

தோழர்களே, இந்தப் பணியில் தொடக்கத்தில் சில வெற்றிகள் கிடைத்துள்ளன. நமது கட்சி உருவாகியுள்ளது, ஆனால் கம்யூனிஸ்ட் இயக்கம் முழுவதும் பிளவுபட்டுள்ளது. உலகம் ஒரு வரலாற்றுத் திருப்பமடைந்துள்ளது. நமது திட்டத்தை நாம் தொடர்ந்து செயல்படுத்தி இந்த காலகட்டத்திற்கான பொதுவழியை நாம் வரையறுக்க வேண்டும். இந்திய கம்யூனி ஸ்ட்டுகளின் ஒற்றுமையை புதுப்பித்தல்களுக்குரிய திட்டத்தை நாம் முன்னெடுத்துச் செல்லவேண்டும். சமுதாயத்தை நெருக்கடி யிலிருந்து விடுவிப்பதற்காக, ஜனநாயகப் புதுப்பித்தலுக்கான ஒரே செயல்திட்டத்தைச் சுற்றி தொழிலாளிவர்க்கம், மற்றும் பரந்துபட்ட வெகுஜனமக்களின் புரட்சிகர அரசியல் ஒற்றுமை யைக் கட்டியமைப்பதன் மூலம் இந்த ஒற்றுமையை நாம் புதுப்பிக்க வேண்டும். மேலும் தோழர்களே, வெகுஜனமக்கள் தங்களைத் தாங்களே நிர்வகித்து கொள்வதில், தலைமை த்தாங்குவதற்கு தொழிலாளி வர்க்கத்தை அமைப்பு ரீதியாக ஒழுங்கமைப்பதில் ஒரு அரசியல் கட்சியின் பங்கிற்கு தெளிவான நவீன வரையறுப்பை அளிக்கும் வேலையை நாம் தொடர வேண்டும். புரட்சியின் மூலமாக முதலாளித்துவத்தை வீழ்த்துவதும், சோசலிசத்தைக் கட்டியமைப்பதும் நமது யுத்த தந்திரக் குறிக்கோளாக இன்றும் உள்ளது.

இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சிக்கும், அனைத்திந்திய கம்யூனிஸ்ட்டுகளுக்கும் இது ஒரு முக்கியமான காலக்கட்டம். எல்லாமே விவாதத்திற்கும், சர்ச்சைக்கும் உட்படுத்தப்படும் காலகட்டம் இது. கடந்த ஆறு வருடங்களுக்கும் மேலாக உலக அளவில் பலவிதமான திடீர் மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன. இப்படிப்பட்ட சூழ்நிலைமைகளில் வேலை செய்து வரும் இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சி ஒரு பொதுவான வழியையும், செயல்திட்டத்தையும் விரிவுபடுத்தும் பணியில் ஈடுபட்டு வருகின்றது. இயக்கவியல் தத்துவக்கண்ணோட்டத்துடன் இம்மாறுதல்களைப் புரிந்து கொண்டும், மார்க்சிசம்–லெனினிசம் மற்றும் தற்கால மார்க்சிச–லெனினிச சிந்தனை ஆகியவற்றின் ஆய்வுகளுக்கும், திட்டங்களுக்கும் ஏற்ப மேற்கூறிய பொதுவழியும், செயல்திட்டமும் உள்ளன.

இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சியின் செயல்திட்டத்தையும், சிந்தனையையும் விரிவுபடுத்துதலின் போது, இன்றைய நிலைமைகளிலிருந்து நாம் தொடங்க வேண்டும். அனைத்து விதமான வளர்ச்சிகளையும், புறவய மற்றும் அகவய நிலைமைகளைத் தொகுத்து சரியான முடிவுகளுக்கு வரவேண்டும். பலவளர்ச்சிகள், குறிப்பாக சோசலிசப்புரட்சி மற்றும் சோசலிச கட்டுமானம் ஆகிய களங்களில் ஏற்பட்டுள்ளன. சோசலிசத்தின் அழிவு, எதிர்ப்புரட்சி ஆகியவற்றின் கசப்பான அனுபவங்களும் உள்ளது. இக்காலகட்டத்தில் புரட்சி தணிந்து இருந்தாலும் நமது சகாப்தத்தின் தன்மை இன்றும் ஏகாதிபத்தியம் மற்றும் பாட்டாளிவர்க்கப் புரட்சியாகவே உள்ளது. இன்று பின்னடைவு ஏற்பட்டுக் கொண்டிருந்தாலும், கூடிய சீக்கிரத்தில் பின்னடைவுகளிலிருந்து புரட்சி எழுச்சியடையும் என்பதற்கான அறிகுறிகள் தெரிகின்றன. இந்த வளர்ச்சிகளைத் தொகுப்பதில் நமது சிந்தனை செழுமையடைவது மட்டுமல்லாமல், நமது இயக்கவியல் தத்துவத்தையும் இன்றைய தேவைகளுக்கு ஏற்பதாகச் செய்கின்றன. இப்படிப்பட்ட வேலை புரட்சிகர இந்திய தத்துவத்தை உருவாக்குவதற்கு அவசியமானது. இப்படிப்பட்ட தத்துவமில்லாமல் ஒரு புரட்சிகர இயக்கம் சாத்தியமானதல்ல.

மார்க்சிச–லெனினிச படைப்புக்களை நமது தொகுப்புகளுக்கு வழிகாட்டியாக பயன்படுத்துவது, கடந்த காலத்தைப் போலவே இன்றும் அவசியம். ''உண்மையை உணர்வதுதான் தத்துவ ஞானத்தின் முக்கியப்பணி'', என்று

பிரெட்ரிக் ஏங்கெல்ஸ் கூறினார். இப்படிப்பட்ட உண்மை "முடிவான வறட்டுவாதக்கூற்றுகளின் தொகுப்பாக, ஒருமுறை கண்டு பிடிக்கப்பட்டவுடன் வெறும் மனப்பாடம் செய்து கொள்ள வேண்டியதாக"[1] கருதக் கூடாது என்று வலியுறுத்தினார். இதற்கு நேர்மாறாக ஏங்கெல்ஸைப் பொறுத்தவரை இயக்கவியல் தத்துவமானது "ஒவ்வொன்றிலுமுள்ள மற்றும் ஒவ்வொன்றினுடைய மாறும் தன்மையை வெளிப்படுத்துகிறது; இருத்தல் மற்றும் அழிதல் என்ற இடைவிடாத நிகழ்வுப்போக்கு, கீழ்நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்கு முடிவில்லாத முன்னேற்றம், ஆகியவற்றைத் தவிரவேறு ஒன்றுமே அதற்கு முன்னால் நிலைப்பதில்லை. சிந்தனை செய்கின்ற மூளையில் இந்த நிகழ்வுப் போக்கின் வெறும் பிரதிபலிப்பு என்பதைக் காட்டிலும் இயக்கவியல் தத்துவஞானம் அதிகமானதல்ல. அதற்கு ஒரு பழமைவாத அம்சம் இருப்பதும் உண்மையே; அறிவு மற்றும் சமூகத்தின் திட்டவட்டமான கட்டங்கள் ஆகியவற்றின் காலத்துக்கும், சந்தர்ப்பங்களுக்கும், நியாயமானவையே என்பதை அது அங்கீகரிக்கின்றது; ஆனால் அந்த அளவிற்கு மட்டுமே. இந்த கண்ணோட்ட முறையின் பழமைவாதம் சார்புநிலையானது; அதன் புரட்சிகர தன்மை தனிமுதலானது; இயக்கவியல் தத்துவஞானம் இது ஒன்றைமட்டுமே தனிமுதலானது என்று அங்கீகரிக்கிறது".[2]

ஏங்கெல்சின் இந்த முடிவுகளை ஒப்புக்கொள்ளும்போது இன்றைய காலகட்டத்திலிருந்து தொடங்கி, தனது அனுபவம் முழுவதையும் இன்றைய ஏகாதி பத்தியம் மற்றும் பாட்டாளி வர்க்கப்புரட்சி ஆகியவற்றின் சகாப்தத்திற்குள் தொகுக்க வேண்டும் என்பது தெளிவாகி யுள்ளது. இதைத்தான் இன்று சி.ஜி.பி.ஐ. செய்து வருகிறது. சரியான, முடிவான விளக்கமும், அறிவும் இருந்தால்தான் எந்த ஒரு புரட்சிகரமான செயலிலும் ஈடுபடமுடியும் என்கிற அழிவு வாதிகளின் தர்க்கவலையில்; சி.ஜி.பி.ஐ. சிக்கிக் கொள்ளக் கூடாது. புரட்சி மற்றும் சோசலிசத்தின் வெற்றிக்காக தொழிலாளி வர்க்கத்தை

1 பி.ஏங்கெல்ஸ், "லூத்விக் ஃபாயர்பாகும் மூலச் சிறப்புள்ள ஜெர்மன் தத்துவஞானத்தின் முடிவும்", மார்க்ஸ் & ஏங்கெல்ஸ் தேர்வு நூல்கள், முன்னேற்றப்பதிப்பகம், 1968 ப.588 (ஆங்கிலம்)

2 மேற்குறிப்பு., ப. 588

ஒழுங்கமைக்கும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டே நாம் இந்தத் தொகுப்பைத் தொடரவேண்டும். லெனினும், ஏங்கெல்ஸைப் போலவே அதே முடிவுகளுக்குத்தான் வந்தார். மார்க்சிசம் ஒரு உயிரற்ற வறட்டுவாதம் அல்ல. அது ஒரு கடைசியான முழுமை பெற்ற உடனடிகைவசமுள்ள மாற்ற முடியாத கோட்பாடும் அல்ல. அது ஒரு உயிருள்ள செயல் வழிகாட்டியாக இருப்பதினால்தான் சமூக வாழ்க்கை நிலைமைகளில் ஆச்சரியம் தரும் திடீர் மாறுதலை அது பிரதிபலித்தே தீரும்''[3] என்று லெனின் எழுதினார். மார்க்சிசத்தை பின்பற்றுவதாகக் கூறிக் கொண்டு, சில சமூக சக்திகள் தோன்றி சமூக–ஜனநாயகவாதிகளாக மாறிவிட்டார்கள் அல்லது அதனுடன் சமரசம் செய்து கொண்டுவிட்டார்கள். இவற்றின் பிரதிபலிப்பு உலகில் ஏற்பட்டுள்ள மகத்தான திடீர் மாறுதல்களில் காணமுடிகிறது என்பதை எந்த கம்யூனிஸ்ட்டும் மறுக்க முடியாது. கிழக்கு ஐரோப்பா மற்றும் சோவியத்யூனியனின் ஆட்சிகள் கவிழ்ந்தது சமூக ஜனநாயகத்தின் நெருக்கடியை தீவிரப்படுத்தியுள்ளது. ''சுதந்திரசந்தைப் பொருளாதார"த்துடன் போலிசோசலிசமும், சமூக–ஜனநாயகமும் மதிப்பிழந்து நிற்கின்றன. இது சமூக–ஜனநாயகத்துடன் தங்களை முழுவதுமாக முறித்துக் கொண்டு தங்களுக்குக் கிடைக்கக்கூடிய ஆழமான புரட்சிகர மாறுதல்களுக்கான இடைவெளியை ஆக்கிரமித்துக் கொண்டு விரிவுபடுத்த கம்யூனிஸ்ட்டுகளுக்கு சாதகமான சூழ்நிலைமைகளை உருவாக்கியுள்ளது. படிப்படியாக வளர்ச்சியடைந்துவரும் நிகழ்வுப்போக்குகள் ஏற்படுத்துகிற பிரச்சினைகளை கம்யூனிஸ்ட்டுகள் சமாளிக்க வேண்டும் என்று காலம் வலியுறுத்துகிறது. சமூக–ஜனநாயகத்துடன் சமரசம் செய்து கொள்பவர்களுக்கு எதிராகப் போராடுவது இதில் ஒன்றாகும்.

இன்றிலிருந்து தொடங்கி, ஏகாதிபத்தியத்தினுடையதும், பாட்டாளிவர்க்கப் புரட்சியினுடையதுமான இந்த முழுசகாப்தத்தின் வரலாற்று அனுபவத்தின் தொகுப்பின் அடிப்படையில் தற்கால மார்க்சீய–லெனினீய சிந்தனையை கம்யூனிஸ்ட்டுகள் பாதுகாத்து வளர்க்க வேண்டும். நவீன திருத்தல்வாதம் மற்றும்

---

3. வி.இ.லெனின் "மார்க்சிசத்தின் வரலாற்று வளர்ச்சியின் சில தன்மைகள்", தொகுப்புகள்: முன்னேற்றப்பதிப்பாளர்கள், பகுதி 17, ப. 42.

முதலாளித்துவத்தைப் புதுப்பித்தல்களுக்கெதிரான போராட்டத் திற்கும், சோசலிசப்புரட்சி மற்றும் சோசலிசகட்டுமான நிலைமை களுக்கும், மார்க்சிச—லெனினிசத்தை பயன்படுத்துவது ஆகிய வற்றின் அனுபவத்தின் பொதுவான தொகுப்புத்தான் தற்கால மார்க்சீய—லெனினீய சிந்தனை.

பாசிசம், இராணுமயம், ஏகாதிபத்தியம் ஆகியவற்றுக் கெதிராக மக்கள் நடத்தும் போராட்டத்திலும், பழமைவாதத்திற்கு முடிவுகட்ட நடத்தும் போராட்டத்திலும், மார்க்சிச—லெனிசத்தின் பயன்படுத்துதலின் தொகுப்பும் அது. தற்கால மார்க்சிச—லெனி னிச சிந்தனையானது புரட்சியின் செயல்முறையினால் செழிப்படைந்த, வளர்ச்சியடைந்த மார்க்சிசம்—லெனினிசம் ஆகும். மார்க்சிச—லெனினிசத்தின் அடிப்படைக் கொள்கை களையும், அவைகளுடைய மேல்கட்ட வளர்ச்சியையும் அது உறுதி செய்கிறது. தற்கால மார்க்சிச—லெனினிச சிந்தனையானது இன்றைய சூழ்நிலைகளில் மார்சிச—லெனினிசத்தின் முடிவு பெற்ற வடிவமல்ல. மாறாக அதன் தொடர்ச்சியும், அதன் ஊட்டமும் பெற்றுவருகின்ற ஒன்றாகும்.

சமூக வளர்ச்சிகள் இன்று அடைந்துள்ள நிலையில் உணர்வு பூர்வமாக திட்டமிட்ட முறையில் வரலாற்றைப்படைப் பதைத் தவிரவேறு வழியில்லை. திட்டவட்டமான சூழ்நிலை களுக்கு இயக்கவியல் தத்துவஞானத்தைப் பயன்படுத்துவதன் மூலம் இதைச் செய்வதை சி.ஜி.பி.ஐ. உறுதிப்படுத்த வேண்டும். வரலாற்று முன்பகுதி யான இந்தக்காலகட்டத்திற்கு, காரணகாரியமில்லாமல் தோன்றும் நிகழ்வுப்போக்குகள் அதாவது விதி, வறட்டுவாதங்கள், ஆகியவற்றி னுடைய இந்த வரலாற்றுக்கு, முடிவு கட்டுவதுதான் தொழிலாளிவர்க்கத்தின் வரலாற்றுப் பணியாகும். ஒரு உணர்வுபூர்வமான பொருளியல் சார்பான மனிதவரலாற்றை படைப்பதுதான் இந்தப்பணி. ஒரு புதிய சமுதாயத்தைப் படைப்பதில் புரட்சிகர வர்க்கத்தின் செயல்பாடே இது.

இப்படிப்பட்ட மகத்தான வரலாற்று பணியில் பிரதான அகவய சக்தியாகவும், ஒழுங்கமைக்கப்பட்ட விழிப்புணர்வாகவும் தொழிலாளி வர்க்கத்தின் கொடிப்படையாகவும் தலைமைதாங்கு பவர்களாகவும் இருக்க சி.ஜி.பி.ஐ. பெருமைப்படுகிறது. தற்கால மார்க்சீய—லெனினிய சிந்தனையின் தத்துவார்த்த எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டு, அமைப்பாளனாகவும், தெளிவை

ஏற்படுத்துபவனாகவும், தொழிலாளிவர்க்கத்தின் முன்னணிப் படைவீரனாகவும் சி.ஜி.பி.ஐ. கட்சி தனது பங்கை ஆற்ற வேண்டும். மார்க்சிச—லெனினிசத்தின் அடிப்படைக் கொள்கைகளை பின்பற்றிக்கொண்டு, கம்யூனிஸ்ட்டு இயக்கமானது இன்றைய சகாப்தத்தின் திட்டவட்டப்பணிகளைச் சுற்றி தொழிலாளிவர்க்கத்தையும், பரந்துபட்ட வெகுஜனமக்களையும் ஒருங்கிணைக்க முடியும். இந்தப்பணிகள் உடமைவர்க்கத்தின் திட்டங்களான, தொழிலாளர்களுக்கெதிரான, மக்களுக்கெதிரான, நாட்டிற்கு எதிரான, தனியார்மயமாக்குதல் மற்றும் தாராளமயமாக்குதல் ஆகியவற்றுக்கு உடனடியாக முடிவுகட்டுவது; நெருக்கடியிலிருந்து சமுதாயத்தை விடுவித்து ஜனநாயக முறையில் புதுப்பிப்பது; காலனியாதிக்கம், நிலப்பிரபுத்துவம், ஏகாதிபத்தியத்திற்கெதிரான ஜனநாயக போர்ராட்டத்தை முழுமை பெறச்செய்ய முதலாளித்துவத்தை வீழ்த்துவது; புரட்சியின் மூலமாக சோசலிசத்தைக் கட்டியமைப்பது என்பவையாகும்.

# பாகம் 1

# இ.க.கெ.கட்சியும் புரட்சியின் இந்தப் பின்னடைவு காலகட்டமும்.

தோழர்களே,

புரட்சியின் பின்னடைவினாலும் கம்யூனிசத்திற்கு எதிரான பயங்கர தாக்குதலினாலும், தொழிலாளி வர்க்கத்தையும் பரந்துபட்ட மக்களையும் எதிர்த்த எல்லா வகையான சமூகவிரோத தாக்குதலினாலும் இன்றைய உலகநிலைமை சீர்குலைந்துள்ளது. உலகம் ஆழ்ந்த நெருக்கடியில் சிக்கியுள்ளது. அமெரிக்க ஏகாதிபத்தியம் "அமைதியை உருவாக்குவது" என்ற பெயரில் தன்னுடைய சர்வாதிகாரத்தின் கீழ் ஒரு துருவ உலகைப் படைக்கும் செயலில் ஈடுபட்டுவருவதால் நிலைமை மேலும் மோசமாகிக் கொண்டு வருகிறது. மற்றும் பலர் ஏகாதிபத்திய சக்திகள் தங்களுக்கிடையே உலகை மீண்டும் பிரித்துக் கொள்ளும், பல துருவ நிலைமைகளில் தொழிலாளி வர்க்கத்திற்கு தலைமை தாங்கி புரட்சிக்கும் சோசலிசத்திற்கும் வெற்றியை தேடித்தரும் பெரும் பொறுப்பு கம்யுனிஸ்ட்டுகளுக்கு உண்டு.

பல நாடுகளில் உள்ளதைப் போலவே இந்தியாவிலும் கம்யுனிச அரசியல் வேலையைப் பற்றிய கருத்தே உருக்குலைந்து விட்டதனால் நிலைமை சிக்கலாகிவிட்டது. கம்யுனிச அரசியல், அரசு இயந்திரத்தை இயக்குவதில் பங்கு கொள்ளுவது என்றோ அல்லது ஆளும்வர்க்கங்கள் இந்தியாவில் உறுதிப்படுத்தி வரும் வன்முறை அரசியலில் நேரடியாகவே பங்கு கொள்ளுவது என்றோ, தரம் குறைந்துவிட்டது. அரசியல் பரந்த அளவில் குற்றமயமாக்கப்பட்டு வருவதாலும், அரசு பயங்கரவாதம் வழக்கமான முறையாகவே பயன்படுத்தப்பட்டு வருவதாலும் உண்மையிலேயே ஆயிரக்கணக்கான மக்கள் அவர்களுடைய உயிரையும் உரிமைகளையும் இழந்துள்ளனர். இப்படிப்பட்ட செயல் அரசியல் நடவடிக்கைகளின் வீச்சை மிகவும் குறுகச் செய்துவிட்டதுடன் அதைக் குற்றவாளிகளின் கைகளில் கொண்டு ஒப்படைத்திருக்கிறது. அரசில் கிடைத்துவரும் மிகுதியான பதவிகளும், பொறுப்புகளும், இந்தியாவில் அரசியல்

குற்றமயமாக்கப்படுவதை நியாயீகரிப்பதில், சில கம்யூனிஸ்ட்டு களுடைய பங்கை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது. இந்தியாவிலும் உலகில் மற்றும் பல பகுதிகளிலும் அரசு பயங்கரவாதம் பயன்படுத்தப்படுவதும், அரசு இயந்திரத்தில் சில கம்யூனிஸ்ட்டு கள் அங்கம்வகிப்பதும், தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாக கம்யுனிஸ்ட்டுகள் தங்களுடைய வரலாற்றுப் பங்கினை செயல்படுத்த முடியாமல் தடுக்கிறது. இருதுருவ பிரிவு முடிவுற்ற தால் ஒரே கம்யூனிச இயக்கம் என்றும், ஏகாதிபத்தியத்துடனும் முதலாளிவர்க்கத்துடனும் இணங்கி எல்லோரையும் எதிர்த்த ஒரே போராட்டம் என்றும் பொருள். இதை ஏற்றுக்கொள்ள மறுக்கும் சில கம்யூனிச கட்சிகளும் குழுக்களும் அந்த வரலாற்றுப் பங்கை நிறைவு செய்வதை மேலும் தடைசெய்கின்றன. இதன் விளைவாக, தொழிலாளி வர்க்கம் சோசலிச சமுதாயத்தைக் கட்டியமைக்கும் வரலாற்றுப் பங்கை மேற்கொள்வதைத் தடைசெய்கிறது.

"எதிரியின் எதிரி என்னுடைய நண்பன்" என்ற பணிப்போர் (The Cold war) மனப்பான்மை இன்னும் இருந்து வருகிறது. பல்வேறு சாக்குபோக்குகளைக் கூறிக்கொண்டு, தடையேதுமின்றி மக்கள் கொல்லப்பட்டு வருகிறார்கள். "நக்ஸலைட்டு" "மாவோயிஸ்ட்டு" "பிரிவுவாதிகள்" அல்லது "தீவிரவாதிகள்" என்று இந்தியாவிலும், மற்ற இடங்களிலும் "பயங்கரவாதிகள்" அல்லது "முஸ்லிம் மதத்தீவிரவாதிகள் (Fundamentalist)" என்று எகிப்து, அல்ஜீரியா அல்லது மத்திய கிழக்கு நாடுகளிலும், பாலஸ்தீனியத்திலும், எந்த எதிர்ப்புக் களும் இல்லாமல் இந்த கொலைகள் நடந்துவருகிறது. மேலும் அரசு பயங்கரவாதமும், தனிப்பட்ட வன்முறை கொடுமைகளும், பெரும் ஏகாதிபத்தியங்களுக்கும், மற்ற வல்லரசுகளுக்கும் வசதிக்கு ஏற்றாற்போல நியாயப்படுத்தப்படுகின்றன. இப்படிப் பட்ட வன்முறைகள், இரான், லிபியா, சூதான், கியூபா மற்றும் "பன்னாட்டு பயங்கரவாதத்தை" தூண்டிவிடுபவர்களென கண்டிக்கப்பட்டு வரும் சில நாடுகளையும் எதிர்த்து நடத்தப் படுகின்றன. அமெரிக்க ஏகாதிபத்தியமும் மற்ற ஏகாதிபத்திய சக்திகளும் உலகிலுள்ள அவர்களுடைய எல்லா ஆதரவு நாடுகளுக்கும் எந்த கேள்வியுமின்றி நிதி ஆயுத உதவியளித்து வருகின்றனர். இது, ஹெயிட்டி போன்ற சில நாடுகளை இராணுவம் ஆக்கிரமிக்கும் அளவிற்கும், நிலைமையை

முழுவதுமாக திரித்தும், ஊடுருவியும், போஸ்நியாவை ஆக்கிரமிக்கும் அளவிற்கும் அவை சென்றிருக்கின்றன. அவர்கள் ஏகாதிபத்திய "அமைதி காப்பது" என்ற கட்டத்திலிருந்து ஏகாதிபத்திய "அமைதியை உருவாக்கும்" நிலைக்கு முன்னேறி, இதை தங்களுடைய சர்வாதிகாரத்தை உலகம் முழுவதும் நிருவுவதற்கான முறையாகவும் ஆக்கியுள்ளனர். ஏகாதிபத்திய "அமைதியை உருவாக்கலும்" ஒரு துருவ அல்லது பலதுருவ உலகம் என்ற கருத்துக்களும், மாபெரும் உலகப்போருக்கு வழிவகுக்கின்றன.

உலக அளவில் மிகப் பெரிய முன்னேற்றம் பெறும் வாய்ப்பினை கண்டு மயங்கிப் போயுள்ள இந்திய முதலாளிகள் எல்லா எச்சரிக்கைகளையும் காற்றில் பறக்கவிட்டு, தாராள மயமாக்கி வருகிறார்கள். அவர்களைத் தவிற வேறு யாருக்குமே சமுதாயம் கடமைப்பட்டதல்ல என்ற கருத்தை இந்தியாவிலே புகுத்தி வருகிறார்கள். முன்னேறிய முதலாளித்துவ நாடுகளில் மிகப்பிரபலமான மொழியை இந்திய முதலாளிகள் பேசி வருகிறார்கள். கடுமையான அளவிற்கு சுரண்டுதலை தீவிரப் படுத்த முதலாளித்துவ அமைப்பை சீர்த்திருத்துவதைத் தவிர வேறு வழியில்லை என்கிறது இந்தத் தர்க்கம். தொழிலாளி வர்க்கத்தைச் சுரண்டுவதை மேலும் தீவிரமாக்குவதை தவிர வளர்ச்சிக்கு வேறு வழியேயில்லை என்பது போல அவர்கள் பேசிக்கொண்டு வருகிறார்கள். தங்களுடைய சொந்த வளமையை எல்லாருடைய நல்வாழ்வுக்கும் ஒப்பானதாக இந்திய பெருமுதலாளிகளும் பெரிய நிலப்பிரபுக்களும் சமுதாயத்திற்கு எதிரான பரந்த தாக்குதலை தொடுத்துள்ளனர். அவர்கள் வகுப்புவாத வன்முறைகளின் மூலமும், பிற திசைதிருப்பும் செயல்களின் மூலமும், மக்களை பிளவுபடச் செய்து இவர்களுடைய தாக்குதல்களை எதிர்க்க வழியற்றவர்களாக ஆக்குகிறார்கள்.

இருபத்தி ஒன்றாம் நூற்றாண்டின் தருவாயில் இன்று, மக்கள் சமுதாயத்தில் பிறக்கிறார்கள் என்பதையும் அவர்களின் நலன்களை கவனித்துக் கொள்ளும் பொறுப்பு சமுதாயத்திற்கு உள்ளது என்பதையும் எவராலும் மறுக்க முடியாது. இது உரிமைகளின் நவீன வரையறைக்கு ஏற்புடையதும் இந்திய அரசியல் சிந்தனைகளில் மையக் கருத்துக்களில் ஒன்றும் ஆகும். ஆனால் தற்பொழுதைய "மேற்கத்திய" கருத்துக்களின்படி

சமுதாயம் நிதிநிறுவனங்களைத் தவிற வேறுயாருக்கும் கடமைப்பட்டது அல்ல என்பதே. கூட்டு உரிமைகளுக்கும் சமுதாயத்தின் பொது உரிமைகளுக்கும் மேலாக தனிமனித உரிமை என்று சொல்லப்படும் அதற்கு முதலிடம் கொடுக்கப் படுகிறது. ஏகாதிபத்திய கோட்பாடுகளை இப்படி இந்திய மண்ணிலே திணிப்பதால், கடுமையான சிக்கல்கள் உருவாக்கப் படுகின்றன. இது முதலாளித்துவ நெருக்கடியை மேலும் தீவிரமாக்குவதோடு மக்களிடையே மிகுந்த வெறுப்பையும் உண்டாக்குகிறது. பெருமுதலாளிகளும் பெரும் நிலப்பிரபுக் களும் இப்படிப்பட்ட கோட்பாடுகளைக் கொண்டு மக்களின் நல்வாழ்விற்கும் சமுதாயத்தின் வருங்காலத்திற்கும் பெரும் அபாயத்தை விளைவித்து வருகிறார்கள்.

புரட்சி பின்னடைவு அடைந்துள்ள சூழ்நிலையில், கம்யுனிசத்திற்கு எதிராக பன்னாட்டு அளவில் தாக்குதல்கள் நடத்தப்படுகின்ற இன்றைய சூழ்நிலைகளில், கம்யுனிஸ்ட்டுகள் கம்யுனிஸத்திலும் சோசலிசத்திலும் தங்களுக்குள்ள நம்பிக்கை யை உறுதிப்படுத்திக் கொள்வதோடு நின்றுவிடமுடியாது. அதற்கு மாறாக, அவர்கள் மக்களுக்கு தலைமை தாங்கி, இந்தியாவில் பரப்பப்பட்டு வருகின்ற இந்த "மேற்கத்திய" கருத்துக்களை ஒழிக்க வேண்டும். மார்க்சீய–லெனினிய நூல்களுக்கு பூசை செய்து கொண்டு, விடுதலை இதோ இன்னும் கொஞ்ச தொலைவில் தான் உள்ளது என்பது போன்ற மந்திரங்களை ஓதிக்கொண்டு ஒடுக்கப்பட்டவர்களுக்கும் சுரண்டப்படுபவர்களுக்கும் ஆறுதல் அளித்துவரும் போக்கு கம்யுனிசத்திற்கு பெருமையை கொண்டு வராது. இன்றுள்ள இடைவெளியை நிரப்பவோ அதை மேலும் விரிவுபடுத்தி புரட்சியின் மூலம் முழுசமுதாயத்தை அதில் சேர்க்கவோ இது வழிவகுக்காது.

தனியார்மயமாக்கல் மற்றும் தாராளமயமாக்குதல் என்ற பெயரில் நடத்தப்படுகின்ற சமுதாயத்திற்கு எதிரான தாக்குதல் களை எதிர்ப்பதற்கான வாய்ப்புகள் இந்த நேரத்தில் மிகவும் விரிவாக உள்ளன. எனவே கம்யூனிஸ்டுகள் முதலாளித் துவத்தை ஒரேயடியாக முடிவுக்குக் கொண்டுவர தொழிலாளி வர்க்கத்தையும் பரந்துபட்ட மக்களையும் திரட்டுவதில் முன்னணி யில் இருக்கவேண்டும். இந்த இயக்கத்தோடு, இந்தியக் கோட் பாட்டையும் இந்தக் காலக் கட்டத்திற்கான பொது கண்ணோட்டத் தையும் விளக்கிவிரிவுபடுத்துவதன் மூலம் அரசியல் பண்பாட்டு

தரத்தை உயர்த்துவதற்கு கம்யூனிஸ்ட்டுகள் புதிய வழிமுறைகளை வகுக்கவேண்டும். கம்யூனிஸ்டுகள், புரட்சிகர போராடும் சக்திக ளோடு தத்துவார்த்த ஐக்கியத்தைப் படிப்படியாக நிறுவவேண்டும். சிந்தனையிலும் செயல்பாட்டிலும் உள்ள ஒற்றுமையே எல்லா ஒற்றுமையிலும் மிகச்சிறந்த தாகும் என்றும் அது சமுதாயத்தை நெருக்கடியிலிருந்து விடுவிக்க இன்றியமையாதது என்பதை எல்லோருக்கும் உணர்த்தவேண்டும். அவர்கள் மேலும் எல்லா சக்திகளின் செயல் ஒற்றுமையை, தத்துவார்த்த அடிப்படைகள் எதுவாக இருந்த போதிலும், அவற்றைப் பொருட்படுத்தாமல் அரசியல் ஒற்றுமையை அமைக்க வேண்டும்.

புரட்சியின் பின்னடைவு தொடர்வதற்கு, சில அகவயகாரணங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. உழைக்கும் வர்க்கத்தின் மற்றும் பரந்த மக்களின் இப்படிப்பட்ட படுவீழ்ச்சிக்கு சில அரசியல் கழகங்களின் அரசியலும் தத்துவார்த்தமுமே பழிக்கப்படவேண்டும். இப்படிப்பட்ட புரட்சிப் பின்னடைவுக்கு சாதகமான அகவயகாரணிகளில் முக்கியமான ஒன்று சக்திவாய்ந்த கம்யூனிஸ்ட்டு கட்சிகளும், பிரிவுகளும் புரட்சிகரக் கொள்கைகளை கைவிட்டு விட்டு குறுகிய கண்ணோட்டத்துடன் செயல்பட்டதும், புரட்சிகர சக்திகளுக்கு எதிராக அரசுடன் கைகோர்த்து செயல்பட்டதும்தான். மற்றொரு காரணம். அவர்கள், ஏகாதிபத்தியர்களுக்கு இடையிலான பிராந்திய அரசியலுக்கு ஆதரவளித்தது ஆகும். நாட்டின் அரசு இயந்திரத்தோடு உள்ள கைகோர்ப்பையும் அதனுடன் தான்கொண்டுள்ள பங்கையும் அதிகரித்துக் கொண்டு அவர்கள் துரோகமான முறையில் செயல்பட்டு ஒரு அகவய காரணியாக ஆகிவிட்டார்கள். இது புரட்சியின் பின்னடைவிற்கு அதன் பங்கை அளித்துள்ளது.

ஆனால், இது மட்டுமல்ல. ஏகாதிபத்தியமும், உலக முதலாளித்துவமும், பிற்போக்குவாதிகளும் மக்கள் கிளர்ச்சியை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்தி, இதற்கு முன்பிருந்த புரட்சிகர முன்னடைவு காலத்தைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்வதிலிருந்து தொழிலாளிவர்க்க இயக்கத் தைத் தடுப்பதற்கு முன்னோடியாக இருந்தது. உலகெங்கிலும் இருந்த சில கம்யூனிஸ்ட்டு கட்சிகள் சமூக–ஜனநாயக சக்திகளாக சீரழிந்தது, இப்படிப்பட்ட மாற்றத்தை உருவாக்க வழிவகுத்தது. சமூக ஜனநாயகத்துடன் சமரசம் செய்து கொண்டவர்களும் இந்த சீரழிவை ஏற்படுத்துவதற்கு உடந்தையாக இருந்தார்கள்.

வெகுகாலத்திற்கு முன்பே புரட்சிகர மார்க்சீய–லெனினியத்தை துறந்துவிட்டு பொய்சோசலிச சமுதாயத்தை நிறுவிய சோவியத்யூனியனும் மற்றும் பல நாடுகளிலும் இப்படிப்பட்ட மோசடி ஆரம்பமாயிற்று.

பாசிசத்தை எதிர்த்த மக்களும், சோவியத்யூனியனும் இரண்டாவது உலப் போரில் வெற்றிவாகை சூடினார்கள். கம்யூனிஸத்திற்கு முடிவு கட்டுவதற்காக அடோல்ஃப் ஹிட்லரின் முடிவுறாத வேலையை அமெரிக்க ஏகாதிபத்தியம் ஏற்றுக் கொண்ட பொழுது காலனிய எதிர்ப்பு இயக்கமும், ஏகாதிபத்திய எதிர்ப்பும் வெகுவேகமாக சூடுபிடித்து வந்தது. இரண்டாவது உலகப் போருக்கு பிற்பாடு சமுதாய வாழ்வு நிலையில் ஏற்பட்ட வியக்கத்தக்க திடீர் மாறுதல்களுக்கு நிகிதா குருஷேவும் ஜே.பி.டிடோவும் போன்ற திருத்தல்வாதிகளும், சந்தர்ப்ப வாதிகளும் மற்றும் பலரும் புரட்சியின் அவசியத்தையும் சோசலிசத்தையும் துறந்தார்கள்.

நடந்து கொண்டிருக்கும் புரட்சிக்கும் சோசலிசத்தை கட்டி அமைப்பதற்கும் ஏற்படுகின்ற திட்டவட்டமான பிரச்சனைகளுக்கு மார்க்சீய–லெனினியத்தை உபயோகித்து அதனை தொடர்ந்து வளமாக்க வேண்டிய அவசியத்தை அவர்கள் மறுத்து, ஒரு தொடக்கத்திற்காக அவர்கள் புரட்சிகர மார்க்சீய–லெனினிய கோட்பாடுகளின் மீது நேரடித்தாக்குதலை தொடுத்தார்கள். கோட்பாடுகள் தன்னுடைய பல்வேறு குறிப்பிடத்தக்க கோணங்க ளில் ஆராயப்பட வேண்டும் என்ற அவசியத்தையும் இன்றைய சூழ்நிலைகள் தூண்டிவிட்டுள்ள பிரச்சனைகளை தீர்த்து கோட்பாடுகளை மேலும் விரிவுபடுத்தும் அவசியத்தையும் எண்ணிக்கூட பார்க்கவில்லை. அவர்கள் மார்க்சீய–லெனி னியத்தை வெறும் வார்த்தை ஜாலங்களாக சிறுமைபடுத்தி விட்டார்கள். ஒருமுறை உருவாக்கிவிட்டால் அதன் பிறகு எப்பொழுதுமே ஒன்றும் செய்ய வேண்டாம் என்று கம்யூனிஸத் தைப் பற்றிய மனோநிலையை இந்த இயக்கத்தில் நிரப்பி விட்டார்கள். ஏகாதிபத்தியம் இப்பொழுது "அமைதி" ஆகிவிட்டது எனவும் அது தானாகவே வீழ்ந்துவிடும் எனவும் இதைப்போலவே ஏகாதிபத்தியத்தைப் பற்றி பல அபாயகரமான மாயைகள் உருவாக்கப்பட்டது. மேலும் அவர்கள் சமூக–ஜனநாயகத்துடன் சமரசம் செய்து கொண்டார்கள். அடோல்ஃப் ஹிட்லரால் படுபயங்கரமான போராட்டத்தாலும் செய்து முடிக்கமுடியாத

செயலை அவர்கள் செய்துவிட்டார்கள். அதாவது மக்களை அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு அடிபணியவைத்துவிட்டார்கள். வாழ்க்கை நிலைகளில் வியக்கத்தக்க திடீர் மாறுதல்கள் குறிப்பாக பொருளாதாரத்திலும் அரசியலிலும் ஏற்பட்டதனால் எழுந்த மார்க்சீய–லெனினிய தத்துவங்களை எதிர்நோக்கிய உண்மையான பிரச்சனைகளை தீர்க்க அவர்கள் எந்த ஒரு முயற்சியும் எடுக்கவில்லை. அந்த காலகட்டத்தில் தத்துவத்திற்கும் நடைமுறை வேலைகளுக்கும் எந்த ஒரு தொடர்பையும் ஏற்படுத்த அவர்கள் மறுத்துவிட்டார்கள்.

மிகக் கண்டிக்கத்தக்க வகையில், அரை உண்மை களாலும் வீண் பேச்சுக்களாலும் தன்னுடைய பதவியின் பெருமையாலும் குருஷேவ் ஜே.வி.ஸ்டாலின் மீது மிகக் கொடூரமான தாக்குதலைத் தொடுத்தார். அதனால் ஏகாதிபத்திய மும் முதலாளித்துவமும் உலக பிற்போக்கும் ஸ்டாலின் மீதும், புரட்சிகர இயக்கத்தின் மீதும் சுமத்திய குற்றச்சாட்டுகளுக்கு நம்பிக்கை ஊட்டியது போலவும் புதுப்பித்தது போலவும் ஆயிற்று. அவர் அப்படி செய்ததினால் பிரபலமான ஒருவரின் குணங்களை தாக்குவதே ஒருவருடைய குணங்களை, குறிப்பாக அந்த நபர் இறந்த பிறகு மதிப்பிடுவதற்கு நியாயமான வழி என்று மக்களை நம்பவைத்தார். அகவய புறவய நிலைமைகளை ஆராயாமல் சோவியத்துயூனியன் மற்றும் மார்க்சீய–லெனினியத்தின் பிரச்சனைகளுக்கு தீர்வுகளை கண்டுபிடிப்பதை விட்டுவிட்டு, குருஷேவ் அவதூறுகளினாலும் மழுப்புதலினாலும் மற்றும் பூர்சுவா அரசியலின் மிக பிற்போக்குத்தனமான முறைகளி னாலும் நிரப்பப்பட்ட சூழ்நிலையை உருவாக்கினார். ஸ்டாலி னை குருஷேவ் தாக்குவதை ஒப்புக் கொள்கிறார்களா இல்லையா என்பதைப் பொறுத்தே ஒரு கழகத்தையோ நபரையோ நல்லது அல்லது கெட்டது என அடையாளம் காணப்பட்டது. புரட்சியின் சோசலிசத்தின் பிரச்சனைகளுக்கு தீர்வுகாண்பதற்கு பதிலாக தனிநபர் குணங்களை கொலைபுரியும் பழக்கமான முதலாளித் துவ, குட்டி முதலாளித்துவ பழக்கங்கள் இயக்கத்தினி டையே நுழைக்கப்பட்டது.

இது சமுதாய வாழ்க்கையில் ஏற்பட்ட வியக்கத்தக்க திடீர் மாறுதல்களினால் உருவாக்கப்பட்ட புரட்சிகர தத்துவத்தின் பிரச்சனைகளை தீர்ப்பதற்கு ஒவ்வொரு கம்யூனிஸ்ட்டுகளின் கவனத்தை வழிநடத்தும் உடனடி அவசியத்தை அது

வெற்றிகரமாக முடக்கிவிட்டது. ஸ்டாலின் வாழ்க்கையையும் வேலைகளையும் தாக்கியதால் இந்த வீண்பேச்சுகளும், இழிவுபடுத்துதலும், மாசற்ற மிகத் தீவிரமான கம்யூனிஸ்ட்டு என்ற தோரணையை காண்பித்துக்கொண்டு இந்த அகவய உலகில் ஒரு முன்னேற்றமும் செய்யாமல் இருத்தலும், தொற்றுநோய் போல முழு இயக்கத்திலும் பரவிற்று. குருஷேவ் இயக்கவியல் தத்துவத்தை மொத்தமாக கைவிட்டு அதற்குபதில் முடிவுற்ற வரட்டுவாத கோஷங்களை நிரப்பி வந்தார்.

குருஷேவ் மார்க்சியத்தின் அடிப்படைகளை தந்திரமாக உதரித் தள்ளிவிட்டு அவற்றிற்குப் பதிலாக சோவியத்யூனியனில் இருந்த சிக்கலான போராட்டங்களை வழிநடத்தவும் சோசலிசம் வளருவதற்கான பிரச்சனைகளின் தீர்வுகளுக்கும் ஒரு சம்பந்தமும் இல்லாத மார்க்சீயத்திற்கு எதிரான கோஷங்களை எழுப்பி வந்தார். அவர் மார்க்சீய–லெனினிய புரட்சிகர தத்துவத்தை அதனுடைய வாழ்க்கையின் வழிகாட்டி என்ற பங்கிலிருந்து ஒதுக்கிவிட்டு ஸ்டாலினின் தாக்குதலை முதன்மையாக வைத்து அதனுடைய பெருமையை சேதமாக்கினார். நல்ல வகையில் நிர்வாகம் செய்யும் முறைகளையும், நன்கு பயனளிக்கக்கூடிய உத்திகளையும் பொருளாதாரத்தில் நிறுவப்படவேண்டிய அகவய காரணியை பாரபட்சமாக அவர் பெரிதுபடுத்தினார். "முன்னேறிய சோசலிசம்" மற்றும் "உற்பத்திக் குறியீடு" என்ற கோஷங்களை எழுப்பிக்கொண்டு பழைய உற்பத்தி உறவுகள் மீண்டும் நிறுவப்பட்டது. பொருளாதாரம், அரசியல் மற்றும் கலாச்சாரம் போன்ற எல்லா அங்கங்களிலும் பாட்டாளி சர்வாதிகாரத்தின் ஒழுங்குபடுத்தும் நிலையினை உற்பத்தியின் அராஜக மற்றும் குழப்ப நிலையால் விரைவாக மாற்றப்பட்டது.

சோசலிசத்திற்கு திட்டமிடுதல் பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு உற்பத்தி இலக்குகளை வரையறுப்பதை மட்டும் சார்ந்திருப்பதல்ல. அது முக்கியமாக பொருளாதாரம், அரசியல் மற்றும் கலாச்சாரத்தை நடத்தும் அளவிற்கு மக்களின் பங்கை அதிகரிக்க வைப்பதாகும். அதாவது, உற்பத்தி உறவுகளை தொடர்ந்து இடைவெளியில்லாமல் புரட்சிமயமாக்குதலாகும். தனி நலன்களை கூட்டு நலன்களுடனும், தனி நலன் மற்றும் கூட்டு நலன்களை சமுதாயத்தின் பொது நலன்களுடனும் இணக்கம் காண்பதன் அடிப்படையில் மக்கள் அவர்களுடைய

நலன்களுக்காக சோசலிச அமைப்பிலேயே போராடாமல் இருந்தால் சோசலிச திட்டமிடுதலின் ஒரே வழிகாட்டும் குறிக்கோளாகிய உற்பத்தி உறவுகளை புரட்சிகர முறையில் மாற்றுவது என்பது முடியாததாகிவிடும். புரட்சிகர தத்துவத்தை பொருளாதாரம், அரசியல் மற்றும் கலாச்சாரத்தின் தற்பொழுதைய சூழ்நிலைகளுக்கு ஈடாக கொண்டு வந்துதான் அப்படிப்பட்ட பிரச்சனையை தீர்க்க முடியும்.

பொருளாதார கோட்பாட்டின் ரீதியில் வினியோகித்தல் உள்பட உற்பத்தி முழுவதிலும் தீர்மானம் செய்வதில் உழைக்கும் மக்களின் பங்கிற்கு முதலிடம் தருவது தேவையாக இருந்தது. அரசியல் கோட்பாட்டின் ரீதியில் மக்கள் நேரடியாக ஆட்சியில் பங்கு கொண்டு நடத்த வழிசெய்ய அரசியல் இயக்கமைப்பை புரட்சிகரமாக்குவது தேவையாக இருந்தது. தத்துவார்த்த ரீதியில் "இந்தக் கண்ணோட்ட முறையின் பழமைவாதம் சார்பு நிலையானது; அதன் புரட்சிகரமான தன்மை தனிமுதலானது – இயக்கவியல் தத்துவ ஞானம் இது ஒன்றை மட்டுமே தனிமுதலானது என்று அங்கீகரிக்கிறது." எனப்படும் இயக்கவியல் தத்துவத்தின் பங்கு சமுதாய வாழ்க்கையின் மையத்தில் கொண்டுவரப்பட்டு, எல்லா வளர்ச்சிகளிலும் மனித காரணியும் விழிப்புணர்வும் முன்னணிப்பங்கை ஆற்றுவதற்கு தேவையாக இருந்தது.

லெனின் மார்க்சிஸ்ட்டுகளை அழைத்து "நமது புரட்சிகர விஞ்ஞானத்தை வரட்டுவாதத்தின் மூலம் வெறுமே புத்தக வரட்டுவாத அளவிற்கு கேவலப்படுத்த" வேண்டாம் என்று குரல் கொடுத்தார். ஆனால் குருஷேவைப் பொறுத்தவரை இந்த வழிகாட்டி அர்த்தமற்றதாக இருந்தது. சோவியத்து மக்களின் வாழ்க்கையிலிருந்து முழுவதுமாக தொடர்பை அறுத்துக் கொண்டு முழு தொடர்வரிசையான கோட்பாடுகளை அவர் இட்டுக்கட்டினார். இந்தக் கோட்பாடுகள் சோவியத்துயூனியனிலும் சர்வதேச ரீதியிலும் புரட்சிகர கோட்பாட்டின் பிரச்சனைகளுக்கும் புரட்சி மற்றும் சோசலிசம் எதிர்நோக்கியுள்ள இடர்களுக்கும் தீர்வு காண்பதற்கான அவருடைய ஆற்றலின்மைக்கும் விருப்பமின்மைக்கும் முகமூடியாக இருந்தன. மார்க்சிசத்தின் செயல்திட்டத்தையும் முடிவுகளையும் அவர் பொருளற்றவையாக சிறுமைப்படுத்தினார்.

உழைக்கும் மக்கள் தங்களைத் தாங்களே ஆட்சி செய்யும்

பாட்டாளி வர்க்க சக்தி, அதாவது ப்பாட்டாளி வர்க்க சர்வாதி காரத்திற்கு பதிலாக "அனைத்து மக்களின் அரசு" என்பதைப் பற்றி குருஷேவ் பேசினார். கம்யூனிஸ்ட்டுகளின் தரத்தையும் கம்யூனிஸ்ட்டு கட்சியின் பாட்டாளி வர்க்க புரட்சிகர தன்மையையும் தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்கு பதிலாக "அனைத்து மக்களின் கட்சியை" குருஷேவ் நிறுவினார். சர்வதேசிய தொழிலாளி வர்க்கம் உலகின் புரட்சிகர உருமாற்றத்திற்காக கோரிக்கைகளை முன்வைப்பதற்கு பதிலாக இந்த சகாப்தத்தின் மிக உயர்ந்த சாதனை என்று "சமாதான சகவாழ்வை" பற்றி குருஷேவ் பேசினார். "அனைத்து மக்களின் கட்சியிலுள்ள" இந்த கம்யூனிஸ்ட்டுகள், ஏகாதிபத்தியத்துடன்" சமாதான சகவாழ்வில்" நலிவுற்ற "அனைத்து மக்களின் அரசான" இந்த கம்யூனிஸ்ட்டு கட்சியில் எந்த மாதிரியான கம்யூனிஸ்ட்டு கள் இருந்திருப்பார்கள் என்றும் அது எப்படிப்பட்ட கம்யூனிஸ்ட்டு கட்சியாக இருந்திருக்கும் என்பதை ஒருவர் யூகிக்க முடியும்.

இன்று புரட்சி பின்னடைந்துள்ள வேளையில் மார்க்சீய—லெனினியத்தின் செயல்திட்டமும் முடிவுகளும் இரு பக்கங்களிலிருந்து தாக்குதலுக்கு உள்ளாக்கப்படுகின்றன. முதலாவது, புரட்சி ஏற்படும் என்கிற நம்பிக்கையை கைவிட்டு தனியார்மயமாக்குதல் தாராளமயமாக்குதல் போன்ற உலக முதலாளி வர்க்கத்தின் கோரிக்கைகளுக்கு அடிபணிந்துள்ள வலது பக்கம், இரண்டாவது, மார்க்சீயத்தின் உள்ளடக்கக்கூறை இயக்க இயல் தத்துவத்தை மறுத்துவரும் இடது பக்கம். சமீபத்தில் சமுதாய வாழ்க்கை நிலைகளில் ஏற்பட்டுள்ள வியக்கத்தக்க திடீர் மாறுதல்களைப் பற்றி சிந்திப்பதை தவிர்ப்பதற்காக வலதைப் போலவே இடதும் முற்காலத்திலிருந்து வாக்குகளை சுறுசுறுப்பாக வீசி வருகிறது. வலது இடது என்று இரண்டு பக்கம் உள்ளவர்களும் கடந்த கால துதிபாடில் சிக்கிக்கொண்டு அவர்களுடைய இயலாமைத்தனத்தை புனிதப்படுத்தும் முயற்சி யில் ஈடுபட்டும் நிகழ்கால பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண மறுத்தும் வருகின்றன. அவர்கள் ஒரே கம்யூனிச இயக்கம்தான் உள்ளது என்பதையும் அதற்கு முக்கிய ஆபத்து சமூக— ஜனநாயகத்தோடு சமரசம் செய்யும் எல்லோரிடமிருந்து வருகின்றது என்பதையும் அங்கீகரிக்க மறுக்கிறார்கள்.

இந்த புரட்சிப் பின்னடைவுக் காலகட்டத்தின் தீர்மானமான நடைமுறை செயல்பாடுகளை விரிவுபடுத்துவதே

மிக முதன்மையான தேவையாகும். மற்றொன்று, திடமாகவும் உறுதியோடும் மார்க்சீய அடிப்படைகளை உயர்த்திப்பிடிக்க வேண்டும். அதாவது தற்கால மார்க்சீய–லெனினிய சிந்தனை களையும், திட்டங்களையும், மார்க்சீயத்தின் தீர்மானங்களையும் உயர்த்திப் பிடிக்க வேண்டும். மிக முக்கியமானதும் தீவிரமான செயல்களாக இந்திய கம்யூனிஸ்ட்டுகளின் முன்னாலிருக்கும் இந்த இரண்டு அடிப்படைகளுக்கும் உண்மையாக இருக்க வேண்டும் என்றால் மற்ற எல்லா எண்ணங்களையும் ஒதுக்கி விட்டு அவர்கள் தத்துவத்தை விரிவுபடுத்தும் வேலையிலும், பொது நிலைப்பாட்டை நிறுவும் வேலையிலும், மக்களிடையே அரசியல் ஒற்றுமையை கட்டும் வேலையிலும், சமுதாயத்தை நெருக்கடியிலிருந்து விடுவிக்கும் வேலையிலும் மூழ்க வேண்டும். இப்படிப்பட்ட வேலைகள் நடைபெறும் பொழுது இந்திய கம்யூனிஸ்ட்டுகள் ஒற்றுமை அமையப்பெற்று உழைக்கும் வர்க்கம் ஒரே முன்னணிக் கட்சியாக இந்திய மண்ணில் உதித்தெழும். இ.க.கெ.கட்சியின் உடனடி நடவடிக்கை இது நிறைவேறுவதை உறுதிப்படுத்துவதே ஆகும்.

இந்த கட்சியோ அல்லது அந்த கட்சியோ, இந்த முறை புரட்சியின் தீபத்தை உயிரோடு வைத்திருக்கும் என்று நம்பிக்கொண்டிருந்தால் தத்துவத்தை விரிவுபடுத்தும் வேலை யிலும், பொதுநிலைப்பாட்டை உண்டுபண்ணும் வேலையிலும், அரசியல் ஒற்றுமையை உருவாக்கும் வேலையிலும், சமுதாயத்தை நெருக்கடியிலிருந்து விடுவிக்கும் வேலையிலும், இன்று இருக்கும் நிலையிலிருந்து ஒரு வித்தியாசமும் ஏற்படாது என்பது நமக்கு நன்றாகத் தெரிந்ததே. மேலும், இது கம்யூனிஸ்ட்டுகளிடையே உள்ள பிளவுகள் மேலும் ஆழமாக்கு வதற்கும் அரசியல் ஒற்றுமை ஏற்படுதலுக்கு முட்டுக்கட்டையா வதற்கும் உதவுகிறது. இது தன்னழிவு உந்துதல்களுக்கு அடிபணிய வழிவகுக்கும். 1962–64 காலகட்டத்தில் இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சியின் பிளவு இன்றியமையாததாகி விட்டதிலி ருந்து இன்று வரையான முப்பது வருட காலத்தில் பலவகையான கம்யூனிஸ்ட்டுகளிடமிருந்து ஆயிரத்துவொன்று திசைதிருப்பு செயல்கள் தோன்றிவிட்டது. குறிப்பாக. கம்யூனிஸ இயக்கம் அன்றிலிருந்த சூழ்நிலைகளில் புரட்சியின் பிரச்சனைகளை சந்திக்கத் தவறியதனால் தான் அந்த காலகட்டத்தில் அது நடந்தது.

எவரெவர் இந்த பிளவிற்கு ஏற்பாடு செய்தார்களோ

அவர்களிடம் அவர்கள் அப்படி செய்ததினால் எதைச் சாதித்தார்கள் என்பதை விளக்கும்படி கேட்கவேண்டும். இந்த புரட்சிப்பின்னடைவு காலத்தில் இந்த முக்கியமான கேள்விக்கு பதிலளித்து தெளிவுபடுத்தி கம்யூனிஸ்ட்டுகளின் ஒற்றுமைக்கு அவர்கள் பங்களிக்கலாம். இப்படிப்பட்ட சூழ்நிலைகளிலும் கூட இந்த கேள்வியில் தன்னை பாதுகாத்துக் கொள்ளும் மிகக் குறுகிய கண்ணோட்டத்துடனும் கர்வத்துடனும் நடந்துகொள்ளும் இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சி (மார்க்ஸிஸ்ட்டு) தான் பெரும்பான்மையான அளவிற்கு விளக்கம் தரவேண்டும். இன்றைய சூழ்நிலைகளை ஆராய்ந்தும் அவர்களுடைய தத்துவார்த்த நிலையையும் பொது நிலைப்பாட்டையும் விளக்கி அவர்களை, பிளவின் பின்விளைவுகளை விளக்கச் செய்ய வேண்டும். அப்படியாக மக்களின் அரசியல் ஒற்றுமைக்கு பங்களிக்கலாம். முற்காலத்தில் எப்பொழுதும் செய்துவந்ததைப் போலவும், இந்த தேர்தல் திட்டத்தில் அவர்கள் முன்வைத்த மூன்றாவது முன்னணியைப் போல மேலிருந்து ஒற்றுமை காண வேண்டும் என்ற உதவாத உத்தியை கைவிட வேண்டும். இன்றுள்ள சூழ்நிலைகள் புரட்சியை முன்னுக்கு கொண்டு செல்ல தோதாக இல்லை ஆதலால் உழைக்கும் வர்க்கம் காத்திருக்க வேண்டும் என்னும் பழைய பல்லவியை கைவிட வேண்டும்.

இன்றுள்ள நிலைமைகளை எதிர்க்கின்ற குறிப்பாக அரசியல் குற்றமயமாக்கப்படுதலுக்கும் மக்களை ஒடுக்கி வன்முறை மரபை நிறுவுவதில் ராணுவம் மற்றும் பாதுகாப்பு படையினரின் பங்கிற்கும்; அரசு பயங்கரவாதத்தின் பிரயோகத்திற்கும்; மக்கள் விடுதலையின் மீது நடத்தப்படும் எல்லா தாக்குதல்களுக்கும் எதிராக உள்ளோரை, மிகவும் முக்கியமாக, தொழிலாளர்கள் மற்றும் பரந்துபட்ட மக்களின் பொருளாதார நல்வாழ்விற்கு ஆதரவு தரும் அனைத்து தொழிலாளர்கள் மற்றும் நடுத்தரவர்க்க மக்களின் அரசியல் ஒற்றுமையை கட்டியமைப்பது தான் மிகத் தீவிரமான பணியாகும். இந்த கொள்கைக்கோ அந்த கொள்கைக்கோ மார்ச்சிச–லெனினிய புத்தகங்களிலுள்ள இந்த சொற்றொடருக்கோ அல்லது மற்றொன்றுக்கோ, மக்களை எதிர் நோக்கியுள்ள புறவய அகவய சூழ்நிலைகளிலிருந்து மேற்கூறியவற்றைப் புதுப்பிக்காமல் விசுவாசத்தை காண்பிப்பது எந்த விதமான முன்னேற்றத்திற்கும் பங்களிக்காது.

தோழர்களே, இ.க.கெ.கட்சியைப் பொறுத்தவரை புரட்சி பின்னடைந்துள்ளது என்பதன் அர்த்தம் புரட்சி அழிந்துவிட்டது என்பதல்ல. காரல் மார்க்ஸ் வாழ்ந்த காலத்தில் மார்க்சீய தத்துவம் எவ்வளவு செல்லுபடியாக இருந்ததோ அதே அளவு இன்றும் அது செல்லுபடியாகும். புரட்சி பின்னடைந்துள்ளது என்பதன் அர்த்தம் இந்த சகாப்தத்தின் முக்கிய முரண்பாடுகள் மறைந்து விட்டன என்பதல்ல. லெனின் விவரித்தது போலவே இந்த சகாப்தமானது ஏகாதிபத்தியமும் தொழிலாளி வர்க்கப் புரட்சியுமாகவே உள்ளது. ஆனால், மார்க்சீய–லெனினிய தத்துவத்தை வளர்த்து நடைமுறைப் பாதையை ஒளியூட்ட வேண்டும். மார்க்சீய–லெனினிய இயக்கத்தைப் போலவே தத்துவத்தையும் புதிய கண்ணோட்டத்தில் ஆராய்ந்து அதைப் புதுப்பிக்க வேண்டும். உறவுகளிலும் மற்றவைகளிலுமுள்ள மாறுதல்களினால் புதுப்புது அனுபவங்களும் புதுப்புது கண்டுபிடிப்புகளும் ஏற்படும். இக்காலத்தின் சமுதாய முன்னேற்றத்தின் தேவைகளுக்குத் தகுந்தாற்போல் நவீன வரையறைகளை வளர்க்க வேண்டும்.

இந்த பூமியில் ஜனத்தொகை மிகுந்த நாடுகளில் ஒன்று இந்தியா. அது புரட்சிகர வரலாற்றைக் கொண்டதினால் அறிவு ஒளி உதயமாகுவதற்கும் கம்யூனிஸ கருத்துகள் செழிப்பாக வளருவதற்கும் தகுந்த வளமான இடமாகும். அதே சமயம் மக்களின்மீது சுமத்தப்படும் வறுமையும் பிற்போக்குத்தனமும் இந்த காலகட்டத்தின் தேவைகளுக்கு ஏற்றாற்போல் கம்யூனிஸ்ட்டுகளை அவர்களின் ஒற்றுமையை புதுப்பிக்கத் தூண்டுகிறது. இந்தியாவிற்கு இது வரலாற்றின் முடிவல்ல புதுமாதிரியான ஒரு தொடக்கமே. இந்தியாவின் தற்பொழுதைய உண்மையான சூழ்நிலைகளிடையே வேலை செய்து கம்யூனிஸ்ட்டுகள் வரலாறு படைப்பார்கள். அந்த வரலாறு, சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு வழியை திறந்துவிடும் வரலாறாகவே இருக்கும். மக்கள் வேறு யாரையாவது நாடிச் சென்றார்களானால் அது பயனற்றதாகவே இருக்கும். ஏனென்றால் உழைக்கும் வர்க்கம் ஒன்றே மிகுந்தளவு முழுமையான புரட்சிகரமான வர்க்கமாகும். மேலும் கம்யூனிஸம் தான் உழைக்கும் வர்க்கத்தின் முழுமையான விடுதலைக்கு வழிவகுக்கும் நிலையாகும். எந்த ஒரு திசைதிருப்புதலுக்கும் வழிகொடுக்காமல் சாமர்த்தியமாக கம்யூனிஸ்ட்டுகள் அகவய

நிலைப்படி உள்ள எல்லா சக்திகளையும் பயன்படுத்தி சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்க வேண்டும். அவர்கள் தத்துவத்திலிருக்கும் எல்லாவற்றையும் பயன்படுத்தி இதை எப்படியாவது நடைபெற வைக்க வேண்டும்.

உலகெங்கிலும் கம்யூனிஸ்ட்டுகள் அவர்களுடைய அகவய புறவய சூழ்நிலைகளை நிறுத்திப் பார்த்துக் கொண்டிருக்கிறார் கள். இந்த வேலையில் இந்திய கம்யூனிஸ்ட்டுகள் ஒரு பிரிவாக உள்ளார்கள். அப்படி ஒரு மதிப்பீடு செய்யாமல் இந்தியாவிலும் உலகம் முழுவதிலும் அவசியமான ஆழமான புரட்சிகர மாற்றங்களை கொண்டு வருவது முடியாததாகிவிடும். இந்திய கம்யூனிஸ்ட்டுகள் இந்தியாவில் தங்களுடைய செயல்பாடுகளை நடத்தி வருவதின் மூலமும் அதைப்போலவே உலகெங்கிலும் அதை ஆதரிப்பதன் மூலமும் உலக உழைக்கும் வர்க்கத்தினுடைய விடுதலையின் இன்றியமையாத பிரிவாக உள்ளார்கள். அதே போராட்டத்தை எல்லா இடத்திலும் ஆதரவளிப்பது என்னும் கருத்தே பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தின் அடிப்படையாகும்.

# பாகம் 2

# சமூக ஜனநாயகத்துடன் சமரசம் செய்வோரை எதிர்த்த போராட்டத்தை இறுதிவரை கொண்டு செல்வது

தோழர்களே, உலக கம்யூனிச இயக்கத்தின் ஆரம்பம், ஐரோப்பிய சமூக–ஜனநாயகத்திலிருந்து முற்றிலுமாக, உடைத்துக் கொண்டுவந்ததிலிருந்தே, என்பது நீங்கள் நன்கு அறிந்ததே. இரண்டாவது அகிலத்தில் ஏகாதிபத்தியங்களுக்கு இடையிலான போரைக்குறித்தும், முதலாளிவர்க்கத்தின் போர் செலவுகளை அங்கீகரிப்பதைக் குறித்தும் சோசலிஸ்ட்டுகளின் அணுகுமுறை பற்றிய கேள்வியையொட்டி இந்தப் பிளவு உருக்கொள்ளத் தொடங்கியது. இந்த வேறுபாடு வளர்ச்சி பெற்று, 1917ல் மாபெரும் அக்டோபர் புரட்சியின் காலகட்டத்தில் மார்க்சிசத்தின் முழுதிட்டத்தையும், முடிவுகளையும் முழுவதுமாக இரண்டாவது அகிலம் தூக்கி எறிந்து விட்டார்கள் என்பது தெள்ளத்தெளிவாகி விட்டது.

புரட்சி மற்றும் சோசலிசத்தின் எதிரிகள், மார்க்சிச திட்டத்தையும், அதன் முடிவுகளையும் திரித்துக் கூறுவதிலிருந்து பாதுகாத்த வரலாறுதான் மூன்றாவது அகிலத்தின் வரலாறாகும். ஒரு பக்கம் இது சமூக ஜனநாயகத்தோடு சமரசம் செய்து கொண்ட எல்லோரையும் எதிர்த்தது பற்றியும், மறுபக்கம் மார்க்சிசம்–லெனினிசத்தின் தூய்மையைக் கட்டிக்காத்தது பற்றியுமான வரலாறு ஆகும். பின்னர் கம்யூனிச அகிலத்தின் பல கட்சிகள் மார்க்சிசம்–லெனினிசத்தைப் புறக்கணித்ததும், அவர்கள் சமூக சனநாயகத்துடன் சமரசம் செய்து கொண்டதும்தான், இன்று தொழிலாளிவர்க்க நோக்கங்களுக்கும், புரட்சிக்கும், சோசலிசத்திற்கும் மாபெரும் பின்னடைவை தோற்றுவித்துள்ளது. வறட்டுவாத அடிப்படையில் இல்லாமல், உலகில் மாபெரும் திடீர் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன என்பதை மனதில் கொண்டு, மேற்கண்ட இந்தத் தத்துவார்த்த நிலைப்பாடும் இந்த வரலாற்று முடிவும் பாதுகாக்கப்பட வேண்டும்.

மார்க்சிச–லெனினிசத் தத்துவார்த்த சிந்தனையை அடிப்படையாகக் கொண்டு இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சியானது,

இந்தியாவில் மக்கள் சனநாயகப் புரட்சியை முடிவுக்கு கொண்டு வருவதற்கான வழிகாட்டியாகத் தோற்றுவிக்கப்பட்டது. அந்த நேரத்தில் கம்யூனிச இயக்கத்திற்கு முக்கிய ஆபத்தாக அரசு அதிகாரத்திலிருந்த பலவகையான நவீன திருத்தல்வாதம், குறிப்பாக சோவியத் திருத்தல்வாதம் இருந்தது. இந்தச் சூழ்நிலையில் மார்க்சிசம்—லெனினிசத்தின் தூய்மைக்கான போராட்டம், நவீன திருத்தல்வாதம், மற்றும் அதன் பல்வேறு வகைகளை எதிர்ப்பதாகவும் குறிப்பாக சோவியத்யூனியனின் தத்துவமும், நடைமுறைகளும், பற்றிய கேள்வியை ஒட்டியதாக வும், மேலும் இரு துருவங்களாகப் பிரிந்திருந்த உலக சூழ்நிலையில் புரட்சிக்கான பணிகளை மேற்கொள்வதுமாக இருந்தது.

அந்தக் காலத்திற்குப் பின் உலகில் பெரும் திடீர் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. உலகத்தின் இருதுருவப் பிளவு முடிவடைந்தது மட்டுமல்லாமல், பல கம்யூனிஸ்ட் கட்சிகளும் தங்களுடைய பெயர்களை மாற்றிக் கொண்டதுடன், அல்பேனிய சோசலிச கட்சியைப் போல வெளிப்படையாகவே கொஞ்சமும் வெட்கமின்றி, சமூக சனநாயகத்தைத் தழுவிக் கொண்டனர். சோவியத்யூனியன் அழிக்கப்பட்டதும், ரசியக்கூட்டரசு மற்றும் பிற சி.அய்.எஸ்(C.I.S) நாடுகளில் பொருளாதார அடிப்படையும், சோசலிச மேல்கட்டுமானமும் முழுமையாகப் பெயர்த்தெடுக்கப் பட்டதும், ஏகாதிபத்தியங்கள் முன்வைக்கும் "சுதந்திர சந்தையை யும்" பல கட்சி சனநாயகத்தையும் வெளிப்படையாகவே ஏற்றுக் கொண்டதும் வாழ்க்கையின் உண்மைகளாகும். இத்துடன், சோசலிசத்தை அழிக்க வேண்டுமென்ற நோக்கத்தை நிறை வேற்றிக் கொண்டதோடு, சோவியத் திருத்தல்வாதமும்கூட அதன் பழைய வடிவத்திலிருந்தும் ஒழிக்கப்பட்டு விட்டது.

இந்த திடீர் மாற்றங்களுக்குப் பிறகு அகவய, புறவய நிலைமைகளை ஆராய்ந்த பின்னர், தத்துவார்த்த போராட்டக் கருவானது 1980ல் சி.ஜி.பி.ஐ. கெதர் கட்சி உருவாக்கப்பட்ட போது இருந்ததிலிருந்து இன்று மாற்றம் பெற்றுள்ளது என்ற முடிவிற்கு கட்சி வந்துள்ளது. கடந்த 40 ஆண்டுகளில் இருந்ததுபோல் இன்று கம்யூனிச இயக்கத்திற்கு சோவியத் திருத்தல்வாதத்திடமிருந்தோ, அல்லது மற்ற நவீன திருத்தல்வாத வகைகளிலிருந்தோ இனியும் மாபெரும் அபாயம் எழுவதில்லை. ஒரே கம்யூனிச இயக்கமாக இருந்ததை முன்னர் பிளவுபடுத்தி

வந்திருந்த நவீன திருத்தல்வாதம் இன்று இல்லை. புழுதிப் புயல் நின்ற பிறகு கம்யூனிஸ்ட்டுகள் என்று இன்னமும் தங்களை அழைத்துக் கொள்பவர்களும், கம்யூனிசம் என்ற நோக்கத்தை வெளிப்படையாகத் தூக்கி எறியாதவர்களும் ஒரே கம்யூனிச இயக்கத்தில் அங்கமாக உள்ளனர்.

இந்த கம்யூனிச இயக்கத்திற்கு அபாயம் எங்கிருந்து வருகிறது? அமெரிக்க ஏகாதிபத்தியம் தன்னுடைய ஆதிக்கத்தின் கீழ் ஒரு துருவ உலகை அமைக்க மேற்கொள்ளும் முயற்சிகள், பல துருவ உலகை உருவாக்க மற்றவர்களுடைய முயற்சிகள், மனித நாகரிக வளர்ச்சியில் முதலாளித்துவமே கடைசிக் கட்டமென வாதிடும் உலக முதலாளித்துவத்தின் தத்துவார்த்த தாக்குதல்கள் நடந்து வருகின்றன. இவற்றிற்கு இடையே இந்த ஒரு கம்யூனிச இயக்கத்திலுள்ள சிலர் சமூக சனநாயகத்தோடும், முதலாளித் துவம் மற்றும் ஏகாதிபத்தியத்தைப் பற்றி மாயைகளை உருவாக்கு பவர்களோடும் சமரசம் செய்து வருகிறார்கள். கம்யூனிச இயக்கத் திற்கான முக்கிய அபாயம் தெள்ளத் தெளிவாக இப்படிப்பட்ட சக்திகளிடமிருந்துதான் வருகிறது. எனவே இன்று தத்துவார்த்தப் போராட்டத்தின் முக்கிய உட்கருவானது ஒருபுறம் சமூக சனநாயகத்தோடு சமரசம் செய்யும் அனைவரையும் எதிர்ப்பதாக வும், மற்றொருபுறம் மார்க்சிசம்–லெனினிசத்தின் தற்கால சிந்தனைகளையும், மார்க்சிசம்–லெனினிசத்தின் எல்லாக் கொள்கைகளையும் பாதுகாப்பதாகவும் உள்ளது.

டிசம்பர் 1995–ல் ரசியாவில் நடைபெற்ற டூமா தேர்தல் களில் மூன்றில் ஒரு பங்கு இடங்களில் வெற்றிபெற்ற ரசியக் கூட்டரசின் கம்யூனிஸ்ட்டு கட்சியின் (சி.பி.ஆர்.எப், C.P.R.F) செயல்திட்டமானது, இந்த காலகட்டத்திற்கான கருத்துப் போராட்டத்தின் உட்கருவிற்கு ஒரு நல்ல எதிர்மறையான உதாரணமாக உள்ளது. இந்தத் திட்டமானது சமூக சனநாயகத் துடன் முழுவதுமாக சமரசம் கொண்டுள்ளது. சி.பி.ஆர்.எப் இன் திட்டமானது புரட்சிகர உட்பொருளை அகற்றிவிட்டது. அதாவது, நம்முடைய் இயக்கவியல் தத்துவத்தின் உள்ளடக்கத்தை, முக்கியப் பகுதியை – அது இல்லாமல் நமது தத்துவம் வெறும் மக்கிப்போன கொள்கையற்ற கலக்கல் சரக்காக ஆகிவிடக்கூடிய உட்கருவை சி.பி.ஆர்.எப் நீக்கிவிட்டது. மேலோட்டமாகப் பார்வையிட்டாலும் கூட, இது முழுவதுமாக சமூக சனநாயகத்திட்ட மென்று தெரியும்.

செய்தி நிறுவனங்களின் அறிவிப்புகளின்படி, ''ரசியக் கூட்டரசு, கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கை உள்ளடக்கத்தை, அதனுடைய தலைவர்கள் டூமா தேர்தல்களுக்கு முன் வெளியிட்ட ஆவணங்களில் கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. ரசியாவில் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் சாசனத்தை விமர்சிக்கும் கம்யூனிஸ்ட்டுகள், உழைக்கும் மக்களுக்கு அதிகாரத்தை, உறுதிப்படுத்தவும், ஒரு 'அரைப் பிரபுத்துவ அமைப்பை' உருவாக்கிவிட்டதாக அவர்கள் கூறும் ரசியாவின் ஜனாதிபதி அமைப்பை (Presidential System) மாற்றுவதற்கும் ஒரு புதிய அடிப்படைச் சட்டத்தைக் கொண்டு வர விரும்புகின்றனர்". முன்வைக்கப்பட்டுள்ள இந்த மாற்றமானது, வடிவத்தில் மட்டுமேயன்றி உட்பொருள் அளவில் இல்லை. அரசியல் சாசனங்கள் வெற்றிகரமான புரட்சிகளால் எழுதப்படு கின்றன. அவை ஒரு புதிய உள்ளடக்கத்தைப் பிரதிபலிக்கின்றன. "உழைக்கும் மக்களுக்கு அதிகாரத்தை" ரசிய அரசியல் சட்டம் இணைத்துக் கொள்கிறதோ இல்லையோ, ஒரு வெற்றிகரமான புரட்சியின் மூலம் முதலாளித்துவத்தைத் தூக்கி எறிந்துவிட்டு, தொழிலாளிவர்க்கம் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றாவிடில், அதிகாரமானது முதலாளி வர்க்கத்தின் கையில் தொடர்ந்து நீடிக்கும். ரசியாவில் ஜனாதிபதி வடிவ அரசாங்கத்திலிருந்து, இந்தியாவிலுள்ளது போல வேறு ஒரு வடிவத்திற்கு மாறுமா என்பது முற்றிலும் பொறுத்தமற்ற கேள்வியாகும். ஏனெனில் அவ்வாறு மாறினாலும் அதிகாரமானது ஜனாதிபதி மற்றும் மந்திரி சபைக்கு பதிலாக பிரதமர் மற்றும் மந்திரிசபை என்கிற நிர்வாகத்துறையின் கையில் குவிந்திருக்கும்.

செய்தி நிறுவனங்கள் மேலும் சொல்கின்றன: "டூமா தேர்தல்களுக்கு பலநாட்களுக்கு முன்பே ஏற்றுக் கொள்ளப்பட்ட அறிக்கையானது ரசியாவின் எதிர்காலத்தை மக்கள் நிர்ணயிக்க வேண்டும் என்றும், 'எவனொருவன் வேலை செய்வதில்லை யோ, அவனுக்கு உணவும் இல்லை' என்ற பழைய லெனினிச முழக்கத்தை புதுப்பிக்கவும் செய்கிறது. அதே நேரத்தில் ஊதியம் வேலையைப் பொறுத்திருக்கும், தத்துவத்தைப் பொறுத்ததல்ல என்றும் கட்சி தெளிவுபடுத்துகிறது. 'மக்கள் நேர்மையாக உழைத்து, அவர்களின் உழைப்பின் தரத்தையும், அளவையும் பொறுத்து ஊதியம் பெறவேண்டும். ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொறியாளர்கள், விஞ்ஞானிகள், ஓவியர்கள், எழுத்தாளர்கள்

மற்றும் விளையாட்டு வீரர்கள் அனைவரும் சமுதாயத்திற்கு அவர்களுடைய தேவையை மீண்டும் உணர்வார்கள்". எனினும் அவர்களுடைய திட்டத்தில் முதலாளித்துவத்தைத் தூக்கி எறிவதைப் பற்றியோ, சோசலிச சமுதாயத்தை மீண்டும் கட்டுவதைப் பற்றியோ ஒன்றுமே கூறப்படவில்லை. உற்பத்தியின் நோக்கமானது அதிகபட்ச முதலாளித்துவ இலாபம் ஈட்டுவதாக இருக்கும்போது மக்கள் எப்படி "நேர்மையாக உழைத்து அவர்களின் உழைப்பின் தரத்தையும் அளவையும் பொறுத்து சம்பாதிக்க" முடியும்? இது பழைய பத்தொன்பதாம் நூற்றாண்டு சமூக சனநாயக முழக்கம் ''நேர்மையான நாள் வேலைக்கு நேர்மையான நாள் ஊதியம் என்பது தவிர வேறு ஒன்றுமில்லை''

சி.பி.ஆர்.எப், தன்னுடைய அயல்நாட்டுக் கொள்கையில், பாட்டாளிவர்க்க சர்வதேசீயத்தை முற்றிலும் கைவிட்டுவிட்டு அதற்குப் பதிலாக "தாய்நாட்டுக்கு ஆதரவு" என்பதை வைத்திருக் கிறார்கள். அந்த செய்தி நிறுவனங்களின் படி சி.பி.ஆர். எப், "பலமான அரசை கட்டியமைக்கும் நோக்கத்தோடு, சோவியத் யூனியனைக் கலைத்து விட்ட ரசியா, யுக்ரேன், பெலாரஸ்க்கு இடையிலான ஒப்பந்தத்தை ஒதுக்கி எறிந்துவிட்டு, வல்லரசை மீண்டும் உருவாக்க வாக்கெடுப்பு நடத்த விரும்புகிறது. ரசிய எல்லைக்கு அப்பால் சிக்கியுள்ள 2.5 கோடி ரசிய மக்களின் வாழ்க்கை நிலைமைகளை உயர்த்த உறுதி பூண்டுள்ள அவர்கள் பால்டிக் நாடுகளான எஸ்டோனியா, லாட்வியா, லித்துவானியா ஆகியவற்றுடனான உறவுகள் ஓரளவிற்கு இந்நாடுகள் அங்குள்ள ரசியக் குடிமக்களை எவ்வாறு நடத்துகிறார்கள் என்பதைப் பொறுத்து அமையும் என்கின்றனர். முன்னாள் வார்சா ஒப்பந்த நாடுகளை நேட்டோவின் கீழ் கொண்டு வருவதை இந்தக் கம்யூனிஸ்ட்டுகள் விரும்பவில்லை". வேறுவார்த்தைகளில் சொல்வதானால், மற்ற சி.ஐ.எஸ் உறுப்பினர்கள் மீது, சி.பி.ஆர்.எப் இன் அணுகுமுறை தீவிர ரசிய தேசிய வெறி யுணர்வு கலந்ததாக உள்ளது. நேட்டோவின் விரிவுக்கு அதனு டைய எதிர்ப்பும் கூட, தேசிய வெறியுணர்வு கண்ணோட்டத் துடனும் தனது சொந்த இராணுவக் குழுவை உருவாக்க ரசிய ஆர்வத்தின் அடிப்படையிலும் அமைந்துள்ளது.

பொருளாதாரக் கொள்கையில் சி.பி.ஆர்.எப் முதலா ளித்துவ அமைப்போடு செல்லும். பழைய சமூக சனநாயக நல்வாழ்வு அரசு அவர்களுடைய பிரச்சினைகளை தீர்க்கும் என்ற

நம்பிக்கையில் சில மாற்றங்களுக்குக் குரல் எழுப்புகிறார்கள். "கம்யூனிஸ்ட்டு கட்சி முன்பு கொண்டிருந்த சில கடுமையான கருத்துக்களை நிராகரித்துவிட்டு இப்போது கலவைப் பொருளாதார வகையை ஆதரிக்கிறார்கள்." பொருளாதாரத்துறையில் 'முன்பு கொண்டிருந்த சில கடுமையான கருத்துக்கள்' என்பன என்ன? அரசியல் பொருளாதாரத்தில் மிகக்கடுமையான கருத்து என்பது உற்பத்திக் கருவிகளின் உடமையிலும், உற்பத்தியின் நோக்கத்திலும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தைப் பயன்படுத்துவதாகும். அதாவது அடித்தள உறவுகளின் உட்பொருளை முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு ஆயுதம் தாங்கிய புரட்சிகர ரசியப் பாட்டாளிவர்க்கம் மாற்றுவதாகும். இந்த முக்கிய "கடுமையான கருத்து" தான் சி.பி.ஆர்.எப் இனால் கைவிடப் பட்டது.

புரட்சியின் மூலம் சோசலிச சமுதாயத்தை அமைப்பது என்ற கொள்கையை விட்டுக் கொடுத்தபின் சி.பி.ஆர்.எப் இன்று இந்தியாவிலுள்ளது போன்ற ஒரு கலப்புப் பொருளாதாரத்தை ஆதரிக்கிறார்கள். இந்தக் கலப்பு பொருளாதாரத்தில் இந்திய தொழிலாளிவர்க்கத்திற்கு ஒரு நீண்ட அனுபவம் உண்டு. இது அரசு ஏகபோக முதலாளித்துவ அமைப்பு என்று அழைக்கப் படுகிறது. இந்த அமைப்பு மிகவும் முன்னேறிய பல முதலாளித் துவ நாடுகளிலும் நிலவுகிறது. தொழிலாளிவர்க்க நோக்கத்திற்கு இந்த முழு துரோகத்தை இழைத்த பின்னர், சி.பி.ஆர்.எப், திசை திருப்பும் வகையில் பெரும் சத்தம் எழுப்புகின்றனர். "அரசின் தனியார்மயப்படுத்தும் கொள்கைகளில் மாற்றம் ஏற்படுத்தக் கூடிய வகையில் பாதுகாப்பு, எரிசக்தி, போக்குவரத்து மற்றும் தொழில் நுட்பத்துறைகள் அரசின் கைகளில் இருக்க வேண்டும் என்பன போன்ற அறிவிப்புக்களை விட்டு வருகிறார்கள். அரசுடைமைகள் விற்கப்படுவதால் எதிர்கால சந்ததியருடைய உரிமைகள் மறுக்கப்படுகின்றன என்று அது சொல்கிறது. சட்டவிரோதமாக 'தனியார் மயப்படுத்தப்பட்ட' நிறுவனங்கள் மீண்டும் மக்கள் கையில் ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும், ரசியாவின் தேவைகளை நிறைவு செய்யாத தனியார் மயப்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள் திரும்பப்பெற வேண்டும் என்றும் இந்தக் கட்சி சொல்லியிருக்கிறது. ஆனால் அது எவ்வாறு கணிக்கப்படும் என்று சொல்லவில்லை. சரிந்து வருகின்ற உற்பத்தியை உயர்த்துவதற்காக கம்யூனிஸ்ட்டுகள்,

மானியங்களின் மூலம் விலைவாசியை குறைக்கவும், முதலீட்டை அதிகரிக்கவும் விரும்புகின்றனர். அதே நேரத்தில் முதலீட்டுக்கான பெரும் தேவையை மனதில் கொண்டும், அயல்நாட்டு நிதியைப் பெறுவதில் சீனா கண்ட வெற்றியை உதாரணமாகக் கொண்டும், மேற்கு நாடுகளின் முதலீட்டிற்கு அவர்கள் ஊக்கமளிக்க விரும்புகின்றனர்". வேறு வார்த்தைகளில் சொன்னால், முன்னேறியதும் ஏகாதிபத்திய சக்தியுமான ஒரு நவீன முதலாளித்துவ அமைப்பை சி.பி.ஆர்.எப். உருவாக்க விரும்புகிறது. சர்வதேச சந்தை போட்டா போட்டிகளில் ஏகபோக முதலாளிகள் எந்த அபாயமும் இன்றி தங்களுடைய நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக இது ஆதரவு விலையளிக்க விரும்புகிறது. முதலாளிகளின் நன்மைக்காக இது, அயல்நாட்டு மூலதனத்தை வரவேற்கிறது.

அவர்களுடைய சமுதாயக் கொள்கையைப் பொறுத்த மட்டிலும் "வேதனைமிக்க பொருளாதார சீர்திருத்தங்கள் காரணமாக கோடிக்கணக்கான ரசிய மக்கள் பின்தங்கி விட்டனர் என்று குற்றஞ்சாட்டுகிற கட்சி, குடும்பங்களுக்கான உதவித் தொகையையும், குறைந்தபட்ச ஊதியத்தையும் ஓய்வுபெற்றவர், உடல் ஊனமுற்றோர், முன்னாள் படைவீரர் ஆகியோருக்கான உதவித்தொகையையும் கூட்ட விரும்புகிறது. இலவசக் கல்வி மற்றும் சுகாதாரம், விலை குறைந்த வீட்டு வசதி ஆகியவற்றுக்கு உத்திரவாதமளிக்க அது விரும்புகிறது. சோவியத் நாட்களில் சேமித்து வைத்தவற்றை அரித்து எடுத்து விட்ட பணவீக்கத்திற்கு ரசிய மக்களுக்கு இழப்பீட்டை அது வழங்கும். வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழித்துக்கட்டும்". இவையனைத்தையும் இது எவ்வாறு சாதிக்கப்போகிறது? முதலாளித்துவத்தைத் தூக்கி எறியாமல் இவற்றை நிறைவேற்ற முடியுமா? சமூக சனநாயக முறையில் அமைத்த சமூகநல அரசை உருவாக்குவதைத் தவிர, வேறு ஒன்றும் செய்ய முடியாது. இந்தியாவிலும் இதுபோன்றவை கள்தான் நடத்தப்படுகின்றன. உதவி மானியங்கள், சத்துணவு என ஆயிரக்கணக்கான இதுபோன்ற திட்டங்கள் மூலம் அரசாங்கம் மக்களின் ஒரு பிரிவினர்களுக்கோ அல்லது மற்றவர் களுக்கோ உதவிகளை வழங்குகிறது. முதலாளித்துவத்தைத் தூக்கி எறியாத நிலையில் இதற்குப் பொருள் என்னவென்றால், தொழிலாளர்களைச் சுரண்டுவது மேலும் தீவிரப்படுத்துவதும், அதிகமான வரிகள், பணவீக்கம், மற்றும் பற்றாக்குறைவு

வரவு-செலவுத் திட்டம் போன்றவற்றின் மூலம் சமுதாயம் முழுவதிலும் இருந்து ஏகபோக முதலாளிவர்க்கம் பறிப்பதை மேலும் அதிகரிப்பதும், 'சமூக நலத்தின்' மூலமாகவும் இலாபத்தை உருவாக்குவதுமேயாகும். முதலாளித்துவத்தைத் தூக்கி எறிவது என்ற தேர்ந்தெடுப்பை நிராகரித்துவிட்ட, சி.பி.ஆர்.எப் சமூக சனநாயகப்பாதையை உறுதியாகப் பிடித்துக் கொண்டுள்ளது. இந்தியாவில் இந்தப் பாதையை இந்திய தேசிய காங்கிரசு கட்சியும் மற்றவர்களும் வெகுகாலமாக கடைப் பிடித்து வந்துள்ளதை நாம் பார்த்து வந்திருக்கிறோம். முதலாளித் துவத்தைத் தூக்கி எறியாமலும், முதலாளிவர்க்க உடமைகளைக் கைப்பற்றாமலும் இவை எல்லாவற்றையும் நிறைவேற்றுவோ மென சி.பி.ஆர்.எப், கூறுவது உண்மையிலேயே ஒரு ஏமாற்று மோசடியும், சமூக சனநாயக பாணி தேர்தல் வித்தையும் ஆகும்.

கடுமையான நெருக்கடியில் சிக்கிக் கொண்டிருக்கின்ற ரசிய சமுதாயத்தை விடுவிக்க இந்தத்திட்டம் முழுவதிலும் எந்தவொரு அம்சமுமே இல்லை. சமூகநல அரசு என்ற காலத் திற்கு முரண்பாடான கருத்தானது, இன்றைய தேசிய—சர்வதேசிய சூழ்நிலைகளுக்கு ஏற்றதொரு திட்டத்தை தொழிலாளிவர்க்கம் ஆராய்ந்து பார்ப்பதிலிருந்தும், முன்னெடுப்பதிலிருந்தும் தடுக் கும் ஒரு சாதனமாகும். நல்வாழ்வு அரசு என்கிற கருத்தானது, எல்லாவற்றையும் கொள்கை இலக்காகக் குறைத்து விடுவதற்கும், தன்னுடைய வர்க்க நலன்களை உறுதி செய்யக்கூடிய புரட்சிகரத் திட்டத்தை, எப்போதுமே முன்வைக்காமல் இருக்கும்படியுமான வலையில் தொழிலாளிவர்க்கத்தை சிக்கவைக்கும். சி.பி.ஆர். எப். இன், இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால், ரசியக் கூட்டரசு, ஒரு வல்லரசாக இருப்பதோடு மட்டுமில்லாமல் அதனுடைய சொந்த இலாபங்கருதி மற்ற எல்லா ஏகாதிபத்திய அரசுகளோடும் போட்டியிடுவதும் தொடரும். இதுவேதான் போரிஸ் எல்ஸ்டினு டைய அரசின் முக்கிய உள்ளடக்கமும் ஆகும். முதலாளித்துவ எல்ஸ்டினுக்கும், கம்யூனிஸ்ட் ஜகனேவுக்குமிடையே அடிப்படை யில் அந்த வித்தியாசமும் இருப்பதாகத் தெரியவில்லை.

முதலாளித்துவம் தனது இறுதிக்கட்டமான ஏகாதிபத் தியமாக வளர்ச்சி பெற்ற நிலையில் ஐரோப்பாவின் முதலாளித் துவ தேசிய அரசைப் பாதுகாக்கவும், அந்த தேசிய அரசின் முதலாளித்துவத்தை உலகளவில் விரிவடையச் செய்யவும் சமூக சனநாயகம் தோன்றியது. முதலாளித்துவம், ஏகாதிபத்தியம்

என்ற தனது கடைசிக்கட்டத்தை அடைந்துவிட்ட இந்த நேரத்தில், பாட்டாளிவர்க்கப் புரட்சியை நடத்துவதும், பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை உருவாக்குவதுமான இந்த இருபதாம் நூற்றாண்டின் சவாலிலிருந்து சமூக சனநாயகம் பின்வாங்கி விட்டது. சி.பி.ஆர்.எப்–ம் கூட அதையே தான் செய்திருக்கிறது. அது மீண்டுமொரு பாட்டாளிவர்க்கப் புரட்சியை நடத்துவது மற்றும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் என்ற சவாலிலிருந்து பின்வாங்கி, ரசிய சமூகநல அரசு மற்றும் ரசிய ஏகாதி பத்தியத்தின் ஒரு கட்சியாக மாறிவிட்டது.

சமூக சனநாயகமானது, ஆங்கிலேய காலனியாதிக்க காலத்தில் இந்தியாவிற்குக் கொண்டுவரப்பட்டது. இந்திய தேசிய காங்கிரசுதான் இந்தியாவின் முதல் சமூக சனநாயகக் கட்சியாகும். அது சமூகப்புரட்சி இல்லாமல் சுதந்திரம் என்ற திட்டத்தைக் கொண்டிருந்தது. பொருளாதார மற்றும் அரசியல மைப்பில் எந்தவிதமான மாற்றத்தையும் செய்யாமல், அது இந்திய துணைக் கண்டத்தை ஆளும் உரிமையை விரும்பியது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஐம்பதாம் ஆண்டுகளின் இறுதியில் எழுப்பிய இந்தியாவிற்கு "முதலாளித்துவ மற்ற வளர்ச்சி" என்ற முழக்கமும் கூட, அன்று இந்தியாவில் நிலவிய நேருவின் 'சோசலிசபாணி சமுதாயம்' என்ற வடிவத்திலிருந்த சமூக சனநாயகத்திற்கு அடிவருடுவதும் கண்துடைப்பு விளக்கமு மேயாகும். காலனிய அமைப்பைக் காப்பதில் பயனடைந்த சில வர்க்கங்களை காலனிய ஆதிக்கர்கள் உருவாக்கினார்கள். அந்தச் சூழ்நிலையில் எழுந்த பல்வேறு சோசலிசக் குழுக்களில் சமூக சனநாயகம் எப்போதுமே ஆதரவாளர்களைக் கண்டது. இந்த நேரத்தில் இந்தியாவில் அப்படிப்பட்ட நிலைமைதான் இருக்கிறது.

உலகில் பலநாடுகளிலும் இப்போது பரவியிருக்கும் இந்த சமூக சனநாயகம் என்ற அரசியல் கொள்கையின் திட்டவட்ட மான நோக்கம் என்ன? எல்லா நாட்டுத் தொழிலாளர்களும், தத்தம் நாடுகளில் உள்ள சூழ்நிலைமைகளை ஆராய்ந்து, அவரவருக்கான தத்துவங்களை வகுத்துக் கொண்டு, அவர் களுக்கென சொந்த பொருளாதார, அரசியல் கோட்பாடுகளை வரையறுத்துக் கொண்டு, அவர்களுக்கேற்ற அரசு அமைப்பை உருவாக்கிக்கொண்டு, அவர்களுடைய பொருளாதாரம் மற்றும் கலாச்சார திசையையும் உறுதிப்படுத்திக் கொண்டு முன்னேறி

விடாமல் தடுப்பதற்கேயாகும். தேசியம் என்ற கேள்வியில் சமூக சனநாயகம் மிகவும் தீங்கு விளைவிப்பதாகும். தேசியத்தின் மாபெரும் பாதுகாப்பாளன் என்றும் போராட்டவீரன் என்றும் தன்னை எப்போதும் விளம்பரப்படுத்திக் கொள்ளும் இது, தேசியம் என்ற கொடியை சாக்கடையில் தூக்கி எறிந்து விட்டதுடன், தன்னுடைய செயல்களை "தேசிய ஒற்றுமை மற்றும் பிரதேச ஒருமைப்பாடு'' என்ற பெயரில் நியாயப்படுத்தி வருகிறது.

உடமைவர்க்கம் தனது அணிகளுக்கு இடைப்பட்ட முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்கு சமூக சனநாயகம் என்ற கொள்கையை மிகவும் விரும்புகிறது. உடமைவர்க்கம், ஒருபக்கம் அரசுத்துறை மற்றும் நாட்டு வளங்களைத் தங்களுக்குத் தாராளமாகப் பரிமாறிக்கொள்ளவும், மற்றொரு பக்கம் பாட்டாளிவர்க்கப் போராட்டத்தையும், மக்களின் விடுதலைப் போராட்டங்களையும் ஒவ்வொரு நாட்டிலும், மற்றும் சர்வதேசிய அளவிலும், சமரசம் செய்யவும் சமூக சனநாயகத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். உடமை வர்க்கம் விரும்பிய விளைவுகளை சமூக சனநாயகம் தரத்தவறும் போது, அவர்கள் பாசிசத்தைக் கடைப்பிடித்த போதிலும், இருபதாம் நூற்றாண்டு முழுவதும் சமூக சனநாயகமே உலகெங்கும் உடமைவர்க்கத்தின் மிகவும் விரும்பப்பட்ட கொள்கையாக இருந்து வந்திருக்கிறது.

தாராளமயமாக்கம் மற்றும் "சுதந்திர சந்தைப்" பொருளாதாரம் என்ற வடிவில் இன்று தாராளமனப் பான்மையை ஆதரிப்பதாக உலக முதலாளிவர்க்கம் கூறிவருகிறது. ஆனால் கட்டுப்பாடற்ற சனநாயகம் என்ற அரசியல் கோட்பாடு, ஏகபோக கட்டத்திற்கு முந்தைய நிலையில் முதலாளித்துவம் இருந்தபோது – பத்தொன்பதாம் நூற்றாண்டின் அரசியல் கட்டுப்பாடற்ற வாணிக (Laissez-Faire) முதலாளித்துவ நிலைமைகளுக்கு உகந்ததாகும். அதற்குப் பின் முதலாளித்துவம் தனது கடைசி கட்டமான ஏகாதிபத்திய கட்டத்தை அடைந்து வெகுகாலமாகிறது. இந்த ஏகாதிபத்தியக் கட்டத்தில், ஏகபோகங்களின் பொருளாதார சக்தி அரசின் அரசியல் சக்தியுடன் இணைந்து இருக்கிறது. உலக ஆதிக்கத்திற்காக ஏகபோக குழுக்களுக்கு இடையிலும், ஏகாதிபத்திய சக்திகளுக்கு இடையிலுமான கடுமையான போட்டி தினசரி நிகழ்ச்சியாகிவிட்டது.

சுதந்திரமான போட்டிக்கு ஏகாதிபத்தியம் வழிவகுக்கும்

என்பதற்கு எந்தவிதமான சாத்தியக்கூறுகளுமில்லை. மூலதனம் மேலும் ஒரு சில கைகளில் குவிவதற்கும், ஏகபோகங்களுக்கு இடையிலான போட்டி மேலும் தீவிரமடைவதற்கும், ஏகாதிபத்தியம் வழிவகுக்கிறது. ஆதிக்கம் செலுத்துவதற்காக கடும் முயற்சி என்று இதற்குப் பொருள். இது, ஏகாதிபத்திய சக்திகளுக்கும் ஏகபோக குழுக்களுக்கு இடையிலும், ஏகாதிபத்தியத்திற்கும் விடுதலைக்காகப் போராடுகின்ற உலக மக்களுக்கு இடையிலும், மூலதனத்திற்கும் உழைப்புக்கு இடையிலும், 1917–ல் மாபெரும் அக்டோபர் புரட்சியின் வெற்றியிலிருந்து முதலாளித்துவத்திற்கும் சோசலிசத்திற்கு இடையிலும் உள்ள முரண்பாடுகளை கூர்மைப்படுத்துவதற்கு வழிவகுத்துள்ளது. இது ஏற்கனவே ஏகாதிபத்தியங்களுக்கிடையே இரண்டு உலகப் போர்களுக்கும், பல ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புப் போர்களுக்கும், தலையீடுகளுக்கும், ஆட்சிக் கவிழ்ப்புகளுக்கும், பாசிச சர்வாதிகாரங்களுக்கும் வழிவகுத்துள்ளது. இன்றைய நிலைமைகளில் தாராளமயப் படுத்துவது என்பது, சமூக சனநாயகத்தை தனக்குப் பிடித்தக் கொள்கையாகக் கொண்ட ஏகபோக உடமைவர்க்கத்தின் கட்டுப்பாடற்ற கொள்ளைக்கும், ஆதிக்கத்திற்கும் கொடுக்கப்பட்ட ஒரு மறைப்புப் பெயராகும்.

இந்தியாவில் இந்த நேரத்தில் சமூக ஜனநாயகம் பழைய வழிமுறைகளில் இனியும் வேலை செய்யமுடியவில்லை. இது அதிகரித்து வருகின்ற அரசு பயங்கரவாதத்திலும், மற்றவகை வன்முறைகளிலும் பிரதிபலிக்கிறது. ஐரோப்பிய தேசிய அரசு தோன்றிய காலத்தில் முதலாளிவர்க்கம் உருவாக்கிய பொருளாதார, சமூக மற்றும் அரசியல் அமைப்பும், கோட்பாடுகளும், இருபதாம் நூற்றாண்டு முடியும் தருவாயிலுள்ள இன்றைய நிலைமைகளுக்குப் பொறுத்தமானதாக இல்லை. சமுதாய முன்னேற்றத்திற்கான பாதையைத் திறந்து விடுவதற்கு மாறாக, இந்த அமைப்பு பெரும் தடைக்கல்லாக ஆகிவிட்டது.

முதலாளிவர்க்கமானது முற்றிலும் பட்டுப்போன, பயனற்ற ஒரு வர்க்கம் என்பதும், சமுதாயத்தின் உயிரான இரத்தத்தை உறிஞ்சி அதையே அழித்துக் கொண்டிருக்கும் ஒரு ஒட்டுண்ணியென்பதும், மேலும் மேலும் தெளிவாக வெளிப்பட்டு வருகிறது. சுதந்திரச் சந்தைப் பொருளாதாரம் என்பது வரையறையற்ற ஆதிக்கம் செலுத்தவும், கொள்ளையடிப்பதற்கும், ஏகபோகங்களுக்கும், ஏகாதிபத்திய சக்திகளுக்கும் இடைப்பட்ட

கட்டுப்பாடற்ற போட்டிக்கு இன்னொரு பெயராகும். ஏகபோகங்களின் இலாபத்தை மேலும் அதிகரிக்கவும், ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கத்தை மேலும் உறுதிப்படுத்தவும், தேசிய அரசு உட்பட எல்லாத் தடைகளையும் நீக்க வேண்டுமென்று கேட்பதாகும். சோவியத்யூனியனும், கிழக்கு ஐரோப்பாவின் முன்னாள் மக்கள் சனநாயக நாடுகளும் வீழ்ந்ததில், உலகச் சந்தைகளெல்லாம் ஏகபோக முதலாளிகளும், உலக ஏகாதிபத்தியங்களும் தம் கைவசப்படுத்த கிடக்கின்றன. உலகமெங்கும் ஆதிக்கம் செலுத்துவதற்காக இவர்களிடையே கடுமையான போட்டா போட்டியும் நிலவுகின்றது. இந்தச் சூழ்நிலைகளில் பயங்கரவாதமும், வன்முறையும், உழைக்கும் மக்களின் எதிர்ப்பையும் கிளர்ச்சியையும் நசுக்குவதற்காக மட்டுமின்றி தங்கள் அணிகளுக்கு இடைப்பட்ட முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்ளவும், ஏகாதிபத்தியம் மற்றும் உலக பிற்போக்கின் முக்கிய கருவிகளாகிவிட்டன.

இந்தச் சூழ்நிலைமை, தொழிலாளிவர்க்கத்தை அது தன்னையும் தன்னோடு சேர்ந்து சமுதாயத்தில் உள்ள அனைவரையும் விடுதலை செய்வது என்ற தனது கொள்கையிலிருந்து திசைதிருப்புமாறு சமூக சனநாயகத்தின் மீது அதிக அழுத்தத்தை உருவாக்கி இருக்கிறது. எல்லா தீவிர நிலைகளுக்கும் தன்னை ஒரு மாற்றாக வெளிப்படையாகவே கூறிக் கொள்வதன் மூலம் சமூக சனநாயகம் இந்த நோக்கத்தை நிறைவேற்ற முயற்சிக்கிறது. இப்படிப்பட்ட மாயை உலகத்தொழிலாளி வர்க்கத்திற்கும், கம்யூனிச இயக்கத்திற்கும் பெரும் பாதிப்பை உருவாக்குகிறது. ஏனெனில் இறுதி ஆய்வில் போராட்டமானது முதலாளி வர்க்கத்தின் இடது மற்றும் வலது பிரிவு என்று அழைக்கப்படுகின்ற இரண்டு முதலாளித்துவ முகாம்களுக்கு இடையில் அல்ல. மாறாக அது சுரண்டுவோர்களுக்கும் சுரண்டப்படுவோர்களுக்கும், உடமை வர்க்கத்திற்கும் தொழிலாளி வர்க்கத்திற்கும் இடையிலாகும்.

புரட்சிகர சக்திகளைக் கலைப்பதற்கு உடமைவர்க்கம், வாக்குச்சீட்டு மற்றும் வெடிகுண்டு முறையை நவீனப்படுத்தியிருக்கிறார்கள். சமூக சனநாயகம் வாக்குச்சீட்டு முறையைப் பெரிதும் பயன்படுத்துகிறது. ஆனால் அது மிகவும் நம்பிக்கையிழந்த நிலையில் இருக்கும்போது வெறி கொண்ட நிலையில் வெடிகுண்டைப் பயன்படுத்தவும் தயங்குவதில்லை. காங்கிரசு கட்சி மற்றும் பிறருடைய நடவடிக்கைகளிலிருந்து நாம் காண்பது

போலவே, உடமை வர்க்கம் அரசு பயங்கரவாதம் மற்றும் தனிமனித பயங்கரவாதச் செயல்கள் இரண்டையுமே பயன் படுத்துகிறது.

இந்தியாவின் சூழ்நிலைமைகளில் பாராளுமன்றப் போராட்டமும், அரசின் ஆயுதம் தாங்கிய வன்முறையும், முதலாளிவர்க்க ஆட்சி மற்றும் கொள்கையின் வெளிப்பாடு களாகும். அது கோட்பாடு மற்றும் அரசியல் கொள்கை பற்றிய பரந்த கேள்விகளையும், தத்துவார்த்தப் போராட்டம் மற்றும் அரசியல் திட்டம் பற்றியும், புரட்சியைக் கொண்டு வருவதற்கான நடைமுறை வேலைகள் ஆகியவற்றிலிருந்து கம்யூனிஸ்ட்டுகள் மற்றும் புரட்சிகர சக்திகளின் கவனத்தை திசைதிருப்பும் நோக்கம் கொண்ட கொள்கையுமாகும்.

# பாகம் 3

# இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சியும், கருத்தியல் மற்றும் விவாதப் போராட்டமும்:

தோழர்களே, இந்தியத் தொழிலாளிவர்க்கமும் உழைப் பாளிகளும், சோசலிசமும் கம்யூனிசமும் இந்திய மண்ணிலே அமைக்கப்படும் என்றும் அவர்கள் விடுதலை பெறுவார்கள் என்றும் வெகுவாக எதிர்பார்த்திருந்தனர். இந்த நம்பிக்கையும், எதிர்பார்ப்பும் மறைந்துவிடவில்லை. உலகளவிலே புரட்சி யானது பின்னடைவுக்குள்ளான போதிலும், சோவியத் யூனியன் உடைந்து நொறுங்கிய போதிலும், முன்னர் மக்கள் சனநாயகம் என்றும் சோசலிஸ்டு என்றும் தங்களை அழைத்துவந்த நாடுகளில் அதிகாரமாற்றங்கள் நடந்திருந்த போதிலும், கம்யூனிசம் முடிந்து விட்டது தோற்றுவிட்டது என்று உலக முதலாளிவர்க்கமும், பிற்போக்கும் நடத்திய எல்லாபிரச்சாரங்க ளுக்கிடையிலும், இந்தியத் தொழிலாளிவர்க்கத்தின், உழைக்கும் மக்களின் விழிப்புணர்வு கம்யூனிசத்திற்கு ஒரு உயர்ந்த இடத்தைத் தொடர்ந்து கொடுத்து வருகிறது. பரந்துபட்ட மக்களிடையே பலர் எந்த ஒரு கம்யூனிஸ்ட்டு கட்சியின் கீழும் ஒழுங்கமைக்கப்படாதிருப்பினும், தங்களை கம்யூனிஸ்ட்டுகள் என்று அழைத்துக் கொள்வது அரிய நிகழ்ச்சியல்ல. உடமை வர்க்கத்தில் சிலரும் கூட ஒரு வகையான சோசலிசத்தை விரும்புபவர்கள் உள்ளனர்.

வருந்தத்தக்க வகையிலே, இந்தியாவின் தொழிலாளி வர்க்கத்திற்கும், உழைக்கும் மக்களுக்கும் விடுதலை கிடைக்கா மல் அவர்களை ஏமாற்றிவருகிறது. உடமைவர்க்கங்கள் அவர்க ளின் கை–கால்களை முதலாளிவர்க்கத்தோடும், நிலப்பிரபுத் துவத்தின் மிச்சங்களோடும் கட்டிப் போட்டிருப்பதால் இவ்வாறு நிகழ்ந்து வருகிறது. மிகவும் முக்கியமாக, கம்யூனிச மற்றும் தொழிலாளர்களுடைய இயக்கம் சமூக சனநாயகத்தால் பலவீனப் பட்டிருக்கிறது. உண்மையில் ஐரோப்பிய சமூக சனநாயகமானது சோசலிசம் மற்றும் கம்யூனிசம் என்ற வண்ணங்களில் இந்தியா வில் உலா வருகிறது. காலனியாதிக்கமும், ஏகாதிபத்தியமும்

உருவாக்கிய உடமை வர்க்கங்களின் பேராசையின் நஞ்சு கொண்ட நகங்கள், விடுதலைக்கான தொழிலாளிவர்க்க இயக்கத்தின் வளமான உடலில் ஆழமாகப் புதைந்து, உண்மையான சோசலிசமும், கம்யூனிசமும் சமூக சனநாயகத்திற்கு அடிபணிய வேண்டுமெனக் கோருகின்றன. சமூக சனநாயகத்துடன் சமரசம் செய்துள்ளவர்கள், தொழிலாளர்களை அவர்களுடைய நோக்கங்களில் வெற்றி காண்பதிலிருந்து திசை திருப்புகிறார்கள். மிகவும் முக்கியமாக அவர்களுடைய சூழ்நிலைகளிலிருந்து வெளிப்பட்டதாகவும், அவர்களுடைய உணர்வோடு ஒன்றியதாகவும், அவர்களுடைய வர்க்கப் போராட்டத்தில் பயன்படுத்தக் கூடியதாகவும் இருக்கக்கூடிய ஒரு தத்துவமும், கோட்பாடும் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டிருக்கிறது.

இந்தச் சூழ்நிலைமையிலே, சி.ஜி.பி.ஐ. கட்சியானது கருத்து மற்றும் விவாதப் போராட்டத்தை நடத்தவும், தொழிலாளி வர்க்க நோக்கங்களைப் பாதுகாக்கவும் வேண்டியிருக்கிறது. இந்த வேலையின் மூலம், எந்த கம்யூனிஸ்ட்டும், அல்லது கம்யூனிச அமைப்பும், இ. காங்கிரசு பற்றியோ வேறு எந்த சமூக சனநாயக அமைப்பு பற்றியோ எந்த மாயையும் கொண்டிருக்கக் கூடாது என்ற நிலைக்கு எல்லா கம்யூனிஸ்ட்டுகளையும் வென்றெடுத்தாக வேண்டும். சமுதாயத்தை நெருக்கடியிலிருந்து விடுவிப்பதற்கான செயல் திட்டத்தை ஆதரித்து நாம் மிகவும் வீரமுடன் கருத்தியல் மற்றும் விவாதப் போராட்டத்தை நடத்த வேண்டும்.

பொதுவாக இந்தியா சிறு உடமை ஆதிக்கம் கொண்டுள்ள, விவசாய சமுதாயமாகும்.. இந்த மண்ணிலே உடமை வர்க்கங்கள் தொழிற்குடும்பங்களும், முதலாளித்துவ நிலபுரபுக்களும் உருவாக்கப்பட்டிருக்கிறார்கள். காலனிய தனிச் சலுகைகளும், நிலபிரபுத்துவ உடமைகளும் இன்னமும் இருக்கின்றன. மக்கள் தொகையில் 70%க்கும் அதிகமானவர்கள் விவசாய–தொழிற்துறை பொருளாதாரம் கொண்ட கிராமப்புறங்களில் இன்னமும் வசித்து வருகிறார்கள். முதலாளித்துவ உற்பத்தி உறவு முறைகள் நகரத்திலும், கிராமப்புறங்களிலும் ஆதிக்கம் கொண்டுள்ளது. சிறு உடமையே, நில உடமையில் முக்கிய வடிவமாக இன்னமும் இருந்து வருகிறது. இது வாழ்க்கைப் பிழைப்புக்கான தனிஉடமையோடு கலந்து குழம்பியும் உள்ளது. இருந்தபோதிலும் ஆங்கில காலனியாதிக்கம் தோற்றுவித்த வர்க்கங்களின் உடமைகள் தாம் வளர்ந்து வருகிறது.

இந்த நிலைமைகளில் சோசலிசமும், கம்யூனிசமும் வளரப் போகும் இந்த மண்ணைக் கைப்பற்ற வேண்டியது அவசியமாகும். தத்துவார்த்தத்துறையில் நிலவும் அகன்ற இடைவெளியை, மிகத் தீவிரமான கருத்தியல் போராட்டத்தின் மூலம் கம்யூனிசத்திற்கு நிரப்ப வாய்ப்புகள் உள்ளன. இந்தியா விலும், சர்வதேச அளவிலும் கம்யூனிஸ்ட்டுகளின் ஒற்றுமையை மீட்டளிப்பதில் கடுமையான கருத்துப் போராட்டம் மூலம் நிரப்ப வேண்டிய இடைவெளி இருக்கிறது. இந்த நவீன காலத்திற்கு எந்த வகையான கட்சி தேவைப்படுகிறது என்பதை விளக்கிப் பாதுகாப்பதின் வாயிலாக அரசியல் செயல்வீரர்களை வெற்றி கொள்ளவும் வாய்ப்பு உள்ளது. இந்த வேலைகள் மூலமாகவே சோசலிசமும், கம்யூனிசமும் இந்திய மண்ணிலே தழைக்கும். இந்திய தொழிலாளிவர்க்கம் மற்றும் உழைக்கும் மக்களின் விடுதலைத் தத்துவம் ஒரு வடிவம் பெறத் துவங்குவதிலும், சமுதாயத்தை நெருக்கடியிலிருந்து விடுவிக்கும் திட்டத்தின் கீழ் மக்களின் அரசியல் ஒற்றுமை உருவாகத்துவங்குவதிலும், இது மேலும் வளர்ச்சி பெறும். சுருக்கமாகக் கூறினால், ஆழமான புரட்சிகர மாற்றங்களுக்கான இடைவெளியை கம்யூனிசம் நிரப்பவேண்டும்.

1925ல் இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சியின் ஸ்தாபன அறிக்கை, சமூக சனநாயகத்திலிருந்து முற்றிலும் விடுபட்டதாக இல்லை. மாறாக, இந்திய தேசிய காங்கிரசு மீது சி.பி.ஐய், யின் அணுகுமுறை பிரதிபலிப்பது போலவே, சமூக சனநாயகத்தோடு சமரசம் செய்யும் போக்கு இருந்தது. இன்று இருப்பது போலவே, அன்றும் ஐரோப்பிய சமூக சனநாயகத்தின் முக்கிய வெளிப் பாடாக இந்தியாவில் இந்திய தேசிய காங்கிரசு இருந்தது. முக்கியக் கருத்தானது, 1925ல் இந்திய உழைக்கும் வர்க்கத்தின் முன்னணிப்படை உருவாக்கத்தின் போது என்ன நடந்தது என்பதல்ல. இந்த நேரத்திலும் அது இன்னும் பிரச்சினையாக இருக்கிறது என்பதே முக்கியமானதாகும். மேலும் அதன் முக்கியத் துவமானது 1920களில் ஆசியாவில் புரட்சிகர இயக்கத்தின் முக்கிய உட்பொருள் காலனியாதிக்கத்திற்கு எதிரானதாக இருந்தது என்பதும், அது இன்று முதலாளித்துவத்தை எதிர்த்த போராட்டமாக எழுகின்ற – காலனிய பாரம்பரியத்தை ஒழித்துக் கட்டும் உள்ளடக்கம் போன்றதே என்பதாகும். 1925ல் கருத்தியல் மற்றும் விவாதப் போராட்டங்கள் இந்திய நிலைமைகளுக்கு

ஏற்றவண்ணம் தொடங்கவில்லை. அதற்கு மாறாக, வேறு எங்கோ எழுந்த போராட்டமானது, செயற்கையான முறையில் இந்தியா விலும் போராடப்பட்டது. அந்த நேரத்தில் காலனி ஆதிக்கத்திற்கு எதிரான போராட்டம் தீவிரமாக நடந்து கொண்டிருந்தது. கருத்தியல் மற்றும் விவாதப் போராட்டத் தேவையும், போராடி ஒரு நேர்மையான முடிவுக்குக் கொண்டு செல்ல வேண்டிய தேவையும் வெகுவாக எழுந்திருந்தது. இது சோசலிசம் மற்றும் கம்யூனிசத் தின் வெற்றிக்கு அறைகூவலிட்டது. ஆனால் கருத்தியல் மற்றும் விவாதப் போராட்டமோ துவங்கவேயில்லை. ஆங்கில காலனியா திக்கம் உருவாக்கிய அமைப்பிலிருந்து வெளிப்பட்ட உடமை வர்க்கங்கள், சோசலிசம் மற்றும் கம்யூனிச வெற்றிக்கான போராட்டத்திலிருந்து வேறுபட்டதும், தனிப்பட்டதுமான காலனி எதிர்ப்புப் புரட்சியைக் கொண்டு வருவார்கள் என்ற மாயை உருவாக்கப்பட்டது.

சுதந்திரத்திற்கான இயக்கம் பழைய ஐரோப்பிய பாணி கருத்திலும், அமெரிக்க சுரந்திரப்போரின் ஒரு பதிப்பாகவும் கருதப்பட்டதேயன்றி, இந்தியத் துணைக் கண்டத்தின் தொழி லாளிவர்க்கம் மற்றும் உழைப்பாளிகளின் விடுதலைக்கான இயக்கம் ஈன்றெடுக்கும் சமூகப் புரட்சியாக அல்ல. இந்திய முதலாளிவர்க்கம் காலனிய எதிர்ப்புப் போராட்டத்தை, சோசலிசம் – கம்யூனிசத்திற்கான போராட்டத்திற்கு, எதிராக தந்திரமாகப் பயன்படுத்தினர். காலனிய எதிர்ப்புப் போராட்ட மானது சோசலிசம் – கம்யூனிசத்திற்கான போராட்டமாக வளர்ச்சி பெறுவதற்கு பதிலாக, அது கம்யூனிசம் மற்றும் தொழிலாளர் இயக்கத்தைத் தடுப்பதற்கு பயன்படுத்தப்பட்டது. இன்றுகூட அதுதான் நடந்து வருகிறது. "வகுப்புவாத அபாயத்தை" எதிர்த்த போராட்டம் என்ற பெயரில், தொழிலாளிவர்க்க நோக்கங்கள் என்றென்றைக்கும் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

கம்யூனிசம் மற்றும் தொழிலாளர் இயக்கத்தின் 70 ஆண்டு கால வரலாறு முழுவதும், கம்யூனிச கருத்தியல் மற்றும் விவாதப் போராட்ட வேலையின்றி தொழிலாளிவர்க்கத்தின் தனிப்பட்ட பங்கினை வளர்க்க முடியாது என்று காட்டியிருக்கிறது. தீவிர கருத்தியல் மற்றும் விவாதப் போராட்டமில்லாமல், இயக்கத்தினுடைய எதிரிகள் யார் என்பதை உறுதியான அடிப்படையில் தெரிந்து கொள்வதும், இயக்கம் எங்கிருக்கிறது என்பதையும், நில உடமை கேள்வியே

சனநாயகப் புரட்சியின் முக்கிய உள்ளடக்கமாக உள்ளது என்பதை விளக்கவும்கூட இன்றும் இயலாமலிருக்கிறது.

கடந்த எழுபதாண்டு படிப்பினைகளை இந்திய கம்யூனிஸ்ட்டுகள் புறக்கணிக்க முடியாது. மாபெரும் அக்டோபர் புரட்சிப்பாதை இன்னமும் பொறுத்தமுள்ளதாகும். முதலாளித் துவம் தொடர்ந்து மிக வேகமாக வளர்ச்சி பெற்று வருவதால், தொழிலாளிவர்க்க எண்ணிக்கையும் சீராக உயர்ந்து வருகிறது. குறிப்பாக, இது கிராமப்புறங்களில் கோடிக்கணக்கானவரை குறைந்த வயதில் சுடுகாட்டிற்கும், அல்லது நகரங்களுக்கோ அல்லது குடியேற்றத் தொழிலாளர்களாக மற்ற நாடுகளுக்கோ அனுப்பிக் கொண்டிருக்கிறது. கருத்தியல் மற்றும் விவாதப் போராட்ட முழுவேலையும், புரட்சியின் முக்கிய பணிகளின் சூழலில் அமைக்கப்பட வில்லையென்றால், அது முதலாளித் துவம் தான் முக்கிய குற்றவாளி என்பதிலிருந்து கவனத்தைத் திசைதிருப்பும். மேலும் இது இன்றைய நிலைமைகளால் பாதிக்கப்பட்டுள்ள எல்லா வர்க்கங்களையும், பகுதியினரையும் திரட்டுவதிலிருந்தும் கவனத்தைத் திசைதிருப்பும்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை இந்த முட்டுப்பாதையில் 1947ல் மட்டுமல்ல, மீண்டும் 1964 லிலும் 1975 இலும், மிகவும் முக்கியமாக இந்த நேரத்திலும், கொண்டு செல்வதற்குக் காரணமான கருத்தியலும், கோட்பாடும் என்ன என்பதை உறுதி செய்வது முக்கியமல்ல. "எங்கு செல்கிறது இந்தியா?" என்ற கேள்வியையொட்டி கம்யூனிச மற்றும் தொழிலாளர்களின் இயக்கப் பாதையைத் தீர்மானிப்பதில் கருத்தியல் மற்றும் விவாதப் போராட்டமானது முக்கியமாகும். இந்தப் போராட்ட மானது கம்யூனிஸ்ட்டுகள், பல்வேறு கட்சிகளாகவும், குழுக்களா கவும் பிரிந்து கிடைப்பதை எதிர்க்கின்ற அதே நேரத்தில், இன்றைய நிலைமைகளில் இந்த இயக்கத்தையும், அதனுடைய முன்னேற்றப் பாதையையும் பாதுகாக்கும்.

முன்னர் நாம் குறிப்பிட்டது போலவே, கருத்தியல் மற்றும் விவாதப் போராட்டத்தின் முக்கிய உள்ளடக்கமானது, சமூக சனநாயகத்தோடு சமரசம் செய்யும் அனைவரையும் எதிர்ப்பதும், தற்கால மார்க்சிச–லெனினிச சிந்தனையைப் பாதுகாப்பது மாகும். கருத்தியல் மற்றும் விவாத வட்டமானது வர்க்கப் போராட்ட எல்லைக்கு அப்பாற்பட்டிருந்தால், நாம் இந்த வேலையில் வெற்றி காண முடியாது. இதைத்தான் சமூக

சனநாயகம் கோரியும் செய்தும் வருகிறது. இந்த அடிப்படையில் வேலை செய்வதன்மூலம், சமூக சனநாயகத்துடன் சமரசம் செய்பவர் மற்றும் மார்க்சிசம்–லெனினிசத்தை உயிரற்ற வரட்டுத் தத்துவமாக மாற்றுபவர் அனைவரையும் வேறுபடுத்திக்காட்டு வதன் மூலம், இந்தப் பணியில் வெற்றிகிட்டும். மார்க்சிசம்-லெனினிசத்தின் புரட்சிகர முடிவுகளை மறுப்பதன் மூலம் சமரசவாதிகள் இதைச் செய்கிறார்கள். அவர்கள் வெளிப்பட்டு வரும் நிகழ்வுப் போக்குகளுக்கொப்ப மார்க்சிசம்–லெனினி சத்தை உண்மையில் வளர்க்கப்பட வேண்டும் என்பதையும், பனிப்போர் முடிவடைந்ததிலிருந்து இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க இடைவெளிக்காலம் முழுவதும் அது வளர்ச்சி பெற்றிருக்கிறது என்பதையும், மறுப்பதன் மூலம் இதைச் செய்து வருகிறார்கள். கருத்தியல் மற்றும் விவாதப் போராட்டம் நண்பரிடமிருந்து எதிரியை தொடர்ச்சியாக வேறுபடுத்திக் காட்டும் ஒரு உயிர்த்துடிப்பான சக்தியாகும். அது தொழிலாளி வர்க்கத்தையும் மக்களையும் ஒன்றாக இணைக்கும் சக்தியாகும். இது கம்யூனிசம் மற்றும் தொழிலாளருடைய இயக்க அனுபவத்தி லிருந்து வெளிப்படுவதால், இந்தப் பணியானது புரட்சிகர இயக்கத்தோடு ஒன்றுபட்டதும் முக்கியமானதும் ஆகும்.

சோசலிசமும், கம்யூனிசமும் இந்தியாவிற்கு வெளியி லிருந்து கொண்டுவரப்பட்டது. ஒரு வகையில் பார்க்கப்போனால் சமூக சனநாயகத்துடன் - இந்தியாவில் தோன்றியதைப் போல முழுவதுமாக முறித்துக் கொண்டு வரவில்லை. இந்த நேரத்தில் இந்தியாவில் நிலவுகின்ற கம்யூனிசமானது, கம்யூனிச சமுதாயம் உருவாக்குவதற்கான தொழிலாளிவர்க்க – உழைக்கும் மக்களுடைய இயக்கம் என்பதைக் காட்டிலும் ஒரு கொள்கை இலக்காகவே தெரிகிறது. ஆங்கிலேய காலனியர்கள் விதைத்த முதலாளித்துவ அமைப்பு விரைவான வளர்ச்சி பெற்று சாவையும், பேரழிவையும் சொரிந்துகொண்டு வருகையில் சோசலிசமும், கம்யூனிசமும் எதிர்பார்த்த அளவு முன்னேற்ற மடையவில்லை. தொழிலாளிவர்க்க – உழைக்கும் மக்கள் இயக்கம் முதலாளிவர்க்கத்தையும், முதலாளித்துவ அமைப்பை யும் போராடிக் கொண்டும், அதைத்தூக்கி எறிவதற்கான நிலைமைகளை உருவாக்கிக் கொண்டும் இருப்பதற்கு மாறாக, சோசலிசமும் கம்யூனிசமும் இந்தியாவில் சரியான நேரத்திற்காக காத்துக் கொண்டிருக்கிறது. நவீன சமுதாயத்தில் எல்லா

தொழில் நுட்ப அறிவியல் சாதனைகள் இருந்துங்கூட, முதலாளித்துவ அமைப்பின் கொடுமைகள் இதுவரைக் கண்டி ராத அளவிற்கு வளர்ந்துள்ளன. ஆனாலும் அதைத் தூக்கி எறிய ஒரு திட்டத்தை கம்யூனிச தொழிலாளர் இயக்கம் இன்னமும் முன்வைக்கவில்லை.

மக்களுடைய நல்வாழ்வை உறுதி செய்வது பற்றிய கேள்வியை முதலாளிவர்க்கம் ஒன்றன்பின் ஒன்றாக கொள்கை இலக்குகளை வெறுமனே அறிவிக்கும் வழக்கமாக வைத்திருக் கிறார்கள். ஐரோப்பிய சமூக சனநாயக சாயலில் எழுதப்பட்டுள்ள இந்திய அரசியல் சட்டத்தில் உள்ள வழிகாட்டும் கோட்பாடுகளில் (Directive Principles) இது தெளிவாகப் பிரதிபலிக்கிறது. சுதந்திர காலகட்டத்தில் மக்களுடைய முழு அரசியல் வாழ்க்கையும் ஆளப்பட்டுவந்த விதமும் இதையே வெளிப்படுத்துகிறது. உதாரணத்திற்கு அரசியல் சட்டம் பல்வேறு நல்ல கொள்கை களைக் கொண்டிருப்பதும், எனவே இந்திய அமைப்பு உலகிலேயே மிக முற்போக்கானதாகவும் சனநாயகமாகவும் தோன்றுவதும் அனைவரும் அறிந்ததே. இந்த நோக்கங்கள் 45 வருடங்களுக்கு முன்னர் அறிவிக்கப்பட்டன என்பதை மனதில் கொண்டு பார்க்கும்போது, இந்தியாவில் மகளிர் மீது சுரண்டல் இருக்க முடியாது என்றும், எந்தச்சாதிக் கொடுமைகளோ, குழந்தை உழைப்புச் சுரண்டலோ, கொத்தடிமைத் தொழிலாளர்க ளோ, ஒப்பந்தத் தொழிலாளர்களோ, படிப்பறிவின்மையோ, இவை போன்றனவும் இருக்க முடியாது என்று ஒருவரால் முடிவுக்கு வரமுடியுமா? எல்லாவகைச் சட்டங்களும், அரசியல் சட்ட விதிகளும் இருந்துங்கூட இந்தப் பிரச்சனைகளில் சிறிதுகூட முன்னேற்றம் ஏற்படவில்லை என்பதற்கும், மேலும் இவையாவும் உண்மையில் மோசமடைந்து வருகின்றன என்பதற்கும் முதலாளிவர்க்கம் என்னவிளக்கம் தருகிறார்கள்?

கிராமப்புறங்கள் விரைவான வேகத்தில் அழிந்து வருகின்றன - கோடிக்கணக்கான மக்களை நோய்நொடிகளிலும், ஊட்டக் குறைவினாலும், இளமையிலேயே சவக்குழிக்கு அனுப்பியும், மற்றும் கோடிக்கணக்கானவரை பிழைப்பைத் தேடி நகரங்களுக்கு ஓடவும், நச்சு இலைகள், வேர்கள், பருப்பு வகைகளை உண்டு உயிர்வாழும் நிலைக்கு கோடிக்கணக்கான வர்களை நிர்ப்பந்தித்தும், இரத்தம் உறிஞ்சும் ஒப்பந்தக்காரர்கள் – இடைத்தரகர்கள் இருப்புப்பிடியில் கொத்தடிமைத்

தொழிலாளர்களாக மிகுதியானவர்களைக் கட்டாயப்படுத்தியும், இளம் வயதிலேயே குழந்தைகளை கடுமையான, அபாயகரமான வேலைகளுக்குத் துரத்தியும் வருகிறார்கள். பெண்களும், சிறுமியரும் காட்டுமிராண்டித்தனமான நிலபுரபுத்துவ ஒடுக்கு முறைக்கும், பிராமணத்துவ மற்றும் மதச்சம்பிரதாய அடிப்படையிலான பாரபட்சங்களுக்கும் பலியாகிறார்கள். முதலாளித்துவத்தின் பலியாடுகளாகவும் அவர்கள் இருக்கிறார்கள். தலையை உயர்த்தி தாங்களும் மனிதர்களாக நடத்தப்படவேண்டுமெனக் கேட்டதற்காக தாழ்த்தப்பட்ட ஆடவரும், மகளிரும் தொடர்ச்சியாகவே சித்திரவதை செய்யப்பட்டும், அவமானப்படுத்தப்பட்டும் வருகிறார்கள்.

ஏழை பணக்காரர்களுக்கு இடைப்பட்ட இடைவெளியை ஒழிப்பது என்பது, இந்திய அரசின் முக்கிய கொள்கை இலக்குகளில் ஒன்றாக இருக்கிறது. ஆயினும் பணக்காரர்கள் மேலும் பணக்காரர்களாகவும், ஏழைமக்கள் மேலும் ஏழைகளாகவும் ஆகிக்கொண்டே வருகிறார்கள். எண்ணற்ற கொள்கை இலக்குகள் இருந்தும் கூட நிலைமை ஏன் இத்தனை வேகமாக மோசமடைந்து வருகிறது என்பதற்கு பதிலளிக்க வேண்டாமா? தொழிலாளிவர்க்க விடுதலைக்கு கம்யூனிசம் இன்றியமையாதது என்பதிலிருந்து அதை ஒரு கொள்கை இலக்காக மாற்றியிருக்கும் - சமூக சனநாயகத்தோடு சமரசம் செய்யும் இவர்களிடமிருந்து கம்யூனிஸ்ட்டுகள் முறித்துக் கொண்டு வரவேண்டாமா? காலனியாதிக்கர்கள் நிறுவிய இந்த அமைப்பை உடைத்தெறிவதன் மூலம் மக்கள் சனநாயகப் போராட்டத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவர கம்யூனிஸ்ட்டுகள் ஒருவழியை உருவாக்க வேண்டாமா?

இ.காங்கிரசு மூலம் உடமைவர்க்கம், "சோசலிச பாணி சமுதாயத்தின்" மிச்சத் தடையங்களையும் ஒழிப்பதன் வாயிலாக, மக்களுக்குத் தேனும் பாலும் கிடைக்குமென உறுதியளித்து வருகிறார்கள். அதே நேரத்தில் அயல்நாட்டு மூலதனத்தைக் கொண்டும், தாராளமயமாக்கலாலும் த்ங்களுடைய மாநிலத்தை தொழில்மயமாக்க முடியுமென்று சில கம்யூனிஸ்ட்டு கட்சிகள் கூறிவருகின்றன. சமூக சனநாயக இ.காங்கிரசுக்கும், இப்படிப்பட்ட கம்யூனிஸ்ட்டுகளுக்கும் இடைப்பட்ட நேரடித் தொடர்பை அவர்களுடைய கொள்கைகளிலுள்ள ஒத்த தன்மையைக் கொண்டே அறியலாம். இது, சமூக சனநாயகம் பற்றி மயக்கம்

கொண்டிருப்பவர்களையும், மார்க்சிசம் – லெனினிசத்தின் உயிர்த்துடிப்பை நீக்குபவர்களையும் எதிர்த்து கருத்தியல் மற்றும் விவாதப் போராட்டத்தைத் தொடர்ந்து நடத்தப்பட வேண்டுமென்பதை கம்யூனிஸ்ட்டுகளுக்கு உணர்த்துகிறது.

அப்படிப்பட்ட கம்யூனிஸ்ட்டுகள், "தேசிய ஒற்றுமை மற்றும் பிரதேச ஒருமைப்பாடு'' என்ற பெயரிலும், "மதச்சார்பற்ற" மற்றும் "சனநாயக" இந்தியா என்ற பெயரிலும் இ.காங்கிரசுடன் சேர்ந்து தூளுரைத்து, இவற்றை வழிகாட்டும் கொள்கைகளாகவும், வாழ்க்கை நியதியாகவும் கொண்டுள்ளதுடன் மற்றவையனைத்தையும் கொள்கை இலக்குகளாக மாற்றி வைத்திருக்கிறார்கள். இந்தியத் தொழிலாளிவர்க்கம் மற்றும் உழைப்பாளர்களின் நிலைமை ஏன் தொடர்ந்து மேன்மேலும் மோசமடைந்து வருகிறது என்பதற்கு விளக்கமளிப்பதற்குப் பதிலாக, இந்த சமூக சனநாயகவாதிகளும், கம்யூனிஸ்ட்டுகளும் அவற்றைப் பற்றிய மயக்கத்தில் விடாப்பிடியாக இருப்பதுடன், பெரும் சமுதாய மாற்றங்களின்றி இந்த நிலைமையைச் சீரமைக்க முடியுமென்ற மிகவும் அபாயகரமான கருத்தையும் பரப்பி வருகிறார்கள். இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு இதோ இந்த மலைக்கு அந்தப் பக்கத்தில் இருக்கிறது அல்லது நமது கைக்கு எட்டும் தூரத்திற்கு சற்று அப்பால் கயிற்றிலே தொங்கிக் கொண்டிருக்கிறது என்றும் இனிய மயக்கந்தரும் கொள்கை இலக்குகளில் மறைத்து சமூக சனநாயகம் உருவாக்கியுள்ள கனவுலகு மக்கள் தொகையனைத்தையும் திசைதிருப்பிக் கொண்டிருக்கிறது. இந்த கற்பனை உலகை உருவாக்குவதில் அவர்களுக்கு உதவியாகவும், உடந்தையாகவும், அதே மாயைகளில் மிதந்து கொண்டும், அவற்றைப் பரப்பிக் கொண்டும் வருகின்ற கம்யூனிஸ்ட்டுகள் உள்ளனர். மக்கள் அரசியல் உணர்வு அற்றவர்களாக ஆகிவருவதற்கும், முதலாளிவர்க்கத்தின் ஏதாவது ஒரு பிரிவின்கீழ் அவர்கள் பிளவுபட்டு நிற்பதற்கும் மாயைகளைப் பரப்புதலே முக்கிய காரணமாகும். முதலாளிவர்க்க அரசை யார் ஆட்சி செய்வது என்பதைத் தீர்மானிப்பதற்காக போட்டியிடும் பல்வேறு பிரிவுகளின்கீழ் மக்கள் சென்று குவிவதற்கும் இதுவே முக்கிய அடிப்படையாகும்.

இந்த அபாயகரமான மாயைகள் இந்த அல்லது அந்த ஒரு கொள்கை இலக்கைப் பற்றியது என்பதல்ல; முக்கியமாக அந்த மாயைகள் பொருளாதார, அரசியலமைப்பைப் பற்றியன ஆகும்.

அரசியல் அதிகாரம், போலி நம்பிக்கைகளை உருவாக்குவோரின் கைகளில் உறுதியாக சிக்கியிருக்கிறது. அவர்கள் அரசின் தன்மை பற்றியும் கூட மாயைகளை உருவாக்கி வருகிறார்கள். இந்தக் கதையானது அரசியல் முறைக்கும் விரிவாக்கப்படுகிறது. மக்கள் கையில் அரசியல் அதிகாரம் இருப்பது போலவும், தில்லியிலும், வேறு இடங்களிலும் எந்த வகையான அரசு இருக்க வேண்டுமென்பதை மக்களே தீர்மானிப்பதாகவும் கருத்துக்கள் முன்வைக்கப்படுகிறது. சமுதாயத்தின் பிரச்சனைகள், அதிகாரத் திலிருக்கின்ற கட்சியின் கொள்கைகள் நல்லவையா அல்லது மோசமானவையா என்பதைப் பொறுத்தே அமையும் என்றுகூட மாயைகள் உருவாக்கப்படுகின்றன.

அனைவருக்கும் வேலைவாய்ப்பு, கல்வி மற்றும் இலவச மருத்துவ வசதி என்பதிலிருந்து ஊழலை ஒழிப்பது, மதச்சார் பற்ற அடிப்படையில் அரசியல் முறையை உறுதிப்படுத்துவது, எல்லோருக்கும் வளமான வாழ்க்கை உட்பட, இன்னும் கற்பனைக்கு எட்டக்கூடிய எல்லா உயர்வான கொள்கை இலக்குகளைப் பறைசாற்றும் கட்சிகள் நமது நாட்டின் அரசியல் களத்தில் நிரம்ப இருக்கிறார்கள், அரசியல் கட்சிகளையொட்டி மக்கள் பிளவு பட்டிருப்பதானது, மாற்றங்களைக் கொண்டு வருவதை அதிகாரத் திற்கு தேர்ந்தெடுக்கப்படும் கட்சியினுடைய கொள்கைகளே தீர்மானிக்கிறது என்ற கருத்தின் அடிப்படையி லாகும். கட்சிகளுடைய நல்ல அல்லது மோசமான கொள்கை பற்றிய கருத்து, முதலாளிவர்க்கத்திடம்தான் அதிகாரமிருக்கிறது என்பதிலும், முதலாளிவர்க்க சனநாயகத்தில் அரசியல் கட்சி களின் கடமை அதிகாரத்தை தொழிலாளிவர்க்கம் கைப்பற்றுவதி லிருந்து காப்பதேயாகும் என்பதிலும் தோற்றுப்போகிறது. சமூக சன நாயகம் பற்றி மயக்கம் கொண்டிருப்பவர்களையும், எல்லா வகையான முதலாளித்துவ சோசலிசத்தையும் எதிர்த்து சமரசமற்ற தத்துவார்த்தக் கருத்துப் போராட்டத்தைத் தொடர்வது, தொழிலாளிவர்க்கம் இந்த அதிகாரத்தை உடைத்தெறியவும், தனது சொந்த அரசை உருவாக்கவும் தலைமை தருவதோடு, அதைக் கொண்டு சமுதாய முன்னேற்றத்திற்கான பாதையையும் திறந்துவிடும். தொழிலாளிவர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதால், சமுதாயத்தின் மீது அதன் எல்லா உறுப்பினர்களும் எழுப்பும் கோரிக்கைகளை நிறைவு செய்யக் கூடிய நிலைமைகளை உருவாக்குகிறது.

இ.காங்கிரசு, பா.ஜ.க மற்றும் பல்வேறு கம்யூனிஸ்ட்டு களும் இடதுசாரிகளும் கூட்டாகவும் போட்டி போட்டுக் கொண்டும் எல்லாவகையான மாயைகளை உருவாக்குகின்ற இந்த முழு அமைப்பையும் எதிர்த்த கருத்தியல் மற்றும் விவாதப் போராட்ட மானது எந்தத் தொய்வுமின்றித் தொடரவேண்டும். இந்த அமைப்பை எதிர்த்து கருத்தியல் மற்றும் விவாதப் போராட்டத்தை நடத்துவதன் மூலம், கம்யூனிச மற்றும் தொழிலாளர்களுடைய இயக்கத்திலிருந்து எல்லாவகையான முதலாளித்துவக் கருத்துக் களையும் முறியடிக்க முடியும். இந்தப் பணியின் மூலம்தான், கம்யூனிச முன்னேற்றத்தை நிறுத்தி வைத்திருக்கும் தடைகளை உடைத்தெறிய முடியும். சொல்வது ஒன்று - செய்வது வேறொன்று என இந்தியாவின் வாழ்க்கையில் எல்லாவற்றிலும் ஊடுருவி இருக்கின்ற "இரட்டைவேடத்திலிருந்து" கம்யூனிஸ்ட்டுகள் வேறுபட்டிருக்க வேண்டும். தொடர்ச்சியான கருத்தியல் மற்றும் விவாதப் போராட்ட வேலைதான் தொழிலாளிவர்க்கத்தினி டையே மார்க்சிச–லெனினிச தத்துவ உணர்வு ஊடுறுவி பரவுவதை உறுதி செய்யும். சோசலிசமும் கம்யூனிசமும் தொழி லாளியிடமிருந்தும், உழைப்பாளியிடமிருந்தும், தனிமைப்பட்டி ருக்குமானால், அது எப்படி உண்மையான போராடும் சக்தியாக மாற முடியும்? சமூக சனநாயகம் பற்றிய மாயைகளை எதிர்த்தும், "இரட்டை வேடப்" போக்கினை எதிர்த்தும் மார்க்சிய–லெனினியக் கொள்கைகளை உயிரற்றதாக ஆக்கிவருபவர்களை எதிர்த்தும், நடந்துவருகின்ற இந்தக் கருத்தியல் மற்றும் விவாதப் போராட்டத்தை மேற் கொள்ளாவிடில் அது ஒன்றுக்கும் பயனற்றதாகிவிடும்.

இன்று முதலாளிவர்க்கம், கம்யூனிஸ்ட்டுகளுக்காக உருவாக்குகின்ற எந்த திசைதிருப்பலுக்கும், ஆளாகாமல், படுகுழிகளில் விழுந்துவிடாமல் கம்யூனிஸ்ட்டுகள் முன்னேற வேண்டும். முதலாளிவர்க்கம் சர்வதேச அளவிலும், இந்தியாவி லும் கூறி வரும் ஒரு முக்கியக் கட்டுக்கதை "நாகரிக சமுதாயம்" (Civil Society) மக்களுடைய பிரச்சனைகளைத் தீர்க்கும் என்பதா கும். வேலையை செய்து முடிக்க அரசாங்கங்கள் "அரசியல் உறுதியைக்" காட்ட வேண்டுமென்று கட்டாயப்படுத்துவதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கமுடியுமென்ற கருத்து உள்ளது. தொழிலாளிவர்க்க இயக்கத்தின் நோக்கமானது நாகரிக சமுதாயத்தை உருவாக்குவதல்ல என்பதில் மேற்கண்ட கருத்து

அடிபட்டுவிடுகிறது. தொழிலாளிவர்க்கம் மற்றும் உழைக்கும் மக்களின் விடுதலைக்கு அது ஒரு அடிப்படைத் தேவையுமில்லை. நாகரிக சமுதாயத்தை உருவாக்குவதென்பது முதலாளிவர்க்கம் அதிகாரத்துக்கு உயரவும், நிலப்பிரபுத்துவ சலுகைகளை ஒடுக்கவும், முதலாளித்துவ உரிமைகளுக்கு முதன்மையை நிறுவிடவும், நவீன காலனிய வெற்றிக்கும், ஏகாதிபத்திய கொள்கைக்கும், அடிப்படைத் தேவையாக இருந்தது. உலக அளவிலான நவீன காலனியாதிக்கத்திற்கு இது அடிப் படையாகும். நாகரிக சமுதாயத்திற்குள் "அரசியல் உறுதி"யின் நோக்கம், முதலாளிவர்க்கம் சமுதாயத்தையும் நாட்டையும் தற்போதையத் தேவைகளுக்கேற்ப மாற்றுவதற்கும், உற்பத்தியை யும், மூலதனத்தையும் உலகமயமாக்கவும், தடையாக இருக்கின்ற வற்றைக் களைந்திட உதவுவதாகும்.

நாகரிக சமுதாயம் என்பதை எந்தவித விருப்பும் வெறுப்புமின்றி ஆராய்ந்தால், அது தொழிலாளி வர்க்கத்தையும் உழைக்கும் மக்களையும் அடிமைப்படுத்துவதற்கான அடிப்படை யே அன்றி விடுதலைக்கான ஒன்றல்ல என்பது விளங்கும். நாகரிக சமுதாயம்தான் இந்தியாவில் ஏற்கெனவே இருந்து வருகிறது. நாகரிக சமுதாயம் என்றால் முதலாளிவர்க்கம் மூலதனத்தைச் சேர்க்கவும், தன்னுடைய ஆட்சியை உறுதிப் படுத்திக் கொள்ளவும், ஆதாரமாக இருக்கின்ற அமைப்புகளுக்கு தரப்படும் சட்டரீதியான உத்தரவாதம் என்று பொருள். அப்படிப் பட்ட அமைப்புகள் வெவ்வேறு நாடுகளிலும் காலங்களிலும், வெவ்வேறு வடிவங்களைக் கொண்டிருக்கும். நாகரிக சமுதாயமானது அரசியலமைப்பு முடியரசாகவோ, குடியரசாக வோ, ஜனாதிபதி முறையாகவோ, (Presidency) பிரதமமந்திரி தலைமை கொண்ட பாராளுமன்ற முறையாகவோ, தனிப்பட்ட அரசாகவோ, நாடுகளின் கூட்டாட்சியாகவோ, (Confedracy) விகிதாச்சார பிரதிநிதித்துவ அடிப்படையில் அமைந்த தேர்தல் அமைப்பாகவோ, அதிகமான வாக்குகள் பெறுவோரை பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கும் முறையோ இருக்கலாம். அது பல்வேறு அளவில் பேசுவதற்கும், கூடுவதற்கும், மதநம்பிக்கை களைக் கொண்டிருப்பதற்கும் சுதந்திரம், சிறைப்படுத்தப் பட்டவரை நீதி மன்ற விசாரணைக்குக் கொண்டுவரும் உரிமை, சுதந்திரமான நியாயமான தேர்தலில் வாக்களிக்கும் உரிமை, அனைவருக்கும் அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட சிலருக்கு மட்டும்

வாக்குரிமை போன்ற சமூக உரிமைகளும், இவற்றோடு உள்ளிருந்தோ வெளியிலிருந்தோ இந்த சமூக அதிகாரத்திற்கு அச்சுறுத்தல் வரநேரிட்டாலோ, அல்லது உரிமைகளை "வரையறைக்குள் வைப்பது" என அரசாங்கம் முடிவெடுத்தாலோ, இந்த சமூக உரிமைகளையும், அமைப்புக்களையும் நிறுத்தி வைக்கும் சட்ட உரிமையும் கொண்டிருக்கலாம். நாகரிக சமுதாயத்தின் வடிவம் எப்படியிருந்த போதிலும், அதன் உள்ளடக்கமானது, தனி உடமையின் புனிதத் தன்மையின் அடிப்படையிலும், தனி உடமையைச் சேர்ப்பதன் மூலம் வளமை மற்றும் "மகிழ்ச்சியைத் தேடுவது" என்ற கருத்தின் அடிப்படையிலும் அமைந்துள்ளது.

இந்தியாவில் நிலம் மற்றும் உற்பத்திக் கருவிகள் ஆகியவற்றின் தனிஉடமை சட்டப்படியான புனிதத்துவமானது, ஆங்கிலேய காலனிய ஆட்சியின் முக்கிய ஆதாரக் கல்லாக விளங்கியது. இந்தியாவின் நாகரிக சமுதாயமானது, காலனித்துவம் விட்டுச் சென்ற பாரம்பரியமாகும். இது இந்தியாவில் உழைக்கும் மக்களை ஈவுஇரக்கமின்றிச் சுரண்டுவதற்கும், இந்திய மக்களுக்குச் சுதந்திரத்தை மறுப்பதற்கும் அடிப்படையாக உள்ளது. இதைக்கூட புரிந்து கொள்ளவில்லையென்றால், இந்திய கம்யூனிஸ்ட்டுகளும் மக்களும் அவர்களுடைய முதுகில் ஏறிஉட்கார்ந்து கொண்டிருக்கும் குரங்கை – அதாவது சோசலிசமும், கம்யூனிசமும் இந்திய மண்ணில் வேரூன்றி வளர்வதற்கு மிகப்பெரிய தடையாகயிருக்கும் நிலையை - எல்லாவற்றையும் "சமூக கொள்கை இலக்குகளாக" மாற்றிக் கொண்டிருக்கும் நிலையை கீழே இறக்கி வைக்க முடியாது.

இந்திய அரசியல் சாசனமோ, அல்லது அதிகாரத்தைப் பிடிப்பதற்கு முண்டியடித்துப் போட்டியிடும் அரசியல் கட்சிகளோ, அவர்களுடைய இந்தக் குறைவான நோக்கங்களைக்கூட அடைவதற்கு வழிவகைகளை உருவாக்கி செயல்படுத்த வேண்டியத் தேவையைக் கண்டுகொள்வதில்லை என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். அமைப்பையே கேள்வி கேட்பது என்ற பேச்சுக்கோ இடமேயில்லை. இந்த அமைப்பு மக்கள் மீதும், சமுதாய வாழ்க்கை மீதும் சாவையும் பேரழிவையும் பொழிந்து தள்ளிக்கொண்டிருக்கையில், இந்தக் கொள்கை இலக்குகளும், நல்ல சட்டங்கள் என்றழைக்கப்படுபனவும், ஒன்றுமே நிகழாதது போல காகிதத்திலேயே அமைதியாக உள்ளன. எந்த ஒரு

கட்சியின் எந்தக் கொள்கை இலக்கு நல்லதா கெட்டதா என்ற முடிவற்ற விவாதம், அரசியலிலும், இந்திய மக்களின் மனநிலையிலும் என்ன மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறது?

இப்படிப் பார்க்கும் போது, இந்த மாயைகளை எதிர்த்து தொடர்ந்த கருத்தியல் மற்றும் விவாதப் போராட்டத்தை நடத்தவில்லை என்றால், கம்யூனிசம்கூட ஒரு கொள்கை இலக்காக நிற்பதுடன், அவ்வப்போது பயன்படுத்தப்படும் ஒரு வெற்று முழக்கமாகவும், பலகம்யூனிஸ்ட்டு கட்சிகளைப் போல எந்த சிறு உள்ளடக்கமும் அற்றதாக ஆகிவிடும் எனலாம். பல வழிகளிலும், நாட்டின் பல பகுதிகளிலும் இந்திய கம்யூனிச இயக்கமானது சிக்கி நின்றுவிட்டது. மாயைகள் என்ற குழியில் விழுந்துவிட்ட அது, அதிலிருந்து எழும்பி வெளியே வர மறுக்கிறது. மாயைகளை எதிர்த்து ஒரு தத்துவார்த்த நிலைப்பாட்டை மேற்கொள்வதிலிருந்து அது பின்வாங்குகிறது. மேலும் மாயைகளைப் பரப்புகின்ற அனைவரையும் எதிர்த்து விவாதப் போராட்டம் நடத்தவும் அது தவறிவிட்டது. முதலாளித்துவக் கட்சிகளோடு போட்டி போட்டுக் கொண்டு முதலாளித்துவ அரசை நிர்வகிப்பதற்கு அது எதைச் "சிறந்த" திட்டமெனக் கருதுகிறதோ அதையொட்டி செயல்பட வேண்டுமென்ற பழைய கருத்தில் அது சிக்கி நிற்கிறது. இதன் விளைவாக கம்யூனிச இயக்கமான பல்வேறு குழுக்களாகப் பிளவுபட்டு, முதலாளித்துவ அரசை நிர்வகிப்பதற்கு யாரிடம் "மிகச் சிறந்த" திட்டமும், கொள்கைகளும் உள்ளன என்று ஒருவரோடுஒருவர் மோதி வருகின்றனர். "மிகச் சிறந்த திட்டத்தையொட்டி குழுக்களைத் திரட்டுகின்ற மனப்பான்மை யானது, தனது சொந்த நலன்களுக்கு உகந்தவற்றையே அறிக்கையாக முன்வைக்கின்ற ஐரோப்பிய வியாபாரி, தொழிலதிபர் மற்றும் நிலபிரபுவின் கண்ணோட்டமாகும். "மூன்றாவது அணியை" கட்டுகின்றவர்களிடம் நாம் காண்பது போலவே, பெரும்பாலான இந்த அறிக்கைகள் அடிப்படையில் இன்று நிலவுகின்ற அமைப்பிற்கு வெளிப்படையான ஆதரவாகும்.

முதலாளிவர்க்கத்தின் எல்லாப் பிரிவுகளை எதிர்த்தும், பல்வேறு கொள்கை நோக்கங்களோடு உலாவி வருகின்ற அரசியல் கட்சிகளையும், குழுக்களை எதிர்த்தும், கருத்தியல் மற்றும் விவாதப் போராட்டத்தை கம்யூனிஸ்ட்டுகள் தொடர்ந்து வளர்க்க வேண்டும். அவர்கள் சமூக அறிவியலைப் பயன்படுத்தி, அவர்களுடைய வாதங்களை இந்தியத் தொழிலாளி வர்க்கம்

மற்றும் உழைக்கும் மக்களின் விருப்பங்களோடு பொருந்தியதாக முன்வைக்க வேண்டும். அப்படிப்பட்ட வாதங்களையொட்டி அவர்கள் பிளவுகளை உருவாக்கக்கூடாது. அதற்கு மாறாக புரட்சி மற்றும் சோசலிசத்தின் வெற்றிக்காக தொழிலாளி வர்க்கத்தைத் திரட்டக்கூடிய வகையிலே இந்தப் போராட்டத்தை அவர்கள் மேற்கொள்ள வேண்டும். தொழிலாளிவர்க்க மட்டத்தை உயர்த்து கின்ற வகையிலே அவர்கள் விவாதிக்கவும், கலந்துரையாடவும் வேண்டும். இன்றைக்கு நிலவுகின்ற அமைப்பைப் பற்றிய எல்லா மாயைகளையும் எதிர்த்துப் போராடுவதே எல்லா கம்யூனிஸ்ட்டு களின் உடனடிப் பணியாகும் என்பதை திட்டவட்டமான அடிப்படையாகக் கொண்டு இந்தக் கருத்தியல் மற்றும் விவாதப் போராட்டங்கள் துவங்கினாலன்றி, இந்திய மண்ணில் சோசலிசத்திற்கும், கம்யூனிசத்திற்கும் எந்த வளர்ச்சியும் இருக்காது. இந்த அமைப்பையும், சமூக சனநாயகத்தையும் பற்றிய எல்லா மாயைகளை எதிர்த்து கருத்தியல் மற்றும் விவாதப் போராட்டங்களை நடத்தாத கம்யூனிஸ்ட்டு, தொழிலாளர் இயக்கத்திற்கு துரோகத்தனமும் அழிவும் எதிர்கொண்டுள்ளது.

ஒரு கடுமையான சமரசமற்ற கருத்தியல் மற்றும் விவாதப் போராட்டம் நடத்தப்படவேண்டும் என்ற முடிவுக்கு நாம் வந்திருப்பதற்குக் காரணம், புரிந்து கொள்வதில் ஏதோ பிரச்சனை இருக்கிறது என்பதோ அல்லது தெளிவுபடுத்துவதற் காகவோ அல்ல. புறப்பொருள் நிலைமைகள் இதைக் கேட்கின்றன என்ற காரணத்தால். முதலாளித்துவ வளர்ச்சியின் யதார்த்த நிலைமைகள், கருத்துக்களின் ஆயுதக்கிடங்கை கட்டப்பட வேண்டுமென்றும், அதைத் தொழிலாளிவர்க்கத்திற்கு கிடைக்க வழிசெய்ய வேண்டும் என்றும் கேட்கின்றன. கருத்தியல் மற்றும் விவாதப் போராட்டமானது, இந்தக் கருத்து ஆயுதக் கிடங்கைக் கட்டியமைக்கும். வெளிப்படையாகவும் அல்லது மறைந்தும் இருக்கின்ற அவர்களுடைய வர்க்க எதிரிகளை எதிர்த்து தொழிலாளர்கள் இந்த ஆயுதக்கிடங்கைப் பயன்படுத்த இயலும். இந்த கருத்தியல் மற்றும் விவாதப் போராட்டத்தை மேற்கொள்வதில் சி.ஜி.பி.ஐ. உடனடித் தேவையாக சமுதாயத்தை நெருக்கடியிலிருந்து விடுவிக்க, புரட்சியின் நோக்கங்களை முன்னிறுத்துகிறது. மேலும் சோசலிசம் மற்றும் கம்யூனிச வெற்றிக்கான சூழ்நிலைகளை உருவாக்குவதை யுத்த தந்திரமுறையாகவும் கொண்டிருக்கிறது.

# பாகம் 4
# இந்திய கோட்பாட்டின் தேவை

புரட்சிகர இயக்கத்தின் வெற்றிக்கு தொடக்கமாகவும், முதல்படியாகவும், மிகவும் உடனடிப் பிரச்சனையாகவும் உள்ள பணி கோட்பாட்டை குறித்துள்ள பணியாகும். இந்திய கோட்பாட்டின் தேவையை – இந்திய சூழ்நிலைமைகளிலிருந்து வெளிப்பட்டு இங்கு கம்யூனிசம் வளர்ச்சி பெற தோதாக உள்ள ஒரு கோட்பாட்டின் தேவையை – அது மிகவும் மணிச்சுருக்கமாக வெளிப்படுத்துகிறது. இந்தத் தொடக்கமானது பழைய உள்ளுணர்வுடன் – அதாவது ஒரு பக்கம் சமூக–ஜனநாயகத்துடன் சமரசம் செய்து கொள்பவர்களும் மறுபக்கம் ஆங்கிலேய காலனியாதிக்கர்கள், உடமைவர்க்கம் மற்றும் நிலபிரபுத்துவ சக்திகள் ஆகியோரது உள்ளுணர்வுடன் – கணக்குத் தீர்ப்பதன் மூலம் செய்யப்படவேண்டும்.

சமூக–ஜனநாயகத்துடன் சமரசம் செய்து கொள்வோரின் கோட்பாடானது ஐரோப்பாவிலிருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட இன்றைய அமைப்பை இயல்பாகக் கருதுகிறது. இந்த அமைப்பானது காலனீய ஆதிக்கர்களே உருவாக்கிய வர்க்கங்களுக்கு தோதாக உள்ளது. இப்படிப்பட்ட அமைப்பை புதுப்பிப்பதும் உறுதிப்படுத்துவதும் இந்த வர்க்கங்களின் நலன்களுக்கு உகந்தவை. வறட்டுவாத வடிவத்தில் முன்வைக்கப் படும் மார்க்சீய–லெனினியம் பெரும் தொழிற் குடும்பங்கள் முதலாளிகள் நிலப்பிரபுக்கள் ஆகியோரைக் கொண்ட வர்க்கங்களுக்கு ஏற்றுக் கொள்ளக் கூடியதே என்பதையும் தீவிரமாக ஆராய்வதே முக்கியம். தங்களுடைய அமைப்பை பாதுகாக்கும் காரணத்தைத் தவிற வேறு எதற்காக இந்த வறட்டுவாத மார்க்சீய–லெனினியத்தை போற்றிப் பாதுகாத்து வந்துள்ளனர்?

தோழர்களே, இன்று சி.ஜி.பி.ஐ.யினால் தீர்வு காண எடுத்துக் கொள்ளப்பட்ட மிகப் பெரிய பிரச்சனை இந்திய கோட்பாட்டைப் பற்றியதாகும். இந்த வேலை கட்சியின் முதலாம் மாநாட்டின் போது, அதனுடைய பத்தாம் ஆண்டு நிறைவின் போது துவங்கியது. தொழிலாளி வர்க்கத்தின் முன்னணிப் படையாக சி.ஜி.பி.ஐ. தனது பங்கை ஆற்ற வேண்டுமென்றால்,

இந்திய சூழ்நிலைமைகளிலிருந்து கம்யூனிச கோட்பாட்டை அது வளர்த்து எடுக்க வேண்டும். இந்தக் கோட்பாடானது இந்தியா வின் பழைய உள்ளுணர்வுடன் கணக்கு தீர்த்துக் கொள்வதின் மூலம் வளர்த்து எடுக்கப்படவேண்டும். அதற்கு ஒரு இந்திய வடிவம் தரப்பட வேண்டும். அதை விஞ்ஞானத்திற்கு புறம்பாக மாற்றக்கூடிய ஐரோப்பிய- மத்தியத்துவத்தின் (Euro-Centrism) சாயலோ மற்ற எந்தவிதமான செல்வாக்கின் சாயலோ அதனிடம் இருக்கக் கூடாது. இந்திய புரட்சியின் செயல்பாட்டிற்கு தோதாகவும், பொதுப்படையாக உலகத்திலுள்ள எந்த சூழ் நிலைகளுக்கும் பொருந்தும் முறையில் இந்தக் கோட்பாடு அமைய வேண்டும். இப்படிப்பட்ட இந்திய கோட்பாட்டை வளர்த்தெடுப்பதின் மூலமாகத்தான் *'எங்கு செல்கிறது இந்தியா?'* எனும் கேள்விக்கு விடை கண்டுபிடிப்பதற்கும் புரட்சிகர இயக்கத்தை முன்னேற்றுவதற்கும் தூண்டுகோலாக அமையும்.

சிறிய உற்பத்தியும் தனிநபர் மற்றும் சமூக சொத்தும், கடந்த 2500 ஆண்டுகளுக்கும் மேலாக, உள்ள நாடான இந்தியா, இந்த அனுபவத்தின் அடைப்படையில் பல தத்துவங்களையும் கோட்பாடுகளையும் கொண்டுள்ளது. ஆனால் பலவிதங்களில் நிலைமைகள் மாறியுள்ளன. பெரிய அளவிலான உற்பத்தி அதாவது சமூக முறையிலான பொருள் உற்பத்தி நகரங்களையும் கிராமப்புறத்தையும் ஆக்கிரமித்துக்கொண்டு வருகிறது. இருப்பினும்கூட சமூக உடமைக்கும் எண்ணங்களுக்கும் நிறைய இடம் எஞ்சியுள்ளது. இந்த இடத்தை முதலாளித்துவத்தினால் நிரப்ப முடியாது. இதைக் குறித்து மார்க்சிஸ்ட்டு—லெனினிஸ்ட்டு கள் என்ன செய்யப் போகிறார்கள்? அவர்கள் இந்தப் பண்டைக் காலத்திய சமூக நிலப்பிரபுத்துவ ஆண்இன முதன்மையாட்சி உறவுமுறைகள் கொண்ட இந்த ஆசிய முறை உற்பத்தியை முதலில் முதலாளித்துவ உறவு முறைகளாக மாற்றுவார்களா; அல்லது நேரடியாக சோசலிசத்திற்குச் செல்வார்களா? சோசலிசத்திற்கு நேரடியாகச் செல்வது சாலச் சிறந்தது. இதற்காக இந்தியாவில் வாழ்க்கை அனைத்தையும் புரட்சிகரமயமாக்குவதை செயல்படுத்த வழிகாட்டுவதற்கு, அதாவது நேரடியாக சோசலிசத்திற்கு செல்வதற்காக மட்டுமே, ஒரு இந்திய புரட்சிக் கோட்பாட்டிற்கு தேவை உள்ளது. இதைச் செய்ய வேண்டு மென்றால் பல்வேறு தத்துவங்களையும் கொள்கைகளையும், அவற்றின் எண்ணற்ற வடிவங்களையும் உருவங்களையும்,

செயல்பாடு எனும் முக்கிய சோதனைக்கு உட்படுத்தி ஒரே புரட்சிகர கோட்பாட்டை உருவாக்க வேண்டும்.

இந்தக் கோட்பாட்டை, எல்லாவற்றிற்குமே மையமாக உள்ள தொழிலாளிவர்க்க விடுதலை இயக்கத்துடன் நெருக்கமாக பிணைக்க வேண்டும். மிகவும் முன்னேறிய தத்துவமும் கோட்பாடுமான மார்க்சீய—லெனினியத்துடனும் தற்கால மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட் சிந்தனையுடனும் ஒப்பிட்டும் வேறு படுத்தியும் மட்டுமே இந்திய புரட்சிக் கோட்பாட்டை நவீனப்படுத்த முடியும். இந்திய தத்துவமும் கோட்பாடும் இருப்பதற்குள் மிகநவீனமாக இருக்கவேண்டும். தன்னை சக்தியற்றதாகவும், வெறுமே தனக்கு ஆன்மீக தன்மைகொண்ட பங்கைத் தருவதாகவும் உள்ள எல்லா வகைப்பட்ட சிந்தனைமரபு குழக்களிடமிருந்து தன்னை ஈவிரக்கமில்லாமல் வேறுபடுத்திக் காட்டிக்கொள்ள வேண்டும்.

எண்ணங்கள், கருத்துகள், கண்ணோட்டங்கள், விளக்கங் கள் ஆகியவை எல்லாமே பொதுவாகக் கூறினால் சார்பு நிலையுடையவை. இந்தக் காரணத்தினால் ஒருவருடைய எண்ணங்கள் மற்றவருடையதுடன் ஒப்பிடும் போது சரியாகவோ தவராகவோஇருக்கலாம். மாறாக, கோட்பாடானது தவறு என்று நிரூபிக்கப்படும் வரை முற்றிலும் உண்மையானதாகவே இருக்கும். ஒரு நாட்டின் மண்ணிலிருந்து தத்துவம் தோன்ற வில்லையென்றால் கோட்பாட்டின் அடிப்படையில் எது சரி எது தவறென்று முடிவு செய்ய தொடர்ச்சியான போராட்டம் நடத்த வில்லை என்றால், உண்மையில் உணர்வு பூர்வமான, உண்மையில் சுதந்திரமான, உண்மையில் புரட்சிகரமான தொழிலாளிவர்க்க இயக்கம் இருக்கமுடியாது. தொழிலாளிவர்க்க விடுதலை இயக்கத்தில் வெற்றி அடையவேண்டும் என்றால், தத்துவார்த்த போராட்டம், கோட்பாடு ஆகிய இரண்டின் மீதும் தொடர்ச்சியான கவனத்தை செலுத்துவது மிக முக்கியம்.

'தர்ஷன்' (darshan - தரிசனம்) எனும் இந்திய தத்துவத்தின் அடிப்படை மெய்க்கோள் என்னவென்றால் பொருட்களும் நிகழ்வுப்போக்குகளும் தங்களைத் தாங்களே மறைவிலிருந்து காட்டிக் கொள்கின்றன. அண்டம் முழுவதும் *மாயை* (maya) மட்டுமே. இந்த *மாயையின்* இருத்தல்முறைதான் ***ஆவாகமான்*** (Awagaman). இந்திய கண்ணோட்டத்திற்கு இப்படிப்பட்ட பொருள் முதல்வாத அர்த்தத்தைத் தருவது, இந்திய கோட்பாடின்

வளர்ச்சிக்கு ஒரு அருமையான தொடக்கக்கட்டமாக அமைகிறது. இன்றைய நிலையிலிருந்து தொடங்கி இந்திய கம்யூனிஸ்ட்டுகள் இந்தக் கோட்பாட்டை வளர்த்தெடுக்க வேண்டும். இந்திய நிலைமைகளில் வழக்கத்திலிருந்து வரும் அனைத்தையும், குறிப்பாக இந்திய ஆளும் வர்க்கங்களால் உந்தப்படும் பழைய உள்ளுணர்வை கூர்மையான விமர்சனத்திற்கு உள்ளாக்க வேண்டும்.

*தர்ஷன்* என்னும் தத்துவத்தின் தேக்கத்துடன் இந்திய சிந்தனையின் தேக்கமும், நமது நாட்டிலுள்ள பொருளாதார அரசியல் கோட்பாடுகளின் தேக்கமும் விடுவித்துக்கொள்ள முடியாத அளவு பிணைந்துள்ளது. ஏதோ இன்றைய இந்திய சூழ்நிலைகளுக்கும் அதற்கும் பொருத்தமோ பிணைப்போ இல்லாதது போலவும், வரலாற்றின் இந்தக் கட்டத்தில் இந்திய மக்களின் முன்னேற்றப் பாதையை ஒளியூட்ட முடியாதது போலவும், இந்திய, அமெரிக்க, பிரிட்டிஷ் பல்கலைக்கழகங் களின் வசதியான சுவர்களின் பாதுகாப்பில் உட்கார்ந்து கொண்டு *தர்ஷன்தாரிகள்* இந்திய தத்துவத்தைப் பற்றி பிரசங்கம் செய்து வருகிறார்கள். *தர்ஷன்* என்னும் தத்துவத்திற்கு கருத்து முதல்வாத, மதரீதியான விளக்கங்களைத் தந்து இந்திய மக்களுக்கு அதை உயிரற்றதாகவும் பயனற்றதாகவும் செய்யப்படுகிறது. இதற்கிடையே இன்றைய பிரச்சனைகளுக்குத் தீர்வுகாண ஒரு தத்துவமும் கண்ணோட்டமும் அற்று, உடமைவர்க்கம் மற்றும் ஏகாதிபத்தியத்தின் தயவில் இந்திய மக்கள் நிர்கதியாக அல்லாடுகிறார்கள்.

உதாரணத்திற்கு *தர்ஷன்* என்னும் தத்துவத்தை மதவட்டத்துக்குள் கட்டுப்படுத்தி, தங்களுடைய தினந்தோற *தர்ஷனின்* வழியான பக்தர்களுக்கு கடவுள் தனது சுயரூபத்தை வெளிப்படுத்திக் கொள்கிறார் என்று கூறப்படுகிறது. *மாயா* என்பது உண்மையில் அண்டம் முழுவதையும், அதற்குள்ள பருப்பொருள் மற்றும் பல்வேறு எண்ண வடிவங்களில் அந்தப் பருப் பொருட்களின் பிரதிபலிப்பையும் உள்பட தனக்குள் கொண்டுள்ளது. ஆனால் பல்வேறு தத்துவார்த்த மரபுக்குழாம்கள் *மாயா* என்பது வெறும் மாயையே என்று அறிவித்து அதற்கு வேண்டுமென்றே ஒரு கருத்து முதல்வாத விளக்கத்தைத் தருகிறார்கள். பொருட்களும், நிகழ்வுப்போக்குகளும், சிந்தனை யும் உள்பட தோன்றிப் பின்னர் மறைவதுதான் ***ஆவாகமன்.***

உண்மையில் அது பொருட்களும் நிகழ்வுப்போக்குகளும் எப்படித் தங்கள் ரூபத்தை வெளிப்படுத்துகின்றன, எப்படித் தோன்றி மறைகின்றன என்பதை பிரதிபலிக்கின்றது. ஆனால் இப்படிப்பட்ட அதனுடைய ஆழமான புரட்சிகர, பொருள்முதல் வாத தன்மை அதனிடமிருந்து பறிக்கப்படுகிறது. நேர்மாறாக இப்படிப்பட்ட கருத்துப்படிவங்களுக்கு கருத்துமுதல்வாத, மீண்டும் அதே நிலைக்கு சுழன்று வருகின்ற, விதிமீது நம்பிக்கை ஏற்படுத்தும் முறையிலான விளக்கங்களை தர்ஷன்தாரிகள் தருகின்றனர்.

சமுதாயத்தில் நிலவிவரும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதில் இப்படிப்பட்ட விளக்கங்கள் இந்திய மக்களுக்கு உதவுவதில்லை. தொண்டுதொட்ட காலத்தில் மனிதர்களுக்கும் இயற்கைக்கும் இடையிலேயும், மனிதர்களுக்கும் மனிதர்களுக்கும் இடையிலேயும் சரியான உறவுமுறைகளை ஏற்படுத்திக்கொள்ள தர்ஷன் மக்களுக்கு உதவியது. ஆனால் இன்று சமுதாயம் மற்றும் இயற்கையின் அழிவுச் சக்திகளுக்கு மனிதர்கள் ஊமை பலியாடுகளாக ஆக்கப்படுகிறார்கள். தர்ஷனின் தவறான விளக்கங்களை இந்திய கம்யூனிஸ்ட்டுகள் எதிர்த்துப் போராடாதது இந்தியாவினுடைய வருத்தத்தக்க நிலையாகும். ஆங்கிலேய - அமெரிக்கர்களைப் பொறுத்தவரை குறிப்பாக காலனிய ஆட்சி நாட்களிலிருந்து தர்ஷனை வேண்டுமென்றே தாழ்வுபடுத்தி இன்றைய காலகட்டத்திற்கு பொருத்தமற்றதாகவும் மங்கிய பழங்காலத்திற்குரிய இறைமைவாத பண்டித ஆராய்ச்சிப் பொருளாக அதை சிறுமைப்படுத்துவதும் புரிந்து கொள்ளக் கூடியதே. ஆனால் இந்திய கம்யூனிஸ்ட்டுகள் ஏன் இதற்கு பலியாகவேண்டும்?

இந்திய தத்துவத்தை வளர்க்காததின் மூலம் இறைமை வாத பண்டித ஆராய்ச்சியின் பிடியிலிருந்தும் பல்கலைக்கழகங்கள் மற்றும் மத ஸ்தாபனங்களின் கட்டுப்பாட்டிலிருந்தும் விடுவிக்காததின் மூலம் இந்திய சமுதாயத்தை எதிர்நோக்கியுள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு உதவும் கண்ணோட்டத்துடன் தங்களையும் மக்களையும் தயார்படுத்திக் கொள்ளாததின் மூலமும் இந்திய கம்யூனிஸ்ட்டுகள் உடமை வர்க்கம் தனது ஆட்சியை நீட்டித்துக்கொள்ள உதவியுள்ளனர். உடமைவர்க்கமும் அதன் அரசியல் கட்சிகளும் இந்திய தத்துவத்தை போலியாகப் புகழ்ந்து கொண்டுவரும் அதே

நேரத்தில் இந்திய மரபுகளையும் தன்மைகளையும் போர்வையாக பயன்படுத்திக் கொண்டு தங்களுடைய உள்சண்டையை நடத்தி வருகின்றனர். இதற்கிடையில் இந்திய மக்களின் "பிற்போக்குத் தனத்தையும் முற்போக்குத்தனத்தையும்" பற்றி விவாதித்துக் கொண்டு பார்வையாளர்களாக கம்யூனிஸ்ட்டுகள் நிற்கிறார்கள். ஏதோ தத்துவம், கோட்பாடு ஆகியவற்றின் பிரச்சனை ஒரு ஆடையைக் களைந்துவிட்டு மற்றொரு ஆடையை அணிந்து கொள்வதைப்போல, இந்திய வரலாற்றின் அல்லது மதங்களின் பழைய சின்னங்களை தனதாக்கிக்கொள்ள வேண்டுமா என்றுகூட அவர்களில் சிலர் விவாதித்து வருகின்றனர். இப்படிப் பட்ட செயல் சமுதாயத்தில் தத்துவத்தின் முக்கியத்துவத்தை எள்ளி நகையாடுகிறது. வரலாறு உணர்வுபூர்வமாக உருவாக்கப் பட்டு வரலாற்றிற்கு முந்தைய கட்டமான அராஜகத்திற்கும் தன்னிச்சையான எழுச்சிகளுக்கும் முடிவுகட்டும் நேரத்தில் கோட்பாட்டின் தேவையை எள்ளி நகையாடுகிறது. இந்திய கம்யூனிஸ்ட்டுகள் கோட்பாட்டை முடிந்தளவிற்கு மிக உயர்ந்த கட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டும். இந்தியாவில் மட்டுமல்லாது உலகம் முழுவதிலும் சமுதாய முன்னேற்றத்திற் கான பாதையை திறந்து விடுவதில் உலகளவில் ஒரு பங்களிப்பாக ஏற்றுக் கொள்ளக்கூடிய அளவிற்கு கோட்பாட்டிற்கு ஒரு உயர்ந்த வடிவத்தை அவர்கள் ஏற்படுத்த வேண்டும்.

இந்தியாவில் சோசலிசத்திற்காகவும் கம்யூனிசத்திற் காகவும் எழுபது ஆண்டுகால போராட்டத்தை கடந்துவந்த பிறகு இந்திய கம்யூனிஸ்ட்டுகள் அனைவரும் வெளிநாட்டிலிருந்து வந்துள்ளன என்பதை மட்டும் காரணம் காட்டி கோட்பாடுகளை எதிர்க்க முடியாது என்பதை புரிந்துகொள்ள வேண்டும். இந்திய சமுதாயத்தை அடிமைப்படுத்துவதில் அவை கருவிகளாக இருப்ப தனாலேயே அவற்றை நிராகரிக்க வேண்டும். சமுதாயம் தன்னை இருபத்தியொன்றாம் நூற்றாண்டிற்கு தயார்படுத்திக் கொள்ள வேண்டுமென்றால் ஐரோப்பிய சமூக—ஜனநாயகம் மற்றும் உடமைவர்க்க சோசலிச வகைகளின் மூட்டைமுடிச்சுகளையும் விட்டுச்செல்ல வேண்டும். இதுதான் முக்கிய விஷயம். அந்தந்த நாட்டின் பருப்பொருள் நிலைமைகளுக்குள் வரலாற்று ரீதியான வளர்ச்சி பெற்ற கோட்பாடும் தத்துவமும் இல்லாமல் அந்த நாட்டில் சோசலிசமும் கம்யூனிசமும் கட்டியமைக்க முடியாது என்பது உணரப்படவேண்டும். ஐரோப்பிய தத்துவத்தின்

மூலமாகத்தான் இந்திய தத்துவமும் சிந்தனையும் தனது வெளிப் பாட்டைக் காணமுடியும் என்று ஆங்கிலேய காலனிய ஆதிக்கத் தினால் நுழைக்கப்பட்ட பாரம்பரியம் முழுவதிற்கும் இது ஒரேயடியாக முடிவுகட்டும்.

பிளாட்டோ, அரிஸ்டாட்டில் ஆகியோரது காலத்தில் தோன்றிய ஐரோப்பிய தத்துவார்த்த பாரம்பரியம் அறிவொளி மற்றும் விளக்கக் காலக்கட்டத்தில் நிறைவுபெற்று, நவீன ஐரோப்பிய தேசிய—அரசை தோற்றுவித்த புரட்சிகர போராட்டத் தின் போது அது மேலும் நன்றாக வடிவுபெற்றது. இருந்தாலும் இந்த மகத்தான வளர்ச்சியை தொடர்ந்து பகுத்தறிவு எதிர் இயக்கம் தோன்றியது. இது காரல் மார்க்ஸினால் நடத்தப்பட்ட சமூக விஞ்ஞானத்தின் புரட்சிமயமாக்குதலுக்கும் பாட்டாளி வர்க்க புரட்சி ஏற்படும் அச்சத்திற்கும் ஐரோப்பிய உடமை வர்க்கத்தின் எதிர்செயலாக இருந்தது.

இந்த பகுத்தறிவு எதிர்ப்பைத்தான் ஐரோப்பிய காலனியாதிக்கர்கள் தங்களுடைய காலனிகள் மீது சுமத்தினார் கள். இந்த காலனிகள் விடுதலை பெற்ற பிறகும்கூட இது தொடர்ந்து நடத்தப்பட்டது. இப்படிப்பட்ட காலனியாதிக்க தத்துவத்தின் தப்பெண்ணங்களின் அடிப்படையில் இந்தியாவை நோக்குவது சில அந்நிய அறிவாளிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடுமாக இருக்கும். "வெள்ளைக்காரனின் சுமை" எனும் எண்ணத்தை, வறண்ட இந்திய ஆன்மாக்களை அடிமைப்படுத்தி நாகரிகப்படுத்த முயன்ற காலனியாதிக்கர்களின் மதப்பிரச்சார உற்சாகத்தை நியாயீகரிக்கக்கூட அது உபயோகப்படலாம். இரத்தம் சிந்துதலின் மூலமும் கைப்பற்றுதலின் மூலமும் அவர்கள் இந்தியாவை நாகரிக சமுதாயத்தின் ஆதிக்கத்திலும் ஐரோப்பிய காலனித்துவ தத்துவத்தின் ஆதிக்கத்திலும் கொண்டுவந்தார்கள். அந்த நாகரிக சமுதாயமும் அந்த ஐரோப்பிய தத்துவமும் தொழிலாளிவர்க்க விடுதலை இயக்கம் முன்னேற ஒன்றும் செய்ய முடியாது.

மக்களின் காலனியாதிக்க அழிவு ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியது. அந்த வெற்றிடத்தை பகுத்தறிவு எதிர்ப்பைக் கொண்டு காலனியாதிக்கர்கள் நிரப்ப முயன்றார்கள். இந்திய சமுதாயத்தையும் தத்துவத்தையும் அவர்கள் மறுத்தார்கள். இந்திய சமுதாயமும் தத்துவமும் வளர்ச்சி பெற்று முன்னேற வேண்டுமென்றால் அவற்றை இப்போது நாம் மறுக்கவேண்டும்.

அவர்களுடைய பகுத்தறிவு எதிர்ப்பை முறியடிப்பது பகுத்தறிவுக்கு வழியைத் திறந்துவிடும்.

பலகாலம் முன்பு ப்ரெட்ரிக் ஏங்கல்ஸ் "...ஒவ்வொரு காலகட்டத்தின் தத்துவமும் தனது முன்னோர்களால் விட்டுச் செல்லப்பட்ட சில திட்டவட்டமான சிந்தனைப் பொருட்களை முன்னதாகக் கொள்கிறது, அதிலிருந்து அது தொடங்குகிறது..."[4] என்று கூர்மையாக சுட்டிக் காட்டினார். நமது முன்னோர்கள் நமக்கு "சில திட்டவட்ட சிந்தனைப் பொருட்கள்" எதையும் தரவில்லை என்று இந்திய கம்யூனிஸ்ட்டுகளான நாம் மறைமுகமாக சொல்கிறோமா?

எப்படி காரல் மார்க்சும் ஏங்கெல்சும் தங்களுடைய பழைய உள்ளுணர்வுடன், அதாவது அவர்களுடைய காலகட்டத்தில் நிலவி வந்த எண்ணங்களுடன் கணக்குத் தீர்த்துக் கொண்டார்களோ அதே போல இந்தியாவில் இன்று நிலவும் உள்ளுணர்வுடன், நமது பழைய உள்ளுணர்வுடன் நாமும் கணக்குத் தீர்த்துக் கொள்ள வேண்டும். அது இருப்பதையே நாம் மறுத்தால், இந்திய தத்துவத்தை மறுத்தால், நமது முன்னோர்கள் நமக்கு 'சிந்தனைப் பொருட்களை' விட்டுச் சென்றுள்ளார்கள் என்பதை நாம் மறுத்தால் இந்த கணக்குத் தீர்ப்பை நாம் ஆரம்பிக்கக்கூட முடியாது. நமது முன்னாள் உள்ளுணர்வுடன் நாம் கணக்குத் தீர்த்துக் கொள்ளவில்லை என்றால் தத்துவத்தின் செயல்பரப்பு இந்திய உடமை வர்க்கத்தின் கைகளிலும் ஏகாதிபத்தியத்தின் கைகளிலும் தொடர்ந்து இருந்துவிடும். இந்திய தத்துவம் மற்றும் கோட்பாட்டின் வளர்ச்சிக்கு தடை ஏற்பட்டுவிடும்.

இந்திய கம்யூனிஸ்ட்டுகளான நாம் இந்திய தத்துவமான *தர்ஷனிலிருந்து* பொருள்முதல்வாத புரட்சிகர அம்சத்தை அதாவது எல்லா பொருட்களும் நிகழ்வுப்போக்குகளும் தங்களைத் தாங்களே வெளிப்படுத்திக் கொள்கின்றன என்பதை எடுத்துக் கொள்கிறோம். இந்திய உடமைவர்க்கம் நம்மை நம்பச் செய்வதைப் போல பொருட்களும் நிகழ்வுப்போக்குகளும் தங்களுடைய வறட்டுவாத ரூபத்தில் தங்களை வெளிப்படுத்திக்

---

4 மார்க்ஸ் & ஏங்கெல்ஸ், "தேர்வு கடிதங்கள்", அந்நிய மொழிகள் பதிப்பகம், மாஸ்கோ, ரசிய பதிப்பை தொடர்கிறது (கோஸ்பாலிட்ஸ்டாட், மாஸ்கோ, 1953) சி. சிமிட்டிற்கு ஏங்கல்ஸ், அக்டோபர் 27, 1890. பக்கம். 506.

கொள்வதில்லை. மாயா இயங்கிவரும் முறை, அதாவது ***ஆவாகமன்*** இப்படிப்பட்ட வறட்டுவாத முறை வெளிப்பாடுகளை அனுமதிப்பதில்லை. ***ஆவாகமன்*** என்பது வந்துபோகும் குணத்தையும் தோற்றம் பெற்று பின்னர் மறைந்து போகும் குணத்தையும் ***மாயாவிற்கு*** தருகிறது. தங்களுடைய வளர்ச்சி கட்டத்திற்கு ஏற்ப பொருட்களும் நிகழ்வுப் போக்குகளும் தங்களை வெளிப்படுத்திக் கொள்கின்றன. நிலைமைகள் மாறமாற அவர்களுடைய வெளிப்பாடும் அதற்கேற்ப மாறுகின்றன. இதை உணர்வது இந்திய தத்துவத்தையும் கோட்பாட்டையும் நிறுவுவதற்கான தொடக்கக் கட்டமாகும். எப்படி இயக்கவியல் வரலாற்று பொருள்முதல்வாதம் முடிவான கட்டம் இல்லையோ அதேபோல் இதுவும் முடிவானதல்ல. இதுவரை ஏற்பட்டுள்ள அசாத்தியமான கண்டுபிடிப்புகள் என்றென்றைக் கும் உலகமக்கள் அனைவருக்கும் மனித இனத்திற்கு தேவைபடுகின்றவற்றிற்கு உச்சநிலையும் கடைசி வார்த்தையும் என்று நினைப்பது முட்டாள்தனம். இப்படிப்பட்ட இழிவான கருத்து இன்றைய நிமைமைகளோடு திருப்தியடைந்து உள்ளவர்களையும் இன்றைய அமைப்பிலிருந்து பயனடைவர் களையும்தான் கவரும்.

வெளிநாட்டு காலனித்துவ பாரம்பரியத்தையும் பொருளாதார அரசியல் அமைப்பையும் மற்ற ஸ்தாபனங்களை யும் உறுதிப்படுத்துவதன் மூலம் நாடு முழுவதையும் அந்நிய மூலதனத்திற்கு சார்புநிலை கொண்டதாக உடமைவர்க்கம் சிறுமைப்படுத்தியுள்ளதைப் போலவே ஐரோப்பிய தத்துவத்திற் கும் சார்புநிலை கொண்டதாக சிறுமைப்படுத்தியுள்ளது. சிந்தனைப் பொருட்களையும் பொறுத்துக்கூட அது ஒரு பிச்சைக் காரனாக மாற்றப்பட்டுள்ளது. மக்களுக்கு எதிராக அது புரிந்து வரும் மிகப்பெரிய குற்றம் இது. அதனுடைய பள்ளிக்கூடங்கள் அந்நிய சிந்தனைப் பொருட்களால் நிரப்பப்பட்டுள்ளன. நாட்டின் நடைமுறை மொழி அதாவது "தேசிய மொழி" கூட அந்நிய மொழியாக இருக்குமளவிற்கு இது வந்துவிட்டது.

ஏங்கெல்ஸைப் பொறுத்தவரை, "மார்க்ஸ், பொருட்களி லும் உறவுகளிலும் உள்ள பொதுவான உள்ளடக்கத்தை சாராம்சப்படுத்தி அதை ஒரு பொதுப்படையான தர்க்கரீதியான கூற்றாக வெளிப்படுத்துகிறார். அதனால் அவருடைய கருத்துப்பொருளானது பொருட்களில் ஏற்கெனவே உள்ள

உள்ளடக்கத்தை எண்ணத்தின் வடிவிலாக பிரதிபலிக்கிறது.[5] தத்துவம் அந்நியதாக இருந்தால் 'பொருட்களிலும் உறவுகளிலும் உள்ள பொதுவான உள்ளடக்கமும்' அந்நியதாகவே இருக்கும். வேறு வார்த்தைகளால் கூறினால், இப்படிப்பட்ட தத்துவம் இந்திய சமுதாயத்தில் "ஏற்கெனவே பொருட்களிலுள்ள உள்ளடக்கத்தை" பிரதிபலிக்காது. உடமைவர்க்கமானது பெரும் தொழிற் குடும்பங்களும் முதலாளிகளும் நிலப்பிரபுக்களும் ஆங்கிலேய காலனிய அமைப்பினால் உருவாக்கப்பட்டவர்கள். ஆங்கிலேய காலனியாதிக்கர்கள் வேறுபலவற்றுடன் சுரண்டலை அடிப் படையாகக் கொண்ட தனியுடமை உறவுகளையும், அந்த உறவுகளை நியாயீகரிக்கும் சிந்தனைப் பொருளையும் உடமை வர்க்கத்திற்கு தந்தனர். கடந்த காலத்தில் அவர்களுக்கிருந்த எல்லாவற்றையும் அழித்துவிட்டதன் மூலம் ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்ட வர்க்கங்களின் சிந்தனைப் பொருளை ஏற்றுக் கொள்வது அல்லது கடந்த காலத்தை மறுத்ததின் மூலம் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தில் தொலைந்து போவது, இந்த இரண்டு வழிகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள ஆங்கிலேயர்கள் இந்தியர்களை கட்டாயப்படுத்தினார்கள். புரட்சிகர கம்யூனிஸ்ட்டு கள் இவை இரண்டேயுமே நிராகரித்து ஆங்கிலேயர் விட்டுச் சென்ற சிந்தனைப் பொருளையும் அவர்கள் உருவாக்கிய வெற்றிடத்தையும் உடைத்தெறிய வேண்டும்.

இந்திய ஆளும்வர்க்கங்கள் அளிக்கும் ஆங்கிலேய சிந்தனைப் பொருளானது இந்திய தத்துவம் மற்றும் கோட் பாட்டின் வளர்ச்சியை மறுக்கிறது. இதை இனபடுகொலையென (குறைந்த பட்சம் கலாச்சார இனபடுகொலை என) கூறலாம். ஆனால் இந்திய உடமைவர்க்கம் அதைப்பற்றி பெருமைப் படுகிறது. இந்தியத் தொழிலாளிவர்க்கம் மற்றும் மக்களின் நலன்களுக்கு எதெல்லாம் பகைமையாக உள்ளனவோ அவற்றையெல்லாம் அது உமிழ்கிறது. இந்திய கம்யூனிஸ்ட்டுகள் கடந்த காலம் விட்டுச்சென்றுள்ள திட்டவட்டமான சிந்தனைப் பொருளையும் பொதுப்படையாக எடுத்துக்கொள்ளப்பட்ட தொழிலாளி வர்க்க இயக்கத்தின் அனுபவத் தொகுப்பையும் அடிப்படையாக எடுத்துக் கொண்டு தனக்கென்று ஒரு ஆன்மீக ஆயுதத்தை தரக்கூடிய ஒரு கோட்பாட்டை, தொழிலாளி வர்க்கமே

---

5 மு.கு: ஏங்கெல்ஸ் க.கவுட்ஸிக்கு செப்டம்பர் 20, 1884, பக்கம் 454

அதன் பொருளாயத ஆயுதமாக விளங்கக்கூடிய ஒரு கோட்பாட்டை வளர்த்தெடுக்க வேண்டும்.

பாட்டாளி வர்க்கமானது புரட்சியின் இருதயம் என்றும் தத்துவமானது அதனுடைய தலை என்றும் காரல் மார்க்ஸ் சுட்டிக்காட்டினார். பொருளாயத ஆயுதமாகவும் இருதயமாகவும் உள்ள பாட்டாளி வர்க்கம் இந்தியனாக உள்ள போது அதற்கு எப்படி ஒரு ஆங்கிலேய தலை வழிகாட்ட முடியும்? மேலும் தலையே இல்லையென்றால் இருதயத்தினால் என்ன பயன்? ஐரோப்பிய சமூக–ஜனநாயகமோ அல்லது உடமைவர்க்க சோசலிசத்தின் பல்வேறு வடிவங்களோ தலை என்று மறைமுகமாக கூறுவது மண்ணில் தனது தலையை புதைத்துக் கொள்வதாகும்; தொழிலாளி வர்க்கத்திற்கும் மக்களுக்கும் எதிரான நலன்களுக்கு சேவை செய்யும் அழுகிப்போன பாரம்பரியத்தைத் தொடர்வதாகும். அதனுடைய விடுதலைப் போராட்டத்தில் வழிகாட்டியாக விளங்க தொழிலாளி வர்க்கத்திற்கு தனக்கே சொந்தமான ஒரு தலையை, இந்திய கோட்பாடு மற்றும் தத்துவத்தை, இந்திய கம்யூனிஸ்ட்டுகள் அதற்கு அளிக்க வேண்டும். ஒன்று தொழிலாளி வர்க்கம் தனக்கே சொந்தமான தத்துவத்தின் மீது தனது ஆதிக்கத்தை நிறுவவேண்டும் அல்லது ஐரோப்பிய தத்துவத்திற்கு பஜனை பாடி தொழிலாளிவர்க்கத்தை ஆயுதமிழக்கச் செய்து அதையும் சமுதாயத்தையும் என்றென்றைக்கும் அடிமைத்தளையில் வைத்திருக்க உடமைவர்க்கத்திற்கு அது முழு சுதந்திரத்தைத் தரவேண்டும். ஐரோப்பிய மையப்படுத்துதலின் அழுத்தமானது ஐரோப்பிய மற்றும் அமெரிக்க கல்லூரிகளிலிருந்தும் அமைப்பு களிலிருந்தும் வரும் சிந்தனைப் பொருளுக்கு மட்டும்தான் மதிப்பு உண்டு என்றும், அதுவே இருப்பதற்குள் முன்னேறியதும் ஆகும் என்றும் எண்ணுகிறது. இந்திய கம்யூனிஸ்ட்டுகள் இதை எதிர்த்து தடுமாற்றமில்லாமல் போராட வேண்டும்.

கிழக்கு திசை மரபு (Orientalism) என்று சொல்லப்படும் கோட்பாடு இந்திய தத்துவம் என்று ஒன்று இருப்பதையே மறுக்கிறது. இந்திய தத்துவத்தை அது ஆன்மீகத்துவமாக சிறுமைப்படுத்தி பொருள்முதல்வாத தன்மையை அதாவது ஒவ்வொரு சமுதாயத்திற்கும் "சில திட்டவட்ட சிந்தனைப் பொருள்" உண்டு எனும் முடிவை எதிர்க்கிறது. உள்நாட்டு மற்றும் அந்நிய தத்துவ ஞானிகளுக்கு இந்திய தத்துவமானது

ஆவலைத் தூண்டும் இலக்காக இருப்பதை அனுமதிக்கமால், இந்திய கம்யூனிஸ்ட்டுகள் இந்திய கோட்பாட்டையும் தத்துவத்தை யும் புரட்சிகர இயக்க வளர்ச்சியின் அடக்கக்கூறாக வளர்த்தெடுக்க வேண்டும்.

சர்வதேசிய ரீதியில் சர்வதேசிய கம்யூனிஸ்ட்டு மற்றும் தொழிலாளர் இயக்கம் முழுவதின் அனுபவத்தை, அதனுடைய பொதுப்படையான ரூபத்தில், எடுத்துக்கொண்டு கம்யூனிஸ்ட்டு தத்துவார்த்த உள்ளுணர்வானது மார்க்சிசத்திலிருந்து லெனினி சத்திற்கும் பின்னர் தற்கால மார்க்சீய—லெனினிய சிந்தனைக்கும் வளர்ந்துள்ளது. இருப்பினும், எப்படி லெனினிசம் — மார்க்சிசத் தின் மறுப்பு அல்லவோ, அதுபோலவே தற்கால மார்க்சீய — லெனினிய சிந்தனையானது லெனினிசத்தின் மறுப்பும் அல்ல. ஒன்றாக எடுத்துக் கொண்டால் அவை வறட்டுத் தத்துவங்கள் அல்ல. மாறாக, செயல் வழிகாட்டி ஆகும். இந்தியப் புரட்சிக்கு வழிகாட்டியாக இருக்கக்கூடிய தத்துவமும் கோட்பாடும் இன்று இந்தியாவிலும் சர்வதேசிய ரீதியாகவும் உள்ள தொழிலாளி வர்க்க இயக்கத்துடன் நெருங்கிய பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டு வளர்ச்சியடையும். இருந்தாலும், பல்வேறு சமூக— ஜனநாயக சந்தர்பபவாத போக்குகளின் வறட்டுவாதமானது இந்த வேலையை நாசப்படுத்த பெருமளவிலான அழுத்தத்தைத் தந்து வருகின்றன.

இந்தப் புரட்சிகர கோட்பாட்டிற்கு பிரதான எதிரியாக விளங்குவது வலதுசாரி சந்தர்ப்பவாதம். உடமைவர்க்கத்தின் தேவைகளுக்கு தொழிலாளி வர்க்கத்தின் வர்க்கப்போராட்டத்தை கீழ்ப்படிய விழையும் சமூக—ஜனநாயக எண்ணங்கள் இவை. இன்று தனியார்மயமாக்குதல் தாராளமயமாக்குதல் எனும் உலக உடமை வர்க்கத்தின் தேவைகளுக்கு தன்னை மாற்றியமைத்துக் கொண்டு வருகிறது. ஐம்பது வருடங்களுக்கும் மேலாக இந்த மாற்றியமைத்தல் தொடர்ந்து வருகிறது. ஒன்று, உலக பாட்டாளி வர்க்கம் முழுமையாக நிராயுதபாணியக்கப்பட வேண்டும் அல்லது அது தனது உடமைவர்க்க போலி உள்ளுணர்வுடன் மோதிக்கொண்டு இந்திய கோட்பாட்டையும் தத்துவத்தையும் புதுப்பித்து நவீனப்படுத்தி இன்றைய காலத்திற்கு ஏற்றதாக மாற்றப்படவேண்டும். அதுவரை இந்த மாற்றியமைத்தல் தொடரும். இந்தப் புரட்சிகர மாற்றியமைத்தலுடனும் வளர்ச்சி யுடனும் இன்றைய காலகட்டத்தின் போலி நடிப்பிற்கும்

கோமாளித்தனத்திற்கும் முடிவு ஏற்படும்.

சோசலிசத்திற்கும் கம்யூனிசத்திற்கும் எதிரான கபடச் செயல் மார்க்சிசத்தை ஒருவிதமான தாராளவகைக் கொள்கை யாக, அதாவது அதன் புரட்சிகர வர்க்க உள்ளடக்கத்தை நீக்கப்பட்ட ஒரு கொள்கையாக காட்டுவது மட்டுமல்லாமல், வினாவிடை பாடமுறை பாணியில் சமூக சிந்தனையின் கடைசி வார்த்தை யாக ஒருவிதமான மார்க்சீய நெறிவெறியாகவும் காட்டப் படுகிறது. அதை லெனினிசத்திற்கு எதிராகவும் லெனினிசத்தை தற்கால மார்க்சீய–லெனினிய சிந்தனைக்கு எதிராகவும் கூட அது காட்டுகிறது.

கடந்த ஆறுவருடங்களில் தங்களை கம்யூனிஸ்ட்டு என்று முன்பு கூறிவந்த பலகட்சிகள் தங்களுடைய பெயர்களை மாற்றிக்கொண்டு இப்போது தங்களை "நயமான", தாராளவாத சமூக–ஜனநாயக கட்சிகளாக தோற்றமளிப்பது குறிப்பிடத்தக்க விஷயம். உடமைவர்க்க பாணியில் தங்களுக்கு வர்க்க உள்ளடக்கமோ தேசிய உள்ளடக்கமோ கிடையாது என்று நடிக்கிறார்கள். ஆனால் உண்மையில் அவர்களுக்கு புரட்சிகர வர்க்க உள்ளடக்கம் கிடையாது. அதே நேரத்தில் தங்களுடைய பெயர்களை மாற்றிக் கொள்ளாத வேறுபலர் இதைப்போலவே மிகவும் 'நயமான' அமைதியான தாராளவகைக் கம்யூனிஸ்ட்டு களாக, ஏகாதிபத்தியமும் உடமைவர்க்கமும் உலகப் பிற்போக்கும் "ஒத்துப்போகக்கூடிய" சாத்தியம் உள்ளவர்களாக புறத்தோற்றத் தை தனதாக்கிக் கொண்டுள்ளனர். உதாரணத்தற்கு ஏப்ரல் 1995ல் நடைபெற்ற சி.பி.ஐ (எம்) இன் மாநாட்டில் ரசிய கூட்டமைப்பின் கம்யூனிஸ்ட்டு கட்சியின் (சி.பி.ஆர்.எப்,இன்) தலைவர், உலகில் இருபத்திஒன்று பெரிய கம்யூனிஸ்ட்டு கட்சிகள் பாட்டாளிவர்க்க சர்வாதிகார எண்ணத்தை கைவிட்டுள்ளார்கள் என்று பகிரங்கமாக அறிவித்தார். வேறு வார்த்தைகளில் கூறினால், கம்யூனிசம் என்பது தொழிலாளி வர்க்கத்தின் முழுமையான விடுதலைக்கு இன்றியமையாதது அல்ல, அது வெறும் கொள்கை இலக்கே என்பதாகும். தொழிலாளி வர்க்கத்தின் முழுமையான விடுதலைக்கான இன்றியமையாக் கூறாக கம்யூனிசத்தை உருவாக்குவது பாட்டாளிவர்க்க புரட்சியினாலும் பாட்டாளிவர்க்க சர்வதிகாரத்தினால் மட்டுமே முடியும். கம்யூனிசம் ஒரு கொள்கை இலக்காக இருக்கும்வரை பாட்டாளிவர்க்க புரட்சிக்கும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்

திற்கும் எதிராக நிற்கிறது. உடமை வர்க்க சர்வாதிகாரத்தை மனித இனத்தின் கடைசி செயலாக மாற்றமுடியாததாக என்றுமே தொடரக்கூடியதாக அது ஏற்றுக்கொள்கிறது.

இந்த வரம்பிற்குள் எல்லா சர்வாதிகாரங்களையும் எதிர்க்கும் நிலைப்பாடானது வெறும் சூழ்ச்சியாக, தொழிலாளிவர்க்க விடுதலை இயக்கத்திற்கு எதிரான நம்பிக்கைத்துரோக வஞ்சனைச் செயலாக தோற்றம் தரப்படுகிறது. டூமாவில் இருப்பதற்குள் அதிகமான இடங்களை சி.பி.ஆர்.எப் வென்ற போது செய்தி நிறுவன அறிக்கைகளின்படி கிளிண்டன் நிர்வாகம், "கட்சியின் புதிய இனம் 'பழைய சர்வாதிகார போல்ஷிவிக்குகள்' அல்ல என்று அறிவித்து ரசியாவில் கம்யூனிஸ்ட்டு தேர்தல் வெற்றிகளை அலட்சியப்படுத்தியது" குறிப்பிடத்தக்கது.

தற்கால மார்க்சிய–லெனினிய சிந்தனையானது இந்திய கோட்பாட்டை உருவாக்குவதில் ஒரு வழிகாட்டியாகும். "ஒரு சரியான புரட்சிகர கோட்பாடு... ஒரு வறட்டுவாத கொள்கையல்ல, உண்மையான வெகுஜன புரட்சிகர இயக்கத்தின் செயல்முறை நடவடிக்கைகளுடன் நெருங்கிய தொடர்பு கொண்டுதான் அது தனது முடிவான வடிவத்தைப் பெறுகிறது" எனும் லெனினின் முடிவிற்கு அர்த்தம் என்னவென்றால் உண்மையான புரட்சிகர, உண்மையான விஞ்ஞான கோட்பாடு இன்றைய காலத்திலிருந்து தொடங்கி அதன் தேவைகளைப் பூர்த்தி செய்வதின் மூலம்தான் வளர முடியும். இந்திய கோட்பாட்டை உருவாக்குவதற்கான நமது பணி ஏற்கனவே தொடங்கிவிட்டது. புரட்சிகர கோட்பாட்டினால் வழிகாட்டப் படுவதற்கு பதிலாக வர்க்க எதிரிகளின் நலன்களால் தொழிலாளி வர்க்கம் வழிகாட்டப்பட்டு வருகிறது. உடமை வர்க்கம் பல கூறுகளாக பிளவுபட்டுள்ளது. இந்தக் கூறுகள் ஒன்றோடொன்று மோதிக் கொண்டு தங்களுடைய அணியிலுள்ள அதே முறையில் தொழிலாளி வர்க்கத்திற்கும் உழைப்பாளர் களுக்கும் இடையே பிளவை ஏற்படுத்தி புரட்சிகர இயக்கத்திற்கு நாசத்தை ஏற்படுத்தியுள்ளன. உடமை வர்க்கத்திலுள்ள பிளவுகள் புறவய ரீதியில் தொழிலாளி வர்க்கத்திற்கு முன்னேற ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தருகின்றன. ஆனால் புரட்சிகர இந்திய கோட்பாடு இல்லாததனால் தொழிலாளிவர்க்கம்தான் பிளவுபட்டுள்ளது, அதன் விடுதலை இயக்கம்தான் தற்காலிகமாக முடமாக்கப்பட்டுள்ளது.

தொழிலாளி வர்க்க இயக்கத்தில் பல்வேறு கோட்பாடு களை ஆதரித்துக் கொண்டு சில பெரிய, பல சிறிய கம்யூனிஸ்ட்டு கட்சிகளும் குழுக்களும் இருக்கின்றன. இவற்றில் சில எதிரி வர்க்க கோட்பாடுகளாகும். வேறு பல செயல்முறைக்கு சம்பந்தமே இல்லாததனால் மிகப்பெரிய குழப்பத்தை உண்டாக்குவதைத் தவிற வேறொன்றும் செய்வதில்லை. கம்யூனிஸ்ட்டுகளின் கட்சிகளையும் தவிர்த்து சமூக–ஜனநாயக கட்சியான காங்கிரஸ் (ஐ) யும் உள்ளது. பல சோசலிஸ்ட்டு கட்சிகளுக்கும் செல்வாக்கு உள்ளது. முழுக்க முழுக்க பிற்போக்கான கட்சிகளும் உள்ளன. இந்த ஏற்பாடு உடமை வர்க்கத்திற்கு மிகுந்த திருப்தியை தருகிறது. ஆனால் அவ்வப்போது கிளர்ச்சி நடத்துவதில் தொழிலாளர்கள் இன்னமும் வெற்றி பெருகிறார்கள்.

மத, பிரதேச, மொழி, ஜாதி, பழங்குடிஇன அடிப்படையில் நாடு முழுவதிலும் உடமை வர்க்கத்தின் பல்வேறு பகுதிகள் வழக்கமாக உணர்ச்சிகளை தூண்டி விடுகிறார்கள். ஒருவரோடு ஒருவர் கணக்கு தீர்த்துக்கொள்ளவும் தங்களுடைய எதிரிகளை மிஞ்சவும் இது வழக்கமாக நடத்தப்படுகிறது. அதே நேரத்தில் இதே அடிப்படையில் மக்களுக்கிடையேயும் பிளவு ஏற்பட்டு அவர் களுக்கு எதிராக பயங்கரமான அவலங்கள் நடத்தப்படுகின்றன. பஞ்சாபிலும் வடகிழக்கிலும் நடந்த அறுவறுப்புகள், கர்நாடகத்தில் நடந்த தமிழர் படுகொலை, இந்திராகாந்தியின் கொலைக்கு பின்னர் நடத்தப்பட்ட சீக்கியர்களின் படுகொலை, பாபரி மசூதி இடிந்த பிறகு இந்தியா முழுவதிலும் முஸ்லிம்கள் கொல்லப்பட்டது இவை எல்லாம் இரத்தம் சிந்தலின் சில மிகப்பெரிய பகிரங்க நிகழ்வுகளாகும். உடமை வர்க்கத்திற்கு இடையே உள்ள உள்சண்டைகள் விளைவாக 1947ல் ஏற்பட்ட இந்திய பிரிவினையின்போது லட்சக்கணக்கான மக்கள் கொன்று குவிக்கப்பட்டும் அகதிகளாகவும் மாற்றப்பட்டனர். அன்று தொடங்கியது இன்றுவரை தொடர்ந்து மக்களின் மீது மீண்டும் படுகாயங்களை ஏற்படுத்தி உடமைவர்க்கத்தின் சாதகமான முறையில் ஆட்சிஅமைப்பு முறையில் பிளவு ஏற்படுத்தியுள்ளது.

இந்த சூழ்நிலையிலிருந்து விடுபடுவதற்கான பாதையை காண்பித்து புரட்சிகர பாதையின் அடிப்படையில் தொழிலாளி வர்க்கத்தின் மத்தியிலும் உழைப்பாளர்களின் மத்தியிலும்

அரசியல் ஒற்றுமையை கட்டியமைப்பதற்குப் பதில் கம்யூனிஸ்ட்டு இயக்கமானது தானே உடமைவர்க்க அணிகளினிடையே உள்ள பிளவுக்கோடுகளின் அடிப்படையில் பிளவுபட்டுள்ளது. இந்த மோதல்களில் ஒரு பக்கத்திலோ மற்றொரு பக்கத்திலோ சிக்கிக்கொள்ளும் மனப்பான்மை அதற்கு இருந்துள்ளது. இந்த அல்லது அந்த உடமைவர்க்க குழுவிற்கோ முன்னணிக்கோ பரிந்து வாதாடுபவனாகவும் இருந்துள்ளது. தத்துவார்த்த மற்றும் அமைப்பு ரீதியான வேலையின் மூலம் புரட்சிகர இயக்கத்தை வளர்ப்பதில் கவனம் செலுத்துவதற்கு பதிலாக இந்த அல்லது அந்த உடமைவர்க்கப் பகுதிக்கும் முதலாளித்துவ அமைப்பிற்கும் அடிவருடியாக மாறி தனது பாதையை மாற்றிக்கொண்டுள்ளது. இதன் விளைவாக இந்திய புரட்சிகர இயக்கமானது ஒரு முட்டுச்சந்தில் நிற்கிறது. இந்திய மண்ணில் கம்யூனிசம் தழைத்தோங்க ஒரு முக்கிய ஆதாரப்பொருளான இந்திய புரட்சிகர கோட்பாட்டை உருவாக்குவதின் வேலையின் மூலமாகத்தான் புரட்சிகர தொழிலாளி வர்க்க விடுதலை இயக்கமானது தன்னை இந்த வேதனை மிகுந்த நிலையிலிருந்து விடுவித்துக் கொண்டு தனது இலக்கை அடைய முடியும்.

# பாகம் 5

# இந்திய கம்யூனிஸ்ட்டுகளின் ஒற்றுமையை மீண்டும் உருவாக்குவது பற்றி

தோழர்களே, இந்த சமயத்தில் "இந்திய கம்யூனிஸ்ட்டுகளின் ஒற்றுமையை மீண்டும் உருவாக்குவது" என்பது மிகத் தீவிரமான கேள்விகளில் ஒன்றாக உள்ளது. "இந்திய கம்யூனிஸ்ட்டுகளின் ஒற்றுமையை மீண்டும் உருவாக்குவது" என்ற சொற்றொடர் இந்திய கம்யூனிஸ்ட்டு இயக்கத்தில் 1964இலிருந்தும் அதற்கு முன்னாலும் மிக அதிகமாக உபயோகப்படுத்தப்படும் ஒன்றாக உள்ளது. இருந்தாலும், ஒற்றுமை இந்திய கம்யூனிஸ்ட்டுகளுக்கு பிடிகொடாமல் இருந்து வந்துள்ளது. இந்த சமயத்தில் கம்யூனிஸ்ட்டுகளின் ஒற்றுமை என்றால் என்ன என்பதைப் பற்றியும் இந்திய புரட்சிகர தத்துவத்தை உருவாக்குவது இந்திய கம்யூனிஸ்ட்டுகளின் ஒற்றுமையை மீண்டும் உருவாக்குவதில் என்ன பங்களிக்கும் என்பதைப் பற்றியும் தொழிலாளி வர்க்க விடுதலையின் புரட்சிகர இயக்கத்தில் இந்திய கம்யூனிஸ்ட்டுகளை ஒற்றுமைப்படுத்தும் வேலை எந்த இடம் பெறுகிறது என்பதைப் பற்றியும் எல்லா இந்திய கம்யூனிஸ்ட்டுகளும் தெளிவாகவும் சுருக்கமாகவும் புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது.

1920ல் இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சி ஸ்தாபிக்கப்பட்டதிலிருந்தே இந்திய கம்யூனிஸ்ட்டுகள் பிளவுபட்டும் அவர்களுடைய அணிகள் பெரிய அல்லது சிறிய பகுதிகளாக பிளவுபட்டுள்ளது. இந்த நாள் வரை அவர்களால் கம்யூனிசத்திற்கான இடைவெளியை நிறைவுசெய்ய இயலவில்லை. தாங்கள் தான் அதிக எண்ணிக்கையை கொண்டவர்கள் என்று சிலர் உரிமை கொண்டாடுவதனால் தொழிலாளி வர்க்க இயக்கமும் மக்கள் இயக்கமும் உணர்கின்ற வெற்றிடம் நிறைவு பெற்றுவிடாது. வெளியாரிடமிருந்து வரும் வெற்றாரவாரங்களும் புகழ் மொழிகளும் தேசிய மற்றும் சர்வதேசிய சூழ்நிலைகளை தீரஆராய்ந்து அதன் அடிப்படையில் ஒற்றுமையின்மைக்கு முடிவுகட்ட சூழ்நிலைகளை உருவாக்குவதற்கு ஈடாகாது.

இந்திய கம்யூனிஸ்ட்டுகளிடமுள்ள ஒற்றுமையின்மை

அவர்கள் தத்துவம் மற்றும் கருத்தியல் துறைகளில் முதிர்ச்சியடையவில்லை என்பதையும் அவர்கள் பல்வேறு வடிவத்தில் தோற்றமளிக்கும் உடமைவர்க்க கொள்கைகளுக்கு கீழ்ப்படிந்ததையும் குறிக்கிறது. உடமைவர்க்க கொள்கைகளிடம் முதிர்ச்சியின்மையும் கீழ்ப்படிந்ததுமே தொழிலாளி வர்க்கத்தின் தன்னிச்சையான மற்றும் விழிப்புணர்வுள்ள இயக்கத்தை தடைசெய்யும் முக்கிய அகவய காரணியாக உள்ளது. இதுவே மக்கள் இயக்கங்கள் குறிப்பாக, அரசு பயங்கரவாதத்தை எதிர்த்த போராட்டமும் மற்றும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்கான போராட்டமும், தகர்ந்துள்ளதற்கும் காரணமாகும். அதேபோல இது அறிவொளி இயக்கத்திற்கும் ஒரு பெரிய விபத்தாக இருக்கிறது. உண்மையாகவே, இது பெருமுதலாளிகளின் மற்றும் பெரும் நிலப்பிரபுக்களின் ஆட்சி தொடருவதற்கு பெரிய சமூக அரணாக உள்ளது.

யார் மற்றும் எந்த காரணிகள் இந்த ஒற்றுமையின்மைக்கு பொறுப்பாளிகள் என்று நிர்ணயிப்பது மட்டுமே இன்றைய தீவிரமான கேள்வியில்லை. நோக்கம் என்னவென்றால் நிலைமையை மாற்றுவது. கம்யூனிஸ்ட்டுகளின் ஒற்றுமைக்கு பெரிதும் பங்காற்றும் காரணிகளில் ஒன்று இந்திய தத்துவத்தை உருவாக்குவது. மற்றொரு காரணி, இந்த காலத்திய கம்யூனிச இயக்கத்திற்கான பொது நிலைப்பாட்டை விரிவுபடுத்தி தெளிவுபடுத்துவது. இப்படிப்பட்ட பொது நிலைப்பாட்டினைச் சுற்றியே இந்திய கம்யூனிஸ்ட்டுகளின் ஒற்றுமைக்கு ஒரு நடைமுறை உருவத்தைக் கொடுக்க முடியும்.

உலகத்திலுள்ள பல்வேறு அரசியல் சக்திகள் ஒற்றுமை என்ற கோஷத்தை கீழ்த்தரமான முறையில் ஆரவாரம் செய்து கொண்டும் தவறாகப் புரிந்துகொண்டும் உள்ளார்கள். ஒற்றுமை என்ற கோஷம்தான் என்ன? அது ஏன் எப்பொழுதும் எழுப்பப் படுகிறது? ஏன் தொழிலாளி வர்க்கமும் வெகுஜன மக்களும் விடாப்பிடியாக இந்தியாவிலும் மற்றும் உலகம் முழுவதிலும்கூட கம்யூனிஸ்ட்டுகளின் ஒற்றுமையைக் கோருகிறார்கள்? இந்தக் கேள்வியை சி.ஜி.பி.ஐ. எவ்வாறு நோக்குகிறது?

கம்யூனிஸ்ட்டுகளின் ஒற்றுமை என்ற கேள்வி இந்தப் புரட்சிப் பின்னடைவு காலகட்டத்தில் அதாவது அமெரிக்க ஏகாதிபத்தியம் தன்னுடைய ஆதிக்கத்தில் ஒருதுருவ உலகைக் கோரும் இந்தக் காலகட்டத்தில் மிகமுக்கியமானதாக ஆகிவிட்டது.

இது ரசிய ஏகாதிபத்தியம் ஒரு பலதுருவ உலகைக் கோரும் காலக்கட்டமாகவும் உள்ளது. ஜெர்மெனியும் இந்த விஷயத்தில் தன்னுடைய உயரிய ஆசைகளைக் கொண்டுள்ளது. இதையே மற்ற நாடுகளுக்கும் கூறலாம். உலகை மீண்டும் பிளவுபடுத்தும் போராட்டமெல்லாம் மிகத்தீவிரமாக முதல் உலகப் போருக்கு முன்னதாக ஆரம்பித்துவிட்டிருந்த உலக நிலைமைகளைப் போலவே இன்றும் உலக நிலைமைகள் உள்ளது என்று கூறலாம். இந்த சமயத்தில் அமெரிக்க ஏகாதிபத்தியம் ஒருதுருவ உலகை உருவாக்க முயற்சி செய்கிறது. அது அதற்கான எல்லா எதிர்ப்புகளையும் தன்வசமுள்ள எல்லா அமைதியான வழிகளாலும் அல்லது அவசியம் ஏற்படுமானால் போர் மூலமாகவும் தகர்க்க வேலை செய்கிறது. "கொஞ்சுவதும் மிச்சுவதும்" (Carrot and stick) மற்றும் "வல்லவன் பக்கமே நியாயம்" (Might is Right) என்ற தனது கொள்கைகளை அது பகிரங்கமாக பிரகடனம் செய்துள்ளது.

முதல் உலகப் போருக்கு முன்னான காலகட்டங்களில் தொழிலாளிவர்க்கத்தின் முன்னணிப்படையாக இருந்த சமூக–ஜனநாயகம், ஏகாதிபத்தியம் தன்னுடைய குறிக்கோள் களை அடைய வழிவகுத்தது. தொழிலாளி வர்க்கமும் சமுதாயமும் எதிர்நோக்கிய மிகக்கடுமையான நெருக்கடியி லிருந்தும் படுகொலைகளிலிருந்தும், தலைமை தாங்கி அவர்களை மீட்பது சமூக–ஜனநாயகத்தினிடம் விடப்பட்டிருந்தது. அதற்குப் பதிலாக, ஏகாதிபத்தியங்களுக்கிடையேயான முதல் உலகப்போரின் பயங்கரங்கள் முழுவதும் சமூக–ஜனநாயகம் "தந்தை நாட்டை பாதுகாப்பதற்காக" தன்னுடைய சொந்த உடமைவர்க்கத்தின் வரிசைகளோடு கைகோர்த்து நின்றது.

உலகம் மற்றுமொரு முறை எல்லாப் பக்கங்களிலிருந்தும் நெருக்கடிகளை சந்தித்துக் கொண்டிருக்கும் வேளையில், சி.பி.ஐ. (எம்), சி.பி.ஐ. மற்றுமுள்ள கம்யூனிஸ்ட்டுகள் இந்தியாவின் "தேசிய ஒற்றுமை மற்றும் பிரதேச ஒருமைப்பாடு" என்ற திட்டத்தை தங்கள் வழிகாட்டும் கொள்கையாக ஏற்று தந்தை நாட்டை பாதுகாப்பதற்கு பொறுப்பேற்றுள்ளார்கள் என்ற உண்மையை எந்த ஒரு கம்யூனிஸ்ட்டும் குறைவாக மதிப்பிடக் கூடாது. இப்படிப்பட்ட சமூக நாட்டுப்பற்று கொண்டவர்களாக அனுகூலமான நிலையில் தங்களை நிறுத்திக்கொண்டுவிட்ட அவர்கள், சிக்கலான சூழ்நிலையில் தந்தை நாட்டை

பாதுகாப்பதற்கான ஒரு மாற்றாக தங்களை உடைமைவர்க்கத்திடம் சமர்ப்பிக்கிறார்கள். வேறு வார்த்தைகளில் கூறினால், தொழிலாளி வர்க்கத்திற்கு தலைமை தாங்கி நெருக்கடியிலிருந்து சமுதாயத்தை விடுவிப்பதை விட்டுவிட்டு அவர்கள் உடமைவர்க்க – நிலப்பிரபுத்துவ சமுதாயத்தை பாதுகாக்கிறார்கள். தன்னுடைய அங்கங்களாக உள்ள எல்லா தேசியங்களையும் பழங்குடி மக்களையும் அங்கீகரிக்கும் ஒரு சுந்திர மற்றும் சமத்துவமான புது ஒன்றியத்தைக் கொண்ட புது இந்திய அரசியல் அமைப்பு முறையை கட்டியமைக்க அவர்கள் மறுத்துவிட்டார்கள்.

இப்படிப்பட்ட நிலைமைகளில் "தேசிய ஒற்றுமை மற்றும் பிரதேச ஒருமைப்பாடு" என்ற நிலைப்பாட்டிலிருந்து கம்யூனிஸ்ட்டுகள் திட்டவட்டமாக முறித்துக் கொள்ள வேண்டும். அதே சமயம், தொழிலாளி வர்க்கத்திற்கு தலைமை தாங்கி சமுதாயத்தை நெருக்கடியிலிருந்து விடுவித்துக் கொள்வதற்காக உற்சாகமான விவாதங்களும் சர்ச்சைகளும் கிளர்ச்சிகளும் போராட்டங்களும் எழும் ஒரு சூழ்நிலையை அவர்கள் உருவாக்க வேண்டும்.

இந்த சமயத்தில் இந்திய கம்யூனிஸ்ட்டுகளை ஒரு மிகச் சிக்கலான மற்றும் அலட்சியம் செய்ய முடியாத பிரச்சனை எதிர்கொண்டுள்ளது. இந்திய கம்யூனிஸ்ட்டை தெளிவாக வரையறுப்பதின் அடிப்படையில் சமூக–ஜனநாயகவாதி என்றும் திருத்தல்வாதி என்றும் அல்லது சந்தர்ப்பவாதி என்றும் எல்லாமும் கொண்டு கம்யூனிஸ்ட்டுகளை வேறுபடுத்துதலே தற்காலப் போக்காக உள்ளது. இருந்தாலும், இந்த வேறுபடுத்துதல் குறுங்குழவாத அடிப்படையில் செய்யலாகாது. அதற்கு மாறாக, இந்திய கம்யூனிஸ்ட்டுகளை ஒரே கட்சியின்கீழ் ஒற்றுமைப்படுத்த சி.ஜி.பி.ஐ. வேலை செய்ய வேண்டும். இது தேவையான அளவு முயற்சிசெய்து விவாதங்களும் சர்ச்சைகளும் எழும் சூழ் நிலையை உருவாக்க வேண்டும். அது எல்லா கருத்தியல் மற்றும் அரசியல் சக்திகளையும், விதிவிலக்கில்லாமல் எல்லா கம்யூனிஸ்ட்டுகளையும் ஆராய்ந்து அவர்கள் எந்த இடத்தை ஆக்ரமித்துள்ளார்கள் என்பதையும் கொடுக்கப்பட்ட சூழ் நிலையில் அவர்கள் என்ன பங்கை ஆற்றமுடியும் என்பதையும் சுட்டிக் காட்ட வேண்டும். அது "ஒற்றுமையும் போராட்டமும்" என்ற சூழ்நிலையை உருவாக்க வேண்டும். மேலும், தனிமனிதரை தாக்கி மேற்கூறிய செயல்களிலிருந்து திசைதிருப்பும் நோக்கோடு செய்யப்படும் எல்லா முயற்சிகளையும் எதிர்த்துப் போராட

வேண்டும். அது தனிமனித அவதூறுகள் (Character assasination) மற்றும் கறைப்படுத்தும் பிரச்சாரங்கள் போன்றவற்றில் ஈடுபடும் எல்லா சக்திகளையும் சிக்கிக்கொள்ளாமல் வெட்டி அகற்ற வேண்டும்.

கம்யூனிஸ்ட்டு ஒற்றுமை தொழிலாளி வர்க்கத்தினு டையது. புரட்சிகர இந்திய தத்துவத்தை உருவாக்கவும், பொதுநிலைப்பாட்டை விரிவுபடுத்தி தெளிவுபடுத்தவும் மற்றும் உழைக்கும் வர்க்கம், மக்களுடைய கருத்தியல் மற்றும் அரசியல் நிலையை உயர்த்தச் செய்யும் உற்சாகமான வேலைகள் இந்திய கம்யூனிஸ்ட்டுகளின் ஒற்றுமை மீண்டும் உருவாக்குவதற்கு பெருத்த பங்காற்றும்.

இந்தியாவில் இந்த சமயத்தில் "தேசிய ஒற்றுமை மற்றும் பிரதேச ஒருமைப்பாடு" என்ற கோஷம் பரிபூரணத் தன்மையுடையது என்று நோக்கும் அரசியல் சக்திகள் உள்ளன. அதற்கு மாறாக, சமுதாயத்தை நெருக்கடியிலிருந்து வெளியெடுக் கும் உடனடிச் செயலே மிகமுக்கியமானதாக கருதும் சக்திகளும் உள்ளன. ஒருபுறம் தொழிற்குடும்பங்கள் மற்றும் பெரிய நிலப்பிரபுக்களின் நலன்களையும் மறுபுறம் தொழிலாளி வர்க்கத்தின் மற்றும் உழைக்கும் வெகுஜனங்களின் நலன்களை யும் பிரதிபலிக்கும் இரண்டு பகைமை முகாம்களுக்கிடையே இந்திய அரசியல் அமைப்பு பிளவுபட்டுள்ளது. இந்த இரண்டு வகையாக விஷயங்களைப் பார்க்கும் விதம் இரண்டு எதிர்மறையான அரசியலுக்கு வழிவகுக்கிறது. அவற்றில் ஒன்று மற்றொன்றை வீழ்த்த வழிவகுக்கும்.

"தேசிய ஒற்றுமை மற்றும் பிரதேச ஒருமைப்பாடு" என்ற இந்த கோஷத்தின் அடிப்படையில் இந்திய கம்யூனிஸ்ட்டுகளின் ஒற்றுமையின்மையையும் இந்திய தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமையின்மையையும் உடமைவர்க்கம் தக்கவைக்க இயலாமையை இந்திய கம்யூனிஸ்ட்டுகள் உறுதி செய்ய வேண்டும். அவர்கள் தங்களின் ஒற்றுமையை கட்டியமைத்து பாசிசம் மற்றும் போர் ஆகிய பெரும் ஆபத்தை தவிர்க்க வேண்டும். கம்யூனிஸ்ட்டு இயக்கத்திலுள்ள பிளவுகள் தொடர்ந்து நிலைத்திருப்பதற்கான உடமைவர்க்கத்தின் முயற்சிகளை முறியடிப்பதற்காக சி.ஜி.பி.ஐ. எல்லா இந்திய கம்யூனிஸ்ட்டுகளு டனும் எல்லா அரசியல் சக்திகளுடனும் வேலை செய்து சமுதாயத்தை நெருக்கடியிலிருந்து விடுவிப்பதற்காக தன்னை

அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்.

"ஒற்றுமையும்", "போராட்டமும்" வளர்ச்சியடைந்தும் இயக்கத்தில் இருந்து வரும் எல்லா விஷயங்களுக்கும் மற்றும் நிகழ்வுப்போக்குகளுக்குமான சூழ்நிலைகளையும், அம்சங்களையும், எதிரிகளையும் கொண்டுள்ளதாகும். இந்தியா வளர்ச்சியடைந்தும் இயக்கத்தில் இருந்தும் வரும் ஒரு வர்க்க சமுதாயமாகும். "தேசிய ஒற்றுமை மற்றும் பிரதேச ஒருமைப்பாடு" என்பதை ஆதரிப்பவர்கள் சமுதாயத்தை நெருக்கடியிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று விரும்புபவர்களுக்கு எதிரிகளாக அமைகிறார்கள். இந்த எதிர்மறைகள் இந்தியாவிலும் உலகமெங்கிலுமுள்ள வர்க்கப் பிரிவுகளை பிரதிபலிக்கின்றது. முதலானது அளவின் மாற்றத்திற்காகவும் இன்றுள்ள நிலைமைகளை பலப்படுத்துவதற்காகவும் நிற்கிறது. மற்றொன்று இதற்கு முற்றிலும் எதிரானதற்கு நிற்கிறது. அதாவது இந்த சக்திகள் தரத்தின்தன்மையை மாற்றுவதற்கும் இன்றுள்ள நிலைமைகளை முழுமையாக நொறுக்குவதற்கும் ஆவலாக உள்ளனர்.

இந்திய சமுதாயத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் இந்த சரித்திரம் வாய்ந்த பிரிவில் இந்தியாவிலுள்ள எல்லா கருத்தியல் மற்றும் அரசியல் சக்திகள் என்ன நிலையை எடுக்கிறார்கள் என்பதைப் பொறுத்தே அவர்களை எடைபோட வேண்டும். இந்த சரித்திரப் பிரிவு பிற்போக்குச் சக்திகளை தனிமைப்படுத்த வழிவகுக்க வேண்டும். சி.ஜி.பி.ஐ. இதைச் செய்வதற்காக எல்லா தந்திரங்களையும் வழிவகுக்க வேண்டும். பிற்போக்குச் சக்திகள் இன்றுள்ள முதலாளித்துவ அமைப்பை பாதுகாக்கும் தங்களுடைய சொந்த நோக்கத்தை முன்னேற்றமடையச் செய்ய பெரும்பான்மை நேரங்களில் தொழிலாளி வர்க்கத்தையும் சமுதாயத்தையும் இந்த அல்லது அந்த கொள்கையின் அடைப்படையிலோ, அல்லது இந்த அல்லது அந்த "இசம்"த்தின் அடிப்படையிலோ பிளவுபடுத்துவதில் ஈடுபடுகின்றனர். இந்த வரலாற்றுப் பிரிவின் அடிப்படையில் சி.ஜி.பி.ஐ. மற்றும் எல்லா கம்யூனிஸ்ட்டுகளும் உற்சாகமான கருத்தியல் மற்றும் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு இந்த பிளவுபடுத்துதலை முறியடித்து நாசப்படுத்த வேண்டும்.

"வளர்ச்சி என்பது எதிர்மறைகளிடையேயான 'போராட்டம்'. வளர்ச்சியின் (படிப்படியான முன்னேற்றம்) இரண்டு அடிப்படை (அல்லது இரண்டு சாத்தியமான? அல்லது இரண்டு

சரித்திரத்தில் காணக்கூடிய?) கருத்துருவங்கள் என்னவென்றால்: இறங்குமுகமாகவும் ஏறும்முகமாகவும் மீண்டும் மீண்டும் நிகழ்வதுமான வளர்ச்சியும், எதிர்மறைகளின் ஒற்றுமையான (ஒற்றுமை பரஸ்பர இணக்கம் காணமுடியாத எதிர்மறையான பிளவுகளாகப் பிரிவதும் அவர்களின் எதிரிடை உறவும்) வளர்ச்சியும் ஆகும்"[6] என்று வி.ஐ.லெனின் கூறுகிறார். இந்த லெனினுடைய கோட்பாட்டை இந்திய நிலைகளுக்கு அமர்த்திப்பார்த்தால், இந்தியாவின் வளர்ச்சி இந்த வரலாற்றுப் பிரிவில் யார் வெற்றிபெறுகிறார்கள் என்பதைப் பொறுத்தே உள்ளது என்பதைக் காணலாம். "தேசிய ஒற்றுமை மற்றும் பிரதேச ஒருமைப்பாடு" என்று முழங்கி வருபவர்கள் வெற்றி பெற்றால் சமுதாயம் மேலும் சீரழியும், அதன் நெருக்கடி மேலும் ஆழமாகும், பரவவும் செய்யும். சமுதாயத்தை நெருக்கடியிலிருந்து விடுவிக்கப் போராடும் சக்திகள் வெற்றி பெற்றால் வளர்ச்சி ஏற்படும். மேலும் சமுதாயத்தின் முன்னேற்றப்பாதை திறந்தும் விடப்படும். சி.ஜி.பி.ஐ. மற்ற எல்லா கம்யூனிஸ்ட்டு சக்திகளும் பின்கூறியது நடைபெறுவதை நிச்சயப்படுத்த நடைமுறை தந்திரங்களை வளர்த்தெடுக்க வேண்டும்.

"முதல் கருத்துருவத்தின் இயங்கு நிலையில் தானாகவே இயங்குவது, அதன் உந்தும் சக்தி, அதன் மூலம், அதன் உள்நோக்கம் எல்லாம் மறைவிலேயே விடப்படும் (அல்லது அதன் மூலம் வெளியிலிருக்கும் கடவுளாகவோ, பிரஜையாகவோ வேறு பல்வேறானதாகவோ ஆக்கப்படும்). இரண்டாவது கருத்துருவத்தில் 'சுய' - இயக்கத்தின் மூலத்தைப் பற்றி அறிய முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது"[7] என்று லெனின் மேலும் விளக்குகிறார். இதை இந்திய நிலைகளுக்கு அமர்த்திப்பார்த்தால், "தேசிய ஒற்றுமை மற்றும் பிரதேச ஒருமைப்பாடு" என்பதில் ஆர்வம் மிக்கவர்கள் தங்களுடைய "உந்தும் சக்தியை", தங்களுடைய "மூலத்தை" மற்றும் "உள்நோக்கத்தை" மறைவிலேயே விட்டுவிடுகிறார்கள். ஆனால் சி.ஜி.பி.ஐ. தன்னுடைய வேலைகளை இந்தியாவிலும் உலக அளவிலும் இந்த சமயத்திலுள்ள திட்டவட்டமான சூழ்நிலைகளில் அடிப்படையிலும் தற்கால மார்க்சீய–லெனினிய சிந்தனைக் கோட்பாட்டின் அடிப்படையிலும்

---

6 வி.ஐ. லெனின், ''இயக்கவியல்வாத கேள்வியைக் குறித்து'' தத்துவார்த்த குறிப்பு புத்தகங்கள் தொகுப்புநூல்கள், முன்னேற்ற பதிப்பகம், பாகம்-38, பக்கம் 358

7 மேற் குறிப்பு

முழுமையாக விளக்கியும் நிரூபித்தும் வருகிறது. அப்படி நாம் அவர்களை முழுமையாக விமர்சனம் செய்யாமலும் ஏன் அவர்களின் கருத்துக்கள், நடைமுறைச் செயல்கள் மேலும் இந்திய சமுதாயத்தை பாதிக்கும் என்று விளக்காமலும் "அவர்கள் தவறு" என்று மட்டும் வெறுமெனே மீண்டும் மீண்டும் கூறிக்கொண்டு போராட்டத்தை சிறுமையாக்குவோமானால் நாமும் "தானாகவே இயங்கு வதையும், அதன் உந்து சக்தியையும், அதன் மூலத்தையும், அதன் உள்நோக்கத்தையும்" மறைவில் வைத்து அவர்களைப் போலவே செயல்படுபவர்களாக ஆகிவிடு வோம். இது எந்த தரமான வழியிலும் வளர்ச்சிக்கு பங்களிக்காது. உண்மையில் இது இன்றுள்ள நிலைமைகளை தொடருவதற்கே பங்களிக்கும்.

"முதல் கருத்துருவம் உயிரற்றது!, மங்கிப்போனது, மற்றும் வறண்டுப்போனது" என்று லெனின் தெளிவாக சுட்டிக் காட்டுகிறார். அதனால்தான் சி.ஜி.பி.ஐ. வறட்டுவாத குறுங்கு வழுவாத அடிப்படையில் போராட்டங்களை நடத்துவதற்கு எப்பொழுதும் எதிர்த்தேயுள்ளது. ஆனால், "இரண்டாவது உயிரோட்டமுடையது. இருக்கின்ற எல்லாவற்றின் 'சுய–இயக்கத் தின்' விடைக்குறிப்பை இரண்டாவதே அளிக்கிறது". அது ஒன்றே "பாய்ச்சல்களுக்கும்", "தொடர்ச்சிநிலை உடைப்பிற்கும்", "எதிரானதற்கு மாற்றவும்", "பழையதை அழித்து புதியனவற்றை தோன்றவைக்கவும்" விடைக்குறிப்பை அளிக்கிறது. அதனால் சி.ஜி.பி.ஐ. வர்க்க விரோதியை தோற்கடிக்கும் நோக்கத்தோடு புறவய அடிப்படையில் உண்மையான பிரச்சனைகளை சர்ச் சைக்கும், விவாதத்திற்கும், வாக்குவாதத்திற்கும் உட்படுத்து கிறது. இது கம்யூனிச இயக்கத்தின் வளர்ச்சியில் "பாய்ச்சல்களுக்கும்" மற்றும் "தொடர்ச்சிநிலை உடைப்புகளுக்கும்" பங்களிக்கும்.

அப்படிப்பட்ட விஷயத்தை நிறைவேற்ற முடியும், ஏனென்றால், "எதிர்மறைகளின் ஒற்றுமை (ஒத்திருத்தல், ஒரே தன்மையானது, சமமான செயல்பாடு) என்பது நிபந்தனை யுடையது, தாற்காலிகமானது, ஒன்றோடொன்று சார்புநிலை கொண்டது. எப்படி வளர்ச்சியும் இயங்குவதும் எவ்வாறு நிச்சயமோ அப்படியே பரஸ்பர இணக்கம் காணமுடியாத எதிர்மறைகளின் போராட்டமும் நிச்சயமானது". சி.ஜி.பி.ஐ. இந்த சமயத்தில் இரண்டு எதிர்மறைகள் இருப்பதை அடையாளங் கண்டு கொண்டதுபோல "பரஸ்பர இணக்கம் காணமுடியாத

எதிர்மறைகள்" இருப்பதின் அடிப்படையை முதலிலிருந்தே பார்க்கமுடியும் என்றாலும் அவைகள் தங்களுடைய உண்மை யான சுயரூபத்தை வளர்ச்சியின் போக்கிலேதான் வெளிப்படுத்து கிறார்கள். கம்யூனிஸ்ட்டுகளின் ஒற்றுமையை கட்டியமைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் விடாமுயற்சியோடு இருந்து சமுதாயத்தை நெருக்கடியிலிருந்து விடுவிக்க வேண்டும் என்று விரும்புபவர்கள் எல்லோரையும் ஒன்றிணைக்கத் தகுந்த தந்திரங்களை வகுத்துக்கொண்டும் இருப்பதனால், சி.ஜி.பி.ஐ. இந்திய கம்யூனிஸ்ட்டுகளின் ஒற்றுமையை கட்டியமைப்பது மட்டுமல்லாமல் முதலாளித்துவ நிலைமைகளை பாதுகாப் பதற்காக "தேசிய ஒற்றுமை மற்றும் பிரதேச ஒருமைப்பாடு" என்ற கோஷத்தை உபயோகப்படுத்துபவர்களை தனிமைப்படுத்தி தோல்வியடையச் செய்யவும் முடியும்.

"இந்திய கம்யூனிஸ்ட்டுகளின் ஒற்றுமையை மீண்டும் உருவாக்குவது" என்ற சொற்றொடரில் தீர்வுகாண வேண்டிய முதல் பிரச்சனை என்னவென்றால் அதை விவரித்து, விளக்கி மேலும் "தேசிய ஒற்றுமை மற்றும் பிரதேச ஒருமைப்பாடு" என்ற கோஷம் பழமையானது என்றும் அந்தக் கோஷம் இந்தியாவி லுள்ள கம்யூனிஸ்ட்டு மற்றும் தொழிலாளர் இயக்கங்களின் முன்னேற்றத்திற்கு விபரீதமானது என்றும் அடையாளம் காட்ட வேண்டும். அப்படியாக அந்தக் கோஷத்தின் பிற்போக்குத் தனத்தை அடையாளம் கண்டுகொண்டபின் சி.ஜி.பி.ஐ. அதை முறியடிப்பதற்கான தந்திரங்களையும் செயல்முறைகளையும் கோஷங்களையும் வகுக்க வேண்டும். இப்படிப்பட்ட திட்டமிட்ட, முறையான விழிப்புணர்வோடு பழயதை அழிப்பதனால் புதியதற்கு இது வழிவகுக்கும். இந்த திட்டத்தை நடைமுறைப் படுத்தும் போக்கிலே கம்யூனிஸ்ட்டுகளின் ஒற்றுமை மீண்டும் உருவாக்கப்படும்.

எது பழைமையானது என்பதையும் எதை முறியடிக்க வேண்டும் என்ற கேள்வியையும் முடிவு செய்யப்பட்டதும், சி.ஜி.பி.ஐ. யாருடைய நலன்களுக்காக பழையதை முறியடிக்க வேண்டும் என்பதை தெளிவான நிலைகளில் வகுக்க வேண்டும். அது இந்திய உழைக்கும் வர்க்கத்தின், பாட்டாளிகளின் மற்றும் நடுத்தரவர்க்கத்தினரின் நலன்களுக்காக இருக்குமா? காஷ்மீர் மற்றும் வடகிழக்குப் பகுதிகளில் தங்களுடைய சொந்த தேசிய விடுதலைக்காக போராடிவரும் சக்திகளின் நலன்களுக்காக

இருக்குமா? பழமையை முறியடிக்கும் ஒரு போராட்டத்தில் இந்த எல்லா சக்திகளையும் ஒற்றுமைப்படுத்தும் ஒரு திட்டத்தை உயிரோட்டமுள்ளதாக ஆக்க வேண்டும். இது எல்லா போராடும் சக்திகளின் சங்கமிக்கும் மையமாக அமையும். வேறு வார்த்தைகளில் கூறினால், பழமையை முடிந்தளவு தனிமைப் படுத்துவதற்காகவும், சமுதாய முன்னேற்றத்தைத் தடைசெய்து வருவதை அடித்து நொறுக்குவதற்காகவும் எல்லா சக்திகளையும் ஒற்றுமைப்படுத்தும் பொறுப்பு சி.ஜி.பி.ஐக்கு உள்ளது.

ஒரு ஆரம்பப் புள்ளியாக யாரெல்லாம் தங்களை இந்திய கம்யூனிஸ்ட்டுகள் என்று கூறிக்கொள்கிறார்களோ அவர்களையும் மற்றும் எல்லா அரசியல் சக்திகளையும் (அவர்களுடைய தத்துவம் எதுவாயினும் சரி) நாம் சமுதாயத்தை நெருக்கடியிலிருந்து விடுவிக்க செயல்படும் சகபயணிகளாகவே கருத வேண்டும் என்பது தெளிவாக உள்ளது. அவர்கள் எதிர்மறைகளின் ஒற்றுமையின் அங்கங்கள். ஆரம்பப் புள்ளியில் அவர்கள் பரஸ்பர இணக்கம் காணமுடியாத எதிர்மறைகளின் போராட்டத்தின் உறுப்பினர்களல்ல. பரஸ்பர இணக்கம் காண முடியாத எதிர்மறைகள் சுரண்டுபவர்களும் சுரண்டப்படுபவர்களும் ஆவார்கள், ஒடுக்குபவர்களும் ஒடுக்கப்படுபவர்களும் ஆவர்; சுருக்கமாக உடமைவர்க்கமும் பாட்டாளிவர்க்கமும் ஆம்.

எதிர்மறைகளின் ஒற்றுமையிலுள்ள எல்லோரையும் அதாவது நிபந்தனையுடைய, தாற்காலிகமான, விரைவில் மாறும் தன்மையுடைய, ஒன்றோடொன்று சார்புநிலை கொண்ட உறவு முறையிலுள்ளவர்களை, அவர்களுடைய ஒத்திருத்தல், ஒரே தன்மையுடையது, சமமான செயல்பாடுகளை முழுமையாக வெளிச்சத்திற்கு கொண்டுவந்து விளக்கி விவரிப்பதன் மூலமே அடையாளங்கண்டு கொள்ளமுடியும். வேறு வார்த்தைகளில் கூறினால், பல்வேறு எழுச்சிகளையும் போராட்டங்களையும் தன்னுணர்வோடு திட்டமிட்டு நடத்தும் வாக்கில் முழுமையான சர்ச்சைகளும் விவாதங்களும் எழும் சூழலை உருவாக்க வேண்டும். அதே சமயம் எதிர்மறைகளின் ஒற்றுமையிலுள்ளவர்களை பரஸ்பர இணக்கம் காணமுடியாத எதிர்மறைகளோடு ஒத்திட்டும் வித்தியாசப்படுத்தியும் பாராமல் அடையாளங்கண்டு கொள்ள முடியாது. அதாவது கம்யூனிஸ்ட்டு இயக்கத்தை அழித்தே தீருவோம் என்று சதிவேலைபுரியும் சக்திகளை — சமூக - ஜனநாயக்துடன் சமரசம் செய்து கொண்டும் சமூக—ஜனநாய

கத்தைப் பற்றி மாயைகளை உருவாக்கி வரும் அவர்களை சி.ஜி.பி.ஐ. புறக்கணிக்கவோ பார்வையிலிருந்து அகற்றவோ கூடாது. வேறு வார்த்தைகளில் கூறினால், நிபந்தனையுடைய, தாற்காலிகமான, விரைவில் மாறும்தன்மையுடைய, ஒன்றோ டொன்று சார்புநிலை கொண்ட எல்லாமும் மற்றும் தன்னுடைய வளர்ச்சியின் போது அவசியமாக பரஸ்பர இணக்கம் காணமுடியாத எதிர்மறைகளாக பிளவுபடும் அவைகளும் உட்பட இருக்கும் எல்லாவற்றிலும் உள்ள சுய—இயக்கத்தை கூர்ந்து நோக்காமல் ஒற்றுமை என்ற தலைப்பை கையாள முடியாது.

இந்திய கம்யூனிஸ்ட்டுகளின் ஒற்றுமையை மீண்டும் உருவாக்குவதை நாடுவதென்றால் நிபந்தனையுடையதும், தாற்காலிகமானதும், விரைவில் மாறும் தன்மையுடையதும், ஒன்றோடொன்று சார்புநிலை கொண்டதும் மற்றும் வளர்ச்சி யின் போது அவசியமாக பரஸ்பர இணக்கம் காணமுடியாத எதிர்மறைகளாக பிளவுபடுவதுமான ஏதோஒன்றை மீண்டும் நிலைநிறுத்துவது என்று அர்த்தமாகும். இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் போது இந்தப் போராட்டத்தை இறுதி வரை கொண்டு செல்ல விருப்பப்படாதவர்களும் காணப்பட லாம். அவர்கள் முதலாளித்துவ நிலைமைகளை பாதுகாத்துக் கொண்டே சமுதாயத்தை நெருக்கடியிலிருந்து விடுவிக்கும் ஒரு திட்டத்தை, அது மாயையாக இருப்பினும்கூட, முன்வைக்கலாம். முடிவில், போராட்டமானது நிச்சயமாக சோசலிச சக்திகளுக்கும் சோசலிசத்தை எதிர்த்த சக்திகளுக்குமிடையே தான்.

1964ல் இந்திய கம்யூனிஸ்ட்டு இயக்கத்தில் ஏற்பட்ட பிளவு பரஸ்பர இணக்கம் காணமுடியாத எதிர்மறைகள் தோன்ற வழிவகுக்கவில்லை. இந்தப் பிளவு இயக்கத்தின் வளர்ச்சியை அல்ல, ஆனால் அதன் சீரழிவையே பிரதிபலித்தது. வறட்டுவாத மற்றும் குறுங்குழுவாத கொள்கைகளின் அடிப்படையிலான பிளவு அது. இறங்குமுகமாகவும் ஏறுமுகமாகவும் மீண்டும் மீண்டும் நிகழ்வதுமான முறையில் மட்டுமே அது ஒரு வளர்ச்சியாக இருந்தது. அது கம்யூனிஸ்ட்டு இயக்கத்திற்கு ஒரு மிகப்பெரும் விபத்தாகவே இருந்தது. ஏனெனில், இந்த சமயத்தில் ஒரு சில கம்யூனிஸ்ட்டுகள்கூட "தேசிய ஒற்றுமை மற்றும் பிரதேச ஒருமைப்பாடு" என்ற கோஷத்தை உற்சாகமாக ஆதரிப்பவர்கள் இல்லை. அது ஒரு சமூக—ஜனநாயகத் திட்டம். அது "தந்தை நாட்டைப் பாதுகாப்போம்" ஏகாதிபத்தியங்

களுக்கிடையேயான போரின் ஒரு தேசிய வெறி கொண்ட அறிவிப்பு; குறைந்தபட்சம் கூறப்போனால் முதலாளித்துவ நிலைமையைப் பாதுகாக்கும் சேவைக்கான கோஷம் - என்ற ஐரோப்பிய சமூக—ஜனநாயக கோஷத்தின் புதிய உருவமாகும்.

ஒரே திட்டத்தின் கீழ் எல்லா சக்திகளையும் திரட்டும் நோக்கோடு கம்யூனிஸ்ட்டுகளுக்கு இடையேயுள்ள பிரிவுகளையும் பிளவுகளையும் கம்யூனிஸ்ட்டுகள் சீரழிவதையும் சி.ஜி.பி.ஐ. பார்க்கிறது. முதலாளித்துவம் விரிவடைந்துவருவதில் மிக அதிகமாக கிளர்ச்சி பெற்று தன்னுடைய எதிர்காலத்தை அதில் கண்டுவிட்ட உடமைவர்க்கங்களின் வற்புறுத்தலினால் சில கம்யூனிஸ்ட்டுகள் சமூக—ஜனநாயகத்தோடு சமரசம் செய்து கொண்ட காரணத்தாலேயே இந்த சீரழிவு ஏற்பட்டுள்ளது என்பது சி.ஜி.பி.ஐயின் கருத்து. அகவய புறத்தில் அதாவது தன்உணர்வின் பக்கமுள்ள காரணங்களில் ஒன்றானது, 1962—64 காலகட்டத்தில் சந்தர்ப்பத்தை தனக்கு சாதகமாக பயன்படுத்தத் தவறி சுதந்திர தொழிலாளி வர்க்க திட்டத்திற்கு குரல் கொடுக்காமல் இருந்ததனால்தான் இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சியின் பிரச்சினைகளை எழுந்தது என்பதை அங்கீகரிக்க மறுத்ததே. சி.பி.ஐ. இன் நிலைப்பாடு காங்கிரசின் நிலைப் பாட்டிற்கு கீழ்ப்படிந்ததாகவே இருந்தது. குறிப்பாக சீன—இந்திய சண்டையில் "தந்தை நாட்டை காப்பாற்றுவதற்காக" பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தைக் கைவிட்டு அது தன்னைத்தானே அவமானப்படுத்திக் கொண்டது.

முப்பது வருடத்திற்கும் மேலான பின் இன்று, சி.பி.ஐ. இடமிருந்து 1964இல் பிரிந்த சி.பி.ஐ(எம்) "தேசிய ஒற்றுமை மற்றும் பிரதேச ஒருமைப்பாடு" என்ற கோஷத்தின் மிகச் சிறந்த ஆதரவாளனாக உள்ளது. வருந்தத்தக்க முறையில், சி.பி.ஐ. இன்று வரை காங்கிரசின் குறிக்கோளோடு கைகோர்த்துக் கொண்டும் தன்னுடைய வேலைகளை அதற்குத் தகுந்தாற்போல் வகுத்துக்கொண்டும் வந்துள்ளது. அப்படிப்பட்ட நிலைப்பாடு எதிர்தாக்குதலாகவே உள்ளது ஆக்கச்செயலாக இல்லை. இது இந்திய பொருளாதாரம், அரசியல் மற்றும் கலாச்சாரத்தின் திட்டவட்டமான சூழ்நிலைகளை ஆராயாததனால் அதாவது உடனடி மற்றும் நெடுங்கால ரீதியில் புரட்சியின் நிலையை சரியாக தீர்மானிக்க முடியாமல் போனதால் தோன்றிய சங்கடங்களின் அடிப்படையிலானது.

1962—64 காலகட்டத்தில் சி.பி.ஐ. இல் ஏற்பட்ட

முரண்பாடுகள் உள்ளடக்கத்தைப் பற்றியது. அதை மார்க்சிய–லெனினிய பாரம்பரியத்தின் உள்கட்சி முறைகளால் தீர்த்திருக்கலாம். ஆனால் சராசரி சமூக–ஜனநாயக பாணியில் இந்த அல்லது அந்த போராட்ட முறை ஏற்றுக்கொள்ளக்கூடியதா இல்லையா என்றும், இந்த அல்லது அந்தப் பகுதி உடமைவர்க்கம் "முற்போக்கானதா" என்றவாறு அந்தப் போராட்டம் மாற்றப்பட்டது. உள்ளடக்கத்தைப் பற்றிய வேறுபாடுகளை மறைவில் விட்டுவிட்டு, போராட்ட முறைகளைப் பற்றிய வேறுபாடுகளின் அடிப்படையிலான எண்ணப் பிரிவினைகளின் மூலம் பரஸ்பர இணக்கம் காணமுடியாத எதிர்மறைகளை உருவாக்குவது மிக எளிதாக இருந்தது. இப்படி நடைபெற்றது தற்செயலானது அல்ல, ஏனெனில், சி.பி.ஐ தலைமையை நம்பிக்கை துரோகிகள் என்று பழிசுமத்திய தலைவர்களின் உள்ளடக்கமும் ஒன்றாகவே இருந்தது. சி.பி.ஐ (எம்) வெறுமெனே ஒரு பிரிவாக இருந்தது. இன்றுவரை அப்படியே இருந்து வந்துள்ளது. எல்லா கம்யூனிஸ்ட்டுகளுக்கும் ஜனநாயக சக்திகளுக்கும் ஒரே திட்டத்தைக் கொடுக்கும் வாய்ப்பு தவறவிடப்பட்டது. அதன் இடத்தில் பிரிவுகளாலும் பிளவுகளாலும் அரசியல் சமுதாயம் மூழ்கடிக்கப்பட்டது, மற்றும் வெகுகாலமாக தொழிலாளிவர்க்கம் தன்னுடைய தலைமைப் பங்கை இழந்துவிட்டது.

இந்திய கம்யூனிஸ்ட்டு இயக்கத்தை புரட்சிகர இயக்கவியல் கருத்தின் அடிப்படையில் நோக்குவோமானால் இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சியின் பரஸ்பர இணக்கம் காண முடியாத எதிர்மறையானதாக இருந்து இருக்க வேண்டிய இந்திய கம்யூனிஸ்ட்டு கட்சி (மார்க்சிஸ்ட்) அவ்வாறாக தோன்றவில்லை. அது புது உள்ளடக்கத்தை கொண்டதாக இல்லை. மேலும் அது புது உள்ளடக்கத்திற்கு தகுந்த புதிய அமைப்பு வடிவங்களையும் கொண்டதாக இல்லை. மார்க்சிஸ்ட்டு–லெனினிஸ்ட்டு என்றும் மாவோயிஸ்ட்டு என்றும் தம்மை அழைத்துக்கொள்ளும் பல குழுக்களும் புதிய உள்ளடக்கத்தை வளர்க்க உறுதியான முயற்சிகள் எடுக்கவில்லை. புரட்சிகர தாக்குதலோடு பாராளுமன்ற போராட்டம் என்பதுபோன்ற போராட்ட முறைகளை எதிர்ப்பது இந்த அமைப்பு வடிவத்திற்கு புதிய உள்ளடக்கத்தைக் கொடுக்க முடியாது. போராட்ட முறைகள் உள்ளடக்கத்திற்கு கீழ்ப்படிந்ததாக்க வேண்டும். புதிய அமைப்புவடிவங்கள் மிக முக்கியமானதாகும் ஏனென்றால் புது

உள்ளடக்கத்திற்கு பொருத்தமாக இடம் தரவேண்டிய உடனடித்தேவை எழுவதனால். அமைப்பு வடிவத்திற்கும் உள்ளடக்கத்திற்கும் இடையே ஒரு இயக்கவியல் உறவுமுறை உள்ளது. பழைய அமைப்பு வடிவங்களில் மூழ்கியிருப்பது புது உள்ளடக்கத்தை தடைசெய்யும்.

புறவய அடிப்படையில் தன்னுடைய உள்ளடக்கத்திலும் போராட்ட வழிமுறைகளிலும் சி.பி.ஐ.(எம்)மும் சி.பி.ஐ.யும் ஒன்றாகவே இருந்தது. பரஸ்பர இணக்கம் காணமுடியாத எதிர்மறையாக இருக்க வேண்டிய சி.பி.ஐ. யுடனான ஒற்றுமை நிபந்தனையுடையதாகவும், தாற்காலிகமானதாகவும், விரைவில் மாறும் தன்மையுடையதாகவும், ஒற்றோடொன்று சார்புநிலையுடையதாகவும் இல்லை. ஆனால் நிச்சயமானதாக இருந்தது. அது புதுமையானதாக இருந்திருந்தால் அதனுடைய ஒற்றுமையும் நிபந்தனையுடையதாகவும், தாற்காலிகமானதாகவும், விரைவில் மாறும்தன்மையுடையதாகவும், ஒன்றோடொன்று சார்புநிலையுடையதாகவும் இருந்திருக்கும், மேலும் கம்யூனிஸ்ட்டு சக்திகள் பிளவுபடாமலிருந்திருக்கும். அதற்குப்பதில், வலதிலிருந்தும், "இடதிலிருந்தும்" வருகின்ற சமூக–ஜனநாயக மற்றும் திருத்தல்வாத சக்திகளே பிளவுபட்டிருக்கும். அது புதியது என்று பாசாங்கு செய்து கொண்டு சி.பி.ஐ.(எம்) ஒரு பிளவை வற்புறுத்திக்கொண்டது. அது வளர்ச்சிக்கும் பரஸ்பர இணக்கம் காணமுடியாத எதிர்மறைகளுக்கும் வழிவகுக்கவில்லை; ஆனால் சீரழிவு மேலும் அதிகரிக்கவே வழிவகுத்தது.

இந்திய கம்யூனிஸ்ட்டுகளின் ஒற்றுமையை மீண்டும் உருவாக்குதல் இந்த பரஸ்பர இணக்கம் காணமுடியாத எதிர்மறைகளினாலும் காங்கிரஸ்(ஐ)இன் "தேசிய ஒற்றுமை மற்றும் பிரதேச ஒருமைப்பாடு" என்ற கோஷத்தின் பின் திரண்டுள்ள சி.பி.ஐ, சி.பி.ஐ(எம்) மற்றுமுள்ள பலருடைய பழைய உள்ளடக்கத்தினாலும் தடைசெய்யப்பட்டுள்ளது. இந்தத் தடையை பழைய அமைப்புவடிவங்கள் ஊக்குவிக்கின்றன. சுறுசுறுப்பான சர்சைகளுக்கும் விவாதங்களுக்கும் பதிலாக வதந்திகளையும் ஊர்க்கதைகளையும் கோளத்தின் ஒரு மூலையிலிருந்து மற்றொன்று வரை பரப்பிக் கொண்டு வருவது, பழைய அமைப்பு வடிவங்களில் ஒன்றாகும். தொழிலாளி வர்க்க நலனை கைவிடுவதற்கான கோட்பாடும், நடைமுறையுமான "ஜனநாயக மதச்சார்பற்ற முன்னணி" என்ற திட்டத்தை முன்னேற்றுவதற்கு அது கேவலமான வஞ்சகத்தன்மையால்

உதவி செய்கிறது. இந்த அல்லது அந்தப் பகுதி சமூக—ஜனநாய கத்துடன் சமரசம் செய்வதையும் ஆதரவு தேடுவதையும் கொண்டு கம்யூனிஸ்ட்டுகளிடையே மேலும் பிரிவுகளையும் பிளவுகளையும் ஏற்படுத்துவதற்கு இது தள்ளுகிறது.

இந்திய கம்யூனிஸ்ட்டுகளின் ஒற்றுமையை பழைய உள்ளடக்கத்தைக் கொண்டும் பழைய அமைப்பு வடிவங்களைக் கொண்டும் மீட்கமுடியாது. இந்த அல்லது அந்த கட்சியோ குழுவோ எண்ணப் பிரிவினைகளின் அடிப்படையில் இப்படித் தான் இருக்க வேண்டும் என்று சிலர் நினைப்பதுபோல இல்லாததினாலோ அல்லது "உண்மையான" கம்யூனிஸ்ட்டு கட்சி என்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும் என்ற வரைய றையை பூர்த்தி செய்யாததினாலோ அவர்களை குற்றம் சுமத்துவதனால் அந்த ஒற்றுமையை கொண்டுவர முடியாது. அதற்கு மாறாக, பரஸ்பர இணக்கம் காணமுடியாத எதிர்மறைகள் பழைய உள்ளடக்கத்தையும் பழைய அமைப்பு வடிவங்களையும் உதறித் தள்ளுவதனாலும் சமுதாயத்தை நெருக்கடியிலிருந்து மீட்பதற்காக சர்ச்சைகளையும், விவாதங்களையும், கிளர்ச்சி களையும் நடத்திவருவதாலுமே கண்டுபிடிக்க முடியும். ஒவ்வொரு அரசியல் சக்தியையும் புறவய அடிப்படையில் மதிப்பிட்டும் சமுதாயத்தின் பிரச்சனைகளுக்கு தீர்வு காண உதவும் எல்லா வார்த்தைகளின், செயல்களின் அடிப்படையில் ஒன்றுபட்டும் அதன் அடிப்படையிலே அதைச் செய்து முடிக்க வேண்டும்.

எது புதுமையானதோ எது நவீனமானதோ, ஒற்றுமையினுடைய பிளவு வளர்ச்சியடைவதன் விளைவாக பரஸ்பர இணக்கம் காணமுடியாத எதிர்மறைகளாகவும், இதன் எதிரிடை உறவாகவும் பார்க்க முடியுமோ அதுவே சமுதாயத்தை நெருக்கடியிலிருந்து விடுவிப்பதற்கான திட்டமாகும். அது ஜனநாயகத்தை புதுப்பிக்கும், முதலாளித்துவத்தை தூக்கி எறிந்து காலனீயத்தை எதிர்த்த போராட்டத்தை முடிவுவரை கொண்டு செல்லும் திட்டமாகும். இந்த மறுத்தல் வேலையானது அதாவது பழையதிலிருந்து புதியதற்கு ஒரு "பாய்ச்சலை" ஏற்படுத்துவதுமான, பழைய இயக்கத்தின் பின்வாங்குதலில் ஒரு "உடைப்பை" ஏற்படுத்துவதுமான, பழைய உள்ளடக்கத்தையும் பழைய முறைகளையும் கண்டிப்பான முறையில் கைவிடு வதற்கான போராட்டமானது மேன்மையான நிலையில் எதிர்மறைகளின் ஒற்றுமையை உருவாக்கும், புதிய வளர்ச்சியை ஏற்படுத்தும்.

# பாகம் 6
# அரசியல் ஒற்றுமையைப்பற்றி

அரசியல் ஒற்றுமையை நாடும் பொழுது கம்யூனிஸ்ட்டு கள் இந்தக் கேள்வியை மனம் போன போக்கிலோ, ஒரு குறித்த காரியத்தையொட்டியோ பார்க்கக் கூடாது. அவர்கள் இந்தக் கேள்வியை சமுதாயத்தின் தலைவிதியோடும், அதை நெருக்கடியி லிருந்து விடுவிக்கும் அவசியத்தோடும் சம்பந்தப்படுத்தி அதனடிப்படையில் எல்லா அரசியல் சக்திகளின் ஒற்றுமையை யும் கட்டியமைக்க வேண்டும். இந்த ஒற்றுமையை முக்கியமாக அடித்தளத்திலிருந்தும், ஆனால் மேலிருந்தும் கூட கட்டிய மைத்தாக வேண்டும்.

முதலாளித்துவ வளர்ச்சி என்ற கேள்வியை கம்யூனிஸ்ட்டுகள் எழுப்பி இந்த வளர்ச்சிதான் சமுதாயத்தை ஒரு நெருக்கடியிலிருந்து மற்றொன்றுக்கு இழுத்தடிக்கிறது என்பதை தெளிவுபடுத்த வேண்டும். முதலாளித்துவத்தை எதிர்த்தே எல்லா சக்திகளையும் ஒன்று திரட்டவேண்டும். முதலாளித்துவம் விவசாயப் புரட்சிக்கு வகைசெய்யும் என்றோ, அல்லது காலனிய மிச்சங்களுக்கும், நிலபிரபுத்துவ மிச்சங்களுக்கும் முடிவுகட்டும் என்றோ, அல்லது காலனிய ஏகாதிபத்திய மத்திய அரசை அடக்கும் என்றோ மாயைகள் இருக்க முடியாது. முதலாளித்துவம் பெண்கள் ஒடுக்கப்படுவதை நீக்கிவிடும் என்றோ, பழங்குடி மக்களுக்கு பயனளிக்கும் என்றோ, சாதி முறைகளையும், வகுப்பு வாதத்தையும் முடிவுகட்டும் என்றோ, சுற்றுச் சூழலை பாதுகாக்கும் என்றோ, அல்லது எல்லா தேசிய இனங்களும் சுதந்திரமாகவும் சமஅந்தஸ்துள்ள கூட்டாகவும் பங்கேற்பதற்கான சூழ்நிலைகளை உருவாக்கும் என்றோ மாயைகள் இருக்கக்கூடாது.

இந்திய கம்யூனிஸ்ட் கெதர் கட்சி தன்னுடைய அரசியல் வேலையில் எந்தவொரு அரசியல் கட்சியையோ, குழுவையோ புறக்கணிக்க முடியாது. முதல் முன்னணியையும் (காங்கிரஸ்–ஐ), இரண்டாவது முன்னணியையும் (பா.ஜ.க), மூன்றாவது முன்னணியையும் (சி.பி.ஐ, சி.பி.ஐ.(எம்), மற்றவர்களும்) மற்ற எல்லா அரசியல் சக்திகளையும் கம்யூனிஸ்ட்டுகள் கருத்தில் கொள்ள வேண்டும். இந்த மூன்று முன்னணிகளையும் தீவிரமாக விமர்சனப்படுத்த வேண்டும். ஏனெனில், வெறும் பாராளுமன்ற

அமைப்புகளான அவை எல்லா பிரச்சனைகளையும் வெறும் "குறிக்கோள் இலக்குகளாக" மாற்றிவிட்டன. கம்யூனிஸ்ட்டுகளிட மிருந்து இந்திய உழைக்கும் வர்க்கம் எதை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறது என்றால், இன்றைய சூழ்நிலைகளுக்கு தகுந்த திட்டத்தை, சமுதாயத்தின் பிரச்சனைகளை தீர்வு செய்யும் ஓர்திட்டத்தை விரிவாகத் தெளிவுபடுத்துவதையே. இதையேதான் உலகமெங்கிலுமுள்ள தொழிலாளர்களும் எதிர்பார்க்கிறார்கள். இந்தத் திட்டமானது உழைக்கும் வர்க்கத்தினுடைய வெகுஜன மக்களினுடைய அனுபவங்களிலிருந்து தோன்றவேண்டும். இந்த அகவய பாகத்தையே அதாவது விழிப்புணர்வையும், தொலை நோக்கையுமே தொழிலாளிகள் கோருகிறார்கள். இந்த விமர்சனம் தொடர்ச்சியான வேலையின் ஒரு பகுதியாக இருந்தேயாக வேண்டும். ஆனாலும் அப்படிப்பட்ட தொலை நோக்கு மூன்று முன்னணிகளையும் விமர்சிப்பதின் ஆதாரத்தில் மட்டுமே இருக்க முடியாது.

உழைக்கும் வர்க்கத்திற்கு என்ன தேவையென்றால் திட்டவட்டமான சூழ்நிலைகளின், திட்டவட்டமான ஆய்வின் அடிப்படையிலும், அதன் விடுதலை இயக்கத்தின் நோக்கத்திற்கு முரண்பாடில்லாத விழிப்புணர்வேயாகும். மேலும் அவர்கள் அகவய பாகத்தின் சூழ்நிலையையும், விழிப்புணர்வையும், அமைப்பைப்பற்றியும் அறிந்து கொள்வதோடு மட்டுமல்லாமல் அவற்றை இன்றைய தேவைகளுக்கு ஏற்றாற்போல் மேல் நிலைக்கு கொண்டுவர என்ன செய்ய வேண்டும் என்பதையும் தெரிந்து கொள்ளவேண்டும். இந்த திட்டத்தை, இந்தப் பார்வையை, இந்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் போக்கில் கம்யூனிஸ்ட்டுகள் புரட்சிகர வர்க்கப் போராட்டங்களில் பங்கெடுக் கும் வாயிலாக தங்களுடையதும், வெகுஜன மக்களுடையதுமான அமைப்பை உறுதிப்படுத்துவார்கள். சமுதாயத்தை நெருக்கடியி லிருந்து விடுவிக்க எழும் போராட்டங்களில் கம்யூனிஸ்ட்டுகள் தலைமை தாங்கி உழைக்கும் வர்க்கத்தையும் வெகுஜன மக்களையும் தங்கள் நிலைக்கு வென்றெடுக்க வேண்டும். மனத்தடைகளையும் அசம்பாவிதமான எண்ணங்களையும் உருவாக்கி வருவதில் ஈடுபடுமானால், உணர்ச்சி வசப்படுதல் பிரிவுவாதம் போன்ற புதைமணலில் மூழ்கி, செயல் ஒற்றுமைக்கு வருவதற்கு முன்னமேயே எல்லோரும் தன்னுடைய கொள்கை களை ஒப்புக்கொண்டு ஆர்ப்பாட்டமில்லாமல் தன்னுடைய

திட்டங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்து மானால் கம்யூனிசத்திற்கு இன்று எந்த இடத்திலும் மதிப்பு இருக்காது.

இந்திய தத்துவத்தை வளர்த்தெடுக்கவும், நடந்துவரும் கருத்தியல் மற்றும் விவாதப்போராட்டத்தை தொடரவும், இந்த காலகட்டத்தின் பொதுவான வேலைகளை வரையறுத்து, கம்யூனிஸ்ட்டுகளின் ஒற்றுமையை மீட்டளிப்பதற்கான செயல் திட்டத்தை வரையறுத்தும், சி.ஜி.பி.ஐ. எல்லா போராடும் சக்திகளிடையேயும் அரசியல் ஒற்றுமையை உருவாக்க முனைய வேண்டும். அப்படிச் செய்யும் போது அவர்கள் இந்த அரசியல் ஒற்றுமைக்கு பாதகமாக இருக்கும் போராட்டங்களினால், குறிப்பாக பல்வேறு திட்டங்களின் அடிப்படையிலும், தத்துவார்த்த அடிப்படையிலும் மக்களை பிளவுபடுத்தும் போராட்டங்களினால் திசைதிருப்பப்படுவதை அனுமதிக்கக்கூடாது.

வர்க்கங்களைப் பொறுத்தவரை ஒரு சமுதாயத்தில் இரண்டு திட்டங்கள் இருக்க முடியாது என்று கம்யூனிஸ்ட்டு களாகிய நாம் மக்களிடம் விளக்க வேண்டும். முதலாளிவர்க்கம் அதிகாரத்தில் இருக்கும் பொழுது ஒரே ஒரு திட்டம்தான் இருக்க முடியும். இத்தருவாயில் இருப்பதுபோல அமைப்பு முதலாளித்துவ அமைப்பாகவே இருக்கமுடியும். அதைப்போலவே உழைக்கும் வர்க்கம் அதிகாரத்தில் இருக்கும் பொழுது ஒரே ஒரு திட்டம்தான் இருக்கமுடியும். அப்பொழுதைய அமைப்பு சோசலிச அமைப்பாக வே இருக்கும். சமுதாயத்தில் உண்மையாக நடந்துகொண்டுவரும் நிலவரங்களிலுள்ள கருத்துகளும், அரசியல் நிலைகளும் இந்த திட்டங்களைப் பிரதிபலிக்கும். பல்வேறு அரசியல் கட்சிகள் தங்களுடைய சுயநலம் காரணமாக அவர்களுடைய திட்டங்களின் வர்க்கத் தன்மையை மறைக்க முயலுகிறார்கள். பல்வேறு திட்டங்களுக்கிடையிலுள்ள போட்டியின் அடிப்படையில் முதலாளித்துவ அமைப்பு உள்ளது என்றும், அதனால் மக்களுக்கு எது நல்லதோ அதை தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் உள்ளது என்றும் பாசாங்கு செய்து மக்களை முட்டாளாக்க அவர்கள் முயலுகின் றனர். உண்மையில் போராட்டம் இன்றைய சூழ்நிலையில் சாத்தியமான இரண்டே அமைப்புகளான முதலாளித் துவத்திற்கும், சோசலிசத்திற்கும் இடையேயானதே. ஆனால் முதலாளித்துவமோ தூக்கியெறியப்பட வேண்டிய அளவிற்கு அழுகிவிட்டது. புரட்சியின் மூலமாக அதனிடத்தில் சோசலிசத்தை

நிறுவவேண்டும். சமுதாய முன்னேற்றத்தில் அடுத்தகட்டமாக சோசலிசத்தைத் தவிரவேறு பாதை இல்லை.

நரசிம்மராவின் காங்கிரஸ்(ஐ) இந்திய பொருளாதாரத்தை புதுப்பிப்பதும், நாட்டுப்புற மற்றும் நகர ஏழைகளின் வாழ்க்கை நிலைமைகளை மேன்மையாக்குவதுமே தன்னுடைய கொள்கை இலக்கு என்று மார்தட்டிக் கொள்கிறது. தாராளமயமாக்குதலும் தனியார்மயமாக்குதலும் தொழில் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்றும் வேலையில்லாதவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வழிவகுக்கும் என்றும் ராவ் கூறிக்கொள்கிறார். காங்கிரஸ்(ஐ)ன் திட்டம் எல்லாவர்க்க மக்களும் குறிப்பாக உழைக்கும் வர்க்கமும், விவசாயிகளும், நடுத்தரவர்க்கத்தினரும் பயனடைவதற்காக என்று கூறப்படுகிறது. "ஏழ்மை ஒழிப்பிற்கு" பணத்தை செலவிடுவதனால் செல்வம் உருவாக்கப்படுவதில்லை என்றும், அது கஜானாவை திவாலாக்குவதற்கே வழிவகுக்கிறது என்றும், ஆகையினால் மக்கள் வேலை செய்யும் சூழ்நிலையை உருவாக்குவதிலேயே கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று ராவ் வாதாடுகிறார். தாராளமயமாக்குதலும், தனியார்மயமாக்குதலும் அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலைக்கு வழிவகுக்கும் என்று சொல்லப்படுகிறது. அதே நேரத்தில் ஓட்டு வங்கிகளுக்கு உத்திரவாதமளிக்கும் வரையிலும் இப்படிப்பட்ட திட்டங்களின் முக்கிய பயனாளியான சுயநல சக்திகள் பயன்பெறும் வரையிலும் "ஏழ்மை ஒழிப்பு" என்ற பெயரில் செல்வத்தை விநியோகிப்பதை ராவ் வெறுக்கவில்லை.

"வறுமை ஒழிப்பு" திட்டங்களில் அரசு பணத்தை செலவு செய்தால் பொருளாதாரம் உயருமா? அல்லது "சந்தை சக்திகளை" சுதந்திரமாக அவர்கள் போகும் போக்கில் இயங்க அரசு விடவேண்டுமா? அப்படிவிட்டால் அந்த "மறைமுகமான கை" "வறுமை ஒழிப்பிற்கு" வழிகோலுமா? இந்த பரந்த சர்ச்சை இந்தியாவிலும், உலகமெங்கிலும் இருந்த ஒரு பழைய சர்ச்சையே. இது ஒரு திசைதிருப்பும் சர்ச்சையே என்று வாழ்க்கை அனுபவமும் நம் தத்துவமும் கற்றுத் தருகின்றது. பிரச்சனை என்னவென்றால் முதலாளித்துவ அமைப்பு மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய முடியாது, பூர்த்தி செய்யவுமில்லை நிலப்பிரபுத்துவ, காலனிய, ஏகாதிபத்திய செல்வாக்கிற்கு முடிவுகட்ட அது வழிவகுக்கவில்லை. அரசு ஏகபோக முதலாளித்துவத்தில் ஒரு முனையில் பணக்காரர்கள் மேலும்

பணக்காரர்களாவதும், மறுமுனையில் ஏழைகள் மேலும் ஏழையாவதுமே போக்காக உள்ளது. இப்படிப்பட்ட போக்கில் பணத்தை "ஏழ்மை ஒழிப்பில்" செலவிடப்பட்டாலும், அதாவது தீர்மானமான சில ஒப்பந்தக்காரர்களின் பைகளும் சுயநலத்தரகர் களின் பைகளும் நிரப்பப்பட்டாலும், அல்லது பெருமுதலாளி களின் தரப்பில் அரசு அபாயங்களை ஏற்றுக்கொண்டு அவர் களுக்கு பணஉதவி அளித்தாலும் பெருத்த வித்தியாசமில்லை.

காங்கிரஸ் (ஐ) திட்டத்தின் வர்க்கத் தன்மையை மறைப் பதற்கான முயற்சிதான் இது. இத்திட்டத்தினுள் திட்டவட்டமான தனிக்குழு நலன்களும் அடங்கியுள்ளன. முதலாளித்துவ அமைப்பைப் பாதுகாப்பதும், நிலப்பிரபுத்துவ மிச்சங்களையும், ஏகாதிபத்தியத்தையும் அனைத்து காலனிய பாரம்பரியத்தையும் பாதுகாப்பதே அவர்களுடைய திட்டத்தின் வர்க்க குணமாகும். அவர்கள் எதை மறைக்க முயலுகிறார்கள் என்றால் அரசு கஜானாவை இந்திய பெருமுதலாளிகள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களின் நன்மைக்காக கொள்ளையடிக்க உத்தரவாதம் தரும் உண்மையான திட்டத்தையே. இந்திய உழைக்கும் மக்களை சுரண்டுவதற்காகவும், செல்வத்தின் பலன்களை அனுபவிப்பவர் கள், அச்செல்வத்தின் மூலத்தை மறைப்பதற்காகவும், அவர்களுடைய திட்டங்களுக்கு பலியானவர்களின் இன்னலை மேலும் அதிகரிக்கவும் அவர்கள் அவர்களுடைய திட்டத்தை மறைக்க முற்படுகிறார்கள். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் காங்கிரசிடம் நம்பிக்கை வைத்த உடமைவர்க்கப் பகுதிகளின் நலன்கள் திருப்தி செய்யப்பட்டுள்ளன. தற்போதைய தேசிய மற்றும் சர்வதேசிய சூழ்நிலைகளை பயன்படுத்தி, சர்வதேசிய அரங்கில் பெரிய புள்ளிகளாக வெளிவரவேண்டும் என்று எண்ணுகின்ற இந்தியப் பெருமுதலாளிகளின் கோரிக்கைகளை காங்கிரஸ் (ஐ) ன் திட்டங்கள் பிரதிபலிக்கின்றன.

இந்தியாவிற்கு முக்கிய அபாயம் பி.ஜே.பி.யின் "வலதுசாரி மதவெறி நிகழ்ச்சி நிரலிலிருந்துதான்" வருகிறது என்று காங்கிரஸ் (ஐ), சி.பி.ஐ. சி.பி.ஐ (எம்) மற்றும் பலரும் பிரச்சாரம் செய்து வருகிறார்கள். அதே நேரத்தில், பாரதீய ஜனதா கட்சி மத்திய ஆட்சி அதிகாரத்திற்கு தீவிரமாக போட்டியிடுவதாகத் தெரிவித்து வருகிறது. காங்கிரஸ் (ஐ) க்கு பின், பா.ஜ.க.தான் ஆட்சிக்கு வரப்போகிறது என்று மக்களிடையே அது அறிமுகப் படுத்தப்படுகிறது. பயனற்ற தன்மையையும், ஊழலையும்,

எதிர்த்த ஒரு தேசிய கட்சி என்ற இடத்தை தனக்கென்று செதுக்கிக்கொள்ள பா.ஜ.க. முயற்சி செய்கிறது. அன்னிய பன்னாட்டு நிறுவனங்களுக்கு பாரபட்சமில்லாமல் விற்கும் திட்டம் என்று பா.ஜ.க. காங்கிரஸ்(ஐ) ன் திட்டத்தை இகழ்ந்து வருகிறது.

அதே சமயம், பா.ஜ.க. மிகவும் ஜாக்கிரதையாக தானும் தாராளமயமாக்குதலையும், தனியார்மயமாக்குதலையும் ஆதரிப்ப வர்கள்தான் என்று தெளிவாகக் கூறிவருகிறது. நுகர்வுப் பொருட்கள் மற்றும் உணவு பதனிடுதல் போன்ற பகுதிகளில் பன்னாட்டு நிறுவனங்கள் நுழைவதையே தான் எதிர்கிறது என்றும், சக்தி, கனரகத் தொழிற்சாலைகள், சாலையமைத்தல், தொலைத் தொடர்பு போன்ற பல அடிப்படை வசதித்துறைகளில் (Infrastructure) பன்னாட்டு நிறுவனங்கள் நுழைவதை தாம் ஊக்குவிப்பதாக பா.ஜ.க. பகிரங்கமாகக் கூறுகிறது. ஊழல்களும், சுயநலச் சலுகைகளும், குற்றவியல்களும் நிறைந்தது என்று காங்கிரஸ்(ஐ) யை பகிரங்கமாக பா.ஜ.க. குற்றஞ்சாட்டுவதோடு நின்றுவிடாமல், தன்னுடைய அரசாங்கம் வித்தியாசமானதாக இருக்கும் என்றும் உறுதியளிக்கிறது. தான் அதிகாரத்திற்கு வரும்பொழுது செயல் படுத்துவதாக தன்னுடைய சொந்த "ஏழ்மை ஒழிப்பு" திட்டங்கள் சிலவற்றையும் அது அறிவித் துள்ளது. தன்னுடைய கட்சி அதிகாரத்திற்கு வந்தால் நுகர்வுப் பொருட்கள் மற்றும் உணவுத் துறைகளில் இந்தியாவில் முன்னமேயே நுழைந்துவிட்ட பன்னாட்டு நிறுவனங்கள் வெளியேற்றப்பட மாட்டாது என்று பா.ஜ.க.வின் தலைவர் அத்வானி பகிரங்கமாகக் கூறுகிறார்.

பா.ஜ.க. அதிகாரத்திற்கு போட்டியிடும் கட்சி என்று தன்னை தீவிரமாக வருணித்து வருகின்றது. அதே நேரத்தில் முதலாளித்துவத்தினிடத்தேயும், நிலப்பிரபுத்துவ ஏகாதிபத்திய மற்றும் காலனிய மிச்சங்களிடத்தேயும், அதனுடைய போக்கி லிருந்து மதவெறி நிகழ்ச்சிநிரல் உள்பட, பா.ஜ.க.வின் திட்டம் காங்கிரஸ்(ஐ) இன் திட்டத்திலிருந்து பெருவாரியாக வேறுபட வில்லை என்று தெள்ளத்தெளிவாகிறது.

நுகர்வுப் பொருட்கள் மற்றும் உணவு தொழிற்சாலைத் துறைகளில் பன்னாட்டு நிறுவனங்கள் நுழைவதை எதிர்ப் பதைப் பற்றி பேசுவதனால் மத்திய வர்க்கத்தின் ஒரு பகுதியினரின் மற்றும் பன்னாட்டு நிறுவனங்கள் நிபந்தனையே

இல்லாமல் நுழைவதனால் தங்கள் நலன்களுக்கு பாதகம் ஏற்படுமோ என்று கருதுகின்ற நாட்டுப்புற நகர முதலாளிகளில் ஒரு பகுதியினரின் கவனத்தை கவர்ந்திழுக்க பா.ஜ.க. முயற்சி செய்கிறது. மத்திய வர்க்கத்தினர் ஒதுக்கப்படுவதை (Polarisation) அதாவது அவர்களில் பெருவாரியான மக்கள் உழைக்கும் வர்க்கத்தின் வரிசைக்கு தள்ளப்படுவதையும் ஒருசிலர் மட்டும் பணக்காரர்கள் வரிசைக்கு உந்தப்படுவதையும் சில கொள்கை கள் வகுப்பதன் மூலம் தவிர்த்துவிடலாம் என்ற மாயையை உருவாக்கி அவர்களை தங்கள் பக்கம் வென்றெடுக்கலாம் என்று பா.ஜ.க. முயற்சி செய்கிறது. பொருளாதாரச் சீர்திருத்தங் களுடைய வேகத்தில் மகிழ்ச்சியடையாத சில முதலாளிகள் தங்களுடைய வசதிக்கும் தங்கள் உயர்ந்த நலன்களுக்கு ஏற்றாற்போலவும் நடத்தப்படவேண்டும் என்றும் விரும்புகிறார் கள். அவர்களின் கவனத்தையும் பா.ஜ.க. கவர்ந்திழுக்கிறது.

பா.ஜ.க. எதை மறைக்க முற்படுகிறது என்றால் முதலாளித்துவத்தின் கீழ் ஒரேஒரு திட்டம்தான் இருக்கிறது என்பதையே. மேலும் அது பெருமுதலாளிகளுக்கிடையேயும், சுரண்டும் வர்க்கங்களுக்கிடையேயும் பெருத்த பிளவு உள்ளது என்பதையும் அதனால் ஆளும் கட்சி நிர்வாகம் செய்வது கடினமாகி வருவதையும் மறைக்க முயற்சிக்கிறது. தேசத்தின் பாதுகாவலனாகவும் வெளிநாட்டு நலன்களின் பாதுகாவலனாக வும், பணக்காரர்கள் மற்றும் ஏழைகளின் பாதுகாவலனாகவும் தன்னை பாவிக்க முயற்சி செய்து, எல்லாவற்றையும் மூடி மறைக்க முற்படுகிறது. பா.ஜ.க. அதிகாரத்தை கைப்பற்றுவதனால் மத்திய வர்க்கத்தினர் நாசமாகி வருவது நின்றுவிடாது. வெவ்வேறு கட்சிகள், வெவ்வேறு குழுக்களின் நலன்களை பிரதி நிதித்துவம் செய்து கொண்டு உடமைவர்க்கத்தின் குழுச் சண்டைகள் நடந்து கொண்டுதான் இருக்கும். ஊழல், சுயநலம், வகுப்புவாதம், அராஜகம் போன்றவை இந்த அமைப்பினுள் பல்வேறு போட்டியிடும் நலன்களுள் தங்களுடைய நலன்களை இடம்பெறவைக்கும் வழிகளாகும். இப்படிப்பட்ட செயல்களுக்கு பா.ஜ.க. வின் வெற்றி முற்றுப்புள்ளி வைத்துவிடாது. மாறாக இச்சூழ்நிலைமைகள் மேலும் மோசமாகும். மற்றுமொரு காங்கிரஸ் (ஐ) வெற்றியும் இதே நிலைக்குத்தான் வழிவகுக்கும்.

ஜனதாதளம், சமாஜிவாதி கட்சி, பகுஜன் சமாஜ்வாதி கட்சி போன்ற (ப.ச.க) அரசியல் அணிகளிடமும் விஷயங்கள்

வித்தியாசமானதாக இல்லை. இந்த கட்சிகளில் ஒன்றுகூட தனியார்மயமாக்குதலையும், தாராளமயமாக்குதலையும் எதிர்க்க வில்லை என்பது கவனத்தை கவரக்கூடியதாக உள்ளது. அந்நிய மூலதனத்தைக் கவர்ந்திழுப்பது அவர்களுக்குள்ளே ஒரு பெரும் போட்டா போட்டியாகிவிட்டது. இது எதைக் காண்பிக்கிறது என்றால் எல்லா பாராளுமன்ற ஸ்தாபனங்களும், வெளிநாட்டு மூலதனத்தை நாட்டிற்குள் கொண்டுவரும் கருவிகளாக மாற்றப்பட்டுவிட்டன என்பதையே. இந்த கட்சிகள் அவர்கள் எந்த இடத்திலெல்லாம் அதிகாரத்தில் உள்ளார்களோ, அங்கெல்லாம் வெளிநாட்டு மூலதனத்தை கவர்ந்திழுப்பதற்கு அவர்களால் முடிந்தளவிற்கு முயற்சிக்கிறார்கள். இந்த விஷயத்தில் நரசிம்மராவை விட நன்றாக வேலை செய்யமுடியும், மத்தியில் நாங்கள் ஆட்சிக்கு வந்தால் என்பதையும் அவர்கள் தெளிவுபடுத்துகிறார்கள்.

இந்தச் சூழ்நிலைமையில் அவர்கள் எல்லோரும் தங்கள் திட்டங்கள் ராவ், அவருடைய கட்சி மற்றும் பா.ஜ.க.வின் திட்டங்களிலிருந்து மாறுபட்டவை என்றும் அவர்கள் திட்டம் எப்படியோ இந்தியாவிலுள்ள ஏழைகளுக்கு சேவை செய்யும் என்றும் பாசாங்கு செய்துவருகிறார்கள். ஜனதாதளம், எஸ்.பி. மற்றும் பி.எஸ்.பி. கட்சிகள் தாங்கள் மத்தியில் ஆட்சிக்கு வந்தால் ஒடுக்கப்பட்ட சாதிகள் அதிகாரம் பெற்றுவிடலாம் என்ற மாயையை வளர்த்து வருகிறார்கள். அவர்களுடைய கொள்கை கள் சாதி ஒடுக்குமுறையின் அடிப்படையை நீக்கவில்லை என்பதையும், பெருவாரியான மக்களின் வாழ்க்கையை பரிதாப கரமாக ஆக்கிய சுரண்டல் முறையையும் நீக்கவில்லை என்பதை உண்மையாகவே நடந்துவரும் நிகழ்ச்சிகள் நிரூபிக்கின்றது. இந்த கட்சிகள் இருப்பதே சுரண்டும் வர்க்கங்களிலுள்ள கடுமையான முரண்பாடுகள் மற்றும் அரசியல் விவகாரங்களி லுள்ள குழப்பம், அராஜகம் ஆகியவற்றின் வெளிப்பாடேயாகும். இருந்தாலும், அவர்கள் ஒரு மாற்று இருக்கிறது என்று மக்களை நம்பவைக்க முற்படுகிறார்கள். அவர்களுடைய திட்டங்கள் நாட்டின் பொருளாதார நிலைமையை மாற்றப்போவதோ அல்லது கீழ்சாதி மக்களின் பொருளாதார நலன்களை மேம்படுத் தப்போவதோ அல்லது சாதி ஒடுக்குமுறையை முடிவுகட்டப் போவதோ அல்லது, மக்களுக்கு அதிகாரமளிக்கப்போவதோ இல்லை.

சி.பி.ஐ(எம்) தன்னுடைய 15வது மாநாட்டில் தனது மூன்றாவது முன்னணி பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெறும் வெற்றியின் அடிப்படையில் அரசாங்கம் அமைக்க முயற்சித்ததன் மூலம், மற்ற அரசியல் கட்சிகளைப் போலவே தானும் மற்றுமொரு போட்டியாளியாகவே தோற்றமளித்தது. சி.பி.ஐய்(எம்) தலைவர்களின் துரோகம் இழைக்கும் பாதையை இந்த போட்டியிடும் பரபரப்பு மறைப்பது மட்டுமில்லாமல் உழைக்கும் வர்க்கத்தின் பாட்டாளிகளின் கவனத்திலிருந்தும் அதை மறைக்கிறது. சி.பி.ஐய்(எம்) தன்னுடைய அதிகாரப் பேராசையை உழைக்கும் வர்க்கம் மற்றும் பாட்டாளி மக்களின் நலன்களை பாதுகாப்பதற்காக என்று தந்திரமாக பாவனை செய்து வருகிறது. மத்திய வர்க்கத்தினுடைய கட்சி என்பதையும், உடமைவர்க்கத்தினரின் சில பகுதி நலன்களைப் பாதுகாக்கிறது என்பதையும் அது மறைக்க முயற்சிக்கிறது. அவர்களை அழிவிலிருந்து காப்பாற்றிவிடலாம் என்று உறுதிகூறி அது மத்திய வர்க்கத்தின் கவனத்தை ஈர்க்கிறது. உழைக்கும் வர்க்கம் அதிகாரத்திற்கு வர காத்திருக்க வேண்டும், ஏனென்றால் அதற்கான சூழ்நிலைகள் இப்பொழுது இல்லை என்று அவர்கள் உழைக்கும் வர்க்கத்திடம் விளக்குகிறார்கள். இப்படியாக ஆராய்வின் முடிவில் சி.பி.ஐ(எம்) பெருமுதலாளிகள் மற்றும் வெளிநாட்டு சக்திகளுடைய நலன்களின் பாதுகாவலனாக அரங்கத்தில் காட்சியளிக்கிறது.

உடமைவர்க்கத்தின் அரசாங்கங்களையும், உடமைவர்க்கத்தின் சர்வாதிகாரத்தையும், அவர்களின் நாகரீக சமுதாயத்தையும் நடத்துவதில் உழைக்கும்வர்க்கம், உடமைவர்க்கத்துடன் போட்டியிடவில்லை. அதற்கு மாறாக, நெருக்கடி நிலைமைகள், முரண்பாடுகள், இரத்தம் சிந்துதல், போர்கள் இல்லாத ஒரு புதிய சமுதாயத்தை உருவாக்குவதற்கு உழைக்கும் வர்க்கம் தலைமை தாங்க வெளிவருவதை கம்யூனிஸ்ட்டுகள் உறுதிப்படுத்த வேண்டும். உடமைவர்க்கத்தின் அரசை வீழ்த்துவதும், ஒரு புதிய ஜனநாயக சோசலிச அரசை உருவாக்குவதும் இன்றைய அவசியமாகும். கம்யூனிஸ்ட்டுகள் இதை உண்மை நிலையாக்குவதற்கு சமுதாயத்தை நெருக்கடியிலிருந்து மீட்டெடுக்கும் உடனடித் திட்டத்தினால் மட்டுமே உழைக்கும் வர்க்கத்தின் நலன்களும், வெகுஜன மக்களின் நலன்களும் பாதுகாக்க முடியும் என்பதை தெளிவாக அடையாளம் கண்டுகொள்ள

வேண்டும். விவசாயப் புரட்சியை நடத்தவும், ஜனநாயகத்தைப் புதுப்பிக்கவும் அவசியம் ஏற்பட்டுள்ளது. அப்படிச் செய்வதினால் அவர்களுக்கு ஆதரவாக உண்மையாகவே ஏதோ செய்யப் படுகிறது என்பதை மக்கள் கண்கூடாகக் காணமுடியும். காலனியத்தை எதிர்த்த புரட்சியை முடிவுவரை எடுத்துச் செல்ல அவசியம் ஏற்பட்டுள்ளது.

கம்யூனிஸ்ட்டுகள் அவர்களுடைய திட்டத்தோடு, தேர்தல் களில் பங்குபெறுகிறார்களா இல்லையா என்பதல்ல பிரச்சனை. உடமை வர்க்கத்திற்கும் உழைக்கும் வர்க்கத்திற்குமிடையே மூண்டுள்ள போரான வர்க்கப் போராட்டத்தில் தேர்தல் என்பது முக்கியமான ஒருகளமாகும். புரட்சியையும், சோசலிசத்தையும் முன்னுக்கு கொண்டுவருவதற்காக கம்யூனிஸ்ட்டுகள் இந்தப் போராட்டத்தை எல்லா முனைகளிலிருந்தும் நடத்த வேண்டும். இருந்தாலும் கம்யூனிஸ்ட்டுகள் பாராளுமன்ற கட்சிகளிடமிருந் தும், அரசியல்வாதிகளிடமிருந்தும் தங்களை வேறுபடுத்திக் கொள்ள வேண்டும். கம்யூனிஸ்ட்டுகள் தங்களுடைய கட்சிகளை தேர்தல் இயந்திரங்களாக ஆக்கும் அளவிற்கு தரம் தாழ்த்தி விடுவதோ அல்லது சமூக—ஜனநாயக பாணியில் தேர்தலில் கண்ட வெற்றியிலேயே தங்கள் சார்பினரின் நலன்களுக்கு அனுகூலம் பெற்றுவிடலாம் என்று கருதுவதோ இல்லை. தேர்தல் போராட்டத்தை வர்க்கப்போராட்டத்தின் ஒரு களமாகவே கம்யூனிஸ்ட்டுகள் கருதுகிறார்கள். அதைப்போலவே அவர்கள் அரசாங்கங்களையும், சட்டசபைகளையும், பாராளுமன்றங்க ளையும் வர்க்கப் போராட்டத்தின் களமாகவே உபயோகப்படுத்து வார்கள். அவர்களுடைய முழு புரட்சிகர செயல்பாடுகளிலும், அவர்களுடைய கட்சிகளின் வேலைகளிலும் தங்களுடைய முடிவான நோக்கம் புரட்சியின் வெற்றியும், சோசலிசத்தின் வெற்றியுமே என்பதை எப்பொழுதும் மறக்கமாட்டார்கள். இந்தக் குறிக்கோளை நினைவில் கொண்டே அவர்கள் எல்லா போராட்டங்களையும் மேற்கொள்வார்கள். ஆயுதமேந்திய போராட் டத்தையும் மற்ற பிற வடிவங்கொண்ட போராட்டங்களையும் அவர்கள் அதே கண்ணோட்டத்திலேயே பார்க்கிறார்கள்.

காங்கிரஸ்(ஐ), பா.ஜ.க. மற்றும் கட்சிகளின் திட்டங்கள் அரசியல் சமுதாயத்தை பிளவுபடுத்தும் முறையில் உள்ளதால் அரசியல் ஒற்றுமையை ஏற்படுத்துவதில் பிரச்சனை உள்ளது. மற்றுமொரு பிரச்சனை என்னவென்றால் உழைக்கும் வர்க்க

திட்டத்தினை அற்பமாக்குவது. இதை "மதச் சார்பின்மைக்கும், ஜனநாயக சமுதாயத்திற்கும் மூன்றாவது முன்னணி" என்ற கோஷத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். மற்ற திட்டங்களின் நோக்கத்தைப் போலவே இப்படிப்பட்ட கோஷம் இன்றுள்ள அமைப்பை பாதுகாப்பதை உறுதிப்படுத்துகிறது. சுரண்டும் வர்க்கங்களின் நன்மைக்காக தற்பொழுதுள்ள அமைப்பை மேலும் சாதகமாக வேலை செய்ய வைக்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருப்பதனால் அதனுடைய முக்கிய உள்கருத்தும், காங்கிரஸ் (ஐ), பி.ஜே.பி. கட்சிகளின் கருத்துக்களே தான். எடுத்துக்கொண்ட நிகழ்ச்சிநிரல் உடமை வர்க்கத்தினு டையது. தொழிலாளி வர்க்க திட்டத்தை முன்வைப்பதற்கு இன்னும் நேரம் வரவில்லை என்று வெளிப்படையாகவே சி.பி.ஐ (எம்) கூறிவருகிறது.

இப்படிப்பட்ட திட்டங்கள் உறுதியளிக்கும் சமுதாயம் உண்மையிலேயே ஏற்கனவே இருந்து வருகின்ற சமுதாயமே. இப்படிப்பட்ட சமுதாயம் அவ்வப்போது தனிநபர் பயங்கரவாதத் தையும், அரசு பயங்கரவாதத்தையும், மதக்கலவரங்களையும் தூண்டிவிடுகிறது. ஏனென்றால், அது "மதச்சார்பற்றது" "ஜனநாயகமானது". மேலும் அது "தேசிய ஒற்றுமை மற்றும் பிரதேச ஒருமைப்பாடு" என்ற கருத்தின் அடிப்படையிலானது. மதச்சார்புள்ள சக்திகளை சகித்துக்கொள்வதனால் மட்டுமே அது மதச்சார்பற்றதாக இருக்கிறது. அதேபோல் ஜனநாயகத்திற்கு எதிரான சக்திகளை சகித்துக் கொள்வதனால் மட்டுமே அது ஜனநாயகவாதியாக உள்ளது. முதலாளித்துவத்தையும், நிலப்பிரபுத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்ட சமுதாயத் தில் மதச்சார்பின்மையும், ஜனநாயகமும் வெறும் கொள்கை இலக்குகளாக மட்டுமே இருக்கமுடியும். இப்படிப்பட்ட சமுதாயத்தின் மேல்பகுதியும் பல குறிப்பிடத்தக்க வகையில் மதவெறியுடையதாகவும், காலனிய ஆதிக்கம் உள்ளதாகவும், ஏகாதிபத்திய தன்மை உடையதாகவுமே இருக்கும்.

இந்த முன்னணிக்கு குரல் கொடுத்ததின் மூலம் சி.பி.ஐ (எம்) தன்னுடைய 15—வது மாநாட்டில் சமுதாயத்தை நெருக்கடியிலிருந்து விடுவிப்பதற்கு தலைமை ஏற்க உழைக்கும் வர்க்கத்தை ஒழுங்கமைக்கும் பணியை கைகழுவிவிட்டது. சி.பி.ஐ (எம்) தன்னுடைய வழிமுறைகளை திருத்திக் கொள்ளும் என்ற மாயைகளுக்கு இடமளித்துவரும் கம்யூனிஸ்ட்டுகளிடையே

இது மிகுந்த கவலையையும், ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது. சமுதாயத்தை நெருக்கடியிலிருந்து விடுவிக்கும் திட்டத்தை எடுத்துக்கொள்ளாமல் போனது மட்டுமில்லாமல் அது கம்யூனிசத் திட்டத்தை முழுமையாகத் தவிர்ப்பதற்கு ஒரு செயலாக தாராளமயமாக்குதலையும் ஏற்றுக் கொண்டுள்ளது. இப்படிச் செய்தவுடன், இன்றுள்ள நிலைமைகளை பாதுகாப்பதற்காக உள்ள எந்தவொரு திட்டத்தையும் நியாயீகரிக்க வாதங்களுக்கு பஞ்சமேயிருக்காது. உழைக்கும் வர்க்கம் தலைமை தாங்கும் பரந்த வெகுஜன முன்னணியை கட்டியமைக்க தோதான நிலைமைகள் இன்று இல்லை என்ற வாதத்தினால் இப்படிப்பட்ட திட்டம் நியாயீகரிக்கப்படுகிறது. எப்படிப்பட்ட தர்க்கம் இது? உழைக்கும் வர்க்கத்தின் நலனைப் பாதுகாக்கும் போராட்டத்தில் மற்றவர்களுடன் தான் பங்கு கொள்ளப் போவதில்லை என்றும், பிற்காலத்திலும் அப்படிச் செய்யும் உத்தேசமில்லை என்றும், முதலாளிவர்க்கத்திற்கு, சி.பி.ஐ(எம்) உறுதிகூறும் தர்க்கமே இது. உழைக்கும்வர்க்கம் ஒருநாள் பாராளுமன்றத்தில் முதலாளித்துவ அரசை நிர்வகிக்க அதிகாரம் பெற்றுவிடலாம் என்ற ஆபத்தான மாயையை உருவாக்குவதினால் சி.பி.ஐ(எம்) தான் அரசினுள் கொண்டுள்ள தற்காலத்தைய ஒப்பந்தங்களை இப்பொழுதும் பிற்காலத்திலும் காப்பாற்றிக் கொண்டுவிடலாம் என்று நம்புகிறது. இன்றுள்ள அமைப்பைத் தூக்கி எறிய எப்பொழுது நிலைமைகள் முற்றிவரும் என்பதல்ல இன்றைய தீவிரமான கேள்வி. எப்பொழுது அரசியல் சக்திகள் உழைக்கும் வர்க்கம் தலைமை தாங்கி சமுதாயத்தை நெருக்கடியிலிருந்து விடுவிக்கும் திட்டத்தை முன்வைக்கப் போகிறார்கள் என்பதே இன்றைய அவசரக் கேள்வியாகும்.

சி.பி.ஐ(எம்)இன் 15வது மாநாட்டில் நடந்த நிகழ்ச்சிகளே மீண்டும் சி.பி.ஐ—இன் 16வது மாநாட்டில் நடத்தப்பட்டது. சி.பி.ஐ. இன் 16வது மாநாட்டில் 70 ஆண்டுகளாக இந்தியாவில் கம்யூனிசம் என்பதைப் பற்றிக் குறிப்பிடப்பட்டது. பிறகு தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. 70வது ஆண்டு விழா டிசம்பரில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது. அது மூன்றாவது முன்னணி அமைக்கக் குரல் கொடுத்ததை முழுமையாக ஆதரித்தது. அந்த முன்னணியை அது இடதுசாரி ஜனநாயக மதசார்பற்ற முன்னணி என்று பெயரிட்டது (சி.பி.ஐ(எம்) அதை மதசார்பற்ற ஜனநாயக முன்னணி என்று

குறிப்பிட்டது. இப்படிப்பட்ட கட்டுக்குள் சி.பி.ஐ, மூன்றாவது முன்னணியின் கீழ் இடதுசாரியினரை ஐக்கியப்படுமாறு கோரியது. இது சி.பி.ஐ(எம்) சி.பி.ஐ மீது மாயைகள் கொண்டுள்ள இந்திய கம்யூனிஸ்ட்டுகளுக்கு மேலும் ஏமாற்ற மளித்தது.

சி.பி.ஐ, சி.பி.ஐ(எம்) தேர்தலிலும், பாராளுமன்றத்திலும், தொழிற்சங்கங்களிலும் நடத்தும் ஒட்டுமொத்த செயல்பாடுகளும், அவர்களின் விவசாயிகள், இளைஞர் மற்றும் மகளிர் முன்னணி களில் நடத்தும் செயல்பாடுகளும் மக்களின் அரசியல் ஈடுபாட்டைக் குலைக்கவும், தொழிலாளி வர்க்கத்தை தத்துவ ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும், அமைப்பு ரீதியாகவும் முழுமையாக நிராயுதபாணியாக ஆக்குவதற்காகவும் திட்டமிடப் பட்டுள்ளது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்திய கம்யூனிஸ்ட்டு கள் எங்கு செல்வார்கள்? இமயத்திலிருந்து குமரி வரை, கிழக்கிலிருந்து மேற்கு வரை இந்திய துணைக்கண்டத்தின் நெடுஞ்சாலைகளிலும், குறுக்குச் சாலைகளிலும் மேலும் கீழுமாகச் சென்று, வலதுசாரி மதவெறிச் சக்திகளை முறியடிப்பதற்காக மற்றுமொரு உருப்படியில்லாத திட்டத்திற்கு நீங்கள் வாக்களிக்க வேண்டும் என்று மக்களிடம் அறிவிப்பார்களா? அப்படியே வலதுசாரி மதவெறிச் சக்திகள் முறியடிக்கப்பட்டதாக வைத்துக்கொள்வோம். தொழிலாளி வர்க்கத்திற்கும் உழைக்கும் மக்களுக்கும் என்னவாகும்? இந்த மூன்றாவது முன்னணி அரசாங்கத்தில் அமர்ந்த பிறகு சமுதாயத்தை நெருக்கடியிலிருந்து விடுவிக்கும் செயலை உடனே எடுத்துக் கொள்ளுமா? இல்லை, இப்படிப்பட்டவற்றைப் பேசுவதற்கு இதுவல்ல நேரம். இதுதான் சி.பி.ஐ(எம்) ன் 15—வது மாநாட்டிலிருந்து, சி.பி.ஐ—ன் 16வது மாநாட்டிலிருந்தும் கிடைத்த சந்தேகத்திற்கே இடமில்லாத செய்தி. இந்தியாவின் நெருக்கடிக்கான அடிப்படைக் காரணம் என்ன? அதற்கான தீர்வு என்ன? என்ற கேள்விகளைக்கூட எழுப்பவில்லை, இந்த இரண்டு மாநாடுகளும். வேறுவகையாகச் சொல்லப்போனால், இந்திய சமுதாயத்தை வருத்திக் கொண்டிருக்கும் பிரச்சனை களைப் பற்றி விவாதிப்பதிலேயோ, ஆலோசிப்பதிலேயோ எதிர்மறையான பங்கையே அவை அளித்துள்ளன.

சி.பி.ஐ, சி.பி.ஐ(எம்), காங்கிரஸ்(ஐ) யுடன் சேர்ந்து கூட்டு அரசை நடத்தி, அதை மதச்சார்பற்ற ஜனநாயக சக்திகள் மதவெறி

சக்திகளை வெற்றி கொண்டுவிட்டது என்று பறைசாற்றி மீண்டும் எழுச்சியை தணித்து முதலாளிவர்க்கத்தைக் காப்பாற்ற முயற்சி செய்யலாம். ஆகையால் உழைக்கும் வர்க்கம் மிகுந்த விழிப்புடன் இருக்க வேண்டும். போலந்தில் சமூக—ஜனநாயக வாதிகள் அதிகாரத்திற்கு வருவதைப் பற்றி அவர்கள் ஏற்கனவே வீண்பெருமையுடன் பேசி வருகிறார்கள். ரசிய பாராளுமன்றத் தில் தங்களுடைய சகோதரத்துவ தோழர்களின் வெற்றியிலும், அவர்களுடைய மகிழ்ச்சி ஆரவாரம் வெளிப்படையாகத் தெரிகிறது. இப்படிப்பட்ட நம்பிக்கைத் துரோகம் நடக்காமலிருப் பதை உறுதிசெய்ய ஒரு மிகத் தீர்மானமான கருத்தியல் போராட்டமும், விவாதப் போராட்டமும் இன்றைய அவசியத் தேவையாக இருக்கிறது.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், இந்திய கம்யூனிஸ்ட்டுகள், இந்த கம்யூனிஸ்ட்டு கட்சியோ குழுவோ அல்லது அந்த கம்யூனிஸ்ட்டு கட்சியோ குழுவோ நிலைமைகளை மாற்றிவிடும் என்ற மாயைகளுக்கு இடமளிக்கக்கூடாது என்ற திடமான அபிப்பிராயத்தை சி.ஜி.பி.ஐ. கொண்டுள்ளது. ஏமாற்றமடைந்த தால் அவர்கள் அவசரப்பட்டு இந்த கட்சியையோ, அல்லது அந்த கட்சியையோ எதிர்க்கக்கூடாது. அதற்கு மாறாக அவர்கள் அப்படிப்பட்ட அரசியலிலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ள வேண்டும். அவர்கள் சமுதாயத்தை நெருக்கடியிலிருந்து விடுவிக்கும் திட்டத்தை விரிவுபடுத்த வேலை செய்ய வேண்டும். அவர்கள் இந்த அடிப்படையில் அரசியல் ஒற்றுமையைக் கட்டியமைக்க வேண்டும்.

கம்யூனிஸ்ட்டுகளாகிய நாம் இந்த அடிப்படை பிரச்சனை யான புரட்சியின் நிலையில் எந்தவிதமான பிரிவுவாத குணங் களையும் வெளிப்படுத்தக் கூடாது. விதிவிலக்கு இல்லாமல் எல்லா அரசியல் சக்திகளின் நடவடிக்கைகளை ஆராய்ந்து அதைப்பற்றி கருத்து தெரிவிக்கும் உரிமையை நாம் நிச்சயமாகப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். அதன் நோக்கம் சமுதாயத்தில் அரசியலின் கௌரவத்தை அதிகரிப்பதாக இருக்கவேண்டும். இந்த விமர்சன பகிரங்கப்படுத்துதலில் நாம் சிறுதுளியளவுகூட குறுகிய மனப்பான்மைக்கோ, வறட்டுவாதத்திற்கோ இடமளிக்கக் கூடாது. இந்தக் கட்சியையோ அந்தக் கட்சியையோ, அல்லது இந்தக் கம்யூனிஸ்ட்டையோ அந்தக் கம்யூனிஸ்ட்டையோ, மதிப் பிழக்கச் செய்வதல்ல நோக்கம். ஒரு உயிர்த்துடிப்பான அரசியல்

சூழ்நிலையை உருவாக்குவதே நோக்கமாக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இந்த முன்னணியோ, அந்த முன்னணியோ எதைச் சாதித்தது என்றோ அல்லது எதிர் காலத்தில் எதைச் சாதிக்கும் என்றோ மக்களே எடைபோட முடியும். இதை எந்தப் பகுதியினரிடமிருந்தும் எதிர்ப்புவரும் என்ற அச்சமில்லாமல் துணிவோடு செய்தாக வேண்டும்.

பல்வேறு திட்டங்களினால் எவ்வளவு அதிகமாக அவர்கள் பிளவுபடுகிறார்களோ, அவ்வளவு அருகில் புரட்சியின் வெற்றி உள்ளது என்ற முதலாளிவர்க்கம் விதைத்த மூடுதிரையை எல்லா கம்யூனிஸ்ட்டு கட்சிகளும், எல்லா கம்யூனிஸ்ட்டு குழுக்களும் முற்போக்கான மற்றும் ஜனநாயக சக்திகளும், அதாவது எல்லா அரசியல் சக்திகளும் அகற்ற நேரம் வந்துவிட்டது. அவர்கள் தாமாகவே இன்றைய தேவைகளுக்கு விழித்தெழுந்து உழைக்கும் வர்க்கத்தையும், பாட்டாளி மக்களையும் சமமாக உயர்த்த வேண்டும்.

உழைக்கும் வர்க்கத்தாலும், பாட்டாளி மக்களாலும் உண்டாக்கப்பட்டு கோரப்படும் திட்டங்களுக்கு எல்லா திட்டங்களும் கீழ்ப்படிய வேண்டும். மக்கள் புரட்சியின் மூலம் அவர்கள்தான் நிகழ்ச்சி நிரலை நிர்ணயிக்க வேண்டும் என்று வலியுறுத்த வேண்டும். இந்த அரசியல் கட்சியையோ, அந்த அரசியல் கட்சியையோ கூட்டுச்சேர்வதற்காகவோ அல்லது ஆதரவளிப்பதற்காகவோ இந்தத் திட்டத்தைப் பற்றியோ, அல்லது அந்தத் திட்டத்தைப் பற்றியோ, விவாதிப்பது இந்த வேலைக்கு அழிவை ஏற்படுத்தும். உழைக்கும் வர்க்கத்தினுடையதும் மக்களுடையதுமான தன்முயற்சிக்கு அப்படிப்பட்ட அழிவு தரக்கூடிய தாக்குதல் வராமல் முறியடிப்பதை சி.ஜி.பி.ஐ. உறுதி செய்யவேண்டும். சமுதாயத்தை நெருக்கடியிலிருந்து மீட்க தாங்களே நிகழ்ச்சி நிரல்களை அமைத்துக் கொள்வதற்காக உழைக்கும்வர்க்கத்தையும், வெகுஜன மக்களையும் விழிப் புணர்வு பெறச்செய்ய வேண்டும்.

# பாகம் 7

# ஜனநாயகத்தை புதுப்பித்தல் பற்றியும் காலனியாதிக்கத்தை எதிர்த்த புரட்சியை இறுதிவரை கொண்டு செல்வதைக் குறித்தும்

ஒரு முழுநிறைவான காலனியாதிக்க எதிர்ப்புப் புரட்சியானது அவசியமாக எதை உணர்த்துகிறது என்றால் மக்களிடமிருந்து பொருளாதார, அரசியல் அதிகாரத்தைப் பறித்துக் கொண்டுள்ள முதலாளித்துவ அமைப்பிற்கும், அதன் ஜனநாயகத்திற்கும் முடிவுகட்ட வேண்டும் என்பதையே. வெறும் சம்பிரதாய சுதந்திரத்தின் நிகழ்ச்சியான காலனியாதிக்க எதிர்ப்புப் புரட்சி சமூக புரட்சியில்லாமல் காலத்துக்கு ஒவ்வாததாகிவிட்டது.

1947-ல் இந்திய உடமைவர்க்கத்திடம் "அதிகாரம் கை மாறியதிலிருந்து" இன்று வரையிலான முழு அனுபவத்திலிருந்து இந்திய துணைக்கண்டம் பிளவுபட்டது உட்பட குறிப்பாக பெங்கால், பஞ்சாப் அனுபவங்களிலிருந்தும் இது ஆழமான மாறுதல்களுக்கு வழிவகுக்கவில்லை என்பது நிரூபணமாகிறது. மாறாக, உடமைவர்க்கம் சமூகப் புரட்சியை முழுவதுமாக இடைமறித்துள்ளது. நிலப்பிரபுத்துவத்தினுடைய மிச்சங்களின் பாதுகாவலன் முதலாளித்துவம்தான் என்பதும் ஏகாதிபத்திய மற்றும் காலனிய நலன்களை பேணிக்காப்பதும் முதலாளித் துவம்தான் என்பதும் மூலதனத்தையும் உற்பத்தியையும் உலக மயமாக்குவதில் உடமைவர்க்கத்திற்கு உந்துசக்தியாக இருப்பதும் முதலாளித்துவம்தான் என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. மேலும், விவசாயப் பிரச்சனைகளை ஆழப்படுத்தியும் "உழுபவனுக்கே நிலம்" என்ற தேசபக்தி சக்திகளின் கோஷத்தை காலடியில் போட்டு மிதித்தும் கிராமப்புறங்களில் நாசத்தை விளைவித்தது முதலாளித்துவம்தான்.

இந்த சமயத்தில் முதலாளித்துவமும், நிலப்பிரபுத்துவத் தின் மிச்சங்களும், ஏகாதிபத்தியத்தையும் காலனிய ஆதிக்கத்தையும் மேல்கட்டுமானத்தில் கொண்டுள்ள இந்திய சமுதாயத்தின் அடித்தளத்தை அழுகச்செய்து வருகிறது. இது உழைக்கும் வர்க்கத்திற்கும் பாட்டாளி வெகுஜனங்களுக்கும்

வாழ்க்கை நிலைமைகளையும் வேலை நிலைமைகளையும் மிகவும் துன்பகரமாக ஆக்கியுள்ளது. ஐம்பது சதவிகிதத்திற்கும் மேற்பட்ட இந்திய மக்கள் எல்லையற்ற ஏழ்மையிலும், ஊட்ட மில்லா உணவின் பாதிப்பிலும், கேடுசூழ்கிற ஆரோக்கியத்துட னும், படிப்பறிவின்மையாலும், எல்லாவிதமான நோய்களினால் பாதிப்புற்றும் வாழ்ந்து வருகிறார்கள். இந்திய அரசாங்கத்தின் "வறுமை ஒழிப்பு" என்ற திட்டம் முழுவதும் வறுமைக்கோட்டின்கீழ் வாழும் இந்திய மக்களின் சதவிகிதம் குறைந்து வருகிறது என்று நிரூபிக்க ஏமாற்று எண்ணிக்கைகளை தருவதிலேயே கவனம் செலுத்தி வந்திருக்கிறது. 20 சதவிகிதத்திற்கும் குறைந்த ஜனத்தொகையே வறுமைக் கோட்டிற்கு கீழேயுள்ளனர் என்று அதிகார பூர்வமான எண்ணிக்கைகள் சாதிக்கின்றன. மக்களுக்கு குறிப்பிட்ட அளவு கலோரி (Calories) உணவு ஒரு நாளைக்கு கிடைப்பதை வைத்து வறுமைக்கோட்டை வரையறை செய்து ஏமாற்றுவதிலிருந்தே இந்திய அரசிற்கும் அதன் ஆட்சியாளர் களுக்கும் உள்ள கொடூரமான மனநிலை தெரிகிறது. குறைந்தபட்ச அளவு முக்கிய ஆதார உணவு மட்டும் உட்கொண்டு மனிதர்கள் வாழமுடியாது என்ற உண்மையை அது திரித்துக் காட்டுகிறது. ஊட்டக்குறைவை தவிர்ப்பதை உறுதிசெய்ய பருப்பு வகைகள், காய்கறிகள், பால், இறைச்சி போன்ற மற்ற அத்தியாவசங்களும் அவர்களுக்கு தேவைப்படும். அவர்களுக்கு நல்ல குடிதண்ணீர், கழிவு நீர் துப்புறவு, மருத்துவ வசதி, ஒழுங்கான உறைவிடம் மற்றும் உடுப்புகள், மேலும் வாழ்வதற்கு ஏற்ப சுத்தமான சுகாதாரமான அமைதியான நிலையான சூழ்நிலை வேண்டும். அவர்களுக்கு கல்வியும், கலாச்சாரமும், எப்பொழுதும் வளர்ந்துவரும் தங்கள் பொருள் தேவையையும் கலாச்சார தேவையையும் பூர்த்தி செய்வதற்காக வேலை செய்யும் மனநிறைவும் வேண்டும்.

இந்தியாவில் பருப்பு வகைகள்தான் மக்களுடைய முக்கிய வகை புரத உணவாக இருந்து வருகிறது, என்றாலும் ஒவ்வொருவருக்கு உற்பத்தி செய்யப்படும் பருப்புகளும் அதனை உட்கொள்ளும் அளவும் கடந்த 48 ஆண்டுகளாக படிப்படியாக குறைந்து வந்துள்ளது. ஹைத்திராபாத்திலுள்ள தேசிய ஊட்டச்சத்து நிறுவனத்தின் (National Institute of Nutrition) ஒரு அறிக்கைப்படி பருப்புகளின் சராசரி கொள்பொருள் அளவு கர்நாடகா, உ.பி, ம.பி, ராஜஸ்தான் ஆகிய 4 மாநிலங்களில்

மட்டுமே இந்தியாவில் ஒரு நாளைக்கு 40 கிராம் என்று பரிந்துரை செய்யப்பட்ட அளவிற்கு அதிகமாக உள்ளது. பாலின் சராசரி உட்கொள்ளும் அளவு ஒரு நாளைக்கு 95 மி.லி ஆக உள்ளது. இது பரிந்துரை செய்யப்பட்ட அளவிலிருந்து மூன்றில் இரண்டு பகுதிக்கும் குறைவாக உள்ளது. தேசிய ஊட்டச்சத்து மேற்பார்வை வாரியத்தின் (National Nutrition Monitoring Board - NNMB) கிராமப்புரங்களில் ஊட்டச்சத்து நிலவரங்களைப் பற்றிய ஆய்வில் 1975–79க்கு இடையிலும் 1988–90க்கு இடையிலும் பருப்புவகைகள், வேர்ப்பயிர்கள், கிழங்குவகைகள் மற்றும் தினைகள், காய்கறிகள் ஆகியவையின் உட்கொள்ளும் அளவு திடுதிப்பென குறைந்தது என்று தெரியச்செய்தது. 1975–79க்கு இடையிலும் 1988–90க்கு இடையிலும் சர்க்கரையையும் தானியங்களையும் தவிர மற்ற எல்லாவற்றின் உட்கொள்ளும் அளவு பரிந்துரை செய்யப்படும் அளவிற்கு மிகக் குறைவாகவே இருந்தது. கலோரி அளவை மட்டுமே வறுமைக் கோட்டை நிர்ணயிக்கும் அளவாக எடுத்துக் கொண்டாலும்கூட பஞ்சாப், மத்தியப்பிரதேசம், கர்நாடகா ஆகிய மாநிலங்களைத் தவிர மற்ற எல்லா மாநிலங்களில் சராசரி கொள்பொருள் அளவு வறுமைக் கோட்டை நிர்ணயிக்கும் அளவான - 2280 கிலோ கலோரி கலோரிபிக் யூனிட் நாள் அளவைவிட குறைந்தே உள்ளது. தேசிய ஊட்டச்சத்து மேற்பார்வை வாரியத்தின் ஆய்வுகள் 60 சதவிகித பள்ளிசெல்ல வயதுவராத குழந்தைகளின் கலோரி கொள் பொருள் அளவு தேவையான அளவைவிட குறைவாகவே உள்ளது என்று காட்டுகிறது. இந்த சதவிகிதம் வயது வந்தவர்களிடையே உள்ளதைவிட அதிகமாக உள்ளது.

இந்த ஆய்வுகள் எவற்றை வெளிப்படுத்தவில்லை என்றால் எந்த அளவிற்கு நம் மக்களின் மனிதத்தன்மையை கேவலப்படுத்துவது நடந்து வந்துள்ளது என்பதையே. ஒரிஸா, மத்தியப்பிரதேசம், ஆந்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் கோடிக்கணக்கான மக்கள் சோர்வுறச் செய்யும் விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய காட்டு இலைகளையும், விஷ வேர்ப்பயிர்களை யும் பருப்புகளையும் உண்மையாகவே உண்ண வற்புறுத்தப் படுகிறார்கள். பெருவாரியான இந்திய மக்களின் வாழ்வை படிப்படியாக அவர்களிடமிருந்து உறிஞ்சப்படுகிறது என்று கூறினால் அது மிகையாகாது. ஏழைகளின் எண்ணிக்கை முதலாளித்துவத்தின் வளர்ச்சியோடு வளர்ந்து வருகிறது.

அவர்களுடைய ஏழ்மையின் தீவிரம் மேலும் அதிகரித்து வருகிறது. வாழ்க்கையின் கூடவே இந்திய சமுதாயத்தில் எதெல்லாம் ஆரோக்கியமாகவுள்ளதோ அதெல்லாமும் நீக்கப் பட்டுவருகிறது.

தோராயமாக 25 சதவிகித இந்திய மக்கள் நகர்ப் புறங்களில் வாழ்கிறார்கள். அதில் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் உழைக்கும் மக்களாவர். இவர்கள் விவரிப்பதற்கு மிகக் கடினமான கீழ்த்தரமான வாழ்க்கை நிலைமைகளில் வாழ்கிறார் கள். கழிவுநீர் துப்பறவு இல்லை, சுத்தமான குடிநீர் இல்லை. அற்பமான ஊட்டத்துடன், தொழிற்சாலைகளிலும் கட்டடம் கட்டும் இடங்களிலும் முதுகுடைக்கும் வேலையினால் ஆண்களும் பெண்களும் விரைவான சாவிற்கு அனுப்பப்படுகிறார்கள். மேலும் குழந்தைகளிடமிருந்து அவர்களுடைய மென்மையான குழந்தைப் பருவம் பறிக்கப்படுகிறது. இளமைப் பருவத்தை நுழைவதற்கு வெகு முன்னமேயே 4 கோடி குழந்தைகளுக்கும் மேல் பரிதாபகரமான கூலிகளுக்கு மிகக் கடினமான மற்றும் ஆபத்தான வேலைகளில் ஈடுபட்டு தங்கள் வாழ்வை நடத்துகிறார்கள் என்று மதிப்பீடுகள் வெளிப்படுத்தியுள்ளன.

நாட்டை ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொண்டால் ஒவ்வொருவருக்கும் பொதுநல சுகாதாரத்திற்கு ரூ.59தும் பொதுநல கல்விக்கு ரூ.268-உம் செலவிடப்படுகிறது என்று சுகாதாரத்திற்கும் கல்விக்கும் அரசாங்கம் ஒவ்வொருவருக்கும் செலவிடப்படும் அளவுகளின் அதிகாரபூர்வமான எண்ணிக்கை கள் காண்பிக்கிறது. இந்த வெறுக்கத்தக்க குறைந்த எண்ணிக்கை வெளிக்காட்டுவதைவிட மறைக்கும் உண்மையே அதிகம். குழந்தை பிறப்பை கட்டுப்படுத்தவும் குடும்ப கட்டுப்பாடு திட்டங்களுக்கு பெருவாரியாக செலவிடப்படுகிறது என்பதை சுகாதார எண்ணிக்கைகள் மறைக்கின்றன. படித்த மக்கள் வெளிநாட்டில் பசுமையான இடமுள்ளதென்பதாக உணர்ந்து அங்கு செல்லுவதனால் ஏற்படும் "அறிவு வடிதலைப்" பற்றி குறிப்பிடவில்லை என்றாலும்கூட கல்வியைப் பற்றிய எண்ணிக்கைகள் தொடக்க மற்றும் உயர்நிலைக் கல்வியில் அர்ப்பமாக செலவிடப்படும் உண்மையை புதைத்து விடுகின்றது.

ஒவ்வொரு பிரதேசமும் வெவ்வேறு அளவிற்கு வளர்ந் திருப்பதையும், நகரத்திற்கும் கிராமப்புறத்திற்கும் வளர்ச்சி வேறுபாடு இருப்பதையும் முதலாளித்துவம் நிச்சயப்படுத்தி

யுள்ளது. நிலப்பிரபுத்துவத்தின் மிச்சங்கள் நமது மக்களை இன்னும் சித்திரவதை செய்வதை அது நிச்சயப்படுத்தியுள்ளது. நாட்டின் பல பகுதிகளிலும் விவசாய உறவுகள் இன்னும் நிலப்பிரபுத்துவ முறையிலேயே உள்ளன. நிலத்தின் சொந்தக்காரன் தான் எல்லாருக்கும் எஜமானாக தன்னிடம் வேலை செய்யும் ஆண், பெண் மற்றும் குழந்தைகளை மேற்பார்வையிடுவான். பண்டைக்கால விவசாய முறைகளும் மிக நவீன முறைகளும் சேர்ந்தே தழைக்கின்றன. இது உடமை வர்க்கத்தின் அதிகபட்ச லாபத்தின் தேவைக்கு ஏற்பவும் நிலப்பிரபுத்துவ உறவுமுறைகளை பாதுகாக்கும் தேவைக்கு ஏற்பவுமே முழுமையாக நிர்பந்தப்படுத்தப்படுகிறது. அது நிலப்பிரபுத்துவ உறவுமுறைகளை பாதுகாத்து முதலாளித்துவ சுரண்டலை அதிகப்படுத்தவும் தொழிலாளிகளிடமிருந்து கூலி அடிமையாக இருக்கும் கௌரவத்தைக்கூட பறிக்கவும் உழைக்கும் மக்களை முழுமையாக அடிமைப்படுத்தவும் செய்கிறது. காட்டுமிராண்டித்தனமான சாதி அமைப்பை உடமைவர்க்கம் பாதுகாத்து வந்துள்ளது. இந்தச் சாதி அமைப்பினால் எல்லா சுரண்டும் வர்க்கங்களும் ஆண்களையும் பெண்களையும் சித்திரவதை செய்து அவமானப்படுத்தி அவர்களை தங்கள் இன்பத்திற்கான மூலமாக வைத்துள்ளார்கள். ஒவ்வொரு பகுதியினரிடையே மேல்நிலையில் உள்ளவர்களுக்கு வசதிகள் தருவதின்மூலம் இந்த அமைப்பைப் பாதுகாத்தும் மக்களை ஒருவர் மற்றொருவருடன் மோதவிட்டும் பல்வேறு சமூக இனத்தவரை வாக்கு வங்கிகளாக பயன்படுத்தியும் வந்துள்ளார்கள்.

பெரிய தொழிற் குடும்பங்களுக்கு தங்கள் லாபத்தை அதிகபட்சமாக வைத்திருக்க அவர்களுடைய அமைப்பை ஒத்திசையச் செய்து மூலதனத்தையும் உற்பத்தியையும் உலகமயமாக்க வேண்டிய அவர்களின் தேவைக்கு அதை கீழ்படியச் செய்ய வேண்டும். இப்படிப்பட்ட ஒத்திசைவு அரசாங்கத்தால் ஊக்குவிக்கப்படுகிறது. மூலதனமும் உற்பத்தியும் சர்வதேசிய நிதி மூலதனத்துடன் கைகோர்த்துக் கொண்டும் போட்டியின் மூலமும் ஒரு சில கைகளில் குவிக்கப்படுவது ஒரு பெரும் வழிபறிக் கொள்ளையாகும். இது தொழிலாளி வர்க்கத்தின் மற்றும் வெகுஜன மக்களின் நிலைமைகளை மேலும் துன்பகரமாக ஆக்கிவருகின்றது. ஆங்கிலேய காலனி

யாதிக்க ஆட்சியினால் உருவாக்கப்பட்ட இந்திய முதலாளித்துவ மானது இல்லாமல் ஒருநாள் கூட இந்தியாவை ஆங்கிலேயர்கள் ஆண்டிருக்க முடியாது. அந்த இந்திய முதலாளித்துவமானது காலனியாதிக்கம் மற்றும் ஏகாதிபத்தியத்தின் எல்லா தன்மைகளையும் தக்கவைத்துக் கொண்டுள்ளது. ஆங்கிலேய காலனியாதிக்கர்கள் 1947இல் விட்டுச் சென்றபோது அதன் உள்ளடக்கம் எப்படியிருந்ததோ அதே தான் இன்றும் உள்ளது. இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் உள்ள இந்திய மக்களின் நிலத்தையும், உழைப்பையும், வளங்களையும் ஆங்கிலேய காலனியாதிக்கத்தினால் உருவாக்கப்பட்ட முதலாளித்துவ நிலப்பிரபுத்துவ வர்க்கங்களின், அவற்றின் உறுப்பினர்களின் சொந்த சொத்தாக கருதப்படுகிறது. 1947இல் "அதிகாரம் கை மாற்றப்பட்டதிலிருந்து" பொருளாதாரத்தினுடைய வெளி நாட்டினரின் கட்டுப்பாடு அதிகமாகிவிட்ட காரணத்தினால் தேசிய ஒடுக்குமுறை பிரச்சனை மேலும் தீவிரமாகிவிட்டது.

அதிகபட்ச லாபத்தை அடையவேண்டும் என்றும் உலக சக்தியாக மாறவேண்டும் என்ற தனது முயற்சியில் இந்திய பொருளாதாரத்தை அந்நிய மூலதனத்திற்கு திறந்துவிட வேண்டுமென்றும் ஏகபோகங்களின் உலகமயமாக்கும் முயற்சிக்கு ஏற்றமுறையில் பொருளாதாரத்தை மாற்றியமைக்க வேண்டுமென்றும் இந்திய உடமைவர்க்கம் கோரிவருவது ஒன்றும் எதேச்சையானதல்ல. இது இந்திய பொருளாதாரத்தை பெரும் சேதத்திற்கு உண்டாக்கி தொழிலாளர்களுக்கும் உழைக்கும் விவசாயிகளுக்கும் மற்றவர்களுக்கும் புதுப்புது விபத்துக்களையும் சோதனைகளையும் ஏற்படுத்துகிறது. தனியார்மயமாக்குதலினாலும் பொருளாதாரம் மாற்றியமைக்கப் படுவதினாலும் 1990 இலிருந்து நெசவு மற்றும் இயந்திர தொழிற்சாலைகளிலும் நிலக்கரி மற்றும் இரும்பு தொழிற்சாலை களிலும் மற்றும் பல துறைகளிலும் லட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையில்லாதவர்களாக ஆக்கப்பட்டுள்ளார் கள். விவசாய வியாபாரங்களில் காட் (GATT) ஒப்பந்தமிட்டதும் பன்னாட்டு நிறுவனங்களுக்கு இந்தியாவின் கதவுகளை திறந்ததும் விவசாய மக்களின் வாழ்க்கையையே சீரழிப்பதாக உள்ளது. முதலாளித்துவம் நாடு முழுவதிலுமுள்ள பட்டணம் மற்றும் கிராமங்களிலுள்ள சிறிய சொத்து உரிமையாளர்களை அழிவிற்கு கொண்டு செல்லுகிறது. பணநெருக்கடியும்

அதிகரித்து வரும் வட்டியும் சிறு மற்றும் நடுத்தர வியாபாரங்கள் அழிக்கப்படுவதை துரிதப்படுத்தியுள்ளது. நிலம் ஒருசில கைகளில் குவிக்கப்படுவதை அதிகரிக்கவும் விவசாயிகள் அழிக்கப்படுவதற்கும் நகரங்களுக்கு குடியேறுதலான பிரச்சனையை தீவிரமடையச் செய்வதற்கும் வேலையின்மை, உறைவிடம் போன்ற பிரச்சனைகளுக்கும் நகர நிலைமைகளிலுள்ள குழப்பத்திற்கும் முதலாளித்துவம் வழிவகுக்கும்.

மற்றொரு புறத்தில் சீர்திருத்தங்கள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து இந்த ஐந்து வருடங்களில் மிகப்பெரிய ஏகபோக குடும்பங்களின் செல்வம் பன்மடங்கு அதிகரித்துள்ளது. இந்திய பொருளாதாரத்தை மேற்பார்வையிடும் மையத்தின்படி (Centre for monitoring Indian Economy), 743 பெரிய இந்திய நிறுவனங்களின் (இதில் 25 அரசாங்க உரிமை நிறுவனங்களும் அடங்கும்) வரிக்குப்பின் லாபம் 1994–95 இல் 63 சதவிகிதம் அதிகரித்துள்ளது. இது கடந்த வருடத்தின் 70 சதவிகித அதிகரிப்பின் மீதான அதிகரிப்பாகும். வேறு வார்த்தைகளில் கூறினால், இந்த ஏகபோகங்களின் லாபம் இரண்டே வருடங்களில் இரண்டரை மடங்காகியுள்ளது. சமுதாய அங்கத்தினர்களின் உரிமைகளை நிவர்த்தி செய்வதற்காக வெகுஜன மக்களின் வறுமையை போக்குவதுமோ அல்லது சமுதாயத்தை மீட்டெடுப்பதோ இல்லாமல் மூலதனத்தையும் உற்பத்தியையும் ஒருசில கைகளில் குவிப்பதே தற்காலப் போக்காகவுள்ளது.

ஆங்கிலேயர்களால் நிறுவப்பட்ட அரசியல் கட்டுப்பாடு அமைப்பு அப்படியே தொடப்படாமல் உள்ளது. தேசிய இனங்களும் பழங்குடி மக்களும் ஓரங்கட்டப்படுவது மேலும் அதிகரிப்பதற்கும் மத்திய அரசை தன் கட்டுப்பாட்டிற்கு கொண்டுவர உடமைவர்க்கங்களிடையே தீவிரமடைந்துவரும் முரண்பாடுகளுக்கும் இது வழிவகுத்துள்ளது. மத்திய அரசு என்பது தேசிய இனங்களையும் பழங்குடி மக்களையும் அடக்கியாளவும் இந்த மண்ணின் உழைக்கும் வர்க்கத்தையும் பாட்டாளிகளையும் சுரண்டுவதை மேலும் தீவிரப்படுத்தவும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நலன்களினால் ஒப்படைக்கப் பட்ட ஒரு காலனிய கருவியே அன்றி வேறொன்றுமில்லை.

ஆட்சியிலுள்ள ஆளும் வர்க்கங்களின் அரசியல் கட்சிகளும் அவர்களுடைய ஆதரவாளர்களும் தொழிலாளி

வர்க்கத்திற்கும் உழைக்கும் மக்களுக்கும் தங்களுடைய கொள்கை இலக்குகள் ஏதேதோ செய்யும் என்று நிறம்ப ஐம்பமடித்துக் கொள்கிறார்கள். ஆனால் இதில் குறிப்பிடத்தக்கது என்னவென்றால், உற்பத்தி முறையில் மக்களுக்கிடையேயுள்ள உறவுகளின் உள்ளடக்கத்தை மாற்ற அவர்கள் எந்தத் திட்டத்தையும் முன்வைக்கவில்லை. மக்கள் சர்வவல்லமையுடையதாகவும் (Soverign) மற்ற எல்லாமும் அவர்களுக்கு கீழ்ப்படிந்ததாகவும் உள்ள ஒரு ஜனநாயகத்தை உருவாக்க அவர்கள் ஒரு திட்டத்தையும் ஏற்படுத்தவில்லை. முதலாளித்துவத்திற்கு முடிவு கட்டவும் நிலப்பிரபுத்துவம் மற்றும் காலனியாதிக்கத்தின் மிச்சங்களுக்கும் ஏகாதிபத்தியத்திற்கும் ஒட்டுமொத்தமாக காலனியாதிக்க மரபு முழுவதற்கும் முடிவுகட்ட அவர்கள் திட்டவட்டமாக எதையும் முன்வைக்கவில்லை.

இந்த முதலாளித்துவ அடிப்படையிலான அரசியல் மேல்கட்டுமானமும் அரசியல் அமைப்புகளும் மற்றும் அரசியல் செய்முறைகளும் ஒட்டுமொத்தமாக இன்றுள்ள அரசியல் ஆட்சி, காலனிய ஆதிக்கம் உடையதும் ஏகாதிபத்திய ஆதிக்கம் உடையதும் ஆகும். வடகிழக்குப் பகுதிகளை காலனிய ஆதிக்கத்தில் கொண்டு வந்ததும் அந்தப் பகுதியை பலாத்காரமாக நாட்டோடு இணைத்துக் கொண்டது அப்படிப்பட்ட ஒரு உதாரணமாகும். காஷ்மீரை காலனிய ஆதிக்கத்தில் கொண்டு வந்தது, அதை பலாத்காரமாக பிரித்து நாட்டோடு இணைத்துக் கொண்டது மற்றுமொரு உதாரணமாகும். பலாத்காரமாக மற்ற பல்வேறு பகுதி நிலங்களை பிடித்துக் கொண்டதும் எல்லா தேசிய இனங்களையும் பழங்குடி மக்களையும் அடக்கியாளுவதும் இந்திய அரசின் காலனிய குணத்தை தோலுரித்துக்காட்டுகிறது.

1947இலிருந்து இன்றுவரை இந்தியாவை ஆட்சி செய்துவரும் பெரிய தொழிற் குடும்பங்களுடனும், நிலப்பிரபுத்துவ சக்திகளுடனும், காலனிய மற்றும் ஏகாதிபத்திய நலன்களுடனும் முதலாளித்துவம் கட்டுப்படுத்தமுடியாத அளவிற்கு வளர்ந்து வந்திருக்கின்றது. "நேருவின் சோசலிச பாணி" என்ற பெயரினால் அழைக்கப்பட்ட சுதந்திரத்திற்கு பிற்பாடான காலகட்டத்திற்கான முழுதிட்டமும் முதன்முதலில் முன்னோடி தொழிலதிபர்களின் ஒரு குழுவினால் முன்வைக்கப் பட்டது. "பம்பாய் திட்டம்" என்று பிரபலமாக அறியப்படும் அது இரண்டு பாகங்களாக முன்வைக்கப்பட்டது. இந்திய தொழிற்

சாலைகளின் அடித்தளத்தை கட்டியமைப்பதற்காக இந்திய அரசு வரிகளின் மூலமும் பற்றாக்குறை நிதியளிப்பினாலும் பணவீக்கத்தின் மூலமாகவும் கூட எப்படி வளங்களை குவிக்க வேண்டும் என்றும் இந்தத் திட்டம் முன்வைக்கிறது. எந்தெந்த துறைகள் தொழிலதிபர்களின் கைகளில் விட்டுவிட வேண்டும் என்பதையும் எந்தெந்த துறைகள் அரசாங்கத்தின் கைகளில் இருக்கவேண்டும் என்றும் எவ்வளவு காலம் இருக்கவேண்டும் என்பதையும் இது சுட்டிக்காட்டியுள்ளது. பெரிய தொழிற் குடும்பங்கள் தடையின்றி வேகமாக வளரவேண்டும் என்பதற்காக உரிமம் ஏற்பாடுகளினால் அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட காலம் வரை இந்தியாவின் உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் எழும் போட்டியை கட்டுப்படுத்த வேண்டும் என்று இது கோரியது. தங்களுக்குள்ளே உண்டாகும் முரண்பாடுகள் தங்களை விழுங்கிவிடாமல் இருக்க அப்படிப்பட்ட முரண்பாடுகளை மத்தியஸ்தம் செய்யும் நோக்கோடு உரிமங்களை பெரிய தொழிற்குடும்பங்களுக்கிடையில் விநியோகம் செய்வதற்கான ஒரு ஏற்பாடு முறையை இது முன்வைத்தது. இந்த வளர்ச்சிப் பாதையின் விளைவுகள் ஏழ்மையை ஒழிப்பதற்கும் கொள்கை இலக்குகள் என்ற அந்தஸ்து கொடுக்கப்பட்ட மற்ற பலவற்றிற்கும் வழிவகுக்கும் என்று அது விளக்கிக் கூறியது. வறுமை ஒழிக்கப்பட்டுவிடவில்லை, மேலும் பொருளாதாரம் நெருக்கடியி லிருந்து வெளிவரவில்லை என்பதைத் தவிர மற்றபடி பெரிய தொழிற்குடும்பங்களுக்கு லாபம் ஈட்டிய எல்லா விதத்திலும் இந்த பம்பாய் திட்டம் உண்மை என மாற்றப்பட்டது. எல்லோருக்கும் நல்வாழ்வை உத்திரவாதம் செய்யும் சுதந்திரமான தற்சார்புடைய பொருளாதாரம் அல்ல இது.

1980இல் இந்திரா காந்தியால் துவங்கப்பட்ட நவீனப் படுத்தும் திட்டம் 1985இல் ராஜீவ் காந்தியால் முன்னெடுத்துச் செல்லப்பட்டதும், 1991இல் தாராள மயமாக்குதல் மற்றும் தனியார்மயமாக்குதல் திட்டம் ராவினால் மேற்கொள்ளப்பட்டதும் எல்லாம் பெரிய தொழிற்குடும்பங்களின் நிர்பந்தப்படுத்துதலி னால் நடத்தப்பட்டது. மேலும், உலக வங்கி, ஐ.எம்.எப் மற்றும் பல நிறுவனங்கள் உள்பட்ட சர்வதேசிய நிதி மூலதனங்கள் தங்களின் பணிகளினிடையே கோரியதன் விளைவாகவும் இது நடத்தப் பட்டது. அதை நாம் ஆழமாகப் பார்த்தால் ஒவ்வொரு நிலையிலும் இந்திய மக்களுக்கான விளைவுகள் எவ்வாறாயினும் உடமை

வர்க்கம் தன்னை நெருக்கடியிலிருந்து விடுவித்துக் கொள்ளுவதற்காகவும் லாபம் பன்படங்கு அதிகரிப்பதை உறுதியளிப்பதுமான பாதையை முன்வைத்துள்ளது.

கொடூரமான உண்மை என்னவென்றால் பெரிய தொழிற்குடும்பங்களின் ஆட்சி ராணுவம் மற்றும் காவல்துறை சக்திகள் மூலமாகவும், மேலும் அரசாங்கங்களின் அழைப்பின் பேரில் இயங்கும் எல்லாவகையான குண்டர்கள் மூலமாக நடத்தப்பட்டு வருகின்றது. அந்த குண்டர்கள் தாமாகவே தன்னிச்சையாகவும் அரசாங்கத்தைச் சாராமலும் பெரிய முதலாளிகள், பெரிய நிலப்பிரபுக்கள், அரசியல் கட்சிகள் ஆகியோரின் நேரடி உபயோகப்படுத்தலுக்காகவும் இயங்குகிறார் கள். சமீபகால உதாரணத்தை காட்ட வேண்டுமானால், பாபரி மசூதியை அழிக்கப்பட்டதின் பின்தொடர்ச்சியாக நடத்தப்பட்ட படுகொலைகளில் இதைப் பார்க்கலாம்.

தங்கள் வேலை மற்றும் வாழ்க்கை நிலைமைகளை செம்மையாக்குவதற்காக தொழிலாளர்களின் மிகச்சிறிய வேலை நிறுத்தத்திலிருந்தோ அல்லது நிலப்பிரபுக்களின் மிருகத்தன மான ஒடுக்குமுறைக்கு எதிராக விவசாயிகள் போராடுவதி லிருந்தும் இந்திய மக்கள் முரட்டுத்தனமான காவல்துறை சக்திகளுடைய ஆட்சியுடன் மோதுகிறார்கள். தொழிலாளர்கள், விவசாயிகள் மேலும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக கற்பழிப்பு, சித்தரவதை உட்பட எல்லா வகையான கொடுமைகளையும் இந்த சக்திகள் நடத்துகிறார்கள். அவர்கள் தங்களுக்கென நிறைய செல்வத்தை குவித்துக் கொண்டு நாளடைவில் முதலாளிகளாகவும், நிலப்பிரபுக்களாகவும் மற்றும் அரசியல்வாதிகளாகவும் மாறிவிடுகிறார்கள். நிறைய சந்தர்ப்பங்களில் முதலாளிகளுக்கும் நிலப்பிரபுக்களுக்குமான தனியார் ராணுவமாக பாசாங்கு செய்து அவர்கள் சேரிகளில் வசிப்பவர்களையும் நடைப்பாதைகளில் வசிப்பவர்களையும், சிறுகடைக்காரர்களையும் வியாபாரிகளையும் தினந்தோறும் கொடுமைப்படுத்தி சிறுகுடிசைகளில் அவர்கள் வாழும் "சலுகைக்குமோ" அல்லது தாங்கள் வாழ சம்பாதிக்கும் "சலுகைக்குமோ" அவர்களிடமிருந்து "வரி"யை வசூலிப்பார்கள்.

வழக்கமான காவல்துறை சக்திகளைத் தவிற சி.ஆர்.பி.எப், பி.எஸ்.எப், அஸ்ஸாம் ரைபில்ஸ், ஐ.டி.பீ.பி, மத்திய தொழிற்சாலை பாதுகாப்பு படை போன்ற மற்றும் பல

ராணுவ படை சக்திகளும் உள்ளன. அவைகள் உண்மையில் ஆயுதமேந்திய சக்திகளைப் போலவே இயங்குகின்றன. 1947இலிருந்து 45 வருடங்களில் பெரிய உடமைவர்க்கத் தினரின் ஆட்சிக்கு தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகளின் எதிர்ப்பு அதிகரித்து வந்த அதே நேரத்தில் இந்த ராணுவ படை சக்திகளின் எண்ணிக்கையும் பட்டியலும் பெருத்தளவு விரிவடைந்து வந்துள்ளது. வடகிழக்குப் பகுதியிலுள்ள பெரு வாரியான மற்ற மாநிலங்களைப் போலவே 1947இலிருந்தே நாகாலந்து ஆயுதமேந்திய சக்திகளின் ஆட்சியின்கீழ் இருந்து வந்துள்ளது. காஷ்மீர், பஞ்சாப் மேலும் இந்தியாவின் மற்ற பகுதிகளுக்கும் அதே நிலைதான். எங்கெல்லாம் உழைக்கும் மக்கள் அமைப்புக்கு எதிராக வெகுண்டெழுந்தார்களோ, எங்கெல்லாம் இந்த எழுச்சி தொழிற்குடும்பங்களின் ஆட்சியை அச்சுறுத்தியதோ அங்கெல்லாம் ஆயுதமேந்திய சக்திகள் ஈவிரக்கமின்றி மக்களை அடக்கினார்கள்.

நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டத்தை மேலும் முன்னெடுத்துச் செல்லவும் விவசாய மாற்றங்களைக் கோரியும் 1947இல் தெலுங்கானாவில் ஆரம்பித்ததை இந்திய ராணுவம் நசுக்கியது. அது ஜனநாயக நிலப்பிரபுத்துவ எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்புப் புரட்சி வெற்றியடைவதற்காக கம்யூனிச புரட்சியாளர்களால் தலைமை தாங்கப்பட்ட விவசாய மக்களின் எழுச்சியாகும். தெலுங்கானா போராட்டம் நசுக்கப்பட்டதிலிருந்து ஆரம்பித்து 1947இலிருந்து இப்படிப்பட்ட மோதல்களினால் மட்டுமே, நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும் காயப்படுத்தப்பட்டும் சிறையிலடைக்கப்பட்டும் உள்ளார்கள். இந்தியா முழுவதிலும் 1947இலிருந்து தொழிலாளிவர்க்கத்தின் மற்றும் பாட்டாளி மக்களின் அல்லது தேசிய இனங்களின் புரட்சிகர எழுச்சிகளையும் போராட்டங் களையும் நசுக்குவது மாதிரியாகவும் வழக்கமாகவும் ஆகியுள்ளது.

இந்திய அரசியல் ஆட்சியை ஆங்கிலேய காலனியத்தால் உருவாக்கப்பட்ட பெருமுதலாளிகளின் மற்றும் பெரும் நிலப்பிரபுக்களின் ஒரு வகையான காலனிய ஆட்சி என்று வருணிக்கலாம். அவர்களுடைய நலன் கருதி மத்திய அரசு இயந்திரங்களைப் பயன்படுத்தி குறிப்பாக ஆயுதப்படைகளை பயன்படுத்தி முழு இந்தியாவையும் அடக்கியும் காலனியாதிக்கம்

செலுத்தி வந்துள்ளது. பாராளுமன்றமும் மாநில சட்டசபையும் தான் ஆட்சி செய்கிறது என்ற கருத்தைப்பதிக்க பல்வேறு மாநிலங்களிலும் மத்தியிலும் சிவிலியன் அரசாங்கங்கள் நிறுவப்படுகிறது. இன்று வடகிழக்குப் பகுதியிலுள்ள எல்லா மாநிலங்களிலும் பஞ்சாபிலும் சிவிலியன் அரசாங்கங்கள் நிலவுகின்றன. மத்திய அரசு காஷ்மீரிலும் அப்படியொரு சிவிலியன் அரசாங்கத்தை நிறுவ முயன்று வருகிறது. ஆனால் இந்த அரசாங்கங்களில் ஆயுதப்படைகள் இல்லாமல் ஒன்றுமேயில்லை.

உடமைவர்க்கம் மக்களின் எழுச்சியை எதிர்நோக்கு வதைவிட அமைதியாக தன்னுடைய வரிசையிலுள்ள முரண் பாடுகளை தீர்ப்பதற்காக பாராளுமன்றம் மற்றும் சட்டசபைகளில் ஒப்பந்தங்களைச் செய்துகொண்டும், அதே சமயம் தன்னுடைய குறிக்கோளை முன்னேறச் செய்ய சட்டங்களை இயற்றி நடைமுறைப்படுத்திக் கொண்டிருப்பதையே செய்ய முற்படும். மற்ற முறைகள் தோல்வியடைந்துவிட்டால் அது ஆயுதமேந்திய பலத்தை உபயோகப்படுத்தி மக்களுடைய எழுச்சியை நசுக்கவும், தங்களுக்குள்ளே ஏற்படும் எதிர்ப்புகளை நீக்கவும் செய்கிறது. பிற்காலத்திலும் அப்படியே செய்யும். வேறு வார்த்தைகளில் கூறினால், இன்றுள்ளதற்கு நேர்மாறாக இல்லாமல், சிவிலியன் ஆட்சியே ஆயுதப்படைகளை உபயோகப்படுத்துவதற்கு கீழ்ப் படிந்துள்ளது. சமீபத்தில், நாகாலந்து மற்றும் மணிப்பூர் முதல்மந்திரிகள் அவர்களுடைய மாநிலத்திலிருந்து சில சி.ஆர்.பி.எப் படைகளை தாற்காலிகமாக நீக்கியதற்கு 'அவர்கள் இல்லாமல் நாங்கள் ஆளமுடியாது!' என்று கூறி மிகக்கடுமையாக எதிர்த்தார்கள்.

பலகட்சி ஜனநாயகம், வழக்கமாக நடத்தப்படும் தேர்தல்கள் எல்லாம் தொழிற்குடும்பங்கள் மற்றும் பெரிய நிலப்பிரபுக்களின் உருவத்திலுள்ள உடமை வர்க்கத்தின் மிருகத்தனமான ஆட்சிக்கு ஒரு மூடுதிறையே ஆகும். அவர்கள் முதலாளித்துவ அமைப்பையும் நிலப்பிரபுத்துவ, காலனிய மற்றும் ஏகாதிபத்திய மிச்சங்களையும் அதாவது முழு காலனிய பாரம்பரியத்தையும் பாதுகாக்கிறார்கள். மத்தியிலுமோ அல்லது மாநிலங்களிலுமோ அதிகாரத்திற்கு வரும் அரசியல் கட்சிகளும் இந்த ஆட்சியை நியாயப்படுத்தும் விதத்தில் பங்காற்றுகிறார்கள். குற்றமயமாக்குதலும் மதவெறிகளை தூண்டிவிடுவதும் மற்றும்

மதக் கொடுமைகளை ஏற்பாடு செய்வதும் தனிப்பட்ட பயங்கரவாதத்தையும் அரசு பயங்கரவாதத்தையும் நடத்துவதும் மற்றும் திசைதிருப்பல்களை ஏற்பாடு செய்வதும், பெரிய தொழிற்குடும்பங்கள் தங்களிடையேயுள்ள முரண்பாடுகளை தீர்த்துக் கொள்வதற்கும் எந்தவொரு தன்னலக் குழுவிற்கு அடைக்கலம் கொடுப்பதை உறுதிசெய்வதற்கும் மற்றும் வெகுஜன மக்கள் அவர்களுடைய ஆட்சிக்கும் அதனுடைய வருந்தத்தக்க பலியாடுகளுக்கும் கீழ்ப்படிந்தவர்களாக இருப்பதை உறுதி செய்வதற்குமான ஆயுதங்களாகும்.

ஆங்கிலேய காலனிய நாட்களிலிருந்த சட்டத்திற்குட்பட்ட ஆட்சி, காலனிய ஆதிக்கர்களும் அவர்களுடைய இந்திய கையாட்களும் சேர்ந்து காவல்துறை சக்திகளாலும் ஆங்கிலேய இந்திய ராணுவத்தினாலும் 1858இல் நிறுவி நடத்தப்பட்ட ஆட்சியாகும். அது கட்டுக்கடங்காத அநீதியான ஆட்சியாக இருந்தது. ஏனென்றால் அதனுடைய உள்ளடக்கம் காலனிய சூறையாடலாக இருந்தது. உள்ளடக்கம் சூறையாடலாக இருக்கும்வரை இந்த சட்டத்தினுடைய ஆட்சி இழிவானதாகவே இருக்கும். பத்தொன்பதாம் நூற்றாண்டின் முதலாளித்துவ வளர்ச்சி ஐரோப்பாவில் நிலப்பிரபுத்துவ சிறப்புரிமைகளுக்கும் ஒடுக்குமுறைகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்து தேசிய–அரசும் (Nation-state) உடமைவர்க்கத்தின் சட்ட ஆட்சியும் தோன்றுவதற்கு வழிவகுத்தது. நிலப்பிரபுத்துவ சிறப்புரிமைகளை சட்ட விரோதமாக ஆக்கவும் தனியுடமை என்ற அடிப்படையிலான உடமைவர்க்கத்தின் சிறப்புரிமைகளை சட்டத்திற்கு உட்பட்டதாக ஆக்குவதும் அதனுடைய நோக்கமாக இருந்தது. முதன்மையாக, இந்திய முதலாளித்துவம் ஆங்கிலேய காலனியாதிக்கத்தின் கருவியாக வளர்ந்தது. அது நிலப்பிரபுத்துவ சிறப்புரிமைகளை சட்டவிரோதமாக ஆக்கவில்லை, மாறாக அதை தன்னுடைய சொந்த இலாபங்களுக்கு உபயோகப்படுத்திக் கொண்டது. ஐரோப்பாவிலும் வடஅமெரிக்காவிலும் முதலாளித்துவம் ஏகபோக முதலாளித்துவ கட்டத்தை அடைந்ததும் அது தன்னுடைய ஜனநாயக மற்றும் முற்போக்கான குணங்களை இழந்துவிட்டது. அது முழுக்க முழுக்க பிற்போக்கானதாக ஆகிவிட்டது. அது தன்னைப் போலவே இந்திய முதலாளித்து வத்திற்கு மேலும் உருவமளித்தது, மற்றும் நிலப்பிரபுத்துவத்தை மேலும் தன்னுடைய சொந்த இலாபங்களுக்கு உபயோகப்படுத்திக்

கொண்டது. முதலாளித்துவ முன்னேற்றம் முக்கிய கருவியாக நின்று நிலப்பிரபுத்துவ, காலனிய மற்றும் ஏகாதிபத்திய நலன்களை ஊக்கமளிப்பதே இந்திய தொழிற்குடும்பங்களுக்கு மிக அதிகமான இலாபமளிக்கும் விஷயமாக இருந்தது. அப்படி, இந்திய மண்ணில் நிறுவப்பட்ட எல்லாமே ஒரு கலவையாக இருந்தது. காலனிய நலன்களோ அல்லது நிலப்பிரபுத்துவ சிறப்புரிமைகளோ அல்லது ஏகாதிபத்திய ஊடுருவலோ நீக்கப்படவில்லை.

இந்திய ஜனநாயகமும் சட்ட ஆட்சிமுறையும் எப்பொழுதோ ஆழமான நெருக்கடிக்குள் சிக்கிவிட்டது. புரட்சியின் மூலம் சமுதாயத்தை ஆழமான மாறுதல்களுக்கு உட்படுத்தாமல் இந்த நெருக்கடியிலிருந்து வெளிவர வேறுவழியில்லை. இதுவே இன்றைய அவசியத் தேவையாக உள்ளது. சுரண்டப்படுபவர்களுக்கும் சுரண்டுபவர்களுக்கும் இடையேயுள்ள முரண்பாடுகளும் பணமுதலைகளின் மற்றும் உடமைவர்க்கத்தின் அணிகளுக்குள்ளேயேயுள்ள முரண் பாடுகளும் தீவிரமடைந்து வருவதில் இந்த நெருக்கடி பிரதிபலிக்கிறது. இப்படிப்பட்ட முரண்பாடுகள் சட்ட ஒழுங்கின்மையாலும் அரசியல் குற்றமயமாக்கப்படுதலினாலும் தீர்க்கப்படுகிறது. மக்களில் முழு பகுதியினர்களை மொத்தமாக படுகொலை செய்யப்படுவது ஒருபுறம் நடக்க, தொழிற் குடும்பங்கள், அரசியல் கட்சிகள் மற்றும் அரசாங்கங்களின் தலைவர்கள் கொல்லப்படுவது எல்லாம் வழக்கமான விவகாரங்களாகிவிட்டது, என்கின்ற அளவிற்கு இந்த குற்றமயமாக்கப்படுதல் வளர்ந்துவிட்டது.

தொழிலாளி வர்க்கத்தின் மற்றும் உழைக்கும் மக்களின் அவாக்களுக்கு ஏற்பவும், உலக தொழிலாளி வர்க்கத்தினுடைய மக்களினுடைய அவாக்களுக்கும் ஒத்த ஒரு புதிய அமைப்பை அஸ்திவாரத்தில் கொண்டு இந்திய அமைப்பைப் புதுப்பிக்க வேண்டும். அப்படிப்பட்ட அமைப்பு மக்களின் நல்வாழ்வை சமுதாயத்தின் அடித்தளத்தில் வைத்து அதையே பொருளாதாரத் தின் நோக்கமாகவும் வைக்கும். இந்த நோக்கத்தை கொள்கை இலக்காக மாற்றாமல் இதை மண்ணின் அடிப்படைச் சட்டமாக ஆக்கிவிடும்.

இந்தப் புதிய அமைப்பு நவீனமாகவும் தற்காலத்திற்கு ஏற்றதாக்கப்படுவதும் மட்டுமில்லாமல் இது தேசியங்களும்

பழங்குடி மக்களும் முழு சமத்துவமும் சுதந்திரமும் அனுபவிக்கும் ஒரு கூட்டு அரசிற்கும் (Confedral State) வழிவகுக்கும். அவர்கள் பிரிந்து செல்லும் வரையிலுமான எந்த சுயநிர்ணய உரிமையுடனும் (இது இல்லாமல் சுயநிர்ணயம் என்பது வெறும் வார்த்தை அளவில் மட்டுமே நின்றுவிடுவதாகும்) இருக்கும் உரிமையை அனுபவிப்பார்கள். காலனியாதிக்கத்தால் பிளவு பட்டுள்ள எல்லா தேசியங்களும் தாங்கள் விரும்பினால் ஒன்று சேர இந்த புதிய அமைப்பு முழுமையான வாய்ப்பளிக்கும். இந்தப் புதிய அமைப்பு காலனிய பாரம்பரியத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கும். இந்தியா ஒரு மிகவும் முற்போக்கான சக்தியாக தேசங்களின் குடும்பத்தில் இடம்பெறும்.

# பாகம் 8
# புரட்சியின் கட்டம்

உள்நாட்டு நிலைமைகளைப் பற்றி மட்டுமே ஆராய்வதன் மூலம் இந்தியப் புரட்சியின் கட்டத்தைப் பற்றி தீர்மானிக்க முடியாது என்ற முடிவுக்கு இ.க.கெ.க வந்துள்ளது. உள்நாட்டு நிலைமைகள் பற்றிய ஆய்வை பன்னாட்டு சூழ்நிலையின் பின்னணியில் ஆராய்வதன் மூலமாகவே அதைத் தீர்மானிக்க முடியும்.

எல்லா நாடுகளின் முன்னேற்றத்திற்கான பாதையைத் தடுப்பதற்காக, உலக முதலாளிவர்க்கமும், பிற்போக்கும் முதலாளித்துவ சக்திகளை எல்லா இடங்களிலும் செயலில் ஈடுபடுத்தியுள்ளனர். உலகம் முழுவதையும் அவர்களுடைய வலையில் சிக்க வைப்பதற்காக உலக முதலாளிவர்க்கமும் பிற்போக்கும் "அதிர்ச்சி வைத்தியம்" என்று அழைக்கப்படும் நேரடி கொள்ளையடிப்பையும் அழித்தொழிப்பையும் கோருகிறார் கள். பன்னாட்டு நிதி கூட்டமைக்கு எதிரான எந்த எதிர்ப்பையும் உலக அமைப்புகளான ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபை, நாட்டோ போன்ற இராணுவ கூட்டணிகளாலும் மற்றும் ஆயிரக்கணக்கான வழிகளில் ஆக்கிரமிப்பு மற்றும் தலையீடுகளாலும் உடனடியாக அச்சுறுத்தப்படுகிறது. சுதந்திர சந்தைப் பொருளாதாரம்", "பல கட்சி அமைப்பு", "கருத்தியல் மற்றும் அரசியல் பன்மை" மற்றும் மனித உரிமைகளை "மதிப்பது" என்று அவர்கள் அழைக்கின்ற இவற்றைக் கேட்பது என்ற பாவனையில் முதலாளித்துவத்திலிருந்து எந்த நாடும் தப்பிவிடக்கூடாது என்ற ஒரு கோரிக்கை இருக்கிறது.

உலக முதலாளிவர்க்கமும், பிற்போக்கும் உலக முதலாளித்துவத்திற்கு ஒவ்வொருவரும் அடிபணிய வேண்டு மென கோரி வருகையில், பன்னாட்டு நிலைமையோ முதலாளித்துவம் எல்லா பக்கங்களிலிருந்தும் கடுமையான நெருக்கடியில் சிக்கியும் நாளுக்கு நாள் நிலமை மோசமடைந்தும் வருவதோடு, உலகப் பொருளாதாரம் அற்ப வளர்ச்சி மட்டுமே அடைந்திருக்கிறது. அமெரிக்கா, செர்மனி, பிரான்சு போன்ற நாடுகளில் வெளிப்படையாகக் காண்பது போலவே,

வேலையில்லாத் திண்டாட்டம் "சீரடைந்து" வருவதென்பது முதலாளித்துவத்தின் உலகியல்பாகவே மாறி வருகிறது. கடுமையாக ஆகிவருகின்ற முதலாளித்துவத்தின் எல்லா பக்க நெருக்கடிக்கு, நிதி நிறுவன சிறுபான்மை ஆட்சியின் பதிலானது. முதலீட்டையும் உற்பத்தியையும் உலகமயமாக்கு வதாகும். இந்த வடிவத்தில்தான் உலகம் முழுவதையும் ஆதிக்கம் செலுத்துவதற்கான போரை நிதி நிறுவன அரசுகள் தங்களுக்கிடையே நடத்துகின்றன.

இரு துருவ உலகு அழிக்கப்பட்டதும் முதலாளித்துவ நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தியிருக்கிறது. கிழக்கு அணி நாடுகளின் வீழ்ச்சி விரிவடைந்து வருகின்ற உலக முதலாளித்துவ நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தியிருக்கிறது. போலி சோசலிசம் வீழ்ந்ததனால் ஏற்பட்டுள்ள பூதாகரமான விளைவுகளை எதிர்த்தும், இந்த நாடுகளில் எழுந்துள்ள முதலாளித்துவத்தை ஏதிர்த்தும் இந்த நாடுகளில் உள்ள பரந்துபட்ட மக்கள் குரலெழுப்புவதாலும் நெருக்கடி கடுமையாகி யிருக்கிறது. உலகெங்கும் முதலாளித்துவம் தனக்கென புதிய வாய்ப்புகளை உருவாக்க மக்களுக்கு புதிய துயரங்களும் உருவாகின்றன. அது பயங்கர வேகத்தோடு பரவுவதோடு, கண்டங்களையும் பிராந்தியங்களையும் ஒரே வீச்சில் கைப்பற்று கிறது. இது பச்சைப் பசுமையான புல்வெளிகள் மீது மேகக் கூட்டத்தைப் போல் வெட்டுக் கிளிகள் இறங்குவதைப் போன்றது. அதனுடைய போக்கிலே எல்லாமே தவிடுபொடியாவதோடு, கோடிக்கணக்கான மக்கள் அதளபாதாளத்திற்கு தள்ளப்படுகிறார் கள். துவக்கத்தில் உற்பத்தி சக்திகள் வளர்ச்சியைத் தூண்டி விட்ட முதலாளித்துவம் அதனுடை இறுதிக் கட்டத்தில் மக்களுடைய இரத்தத்தை உறிஞ்சும் காட்டேரியாக இருக்கிறது. உற்பத்தி சக்திகளை மிகுந்த வேகத்தில் விழுங்கி ஏப்பமிட்டு வருகிறது. இந்த வகையான முதலாளித்துவம் தான் இந்தியாவில் நிலவி வருகிறது. அதுவே மக்களுடைய எல்லாப் பிரச்சனைகளுக்கும் மூல காரணமாகும்.

"புதிய உலக அமைப்பை" ஒரு துருவ உலகை, தன்னுடைய அதிகாரத்தின் கீழ் அமைக்க அமெரிக்க ஏகாதி பத்தியம் எடுக்கும் முயற்சி, இந்த முதலாளித்துவத்தின் விரிவுக்கும் ஏகாதிபத்திய கொள்கைக்கும் எதிரான எந்த

எதிர்ப்பையும் நசுக்குவதற்கு துணிவை கொடுத்திருக்கிறது. "நிகோலாய் சியேசியு" வின் படுகொலை போன்ற வன்முறை மூலமாகவோ, மிகாயில் கார்பசேவினால் வெற்றி கொள்ளப் பட்டது போன்ற உள்நாட்டு சதித்திட்டம் மூலமாகவோ, தனக்கு எல்லாக் கதவுகளும் திறந்து விடப்பட்டிருப்பதாக அமெரிக்க ஏகாதிபத்தியம் இன்னமும் நம்பிக்கையோடிருக்கிறது. தன்னுடைய இந்த கர்வப் போக்கினால், முதலாளித்துவ தாக்குதல்களுக்கு எதிராக உற்பத்தி சக்திகளின் கிளர்ச்சியின் முழு வேகத்தையும் இனிமேல்தான் வெளிப்படுத்த உள்ளது என்பதையும், வருகின்ற புரட்சிப் புயலை வரவேற்கும் இடிமுழக்கம் விரைவில் எழும் என்பதையும் ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்கள். அமெரிக்கா விவரித்து வரும் "திறந்த கதவுக் கொள்கை"யின் வெற்றி மாற்ற முடியாதது போலத் தோன்றினாலும், ஏகாதிபத்தியங்களுக்கு இடைப்பட்ட கூர்மை யடைந்து வரும் முரண்பாடுகளும், அயல்நாட்டு சதித் திட்டங் களையும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சர்வாதிகாரத்தையும் எதிர்த்து நிற்பதுடன் அதனுடைய ஒரு துருவ உலகை ஏற்றுக் கொள்ள மறுக்கும் இரான், இராக் மற்றும் பிற நாடுகளின் எதிர்ப்பும் அவற்றைத் தோல்வியடையச் செய்து வருகின்றன. கியூபா, வடகொரியா மற்றும் வியத்நாம் போன்ற நாடுகள் தங்களுடைய சொந்த அமைப்பை வீரத்தோடு காத்து நிற்பதோடு, தங்களுடைய சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொண்டும் எல்லா வகையான அச்சுறுத்தல்களை எதிர்த்து சமாளித்துக் கொண்டும் வருகின்றன. இஸ்லாமிய இயக்கமும் "திறந்த கதவுக் கொள் கைக்கு" தடையாகவும், "ஒரு துருவ உலகுக்கான" அமெரிக்க ஏகாதிபத்திய யதேச்சையதிகாரத்திற்கு தடையாக நிற்கிறது.

இந்தச் சூழ்நிலையில், ஏகாதிபத்தியமும் முதலாளி வர்க்கமும் உலக பிற்போக்கும், சோசலிச—கம்யூனிச அபாயம் முடிந்து விட்டதாக நடித்து வருகையில் இந்த நாடுகளில் உள்ள எல்லா பக்க நெருக்கடியானது கடுமையான குழப்பத்தில் இருக்கின்ற பொருளாதார அடித்தளத்தை வெளிப்படுத்துவதுடன் முதலாளித்துவ அமைப்பு தொழிலாளி வர்க்கத்திற்கு இழைக்கும் பேரபாயத்தை எடுத்துக்காட்டி அவர்களை மீண்டும் தட்டி எழுப்புகிறது. தொழிலாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத் திற்கும் இடையிலும் சோசலிசத்திற்கும் முதலாளித் துவத்திற்கும் இடையிலும் உள்ள முரண்பாடு மேலும் தீவிரமடைந்து வருகிறது.

இது சுரண்டப்பட்ட மக்களுக்கும், சுரண்டல் அதிபர்களுக்கும் இடைப்பட்ட போராட்டத்திலும் சனநாயக புதுப்பித்தலுக்காக நிற்கும் சக்திகளுக்கும் அதை எதிர்க்கும் சக்திகளும் இடைப்பட்ட போராட்டத்திலும் வெளிப்படுகிறது. அடிப்படையில் இந்தப் போராட்டத்தின் உள்ளடக்கமானது சமுதாய முன்னேற்றத்திற் கான கதவுகளைத் திறந்து விடுவதாகும். முதலாளி வர்க்கமும் பிற்போக்கும் இந்திய மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விட்டிருக்கின்ற முதலாளித்துவத்தின் மிகக் கொடூரமான இந்தத் தாக்குதல்களை எதிர்த்து, தங்களுடைய குண்டாந்தடிகளை உயர்த்தி எரிமலையென கொதித்தெழுமாறு தொழிலாளி வர்க்கத்தையும், எல்லா உழைக்கும் மக்களையும் நாட்டுப் பற்று கொண்டோரையும் இந்திய கம்யூனிஸ்டுகள் தட்டியெழுப்ப வேண்டிய நேரம் வந்து விட்டது.

மிகவும் முக்கியமான முரண்பாடு, முடிவைத் தீர்மானிப் பதாகவும் மாறி இருப்பது, சோசலிசத்திற்கும் முதலாளித் துவத்திற்கும் இடைப்பட்டதுதான் என்பது இ.க.கெ.க.யின் கருத்தாகும். சோசலிசத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் இடைப் பட்ட முரண்பாட்டைத் தீர்ப்பதென்பது மற்றெல்லாவற்றையும் தீர்ப்பதாகும். அரசியல் ரீதியில் இந்த முரண்பாடு இந்த நேரத்தில் ஒரு குறிப்பிட்ட வடிவில் வெளிப்படுகிறது. சமுதாயம் முன்னேறுவதற்காக இந்த நேரத்தில் தேவைப்படுகின்ற புதுப்பிப்பதற்கும் நவீனப்படுத்துவதற்கும் உரிய மாபெரும் மாற்றங்களுக்காக நிற்பவர்களுக்கும், இருக்கின்ற அமைப்பைப் பற்றியும் முதலாளித்துவத்திற்கு இன்னொரு கட்டம் — சீர்திருத்தப்பட்ட சமூக சனநாயக கட்டம் இருப்பதாக சாயம்போன கருத்தைப் பற்றியும் மாயைகளை உருவாக்குபவர்களுக்கும் இடையிலும் உள்ள முரண்பாடாக அது வெளிப்படுகிறது. சோசலிசத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் இடையிலான முரண்பாட்டை தத்துவார்த்த துறையில் நடைபெறும் கடுமையான போராட்டத்திலும், கருத்தியல் மற்றும் விவாதப் போராட்டத்திலும் சமுதாயத்தில் எல்லாவற்றின் தரத்தை குறிப்பாக அரசியல் தரத்தை குறைக்க முதலாளி வர்க்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகளிலும் நாம் காணலாம். இந்தப் போராட்டத்தின் கூர்முனையானது முதலாளித்துவத்தைப் பற்றியும், "சோசலிசம்" பற்றியும் அதாவது தனியார் மயமாக்கலையும் தாராளமயமாக் கலையும் மற்றும் சமூக சனநாயகம் பற்றியும் மாயைகளை

உருவாக்குபவர்களை எதிர்த்ததாக இருக்கும்.

சோசலிசத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் இடையே கூர்மையடைந்து வருகின்ற இந்தப் போராட்டத்தில் மற்ற எல்லா முரண்பாடுகளையும் காணலாம். அமெரிக்க ஏகாதிபத்தியம் கியூபாவின் மீது தனது வாணிகத் தடையைத் தொடர்வதில் தீவிரம் காட்டுவது குறிப்பிடத்தக்கது. இது அமெரிக்காவிற்கு கியூபா எந்த வகையான அச்சுறுத்தலைக் கொடுக்கிறது என்பதற்காக அல்ல. ஆனால் கியூபாவின் அமைப்பானது, ஒரே ஒரு சனநாயகம் மற்றும் ஒரே ஒரு அமைப்புதான் அமெரிக்க ஏகாதிபத்தியம் வரையறை செய்துள்ள ஒரு துருவ உலகில் இருக்கலாம் என்பதைப் பொய்ப்பிக்கிறது என்பதே. சோசலிசத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் இடையிலான இந்த முரண்பாட்டை, நாடுகளையும் தன்னை எதிர்த்துப் போராடும் சக்திகளையும் முழுமையாக அடிமைப்படுத்த முதலாளித்துவம் மேற்கொள்ளும் முயற்சிகளிலும் காணலாம். சர்வதேச நிதி முதலீட்டின் மீது முழுக்க கட்டுப்பட்டதாக பல்வேறு நாடுகளும் தள்ளப்பட்டுள்ளன. இந்த நிலைமையில் அவர்களுடைய பொருளாதாரம் மற்றும் நிதி அடிமை நிலைமையை எதிர்த்த போராட்டம் தவிர்க்க முடியாததாகும்.

இந்த முரண்பாட்டின் பின்னணியில் இந்தியப் புரட்சியின் கட்டமானது முதலாளித்துவத்தையும் நிலபிரபுத்துவம், காலனியத்துவம் மற்றும் ஏகாதிபத்தியத்தின் எல்லா எச்சமிச்சங்களையும் ஒழிப்பதாகும். முதலாளித்துவம் இந்தியாவில் மிக வேகமாக் வளர்ச்சி பெற்று வருகிறது. இது எல்லா முரண்பாடுகளையும் குறிப்பாக சுரண்டப்பட்ட மக்களுக்கும் சுரண்டல் அதிபர்களுக்கும் இடைப்பட்ட முரண்பாட்டைக் கூர்மைப்படுத்தியிருக்கிறது. இந்த முரண்பாட்டைத்தான் முதலாளிவர்க்கமே, நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கு முதல் கட்டமாக தான் சோசலிசத்தைப் பெயர்த்தெடுப்பதாக அது பாவனை செய்யும்போது பயன்படுத்திக் கொள்கிறது.

புரட்சியின் இந்தக் கட்டத்தில் சனநாயக மற்றும் ஏகாதிபத்திய எதிர்ப்பு கொண்ட பல்வேறு பணிகளையும் நிறைவேற்றப்பட வேண்டும். ஆனால் முதலாளித்துவத்தை ஒழிக்கின்ற பணியை முதன்மையானதாக நமது நாட்டின் தொழிலாளிவர்க்கம் மற்றும் உழைக்கும் மக்களின் முன் வைக்க

வில்லையானால், மேற்கண்ட பணிகளை அவர்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள். இதுதான் இந்த நேரத்தில் விவாதித்துத் தீர்மானிக்கப்பட வேண்டிய மிகவும் முக்கியமான கேள்வியாகும். இதன் அடிப்படையில் தொழிலாளி வர்க்கம் மற்றும் பரந்துபட்ட மக்களின் போர்த்தந்திரம் வாய்ந்த அரசியல் ஒற்றுமையை கட்டப்பட வேண்டும். இருந்தபோதிலும் புரட்சியின் கட்டத்தைப் பற்றி தீர்மானிக்கின்ற விவாதத்தின் முடிவல்ல. இது ஒரு துவக்கமேயாகும்.

# பாகம் 9

# இந்திய கம்யூனிஸ்ட்டு கெதர் கட்சியின் யுத்த தந்திரமும், செயல்திட்டமும்

கம்யூனிச இயக்கம் ஒரு முக்கியமான கட்டத்தை அடைந்திருக்கிறது. எந்தத் திசையில் அது மேற்கொண்டு செல்லும்? இந்திய கம்யூனிஸ்ட்டுகளின் வருங்காலமானது சமுதாயத்தின் எதிர்காலத்திற்கு அவர்கள் எதை முன்வைக்கிறார்கள் என்பதைப் பொறுத்து இருக்கும். சமுதாயத்தின் பிரச்சனைகளுக்கு ஒரு தீர்வு கண்டுவிட்டதாக முதலாளித்துவ அரசியல் கட்சிகள் கூறிவருகின்றன. அவர்களுடைய பதில், தனியார்மயமாக்குவதும், தாராளமயமாக்குவதும். மற்றும் மூலதனத்தையும் உற்பத்தியையும் உலகமயமாக்குவதும் ஆகும். வேறுவகையில் சொன்னால், அவர்களுடைய திட்டமானது சமுதாயத்திலுள்ள எல்லா முரண்பாடுகளையும் மேலும் கூர்மைப் படுத்த வகை செய்வதாகும்.

கம்யூனிச இயக்கம் தன்னுடைய யுத்ததந்திரக் குறிக்கோளாக முதலாளித்துவத்தைத் தூக்கி எறிவதையும், சோசலிச சமுதாயத்தை அமைப்பதையும் கொண்டிருக்க வேண்டும். கம்யூனிச இயக்கத்திற்கு இது மிகவும் எழுச்சியூட்டும் கண்ணோட்டமாகும். எல்லா இந்திய கம்யூனிஸ்ட்டுகளும், கம்யூனிச இயக்கத்தை இந்த எழுச்சியூட்டும் கண்ணோட்டத்திலிருந்து பார்க்க வேண்டும். இந்த நேரத்தில் இந்திய கம்யூனிச இயக்கம் பிளவுபட்டிருக்கிறது என்பது அனைவரும் நன்கு அறிந்ததே. ஆனால் கம்யூனிஸ்ட்டுகள் இந்த பிளவுகளை வெறும் பிளவாக எண்ணிக்கொண்டு, முன்னேறுவதற்கான ஒரு வாய்ப்பாக இதைக் கருதவில்லையானால் அது ஒரு பெரும் தவறாகும். உண்மையான ஜனநாயக மற்றும் முற்போக்கு சக்திகள் கம்யூனிச இயக்கத்தில் மட்டுமே இருப்பதாக எண்ணுவது அதைவிடத் தவறானதாகும். கம்யூனிச இயக்கத்திற்கு வெளியே அதிக எண்ணிக்கையில் முற்போக்கு மற்றும் ஜனநாயக சக்திகள் இருக்கின்றன. இவர்களும் முற்போக்கு சக்திகளின் அரசியல் ஒற்றுமை என்ற திட்டத்தில் ஆர்வம் கொண்டுள்ளனர். இன்றைய நிலைமைகளில், கம்யூனிச

இயக்கத்தின் பங்கை மிகப்படுத்தி வலியுறுத்துவது பெரும் தவறாகும். சமுதாயத்தை நெருக்கடியிலிருந்து விடுவிக்க உடனடித்தேவை அரசியல் ஒற்றுமை என்பதை வலியுறுத்த வேண்டும்.

தொழிலாளிவர்க்கம் மற்றும் உழைக்கும் மக்களின் நோக்கங்களுக்கு கடுமையான பாதிப்பு கடந்த காலத்தில் உருவாக்கப்பட்டிருக்கிறது. அந்த பயங்கர நிலைமைகளுக்குக் காரணமான குற்றவாளிகள் இருந்திருக்கிறார்கள். கடந்த கால நடவடிக்கைகளின் காரணமாக எந்த தனி ஒருவரையோ, அமைப்பையோ குற்றஞ்சாட்டுகின்ற நோக்கத்தோடு கடந்த காலத்தை ஆராய்ந்து பார்க்க வேண்டிய தேவையில்லை என்பது முக்கியமாகும். என்ன செய்ய வேண்டுமென்றால் செயல் திட்டத்தை விரிவாக விளக்கவும் அதே நேரத்தில் எந்த ஒரு நிகழ்ச்சியும் இன்றைய நிலைமைகளில் ஏற்படுத்தும் தாக்கத்தைப் பற்றியும் தொழிலாளி வர்க்க இயக்கம் எந்த திசையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பது பற்றியும், அதனுடைய இலட்சியத்தை வெற்றிகாண எப்படி வழிகாட்டுவது என்பது பற்றியும், விவாதிப்பதன் மூலம் மக்களுடைய தத்துவார்த்த அரசியல் தரத்தை உயர்த்தவும் வேண்டும். இவ்வாறு இந்த வேலைகள் முன்னேறும்போது, எல்லா கடந்த கால மற்றும் இன்றைய குற்றவாளிகள் தங்களுடைய உண்மை வடிவத்தை வெளிக்காட்டுவார்கள். அவர்களுடைய முகமூடி கிழிக்கப்பட்டு இயக்கத்திற்கு அவர்கள் இழைத்திருக்கும் பயங்கரமான பாதிப்பு மக்களிடையே வெட்ட வெளிச்சமாகும்.

இந்த சந்தர்ப்பங்களுக்கிடையே, இந்திய கம்யூனிஸ்ட்டு கெதர் கட்சியானது சமூக ஜனநாயகத்துடன் எந்த வகையான சமரசத்தையும் கடுமையாக எதிர்ப்பதன் மூலம் தற்கால மார்க்சிச–லெனினிச சிந்தனையையும், மார்க்சிசம்–லெனினிசத்தின் தூய்மையைப் பாதுகாக்கவும், கம்யூனிச மற்றும் தொழிலாளர் இயக்கத்தைக் காக்கவும், கருத்தியல் மற்றும் விவாதப் போராட்டம் நடத்தப்படவேண்டும். இந்தப் போராட்டமானது வளர்ச்சியடைந்து வரும் நேரத்தில் முன்னேற்றத்திற்கான பாதையைத் தடுப்பவர்களை என்ன செய்வது என்பதை மக்கள் அறிவார்கள். தடைகளை முறியடிக்கும் போக்கிலே, மக்கள் அனுபவம் பெறுவதுடன் இயக்கமும் பலம் பெறும்.

நமது ஒழுங்கமைக்கும் பணியின் முக்கிய உந்துதல் புரட்சிகரத் தத்துவத்தை மையமாகக் கொண்டுள்ளது. இந்தத் தத்துவமானது இருத்தலுக்கும் விழிப்புணர்வுக்கும் இடையேயும், புறவயத்திற்கும் அகவயத்திற்கும் இடையேயும் உள்ள உயிர்த்துடிப்பான உறவை வெளிப்படுத்துகிறது. இந்த உந்து தலையொட்டியே தத்துவார்த்தப் போராட்டம் வளர்க்கப்படுகிறது, பொது நிலைப்பாடு உருவாக்கப்படுகிறது. அமைப்புப் பணிகள் நிர்ணயிக்கப்படுகின்றன, விவாதப் போராட்டம் நடத்தப் படுகிறது. இந்தக் காலகட்டத்திற்கான பொதுநிலைப்பாட்டின் வரம்பிற்குட்பட்ட செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலமாக மட்டுமே தலைமை அமைப்புக்களையும், அடிப்படை அமைப்புகளையும் ஏற்படுத்தவும், உறுதிப்படுத்தவும் இயலும். இந்திய கம்யூனிஸ்ட்டு கெதர் கட்சியின் கட்டுமானமே மிகவும் முக்கியமான அகவய நிலைமையின் உருவாக்கமாகும். இது தொழிலாளர்வர்க்கம் மற்றும் உழைக்கும் மக்களின் விடுதலைக்கான போராட்டத்தில் பிரதான கருவியாகும். காலனிய பாரம்பரியத்தையும் நிலபிரபுத்துவ மிச்சங்களையும் மற்றும் ஏகாதிபத்தியத்தையும் அழிக்கவும், புரட்சியின் மூலமாக முதலாளித்துவத்திலிருந்து சோசலிசத்திற்கு சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தவும், அது முக்கிய ஆயுதமாகும். இந்திய கம்யூனிஸ்ட்டு கெதர் கட்சியின் பங்கானது தொழிலாளிவர்க்கம் தனக்கென சொந்த விழிப்புணர்வையும், அமைப்பையும் கொண்டிருப்பதை உறுதிப்படுத்துவதாகும். அதையும் கடந்து தொழிலாளி வர்க்கத்திற்குப் பதிலாக தன்னையே அதனுடைய இடத்தில் நிறுத்திக் கொள்ளக்கூடாது. கொடிப்படைக் கட்சியைக் கட்டுவதென்கின்ற பிரச்சனை ஒன்று; தொழிலாளிவர்க்க இயக்கம் தனக்கென ஒரு புரட்சிகர செயல்திட்டத்தை வகுத்துக் கொள்ளவேண்டிய பிரச்சனை வேறு ஒன்றாகும். இந்த இரண்டு பணிகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையவை. முந்தைய பணி தொழிலாளிவர்க்கத்தின் முன்னேறியவர்களைச் சார்ந்ததாகும். பிந்திய கடமை தொழிலாளிவர்க்கத்தின் பரந்துபட்ட பிரிவினரையும் சேர்ந்ததாகும். இக்கடமைக்கு முன்னணிப்படை நிச்சயமாகத் தலைமை தாங்க வேண்டும், ஆனால் வர்க்கத்தின் பரந்து பட்ட பிரிவினருக்குப் பதிலாக தன்னை நிறுத்திக் கொள்ளாமல்.

புரட்சியின் கட்டத்தைப் பற்றியும், செயல்திட்டத்தைப்

பற்றியும் விவாதிப்பதோடு இன்றைய சூழ்நிலைமைகளில் என்ன செய்ய வேண்டும் என்பதையும் விரிவாக விவாதிக்க வேண்டிய தேவை இருப்பதாக இந்திய கம்யூனிஸ்ட்டு கெதர் கட்சி கருதுகிறது. மக்களுடைய தேவைகளை நிறைவேற்ற எந்த வகையான அமைப்பு தேவை? புரட்சியின் போர்முறை நோக்கங்களை முன்னேற்றுகின்ற சூழ்நிலையில், உடனடிப் பிரச்சனைகளுக்கானப் போராட்டங்களை எவ்வாறு நடத்த வேண்டும்?

இந்த கேள்விகளுக்குப் பதிலளிக்க வேண்டுமானால், முதலாளித்துவத்தை எதிர்த்த போராட்டத்தை இந்த நேரத்தில் இந்தியாவில் எந்தத் தெளிவான வடிவில் நடத்த வேண்டும் என்பதை கம்யூனிஸ்ட்டுகள் திறமையோடு விளக்கிடவேண்டும். நாம் மக்களிடம் சென்று, நாங்கள் முதலாளித்துவத்திற்கு எதிரானவர்கள் என்று அப்படியே கூறுவோமேயானால், மக்கள் அதைப் புரிந்து கொள்ளமாட்டார்கள். அதுபோலவே மக்கள் இந்த ஜனநாயகத்தைப் புதுப்பிக்க முன்வர வேண்டும் என்று சொன்னாலும் மக்களால் அதைப் புரிந்து கொள்ள இயலாது. முதலாளித்துவத்தை எதிர்த்த போராட்டவடிவத்தைப் பற்றிய உள்ளடக்கம் வெகுஜன மக்களுடைய அனுபவத்தில் ஏற்கெனவே இருக்க வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட்டு கெதர் கட்சி கருதுகிறது. அது முதலாளித்துவத்திற்கு எதிரானதாகவும், நிலபிரபுத்துவத்திற்கு எதிரானதாகவும், காலனியாதிக்கத்திற்கும் ஏகாதிபத்தியத்திற்கும் எதிரானதாகவும் நிச்சயமாக இருந்தாக வேண்டும்.

"வறுமையை ஒழிப்போம்" என்பது நரசிம்மராவ் உட்பட அடுத்தடுத்து வந்த எல்லா அரசாங்கங்களின் முழக்கமாக இருந்து வந்திருக்கிறது. ஆனால் இந்த அரசாங்கங்கள், இதை ஒரு கொள்கை இலக்காக வைத்துவிட்ட காரணத்தாலே, வறுமை அகன்று விடுவதில்லை. பணம் படைத்தோரை மேலும் பணக்காரராகவும், ஏழைகளை மேலும் ஒட்டாண்டிகளாகவும் மாற்றும் இந்தப் பொருளாதார அமைப்பை மூடிமறைத்துக் கொண்டு, மக்களுடைய தேவைகளை நிறைவேற்ற வரும்போது இந்த அரசாங்கங்கள் நிதித் தட்டுப்பாடு என்று ஒப்பாரிவைக்கிறார்கள். இந்த நேரத்தில் இந்த அரசாங்கங்கள் ஒருபடி மேலே சென்று, மக்களின் தேவைகளை நிறைவேற்றுவது மக்களுக்கோ, பொருளாதாரத்திற்கோ நல்லது இல்லையென்றும்

வெளிப்படையாகவே அறிவித்து வருகிறார்கள். ஒவ்வொருவரும் தத்தம் தேவைகளைத் தாங்களே பூர்த்தி செய்து கொள்ள வேண்டுமென்பதே அவர்களுடைய வாதம். உலகமுதலாளித்து வம் மற்றும் பிற்போக்கின் நிலைப்பாட்டைப் போலவே, இந்திய முதலாளிவர்க்கமும் கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக நலத் திட்டங்களுக்கு பணம் ஏதும் இல்லையென்று ஓலமிட்டு வருகிறார்கள். இந்தியாவிலுள்ள திட்டவட்டமான பிரச்சனை களுக்குத் தீர்வு கேட்கும் போது, முதலாளிவர்க்கம் ஜீவாதாரத்திற்குக்கூட எந்த ஒரு உத்திரவாதத்தையும் அளிப்ப தில்லை. முதலாளித்துவ அமைப்பால் மக்களுடைய தேவைகளை நிறைவேற்ற முடியாது.

அதிகார பூர்வமான வறுமைக்கோட்டிற்கும் கீழே ஐம்பது சதவீதத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்ற நிலைமைக்கும், வாழ்வதற்கே எந்த வாய்ப்பும் வசதியும் அற்ற நிலையில் மிகப்பெரும்பாலான மக்கள் உள்ள நிலைமைக்கும், தீர்வு காண்பதற்குப் பதிலாக, உலகப் பிற்போக்குகளைப் பின்பற்றி நரசிம்மராவ் "மேலிருந்து கீழே நலன்கள் கசிந்து வரும்" விளைவுக்கு உத்திரவாதமளித்து, அரசு கருவூலத்தையும், வெகுஜனமக்களையும் சூறையாட முதலாளித்துவ சக்திகளை மேலும் கட்டவிழ்த்து விட்டார். நிலவும் உண்மையான நிலைமைகள் கட்டுக்கரையற்ற கொள்ளையடிப்பு மற்றும் உற்பத்தி சக்திகளின் அழிவு ஆகியவற்றின் விளைவுகளும், இந்தக் கொள்கையைப் பரப்புகின்ற எல்லோருக்கும் பலத்த அடியாகும். "சொட்டுச் சொட்டாக கசிந்து" வருவதற்குப் பதிலாக ஏழைக்கும் பணக்காரர்களுக்கும் இடையிலான பிளவு மேலும் விரிவடைந்து கொண்டே வருகிறது.

முதலாளித்துவ அமைப்பின் இந்தப் போக்கினை முதலாளிவர்க்கத்தினால் ஏன் மாற்ற முடியவில்லை? மக்களு டைய தேவைகளை முதலாளித்துவ அமைப்பினால் ஏன் நிறைவேற்ற முடியவில்லை? சரியான கொள்கைகள் இல்லாமல் இருப்பதுதான் அதற்கு காரணமா? இல்லை. முதலாளித் துவத்தைத் தூக்கி எறியாமல் அரசாங்கத்தால் இவைகளைச் செய்ய முடியுமானால், முதலாளித்துவம் முதலாளித்துவமாக இருக்க முடியாது. ஒரு முனையில் ஏழ்மை மேலும் தீவிரமடைவதும் மற்ற முனையில் செல்வம் கொழிப்பதும் முதலாளித்துவ அமைப்பின் இயற்கையான இயல்பாகும். இந்த

நிலைமையானது நிலபிரபுத்துவத்தின் மிச்சத்தினாலும், காலனியாதிக்கம் மற்றும் ஏகாதிபத்தியத்தாலும் தீவிரப்படுத்தப் படுகிறது.

மக்களுடைய உரிமைகள் மற்றும் வாழ்க்கைத் தரத்தின் மீது மத்திய அரசாங்கமும், முதலாளிவர்க்கமும் தாக்குதல்கள் நடத்தி வருகின்ற இந்த நிலையில், நிதி ஆதாரத்திற்கு வழி இருப்பதாக, சி.ஜி.பி.ஐ. எடுத்துக்காட்டுமானால் எப்படியிருக் கும்? உதாரணத்திற்கு, இந்தியாவின் எல்லா உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வாணிகத்தை அரசே மேற்கொள்வதன் மூலம் பணத்தைத் திரட்ட இயலும். இந்திய மற்றும் அயல்நாட்டுச் சந்தைகளில் நுகர்வுப் பொருட்களை வாங்குவதன் மூலமும், விற்பதன் மூலமும் அரசு மூலதனத்தைப் பெருக்கத் துவங்கலாம். கடனைத் திருப்பி அடைப்பதைத் தாற்காலிகமாக நிறுத்தி வைப்பதன் மூலமும் மிகுதியான தொகையை உடனடியாக எழுப்ப வகைசெய்ய முடியும். இந்த வழிகளில் சேர்க்கப்பட்ட பணத்தை, சமுதாயத்தின் மீது மக்கள் எழுப்பும் தேவைகளை நிறைவேற்றுவதற்கு நேரடியாகவே பயன்படுத்தலாம். மனிதன் என்ற அடிப்படையில், எல்லா மக்களுடைய உரிமைகளுக்கும் இந்தியா, அரசியல் சாசன அடிப்படையில் உத்தரவாதமளிக்க லாம். அந்த உரிமைகளை மேற்கண்ட வழியிலும், மற்ற நடைமுறைகள் மூலமும் அளிக்க இயலும். மற்ற நடைமுறைகள், பொருளாதாரத்தை இராணுவமயமாக்கலை முடிவுக்குக் கொண்டு வருவது போன்றனவாக இருக்கலாம். அதே நேரத்தில் எல்லா உள்நாட்டு–வெளிநாட்டு வாணிகத்தை சமூக கட்டுப் பாட்டில் கொண்டு வருவதையோ, பொருளாதாரத்தை, இராணுவமயமாக்குதலை தடுத்து நிறுத்த வேண்டும் என்னும் கோரிக்கையையோ, அல்லது கடனை அடைப்பதை நிறுத்தி வைப்பது என்பன போன்ற நடவடிக்கைகளையோ ஏற்றுக் கொள்ள மறுப்பவர்களுடைய கையிலிருந்து எல்லா முக்கிய உற்பத்தி சாதனங்களையும் அரசு தன்வசம் கைப்பற்றத் துவங்க வேண்டும்.

மக்கள் மற்றும் சமுதாயத்திற்கு நல்வாழ்வு அளிக்க முடியாததற்கு எந்த வகையான நொண்டிச் சாக்குக்கும் அவசியமின்றி, மேற்கண்ட நடவடிக்கைகள் மூலம் இந்திய அரசாங்கம் நிதியைத் திரட்டுமா? இல்லை. அப்படி செய்யமாட்டார்கள். ஏனெனில், தங்களை ஆட்சியதிகாரத்தில் வைத்திருக்கும் பெரும் முதலாளிகளுக்கும், பெரும் நிலபுரபுக்

களுக்கும் சேவை செய்வதே இந்திய அரசாங்கத்தின் நோக்கமாகும். எனவே மேற்கண்ட நடவடிக்கைகளை இந்திய மக்களே எடுத்தாக வேண்டும். இந்த நடவடிக்கைகளிலிருந்து ஆரம்பித்து அவர்கள் சுதந்திரமான தன்னிறைவான சோசலிச பொருளாதாரத்தைக் கட்டுவதற்கு முன்னேற வேண்டும்.

வாணிகம் என்பது நாட்டில் என்ன உற்பத்தி செய்யப்படுகிறது என்பதோடு நேரடியாகத் தொடர்புடைய கேள்வியாகும். மேலும் அது, உற்பத்தி எங்கு நுகரப்படுகிறது அல்லது எங்கு செல்கிறது என்ற கேள்வியோடும் தொடர் புடையது. இது நாட்டு மக்களுக்கு மிகவும் முக்கியமானதாகும். உழைப்பின் உற்பத்திப் பொருட்களும், உழைப்புச் சக்திக்கும் கூட யார் விலையை நிர்ணயிக்கிறார்கள் என்பதையும் என்ன அடிப்படை பயன்படுத்தப்படுகிறது என்பதையும் அறிய மக்கள் மிகுந்த ஆர்வம் கொண்டிருக்கிறார்கள். பஞ்சம் போன்ற பேரழிவு ஏற்பட்ட ஒவ்வொரு முறையும் உணவுக்குத் தட்டுப்பாடு இல்லாமல் இருந்துங்கூட மக்களின் கைகளுக்கு எட்டாத அளவிற்கு விலைகள் எப்போதுமே உயர்ந்து விடுகின்றன என்பது இந்திய மக்களுடைய அனுபவமாகும். மக்கள் பலர் பசியில் வாடிக் கொண்டும், சுடுகாட்டிற்கு இளம்வயதிலேயே சென்றடைகின்ற இன்றுகூட பண்டக சாலைகளில் அரிசியும், கோதுமையும் மக்கிக் கொண்டு இருக்கிற செய்திகளைக் கேட்கிறோம். இந்தியாவில் உணவுக்கு குறைவில்லை, என்றாலும் நாட்டின் பலபாகங்களிலும் மக்கள் பசிக்கொடுமை யால் செத்துக் கொண்டும், கோடிக்கணக்கான மக்கள் வறுமைக் கோட்டிற்கும் கீழே வாழ்ந்து கொண்டும் வருகின்றனர்.

முதலாளித்துவத்தின் தற்போதைய நிலைமையை மேலும் வலுப்படுத்துகின்ற சமூக ஜனநாயக கோரிக்கைகளையும், செயல்முறைகளையும் போல் இல்லாமல், இத்தகைய கோரிக்கைகளின் நோக்கமானது இன்றைய முதலாளித்துவ அமைப்பை உடைக்கத் துணை செய்யக்கூடிய சீர்திருத்தங்களை நோக்கி மக்களுடைய போராட்டங்களைக் கொண்டு செல்வதாகும். அப்படிப்பட்ட போராட்டங்களும், கோரிக்கைகளும் ஆழமான மாற்றங்களுக்காக நிற்கும் எல்லா சக்திகளின் அரசியல் ஒற்றுமையை உருவாக்க உதவுவதோடு, சமுதாயத்தின் மீது அதன் உறுப்பினர்கள் எழுப்பும் உரிமைக் கோரிக்கைகளை நிறைவு செய்யக்கூடிய - கட்டியமைக்கக் கூடிய ஒரு சமுதாயத்திற்கான கண்ணோட்டத்தையும் அளிக்கும்.

அத்தகைய கோரிக்கைகளை விவரிக்கின்ற தன்னுடைய சொந்த செயல்திட்டத்தோடு, சி.ஜி.பி.ஐ. தொழிலாளர்களையும், உழைக்கும் மக்களையும், அறிவு ஜீவிகளையும், வாழ்க்கைத் தொழிலாளரையும், மகளிர் மற்றும் இளைஞரையும் அவரவர்களுக்கான கோரிக்கைகளை அவர்களே வகுத்துக் கொள்ளவும் வகை செய்ய வேண்டும். முதலாளித்துவ அமைப்பைப் பற்றிய சமூக ஜனநாயக மாயைகள் அடிப்படையிலும், எந்த ஒரு அரசியல் கட்சி அல்லது தலைவருடைய நல்ல அல்லது கெட்ட கொள்கைகளின் அடிப்படையிலும் தொழிலாளிவர்க்கத்தையும், மக்களையும் பிளவுபடுத்துவதற்கு சி.ஜி.பி.ஐ. ஒரு முடிவு கட்ட வேண்டும். இந்த முயற்சியின் மையமாக இருப்பது மக்கள் தங்களுக்கிடையே இப்படிப்பட்ட விவாதங்களை மேற்கொள்ள வகை செய்யும் அமைப்பு வடிவங்களை உருவாக்குகின்ற வேலையாகும். இது அவர்களுடைய கோரிக்கைகளை முன்வைத்து அவற்றிற்காக போராடக்கூடிய வேட்பாளர்களைத் தங்களுடைய அணியிலிருந்தே தேர்ந்தெடுக்கவும் மக்களுக்கு வாய்ப்பளிக்கும் மக்களதிகாரத்தின் கருவாக மாறக்கூடிய வாய்ப்பு கொண்டவற்றின் மூலம் மக்கள் தங்களுடைய விதியை தாங்களே நிர்ணயிக்கக்கூடிய அமைப்பு வடிவங்களை உருவாக்க வேண்டும்.

இந்த நேரத்தில், வேலை செய்யும் இடங்களிலும், கல்வி நிறுவனங்கள் மற்றும் சுற்றுப்புறங்களிலும் மக்களதிகாரக் குழுக்களை உருவாக்குமாறு சி.ஜி.பி.ஐ. அழைப்பு விடுமானால், மக்கள் நாட்டின் அரசியல் நிகழ்ச்சிகளில் பங்கு பெறத் துவங்கலாம். மக்கள் பல்வேறு அரசியல் கட்சிகளுக்கிடையே பிளவுபடுத்துவதற்கு பதிலாக, ஆரம்பத்திலிருந்தே தங்களுடைய அரசியல் ஒற்றுமையைக் கட்டிட இயலும், சூழ்நிலைமைகள் வேண்டும்போது, இப்படிப்பட்ட குழுக்கள் மக்களதிகாரத்தின் அங்கமாக மாற்றிக் கொள்ள இயலும். இவை சட்டமியற்றுவது, மற்றும் அதைச் செயல்படுத்துவது ஆகிய இரண்டு பணிகளும், இணைந்தவையாக இருக்கும். மேலும் அக்குழுக்கள் உருவாக்கப் பட்டிருக்கும் அந்தந்த நிலையில் மக்களின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும்.

தோழர்களே, நாம் பலவற்றையும் பல பொதுப்படையான கேள்விகளையும் விவாதித்திருக்கிறோம். எழுகின்ற கேள்வி என்னவென்றால், நாம் அவை அனைத்தின் மீதும் செயல்பட முடியுமா என்பது. சி.ஜி.பி.ஐ.இன் ஒட்டுமொத்தமான

யுத்ததந்திரம் என்னவாக இருக்கவேண்டும்? சி.ஜி.பி.ஐக்குள்ள சக்திகளையும், எதிர்காலத்தில் வரக்கூடிய வாய்ப்புகளையும் தீவிர ஆய்வு செய்ததற்குப்பின், சி.ஜி.பி.ஐயை கட்டுவதற்கு இந்த நேரத்தில் உள்ள மிக முக்கிய பிரச்சனை மீது கவனம் செலுத்துவதே நமது யுத்ததந்திரமாகும். அது இந்த அறிக்கையில் எழுப்பப்பட்டுள்ள எல்லாக் கருத்துக்கள் மீதும் வேலையை ஆழப்படுத்துவதாகும். முக்கியமாக, புரட்சிகரவர்க்கப் போராட்டத் தினூடே உண்மையான படிப்பின் மூலமும், ஆராய்ச்சியின் மூலமும் உட்பொருள் தெளிவுப்படுத்துவதாகும்.

இன்று கொடுக்கப்பட்ட ஆய்வுரையும் எடுக்கப்பட்ட முடிவுகளும் இறுதி வார்த்தையாக அல்ல, முதல் வார்த்தையாகத் தான் கருதப்படவேண்டும். இந்த வேலையினூடே சி.ஜி.பி.ஐ. இந்திய தத்துவத்தை வளர்த்தெடுக்கவும், இயன்றளவும் கூர்மையான கருத்தியல் மற்றும் விவாதப் போராட்டம் நடத்தவும் வேண்டும். அதே நேரத்தில், முக்கியத் தாக்குதலான சமூக ஜனநாயகத்தைப் பற்றி எந்த ஒரு மாயையை உருவாக்குவதை எதிர்த்தும், எந்த வகையான வர்க்க சமரசத்தையும், வறட்டுவாதத்தையும் மற்றும் குறுங்குழுவாதத்தையும் எதிர்த்தும் இருக்க வேண்டும். நடைமுறை அடிப்படையில் இது இந்திய தத்துவத்தை வளர்ப்பதிலும், கூர்மையான கருத்தியல் மற்றும் விவாதப் போராட்டத்தை மேற்கொள்வதிலும், இருப்பதற்குள் மிகுந்த கவனம் செலுத்தப்படவேண்டும். மத்தியக் குழுவின் இதழான "பீப்பிள்ஸ் வாய்சை" கட்டுவதும், தொழிலாளர்கள், இளைஞர்கள், மற்றும் மகளிருடைய வெகுஜன அமைப்புக் களைக் கட்டுவதும் இதில் மிகவும் முன்னணிப்பணிகளாகும். அதே நேரத்தில், சமுதாயத்தின் ஜனநாயக புதுப்பித்தலுக்கான ஏற்கெனவே துவங்கியுள்ள வேலையை சி.ஜி.பி.ஐ. எல்லா முற்போக்கு மற்றும் ஜனநாயக சக்திகளோடு சேர்ந்து மேலும் தொடரவேண்டும்.

யுத்த தந்திரம், நடைமுறை செயல்திட்டம் இரண்டுமே மிகத் துல்லியமாக குவிமையப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். இந்த எல்லாப் பணிகளும் செயல்படுத்தப்படுகின்ற முறையானது, தத்துவார்த்த, கருத்தியல் மற்றும் விவாதப் போராட்ட வேலையின் அடிப்படையில் கட்சியை வலிமைப் படுத்துவதாகவும், மத்தியக்குழுவின் வேலையை பலப்படுத்து வதாகவும், வெகுஜன அமைப்புக்களை பலப்படுத்துகின்ற அடிப்படையிலும் அமைய வேண்டியதை சி.ஜி.பி.ஐ.

முழுமையான கவனத்தோடு உறுதி செய்யவேண்டும். இந்த எல்லா வேலைகளும், சமூகஜனநாயகத்தைப் பற்றி மாயைகள் பரப்புவதையும், சமரசவாதிகளையும் எதிர்த்து முக்கிய தாக்குதலைத் தொடுப்பதன் மூலம் நிறைவேற்ற வேண்டும்.

தோழர்களே, உலகம் மிகக் கடுமையான நெருக்கடியைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது. இந்தியாவிலும் வேறு பல நாடுகளிலும் பிற்போக்குச் சக்திகளின் தாக்குதலால் அனைத்து திசைகளிலும் நெருக்கடியில் சிக்கி இருக்கிறது. இந்த நிலைமைகளில், சமுதாயத்தை இந்த நெருக்கடியிலிருந்து தலைமை தாங்கி வெளிக்கொண்டுவர தொழிலாளிவர்க்கத்தை தயாரிக்க வேண்டிய முக்கிய பொறுப்பு சி.ஜி.பி.ஐக்கு இருக்கிறது. தோழர்களே, சூழ்நிலை புரட்சியோ அல்லது போரோ எழக்கூடியதைச் சுட்டிக் காட்டுகின்றன. தேர்ந்தெடுப்பு ஒன்றாக மட்டுமே இருக்கட்டும்; அது புரட்சியாக இருக்கட்டும். புரட்சியின் வெற்றியானது, பிராந்திய அல்லது ஏகாதிபத்தியங்களுக்கு இடைப்பட்ட உலகப்போருக்கான எல்லா சாத்தியக் கூறுகளையும் ஒழித்துக்கட்டட்டும்.

எல்லா புரட்சிகர கம்யூனிஸ்ட்டுகளும், முற்போக்கு மற்றும் ஜனநாயக சக்திகளும் தொழிலாளிவர்க்கமும், மகளிரும், இளைஞரும், எல்லா சுரண்டப்பட்ட மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களும், நாட்டினுடைய உழைக்கும் மக்களும் நிலைமையை எதிர்கொண்டு எழுவோம். புதிய சிவப்பு விடியல் நம்மை எதிர்நோக்கியுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் ஒளிவிளக்கு மாபெரும் அக்டோபர் புரட்சிப்பாதை அணைந்து விடவில்லை. மாறாக, முன்போலவே அக்டோபரின் பாடங்கள் இன்றும் உயிரோட்டமுள்ளவையாக உள்ளன. தொழிலாளிவர்க்கமும், புரட்சிகர சக்திகளும் வர்க்கப் போராட்ட அரணை அமைத்து நிலைமையைத் தலைகீழாக மாற்றும்போது, இந்த ஒளியானது இன்னும் எவ்வளவு பிரகாசிக்கும் என்பதை இனிமேல்தான் நாம் பார்க்கப்போகிறோம். எல்லா கம்யூனிச சக்திகளும் ஒன்றாக இணைந்து, சொற்களை செயலாக்கட்டும். சமுதாய முன்னேற்றத் திற்கான பாதையைத் திறக்கட்டும்! புரட்சி முன்னேறட்டும்! வெற்றி நமக்கும், தங்களுடைய உயர்ந்த நோக்கங்களை நனவாக்கப் போராடி வருகின்ற அனைவருக்கும் உரித்தாகும்!

**புரட்சி ஓங்குக!**

**இன்குலாப் ஜிந்தாபாத்!**

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY